# சம்யுக்தாவின்



# இருதுருவங்கள்

# இரு துருவங்கள்

## 1

**"உ**னக்கு பயமே இல்லையா ப்ரீத்தி?" என்ற பிரதாப்பின் கேள்விக்கு, மெல்லிய புன்சிரிப்பையே பதிலாகக் கொடுத்தாள் ப்ரீத்தி லதா.

இது போன்ற கேள்விகளை எதிர் நோக்கும் போதெல்லாம் அவளுக்குச் சிரிப்புதான் வரும்.

'ஜனநாயக நாட்டில் இருந்து கொண்டு, ரிப்போர்டராக இருக்க எதற்காகப் பயப்பட வேண்டும்? பாகிஸ்தானில் தாலிபான் ஆட்சி நடக்கக் கூடிய ஸ்வாத் பள்ளத்தாக்குப் பகுதியில், பதினாறு வயதுப்பெண் மலாலா யூசுப்சயி பெண்களின் படிப்பிற்காகவும், பெண்களின் உரிமைக்காகவும் குரல் எழுப்பி, தாலிபான்களின் அட்டூழியங்களை எழுதவில்லையா?

அந்தச் சிறிய பெண் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையிலும், தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் தன்னைச் சேர்ந்த மக்களுக்காக பிபிசி பிளாக்கில் எழுதி, உலகத்தையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கவில்லையா?

உயிரை மட்டுமே நினைத்து பயந்து வாழ்பவனுக்கு, ஆயிரம் முறை சாவு வரும். ஆனால், எதைப் பற்றியும் கவலைப் படாமல், உண்மையை தைரியத்தோடு எதிர்கொள்பவனுக்குச் சாவைப் பற்றிய பயமே இல்லை.

அப்படிச் சாவு வந்தால் வந்து விட்டுப் போகட்டுமே... ஏதோ பிறந்தோம், வாழ்கிறோம் என்றில்லாமல், யாருக்காவது உபயோகமாக இருந்துவிட்டுச் சாவோம் என்ற எண்ணம் இருந்தால் பயம் எப்படி வரும்?' என்று மனதில் தோன்றியதை வெளிப்படையாகச் சொல்லாமல், புன்னகையை பதிலாகத் தந்தவளைப் பார்த்ததும், அவன் முகத்திலும் மெல்லிய முறுவல் படர்ந்தது.

பிரதாப்பினுடைய தாத்தா சுதந்தரப் போராட்ட காலத்தில் ஆரம்பித்த ஆங்கில நாளிதழில் அவள் சப்-எடிட்டராக வேலை செய்கிறாள். அது தவிர இளைஞர்களுக்கான மாத இதழிலும் எடிட்டராகப் பணிபுரிகிறாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நேர்மையையும் தைரியத்தையும் ஆயுதமாகக் கொண்டு, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக தர்மத்தைக் கடைப்பிடித்து, மக்களுக்கு உண்மையை மட்டும் எடுத்துச் சொல்லும் தரமான பத்திரிக்கை அது.

அரசியல்வாதிகள் யார் ஆட்சிக்கு வந்தாலும், அவர்களுக்குக் கூழைக் கும்பிடு போடும் சில பத்திரிக்கைகளைப் போன்றது அல்ல அவர்களுடையது. தரத்தையும், நம்பகத் தன்மையையும், நடுநிலைத் தன்மையயும் தாரக மந்திரமாகக் கொண்டது.

கலப்படப் பூச்சுப் பூசிக் கற்பனையைக் கலந்து அரை குறையாகப் பிரசுரிப்பதும் இல்லை. பரபரப்புக்காகத் தவறான தகவல்களைத் தருவதும் இல்லை. கிசுகிசு என்ற பெயரில் வதந்திகளைப் பரப்புவதும் இல்லை. பொய்யான செய்திகளை உண்மையாக்கியும், உண்மையான செய்திகளைப் பொய்யாக்கியும் வழிதவறி நடப்பதும் இல்லை.

பத்திரிக்கைத் துறையில் வேலை செய்ய வேண்டும் என்ற இலட்சியமெல்லாம் அவளுக்கு இருந்ததில்லை. கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஏதாவது பகுதி நேர வேலை கிடைத்தால் உதவியாக இருக்கும் என்று தேடத் துவங்கியபோது அவளைப் பற்றிக் கொண்டது இந்தத்துறை.

எழுத்துலகத்தில் காலடி எடுத்து வைத்ததும் அதன் மகத்துவம் புரிந்து முழு ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்போடும் பணிபுரியத் துவங்கி விட்டாள். கால நேரம் பார்க்காமல் ஒரு செய்தியைச் சேகரிக்க, தேடித் தேடி அலையும் கஷ்டம் நிறையப் பேருக்குத் தெரியாது.

எத்தனையோ மிரட்டல்களையும், சவால்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. இப்போது கூடப் பத்திரிக்கை அலுவலகத்திற்குத் தினம் தினம் கொலை மிரட்டல் வருகிறது.

எப்போது தனியாக மாட்டுவாள் என்று தேடிக்கொண்டிருக்கும் அடியாட்கள் கூட்டம் ஒருபக்கம். அவளைப் பற்றி ஏதாவது அவதூறைப் பரப்பி, பெயரைக் கெடுக்கக் காத்திருக்கும் விரோதிகள் மறு பக்கம். மூன்று வருட பத்திரிக்கைத் துறையில் சம்பாதித்தது என்னவோ நிறைய எதிரிகளைத்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவருக்கும், மும்பை மாஃபியா கேங்கிற்கும் உள்ள தொர்பை, ஆதாரங்களோடு வெளிப்படுத்தியது அவள்தான்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அதற்காக ஆறு மாதங்களாக, கால நேரம் பாராமல் ஆதாரங்களைச் சேகரிக்கப் பட்ட கஷ்டம் எல்லாம், அந்த அரசியல்வாதியின் முகத்திரையைக் கிழித்து, மக்களிடம் அவனது உண்மை சொரூபத்தைக் கொண்டு போய்ச் சேர்த்ததும் சாதனையாகத் தோன்றியது.

தன்னால் முடிந்ததைச் சாதித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியைக் காட்டிலும், அந்த அரசியல்வாதி பெயிலில் வெளிவந்து சொகுசுக் காரில் வலம் வருவதைப் பார்க்க வேதனையே அதிகமாக இருக்கிறது.

அரசியல் வாழ்வை அஸ்தமிக்கச் செய்தவள் என்ற கோபத்தில், அவனுடைய ஆட்கள் விடுத்த கொலை மிரட்டலை அலட்சியப் படுத்திய விதத்தைப் பார்த்துவிட்டுத்தான் பிரதாப் இந்தக் கேள்வியைக் கேட்டதே.

தன் மேலுள்ள அக்கறையால்தான் கவலைப் படுகிறான், அவனுக்கும் பயம் என்பதே இல்லை என்பதை அவளும் அறிவாள். அவனது குடும்பத்திற்கே பயம் என்ற உணர்வு இல்லை.

அவனுடைய தாத்தாவிற்கு பயம் என்ற உணர்வு இருந்திருந்தால், ஆங்கிலேய அடக்குமுறைக்கு எதிராக எழுதியிருக்க மாட்டார். ஆங்கிலேய அரசால் பத்திரிக்கை தடை செய்யப்பட்டபோது, எதிர்த்துச் சிறை சென்று பல கொடுமைகளை அனுபவித்திருக்கவும் மாட்டார். தளராத மனத்தோடு தேச பக்தர்களுக்கு உதவி செய்து சுதந்தர வேள்விக்குத் தன்னை அர்ப்பணித்திருக்கவும் மாட்டார்.

அவனுடைய தந்தை ராகவனும், பத்திரிக்கைத் துறையில் தனி முத்திரை பதித்து, சிம்ம சொப்பனமாகத் திகழ்பவர். நடுநிலைத் தன்மையோடு, அக்கிரமங்களையும், அநியாயங்களையும் தட்டிக் கேட்கும் துணிவு அவரிடம் இருக்கிறது.

அரசியல் வர்க்கத்தினரோ, அதிகார வர்க்கத்தினரோ யாராக இருந்தாலும், தவறு செய்யும் போது அதை வெட்ட வெளிச்சமாக்கி, மக்களிடம் கொண்டு செல்லும் உன்னதமான பணியை அசாத்திய தைரியத்துடன் செய்பவர்.

இரவு பகல் பாராமல், அவர் உழைத்த உழைப்பின் பலன், நாளிதழுக்குத் தனி மரியாதையைப் பெற்றுத் தந்ததோடு, அரசியல் இதழ், இளைஞர் இதழ், விளையாட்டு இதழ், ஆன்மீக இதழ், சிறுவர் இதழ், மங்கையர் இதழ் என்று பல்வேறு இதழ்களாகவும் பரிமாணமெடுத்து, பத்திரிக்கைத் துறையில் விருட்சமாகி நிற்கிறது.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அதே வம்சத்தின் வாரிசான அவன் மட்டும் பத்திரிக்கைத் துறையில் நாட்டமின்றி இருக்கிறான். அவனுடைய ஆர்வமெல்லாம் விளையாட்டுத் துறையிலேயே இருக்கிறது. டென்னிஸில் இந்திய அளவில் பிரபலமான விளையாட்டு வீரன் அவன்.

ஏதாவது ஒரு கிராண்ட் ஸ்லாமிற்குத் தகுதி பெற்று விடவேண்டும் என்ற கனவோடு இருந்தவனுக்கு, எதிர்பாராத பெரிய கார் விபத்தில் வலது கையில் முறிவு ஏற்பட்டு விளையாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து பிஸியோதெரபி செய்தாலும் பழைய வேகம் இன்னும் திரும்பவில்லை.

வேறு வழியின்றி, சில மாதங்களாக எந்தப் பயிற்சியிலும் ஈடுபடாமல், சென்னையில் இருக்கிறான். அதுவும் இந்த ஒரு மாதமாக அவ்வப்போது பத்திரிக்கை அலுவலகத்திற்குத் தலைகாட்டும் போதெல்லாம் புன்னகையோடு அனைவரிடமும் நண்பனாக நடந்து கொள்கிறான்.

மற்ற பெண்கள் அவன் மீது காட்டும் ஆர்வத்தைக் கண்டு ஆரம்பத்தில் ஒதுக்கிப் போனாலும், கண்ணியமாக நடந்து கொள்ளும் விதமும், நேர் பார்வையாகப் பார்த்துப் பேசும் பேச்சும், நல்ல நண்பர்களாகப் பழக வைத்திருக்கிறது.

“என்ன மேடம்? என்ன கேட்டாலும் இந்தச் சிரிப்பு தான் பதிலா? யோசனை வேற பலமா இருக்கு? அப்படி என்ன விஷயம்னு சொன்னா நானும் தெரிஞ்சுக்குவேனே...” என்றவனின் குரலில் சிந்தனையிலிருந்து வெளிவந்தவள்,

“உங்களப் பத்தித் தான் யோசிச்சிட்டு வரேன் சார்...” என்று சொல்ல ஆரம்பிக்கையிலேயே, அவன் கண்கள் பளிச்சிடவும் “வெயிட்... வெயிட்... சும்மா கிண்டலா எதுவும் சொல்லக் கூடாது... உங்களுக்கு ஏன் இந்த ஃபீல்ட்ல இன்ட்ரெஸ்ட் இல்லை?” என்றாள்.

“பலதடவை சொல்லிட்டேன், இந்த சார் மோர் எல்லாம் வேண்டாம் ப்ரீத்தி! பிரதாப்னே கூப்பிடு... இண்ட்ரெஸ்ட் இல்லைன்னு சொல்ல முடியாது... சின்ன வயசில இருந்தே டென்னிஸ் தான் என்னோட கனவா இருந்துச்சு... அது இப்போ வெறும் கனவாப் போயிடுச்சு...” என்றவனின் முகத்தில் ஒரு நொடி வலியோடு இறுக்கமும் சேர்ந்து “உடம்பில இருக்கற காயங்கள் போயிட்டாலும் மனசில இன்னமும் கனவு நிறைவேறாத வேதனை இருக்கு... எல்லாம் மாற கொஞ்ச நாளாகும்... இந்தப் பேச்சு இன்னைக்கு வேண்டாம்... அப்சரஸ் மாதிரி ஒரு பொண்ணோட வேலண்டன்ஸ் டே செலிப்ரேஷனுக்காகப் போயிட்ருக்கேன்... முடிஞ்சு போனதப் பத்திப் பேசி நல்ல மூடைக் கெடுத்துக்கக் கூடாது” என்றான்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

பிரீத்தியின் முகத்தில் முறைப்பைப் பார்த்து “சின்னச் சின்னக் கிண்டல் பேச்சையெல்லாம் ஈஸியா எடுத்துக்கப் பழகிக்கணும்… எப்பவுமே எழுதறதைப் பத்தியே யோசிச்சிட்டிருக்கக் கூடாது… சூழ்நிலைய இறுக்கமா வச்சிருக்காம கலகலப்பா இருக்கணும்… நம்ம ரெண்டு பேரையும் ஒண்ணாப் பார்த்து நாளைக்கு யாராவது கிசுகிசு எழுதினாலும் எழுதலாம்…

நீயெப்படியோ ஆர்ட்டிக்கிள்கு செய்தி சேகரிக்க என்னோட வந்தாலும், நான் ஜாலியாத்தான் வந்திருக்கேன்… உன்னோட பாஸோட பையன் அப்படின்னு நினைக்காம ஒரு ஃப்ரெண்டா நினைச்சுக்க… ஸோ டேக் இட் ஈஸி… ஆஃபிஸ் பத்திப் பேசாம வேற எதாவது பேசுவோம்… உன்னைப் பத்திச் சொல்லேன்…” என்றான்.

இதுவரை பொதுவான விஷயங்கள் தவிர, அவளுடைய சொந்த விஷயம் பற்றி எதுவுமே கேட்டதில்லை. அவளைப் பற்றிச் சொல்வதற்கு பெரிதாக எந்த விஷயமும் இல்லாத போது அவனிடம் எதைச் சொல்வது.

அநாதையாய் ஆற்றங்கரையில் கரை ஒதுங்கி, உயிர் இருக்கிறதா இல்லையா என்று தெரியாத நிலையில் கிடந்தவளைப் பார்த்து, பதறித் தூக்கிச் சென்று வளர்த்த பெரியவரைப் பற்றிச் சொல்வதா? அவளுக்குப் புத்துயிர் கொடுத்து, தன்னம்பிக்கை விதையை விதைத்த விதம் பற்றி சொல்வதா?

“சொல்றதுக்கு எந்த ஸ்பெஷலும் இல்லை பிரதாப்… உங்க தாத்தாவோட ஃப்ரெண்ட் தியாகி சத்யமூர்த்தி ஐயா தான் அநாதையாக் கிடந்த என்னை எடுத்து வளர்த்தார்… படிச்சதெல்லாம் திருச்சில தான்… காலெஜ் படிக்கறப்ப யங் இந்தியானு ஒரு மேகஸின்ல வொர்க் பண்ணிட்டிருந்தேன்…

உங்க அப்பா, தாத்தாவைப் பார்க்கறதுக்காகத் திருச்சி வந்திருந்தப்ப, நான் எழுதின ஆர்ட்டிக்கிள்சப் படிச்சுப் பார்த்து, உங்க பத்திரிக்கைல வேலை செய்யக் கூட்டிட்டு வந்துட்டார்… ஒரு வருஷம் ஸ்காலர்ஷிப் கொடுத்து ஏஷியன் காலேஜ் ஆஃப் ஜெர்னலிஷம்ல பிஜி டிப்ளமோ படிக்க வச்சார்… கோர்ஸ் முடியற வரைக்கும் பார்ட் டைம்ல உங்க பத்திரிக்கைல வொர்க் பண்ணிட்டிருந்தேன்… இப்போ ரெண்டு வருஷமா ஃபுல் டைமா வொர்க் பண்றேன்” என்றாள்.

இதெல்லாமே அவனுக்கும் ஓரளவு தெரிந்த தகவல்கள்தான். ப்ரீத்தியை அவன் வீட்டில் அனைவருக்கும் பிடிக்கும். தங்களுக்குக் கீழே வேலை செய்யும் பெண்ணாகப் பார்க்காமல், ‘இது போல ஒருத்தியைத்தான் மருமகளாக வீட்டிற்குக் கொண்டு வர வேண்டும்’ என்ற பெற்றோரின் பேச்சையும் அவ்வப்போது கேட்டிருக்கிறான்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அவள் சொல்லாத விஷயங்களையும் பலவற்றையும் கேள்விப் பட்டிருக்கிறான். இரண்டு ஆண்டுகளாக 'யங் ஜர்னலிஸ்ட்' அவார்டைத் தொடந்து வாங்கும் இளம் பத்திரிக்கையாளர் அவள்.

சில நாட்களாக, அவளுடைய எழுத்துக்களின் தீவிர ரசிகன் அவன். சென்ற மாத இதழில், பசியால் கதறித் துடிக்கும் குழந்தைகளைக் கருணையில்லாமல் பார்க்கும் இளைய தலைமுறையின் ஒரு பிரிவினர், ரசிகர் மன்றங்கள் அமைத்து சினிமா நடிகர்களின் பிரம்மாண்ட நிழலுருவத்திற்கு பாலாபிஷேகம் செய்வதை, ஆதங்கதோடு அனல் கக்கும் வார்த்தைகளால் அவள் வெளிப்படுத்திய விதத்தைக் கண்டு வியந்திருக்கிறான்.

பெற்ற தாய் தந்தையரின் பிறந்தநாளைக் கூட அறியாத இளைஞர் கூட்டம், சினிமா நடிகர்களின் பிறந்தநாளுக்கு, பட்டாசு வெடித்துக் கொண்டாடும் அவலத்தை எழுத்தில் வடித்திருந்தாள்.

அதற்காக, தவறுகளை மட்டுமே சுட்டிக்காட்டுபவள் அல்ல. எங்கோ ஒரு குக்கிராமத்தில் வசிக்கும், விவசாய இளைஞனின் சாதனையை, அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்துவாள்.

நமீதா வீட்டு நாய், குட்டி போட்டதைப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளும் பிற பத்திரிக்கையின் ரிப்போர்ட்டர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவள்.

தனது கருத்தை எதிலும் திணிக்காமல் நடுநிலை மனப்பான்மையோடு, அக்கிரமங்களைச் சாடுவாள். பத்திரிக்கை அலுவலகத்தில் அவளுக்கென்று ஒரு தனி மரியாதை இருக்கிறது.

பார்த்துப் பழகப் பழக அவள் மேல் ஆர்வமும், மரியாதையும் ஏற்பட்டது. வீட்டிலும் அவளைப் பற்றி அவ்வப்போது பேச்செடுக்கவே, அவனது தந்தைதான் இந்தச் சந்தர்ப்பத்தை மறைமுகமாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இல்லையென்றால் அவளாவது இது போன்ற ஹோட்டலில் நடைபெறும் கொண்டாட்டங்களுக்கு வருவதாவது.

இந்த ஆர்வம் 'காதல் அல்ல' என்பது அவனுக்கு நிச்சயமே. 'ஆர்வம் காதலாக மாறலாம்' என்ற எதிர்பார்ப்பு அப்பாவிற்கு.

இல்லையென்றால் "வேலண்டைன்ஸ் டே பத்தி ஓர் ஆர்ட்டிக்கிள் எழுதுறதுக்கு ப்ரீத்தி டிஸ்கொதேவுக்குப் போகப் போறாளாம்... தனியா அனுப்ப யோசனையா இருக்கு பிரதாப்... என்னை நம்பித்தான் சென்னைக்கே அனுப்பிருக்கார்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

தாத்தா... அதனால பத்திரமாகக் கூட்டிட்டுப் போயிட்டு வா!" என்று தன்னோடு அனுப்புவாரா.

இவ்வளவு நாட்களாக எளிமையான கைத்தறி சேலையில், கண்டிப்பான ஆசிரியையின் தோற்றத்தில் பார்த்துப் பழக்கப் பட்ட கண்களுக்கு, சல்வாரின் மாறுபட்ட தோற்றத்தில் அவளைப் பார்க்கையில், அவனறியாமல் மனதில் ஏதோ மாறுதல் ஏற்படுவதாகப் பட்டது.

'ஒருவேளை இருவருக்குமான தனிமையான கார்ப் பயணமும், பின்னணியில் ஒலிக்கும் இசையும் மென்மையான உணர்வைத் தோற்றுவிக்கிறதா? ஏதாவது ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளத்தான் போகிறோம்... பெற்றோரின் ஆசைப்படி, அது ஏன் ப்ரீத்தியாக இருக்கக் கூடாது?' என்று மனம் கேள்வி கேட்க, பாதையிலிருந்து கவனத்தைத் திருப்பி அவளைப் பார்த்தான்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த அண்ணாசாலையின் உயர்ந்த கட்டிடங்களையும், வாகனங்கள் விட்டுச் செல்லும் புகையையும் அமைதியாகப் பார்வையிட்டவாறு வந்தவளிடம் "லவ்வப் பத்தியும், லவர்ஸ் டே பத்தியும் என்ன நினைக்கற ப்ரீத்தி?" என்றான்.

## 2

'**கா**தலைப் பற்றி என்ன நினைக்கிறோம்?' என்ற கேள்வியைத் தன் மனதிடமே எழுப்பினாள் பிரீத்தி. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அவளுக்குக் காதலைப் பற்றி எந்த ஓர் அபிப்பிராயமும், இதுநாள் வரை ஏற்பட்டதில்லை.

'இப்போதெல்லாம் பார்த்ததும் காதல், பார்க்காமல் காதல், செல்போனில் காதல், இண்டர்நெட்டில் காதல் என்று காதலை அபத்தங்களாகக் காட்டும் செய்திகளைப் பார்த்துப் பார்த்து, காதல் என்றாலே சலித்துப் போய்விட்டதா? டீன் ஏஜ் வந்ததும் ஹார்மோன்கள் செய்யும் வேலை இந்தக் காதல்' என்று தோன்றவும்,

"இதுவரைக்கும் லவ்வைப் பத்திப் பெருசா எதுவும் யோசிச்சதில்லை பிரதாப்... கல்லுன்னு நினைச்சுப் பார்த்தா, அது வெறும் கல் தான்... சிற்பம்னு நினைச்சா அது அற்புதமான விஷயம்... பார்க்கறவங்க மனசப் பொறுத்தது" என்றாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

புன்னகையுடன் "இந்தக் காதலை வச்சுத்தான் உலகமே சுத்திட்டிருக்கு ப்ரீத்தி... ரெண்டு மனசுக்குள்ள இருக்கற அற்புதமான உணர்வு... அதை இப்படியெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டணும்னு அவசியமே இல்லை... ஆனா இப்ப நாம போற இடத்தில, காதலைச் சரியாப் புரிஞ்சுக்காதவங்கதான் அதிகமா இருப்பாங்க..." என்று சொன்னான்.

அவன் சொல்வதென்னவோ உண்மைதான். பூமி சூரியனின் மேல் கொண்ட காதலால்தான் பூக்கள் பூக்கின்றன. மேகங்களிடையே உருவான காதலால்தான் மழை பொழிகிறது. இயற்கையின் ஒவ்வொரு படைப்பும் காதலின் விளைவுதான். அதன் அருமை தெரியாத மனிதன்தான் அதைக் கேலிக் கூத்தாக்குகிறான்.

ஆனாலும் காதலுக்கு தினமும், பொழுதும் எதற்கு? மேல் நாட்டிலிருந்து இறக்குமதியான இந்தக் காதலர் தினக் கொண்டாட்டம் என்ற அபத்தம் மனதால் உணரப்படும் காதல் என்ற உன்னத உணர்வை வெட்ட வெளிச்சத்தில் அருவருப்பாக்கிக் காட்டுவதாகவே அவளுக்குப் பட்டது. இது போன்ற கொண்டாட்டங்கள் யதார்த்தத்தைத் தொலைத்து, செயற்கைப் பூச்சைப் பூசிக் கொண்டு காதலையே கொச்சைப் படுத்துகின்றன.

'காமாலைக் கண்ணோடு பார்ப்பவர்களுக்கு எல்லாமே மஞ்சள் நிறமாகத் தெரிவது போல மனதிற்குப் பிடிக்காத விஷயம் என்ற கோணத்திலேயே பார்க்கும் போது எல்லாமே தவறாகவே படுகிறதா?' என்று நினைத்தவள் மனப்போக்கைக் கட்டுப் படுத்தினாள்.

"நான் சும்மா வேடிக்கை பார்க்கத்தான் வரேன் பிரதாப்... சாதி, மதம் இல்லாத சமுதாயம் வேணும்னா காதல் வேணும்னு, காதலர் தினத்துக்கு ஆதரவா ஒரு குரூப்பும், நம்ம கலாச்சாரத்தில இல்லாத ஒண்ணை வியாபார நோக்கத்துக்காகப் பிரபலப் படுத்தறாங்கன்னு, எதிரா ஒரு குரூப்பும், மாத்தி மாத்திப் பேசிட்டே இருக்காங்க... எப்படித்தான் காதலர் தினத்தக் கொண்டாடறாங்கன்னு பார்க்கலாம்... இங்க முடிச்சதும் பீச் ரோட்ல ஒரு ரவுண்ட் மட்டும் கூட்டிட்டுப் போங்க... அவ்ளோதான் இன்னைக்குப் ப்ளான்... ரொம்ப சிரமப் படுத்தறேனா?" என்றாள்.

"சிரமமா? சே... சே... இவ்ளோ அழகான பொண்ணை, வேலண்டைன்ஸ் டே அன்னைக்குக் கூட்டிட்டுப் போனா, பார்க்கறவங்க எல்லாம் என்னைப் பார்த்துப் பொறாமைப் படப் போறாங்க... உன்னை பத்திரமா ஹாஸ்டல்ல திரும்பக் கொண்டு போய் சேர்க்கணும்னு ஒரே ஒரு கவலைதான் எனக்கு..." என்றான்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

சப்-எடிட்டராக இருப்பவள், இது போலெல்லாம் தேடிப்பிடித்து எழுதத் தேவையில்லை. வேறு யாரிடமாவது பொறுப்பை ஒப்படைக்கலாம். எந்த நிலைக்கு உயர்ந்தாலும் எழுதுவதை விடமாட்டாள். அவ்வளவு ஆர்வம் அவளுக்கு.

அவளைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள நினைத்தவன், சின்னச் சின்னக் கேள்விகள் கேட்டவாறே எளிமையான உரையாடல்களோடு காரைச் செலுத்தினான். சிறிது நேரத்திலேயே அவர்கள் செல்ல வேண்டிய இடம் வந்து விட்டது. சென்னையிலுள்ள மிகப் பிரபலமான ஹோட்டல்களுள் அதுவும் ஒன்று.

காரை உட்புறமாகச் செலுத்தியவாறே, "பே வியூ, பஷா, டப்ளின், அக்வா இதெல்லாமே சென்னைல ஃபேமஸ் டிஸ்கொதேஸ்... பெரிய ஹோட்டல்ஸோட அட்டாச் ஆனதில எல்லாம் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் கரெக்டா ஃபாலோ பண்ணுவாங்க... சின்ன சின்ன பஃப்ல எல்லாம் ஒண்ணும் கண்டுக்கறதில்லை... மிட் நைட் தாண்டியும் விடிய விடிய நடக்குது... என்று கூறி காரை நிறுத்தியவன், சாவியை ஹோட்டல் பணியாளரிடம் கொடுத்துவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

"ப்ரீத்தி! ஒன் மினிட் இங்கேயே வெயிட் பண்ணு... என்னோட காலேஜ் மேட் அங்க நிக்கறான்... பேசிட்டு உடனே வந்திடறேன்..." என்று மன்னிப்புக் கோரும் குரலில் கூறவும், சரியென்று தலையசைத்துவிட்டு ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

பல முறை அந்தச் சாலையில் செல்லும் போதெல்லாம், பல நட்சத்திர அந்தஸ்து மிக்க இந்த ஹோட்டலை சாதாரணமாகக் கவனித்துவிட்டுச் செல்வாள். இப்போதோ பிரம்மாண்டமான ஹோட்டலின் அழகினைக் கண்களுக்குள் படம் பிடிக்க முயன்றாள்.

சரம் சரமாய்த் தொங்கவிடப்பட்ட விளக்குகள் பிரகாசமாய் ஜொலிக்க, அந்த இடம் தேவலோகம் போலக் காட்சியளித்தது. செயற்கை நீர் வீழ்ச்சி நீர்த்திவலைகளை சிதறச் செய்ய, விளக்கு வெளிச்சம் நீர்த்திவலைகளில் பட்டு பிரதிபலிப்பால் மாயாஜாலம் செய்தது.

ஆங்காங்கே அமைக்கப் பட்டிருந்த சிவப்பு நிற மலர்க்கொத்துக்கள், அழகுக்கு அழகூட்டின. ஆனாலும் மனதிற்கு ஒட்டாத ஏதோ ஒரு செயற்கைத்தனம் இருப்பதாய்ப் பட்டது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நிலவொளியில் தென்றல் காற்றின் தழுவலோடு, சலசலத்தோடும் காவிரியாற்றங்கரையில் நடக்கும் சுகம் கண் முன்னே விரிந்தது.

ஆயிரம் சரவிளக்குகள் இருந்தாலும், நிலவொளியின் முன் நிற்க முடியுமா? இந்த செயற்கை நீர்வீழ்ச்சியால், பாறைகளில் தெரித்தோடும் காவிரியின் குளிர்ச்சியைக் கொண்டு வர முடியுமா?

இது போன்ற இடத்தில் நின்று கொண்டு, தன் சிந்தனை செல்லும் போக்கை எண்ணிப் புன்னகை பூத்தவாறு திரும்பியவளின் விழிகள், செல்ஃபோனில் உரையாடியவாறு வந்தவனைப் பார்த்தும் விரிந்தன.

அந்த முகம் அவளுக்கு மிகவும் பரிட்சயமானது. கவர்ந்திழுக்கும் கண்களும், கூர்மையான நீண்ட நாசியும், அழுத்தமான உதடுகளும், கம்பீரமான தோற்றமும், தினம் தினம் பார்த்துப் பழக்கப் பட்டவை.

தாத்தாவின் சிறு வயதுப் புகைப்படத் தோற்றத்தோடு, அச்சுப் பிசகாமல் நடந்து வந்து கொண்டிருந்தான் அவன். கருப்பு வெள்ளைப் புகைப்படம் உயிர்பெற்று வண்ணப்படமாய் மாறிய ஆச்சர்யத்தில், கண்கள் மேலும் மேலும் அவனை ஆராய்ந்தன.

தாத்தாவின் கண்களில் கனிவும் கருணையும் இருக்கும், அவன் கண்களிலோ அலட்சியமும் கர்வமுமே அதிகம் இருந்ததன. இதழ்களில் மென்மையான புன்னகைக்கு பதில், பிடிவாதத்தைக் காட்டும் அழுத்தமான புன்னகை இருந்தது.

தாத்தாவின் கம்பீரத்தில் சிறு மென்மையும் கலந்திருக்கும், இவனோ கிரேக்கச் சிற்பம் போல இருந்தான். சில நொடிகளிலேயே கண்கள் அவனைப் படம் பிடித்து, மனதில் பதிய வைத்தன.

அவளை வளர்த்த சத்யமூர்த்தி ஐயாவிற்கு, மகள் வயிற்றுப் பேரன் இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறாள். அவருடைய ஒரே மகள், திருமணமான ஒரே வருடத்தில், பிரசவத்தின் போது இறந்து விட்டதாகவும், மருமகனுக்கும் மாமனாருக்கும் சில நாட்களில் மனஸ்தாபம் ஏற்பட்டதாகவும், இரண்டாவது திருமணம் செய்து கொண்டு குழந்தையோடு வெளிநாட்டில் குடியேறியவர் திரும்பவே இல்லை என்றும், ஒரு முறை சொல்லிருக்கிறார்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

‘ஒரு வேளை அந்தப் பேரன் இவனாக இருப்பானோ? திடீரென்று அவனைப் பற்றிக் கேட்டால் தப்பாகத் தோன்றும்... அதுவும் இது போல இடத்தில் இருந்து கொண்டு விசாரித்தால் நிச்சயம் தப்புதான்... என்ன செய்யலாம்? தாத்தாவின் அதே உருவம்... தாத்தாவின் சாயலில் இன்னொருவன்...’ நினைக்க நினைக்க ப்ரீத்தியின் மனதிற்குள் சந்தோசம் பொங்கியது.

செல்போனில் பேசியவாறே பளிச்சென்ற சிரிப்போடு திரும்பியவனின் விழிகள், அவள் மேல் விழவும், ஒரு சில நொடிகள் அசைவற்றுப் போயின. இயற்கையிலேயே நீண்டிருந்த அடர்ந்த புருவங்களையும், உருண்டோடும் கருவிழிகளுக்குக் குடைப்பிடிக்கும் இமைகளையும், கண் சிமிட்டாமல் பேச மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

“வாவ்! கார்ஜியஸ்!” என்று முணுமுணுத்தவனின் பார்வை, அவள் அழகை ரசனையாக ஆராயத் தொடங்கியது.

நெற்றியில் விழுந்த கற்றைக் கூந்தல், அவற்றை ஒதுக்கித் தள்ளிய நளினமான விரல்கள், விரல்கள் வருடிச் சென்ற செழுமையான கன்னம், வசீகரிக்கும் உதடுகளில் மலர்ந்திருந்த புன்னகை என்று நிமிடத்தில் எடைபோட்ட மனம் ‘அற்புதமான அழகி’ என்று சான்றிதழ் வழங்கியது.

கால்களை வேகமாக எட்டி வைத்தவாறு அவளை நெருங்கவும், “ஹாய் சித்து! நான் இங்கிருக்கேன்” என்றவாறு வந்த மற்றொரு பெண், இயல்பாக அவனை நெருங்கி அணைத்து முத்தமிடவும், ப்ரீத்திக்குத் தூக்கிவாறிப் போட்டது.

‘உருவத்தால் தாத்தாவை ஒத்திருந்தாலும் இவன் குணத்தில் வேறோ?’ என்று மனம் கேட்ட கேள்விக்கு, சித்து என்றழைக்கப் பட்டவன் அந்த அழகியின் அணைப்பையும், முத்தத்தையும் ஏற்று அவள் வெற்றிடையில் கைகளைத் தவழவிட்டதைக் கண்ட கண்கள் ‘ஆமாம்... இவன் நிச்சயம் வேறு விதம்’ என்று பதில் சொல்லின.

அந்த அழகியின் ஜொலிஜொலிக்கும் அரை குறை ஆடையையும், அதீதமான அலங்காரத்தையும், பொது இடம் என்று பார்க்காமல் நடந்து கொண்ட முறையையும் பார்த்து மெல்லிய வேதனை முறுவல் படர்ந்தது.

‘இது போன்ற ஒருவனிடம், ஒரு குக்கிராமத்தில் இருக்கும் வயதான தாத்தாவைப் பற்றிச் சொல்லி விசாரித்தால், சொந்தத் தாத்தாவாக இருந்தாலும்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

வந்து பார்ப்பானா? இல்லை... வேண்டாம்... தாத்தாவிடமும் சொல்லி பழைய நினைவுகளைக் கிளற வேண்டாம்... இவனிடமும் கேட்க வேண்டாம்' என்று முடிவெடுக்கையிலேயே,

"ப்ரீத்தி... என்ன யோசனை? வா உள்ளே போகலாம்" என்று கண்டிப்பான குரலில் கூறி, கைகளை அழுந்தப் பற்றியவாறு பிரதாப் அழைக்கவும், சிந்தனை கலைந்து சுற்றுப் புறம் நினைவுக்கு வர அவனோடு சென்றாள்.

"உனக்கு சொல்லணுங்கறது இல்லை... இப்படிக் கண் சிமிட்டாமப் பார்த்திட்டிருக்கான்... அவனைப் பார்த்து என்ன சிரிப்பு?" என்று கேட்டபடி திரும்பிப் பார்த்தான் பிரதாப்.

பின்னாலிருந்தவன் அவர்கள் இருவரின் இறுகப் பற்றியிருந்த கைகளையும், உரிமையான பேச்சையும் பார்த்து, உதடுகளின் ஏளனச் சிரிப்போடு நின்றிருந்தான். இருவரின் பார்வைகளும் கடுமையைத் தேக்கி கசந்த முறுவலோடு பிரிந்தன.

'இருவருக்குமிடையில் ஏதோ சரியில்லை... இப்போது கேட்பது சரியில்லை...' என்று தோன்ற, "எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குன்னு பார்த்தேன்... அவ்ளோதான்..." என்று சொல்லியவாறே தன் கவனத்தைத் திசை திருப்பினாள்.

இசைக்கேற்ப ஜோடிகள் ஆடத் துவங்கவும், அறையின் ஓரமாக அழைத்துச் சென்று அமரவைத்தான் பிரதாப். அதற்குள் அவனுடைய ரசிகர்கள் ஒருசிலர், அவனைச் சூழ்ந்து கொண்டு நலம் விசாரிக்கவும், வேறு வழியின்றி அறையின் அலங்காரம், கார்ப்பெட், மதுக் கோப்பைகள் அடுக்கியிருந்த விதம் என்று தேடித்தேடி இரசிக்கத் தொடங்கினாள்.

விதவிதமான வண்ணங்களில் ஒளிக்கற்றைகளை அள்ளித் தெறித்த விளக்குகள் கண்களைக் கூசச் செய்தன. மெல்ல இசைத்துக் கொண்டிருந்த இசை வேகத்தைக் கூட்டவும் ஆரவாரக் கூச்சல் எழத்தொடங்கியது.

ஹால் முழுவதும் இளம் ஜோடிகளின் கூட்டம். 'சம உரிமை' என்று கோஷம் போடும் பெண்கள் எதிர்பார்ப்பது, இப்படி ஆடை குறைப்பில் சுதந்திரத்தையா? குடிப்பழக்கத்தையா? இரவு பகல் பாராமல் சுற்றித் திரிவதையா?

ஒரு பக்கம், ஏழை மக்கள் உடுத்த உடையில்லாமல், கந்தல் கிளிசல்களை ஒட்டுப் போட்டு அணிகிறார்கள். இங்கேயோ நன்றாக இருக்கும் துணிகளை



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அங்கங்கே கிழித்துவிட்டு, நாகரிகம் என்ற பெயரில் வருபவர்களைப் பார்க்கையில் மனதிற்குள் வருத்தம் பரவியது.

ஆபாசமான நடன அசைவுகளுடன் சில பெண்கள் ஆடவும், அவர்களைச் சூழ்ந்து கொண்டு நிறையப் பேர் ஆடத் தொடங்கினர். வந்திருந்தவர்களில் மீசை அரும்பாத இளையவர்களும் கையில் மதுபானங்களை வைத்திருக்க, அவளறியாமல் பெருமூச்சு வந்தது.

இப்படி மது அருந்திவிட்டு ஆணும் பெண்ணும் உரசியவாறு ஆடுவதில் எப்படிக் காதல் வளருகிறதோ? டீன் ஏஜில் இருப்பவர்கள் பெரிய சாதனை செய்வதாக நினைத்து பெற்றோருக்குத் தெரியாமல் வந்து வாழ்க்கையைத் தொலைத்துக் கொள்கிறார்கள்.

இப்போதெல்லாம் 'ரியாலிட்டி ஷோ' என்ற பெயரில் ஆடை குறைப்பு எல்லாச் சேனல்களிலும் வந்து விட்டது. முகம் சுழிக்கச் செய்யும் நடனங்களை நடு வீட்டுல் குழந்தைகளோடு சேர்ந்து பெற்றோர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆபாசத்தை அள்ளித் தெளிக்கும் நடனங்களைப் பார்த்து வளரும் குழந்தைகளுக்கு, இந்த நடனமெல்லாம் சாதாரண விஷயமாகப் போய்விட்டது.

பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் வந்து இப்படி ஆடுவதை எப்படித்தான் அனுமதிக்கறார்களோ? பணம் வந்தால் போதும் யார் எப்படிக் கெட்டுக் குட்டிச் சுவரானால் என்ன? பணம் இருந்தால் போதும், வாழ்க்கையில் எந்த சமூகக் கட்டுப்பாடுகளும் தேவையில்லை.

இந்த இளைஞர்களுக்கு உழைப்பைப் பற்றிய கவலை எதுவும் தெரிய வாய்ப்பில்லை. உழைக்கும் உழவனுக்கு ஒவ்வொரு வேளை சாப்பாட்டிற்கும் படும் கஷ்டம் தெரியும். ஒவ்வொரு அரிசியிலும் சிந்திய வியர்வை தெரியும். 'பெற்றோரின் சொத்தைக் கரைக்கும் கூட்டம்' என்று ஒரு சிலரைப் பார்த்ததுமே தெரிந்தது.

தங்களின் திறமையையும், இளமையையும் ஆக்கப் பூர்வமான வழிக்குச் செலுத்த வேண்டிய இளைஞர்கள், காமத்திலும் மோகத்திலும் சிக்கி சிற்றின்பக் கடலில் தங்களைத் தொலைத்துப் பயனற்றவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். கைநிறையக் காசும், வரம்பற்ற சுதந்திரமும், வாழ்க்கைப் பாதையைத் தடம் மாறிப் போகச் செய்கின்றன.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

இது போன்ற பஃப்களை நடத்துபவர்கள் நிறையப் பேர் தமிழர்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பற்றி வாய்கிழியப் பேசும் அரசியல்வாதிகளின் வாரிசுகளும், பினாமிகளும்தான்.

பணமும் பதவியும்தான் அவர்களுக்குப் பிரதானம். மக்களுக்கு இலவசங்களை அள்ளித் தெறித்து பிச்சைக்காரர்களாக்கி, அவர்களிடம் ஓட்டுக்காக மட்டும் கையேந்துபவர்களுக்கு இளைஞர்கள் எப்படிப் போனாலும் கவலையில்லை.

எடுத்து வந்திருந்த இரகசிய கேமராவில், வேடிக்கை பார்ப்பது போலவே யாரும் அறியாமல் சில புகைப்படங்களை எடுத்துக் கொண்டாள்.

இசை இரைச்சலை நோக்கிச் செல்லவும் 'பிரதாப் வருகிறானா?' என்று பார்வையைச் சுழல விடுகையில், 'சித்து' என்று அந்த அழகியால் அழைக்கப்பட்டவனின் பார்வை, தன் மேல் படிந்திருப்பதை உணர்ந்து ஒரு நொடி திகைத்தாள்.

'தன்னைப் பார்ப்பாள்' என எதிர்பார்த்தவன் போல, கண்களை மெல்லச் சிமிட்டி உதடுகளில் ஓர் ஏளனப் புன்னகையைப் படர விட்டான்.

## 3

**கூ**ர்மையாகப் பளிச்சிட்ட விழிகள் சொல்லும் செய்தி புரியாமல் பார்க்கையிலேயே, அறிந்தவன் போல அவன் கண்களைச் சிமிட்டவும், ஒரு கணம் திகைத்தாள் ப்ரீத்தி.

திகைப்பிலிருந்து விடுபடும் முன்பே, அவன் உதடுகளின் ஏளனப் புன்னகை, இனம் விளங்காக் கேள்வியை மனதிற்குள் எழுப்பியது.

'முதன் முறை பார்க்கும் பெண்ணிடம் என்ன ஏளனப் பார்வை வேண்டிக் கிடக்கிறது? ஒரு வேளை எல்லாப் பெண்களையும் அலட்சியமாகப் பார்த்துப் பழக்கப்பட்டவனோ?' என்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

எழுந்து அவளருகில் வந்தவன் “ஹாய்! ஐ ஆம் சித்ரஞ்சன்...” என்று அறிமுகம் செய்தவாறு கையை நீட்டவும், ஒரு நொடி தயக்கத்தோடு, “ஹாய்! ஐ'ம் ப்ரீத்தி” என்று பதிலலித்தவாறு நீட்டிய கையைப் பட்டும் படாமல் பற்றினாள்.

கையை அழுத்திப் பிடித்தவன் “யூ லுக் ஸோ ப்யூட்டி:ஃபுல்... ஷெல் வீ டேன்ஸ்...” என்றான்.

மற்றொரு கையில் பிடித்திருந்த கோப்பையிலுருக்கும் மதுவைப் பருகாமல், பார்வையால் அவளைப் பருகினான். அவன் பார்வை தன் உடலை இரசிப்பதை திடுக்கிடலோடு உணர்ந்து, கைகளை அவன் பிடிக்குள்ளிருந்து விடுவித்தவாறே “ஸாரி! ஐ ஆம் நாட் இண்ட்ரெஸ்ட்டெட்” என்றாள்.

கண்களை ஆழமாக ஊடுருவியவன், தோள்களைக் குலுக்கி, “ஓ! பார்ட்னரோடுதான் ஆடப் பிடிக்குமா? இட்ஸ் ஓகே... நோ ப்ராப்ளம்...” என்று சொல்லிவிட்டு, “ஹனி!” என்று கைகளை நீட்டவும், இதற்காகவே காத்திருந்தது போல அருகிலிருந்தவள் அவனோடு ஒன்றிக் கொண்டாள்.

அந்தப் பெண்ணின் வெற்றிடையில் தவழ்ந்த அவனது கை அழுத்தம் கொடுக்கவும், அவள் முழுமையாக அவன் அணைப்பிற்குள் சென்றாள். உடலோடு உடல் உரச அவர்கள் ஆடுகையில், அந்தப் பெண் மயக்கும் விழிகளோடு மெல்ல அவன் உதடுகளில் முத்தமிட்டாள்.

பொது இடத்தில் இது போன்ற முத்ததையும், நெருக்கத்தையும் எதிர்பார்த்திராத ப்ரீத்தி சட்டென்று திகைப்படைந்தாள்.

மேலை நாடுகளில், பொது இடங்களில் இந்த முத்தமும் அணைப்பும் ஃபேஷனாக இருக்கலாம். பல ஜோடிகள் அதைத்தான் செய்து கொண்டிருந்தனர். இதையெல்லாம் சாதாரணமாக எதுத்துக் கொள்ள முடியவில்லை அவளால்.

முத்தத்திற்கு பதிலளித்தவாறே அணைத்துப் பிடித்த சித்ரஞ்சன், மெல்ல விழிகளைத் திருப்பி பார்வையை ப்ரீத்தியின் உதடுகளின்மேல் நிலைக்கவிட்டான். தன் உதடுகளில் நிலைகொண்ட அவன் பார்வை சொன்ன செய்தி புரிய, ஒரு கனம் உடல் குன்றிப் போயிற்று.

‘ராஸ்கல்! பார்க்கும் பெண்ணையெல்லாம் இப்படித்தான் நினைக்கத் தோன்றுமோ? போயும் போயும் இவனைப் பார்த்துத் தொலத்தோமே’ என்று

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மனதிற்குள் திட்டித் தீர்த்து, சலிப்புடன் திரும்பவும், பிரதாப் வரவும் சரியாக இருந்தது.

“ஸாரி ப்ரீத்தி! கொஞ்சம் லேட் பண்ணிட்டேனா? ரொம்ப போர் அடிச்சிடிச்சா? க்ரவுட் வேற ஓவராயிட்டே இருக்கு…”

“போரெல்லாம் ஒண்ணுமில்ல… தனியா உட்கார்ந்திட்டிருக்கறதால வித்தியாசமாப் பார்க்கறாங்க…”

பல்வேறு விதமான பாடல்கள் மாறி மாறி ஒலிக்க, மெல்லிசை மாறி மீண்டும் இரைச்சல் உச்சத்தைத் தொடவே பேசுவதற்கு சிரமமாக இருந்தது.

இசையும், நடனமும் ஒரு நாட்டின் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பவை. எத்தனையோ விதமான இசையும், நடனமும் நம் நாட்டிலும் இருக்கின்றன.

சிறப்பு வாய்ந்த நடனங்கள் பழங்குடி இன மக்களால் இன்றளவும் ஆடப் படுகின்றன. எப்போது நம்மிடம் இருக்கும் பொருளின் அருமை நமக்குத் தெரியாது என நினைத்தவள் சிறிது நேரத்தில்,

“கிளம்பலாம் ப்ரதாப்… கொஞ்சம் தலை வலிக்கற மாதிரி இருக்கு…” என்று சொல்லவும் பக்கென்று சிரித்தவன் “கொஞ்ச நேரத்திலயே தலைவலியா? அப்ப அடுத்த ஆர்ட்டிக்கிள் தூள் கிளப்பும்” என்றான்.

“கண்ணால பார்க்காம எதையும் எழுதக் கூடாதில்லையா? சரி வாங்க… அடுத்த சாங் ஆரம்பிக்கறதுக்குள்ள கிளம்பிடலாம்” என்று மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமல் நடந்தாள்.

விலகி நடக்கையில், ஒரு கரம் நீண்டு அவளைச் சுண்டியிழுத்தது. சுதாரிக்குமுன் அந்தக் கரங்களின் அணைப்பிற்குள் கொண்டு செல்லப்பட்டாள். ஓர் ஆணுடலோடு சேர்த்து அணைக்கவும், முதலில் புரியாமல் திகைத்தவள் சுதாரித்து “ஓ! நோ…” என்ற அலறலோடு திமிறி விடுபட முயன்றாள்.

இறுக்கி அணைத்தவன் சித்ரஞ்சன்.

திமிறியவளை அடக்கி, வேட்கையுடன் இதழ்களை நெருங்கவும், அவளுக்குச் சினம் பொங்கி வழிந்தது. உடல் பலத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ‘ச்சீ!’ என்று விலக்கித் தள்ளியவளின் கை, அவனது கன்னத்தைப் பதம் பார்த்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'இடியட்! இவன் என்ன நினைத்துக் கொண்டான்? குடித்திருந்தால் கூட்டிக் கொண்டு வந்த பெண்ணுக்கும், வேறு பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாதா? இவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் போகும் பெண்களையும் சொல்ல வேண்டும்... வெட்கம் கெட்ட பிறவிகள்...' என்று ஆத்திரத்துடன் மீண்டும் கையை ஓங்கவும், ஓங்கிய கைகளைப் பற்றியவனின் கண்கள், அவளைச் சுட்டெரித்தன.

'அவளுக்கு விருப்பமில்லாவிட்டாலாவது பரவாயில்லை... வந்ததுமே பார்வையால் வலை விரிக்க முயற்சி செய்தவள்தானே... உள்ளே நுழையும் போது கண்சிமிட்டாமல் பார்த்தாளே? இப்போது என்ன வந்து விட்டது? பெரிய உத்தமி போல ட்ராமா செய்கிறாள்' என்று மனம் அவன் செய்கையை நியாயப் படுத்தியது.

எதிர்பார்த்தது கிடைக்காத ஏமாற்றம் அவனைச் சூழ்ந்தது. உள்ளே நுழைகையில் கார்கால வானில் ஒளிரும் மின்னல் போல, வெண்ணிற உடையில் ஜொலித்தவளைக் கண்ணிமைக்க மறந்து ரசித்தது நிஜமே.

அவள் கண்களில் தோன்றிய ஆர்வமும், உதடுகளில் மலர்ந்த புன்னகையின் அழைப்பும், அவனைக் கவர்ந்ததும் நிஜமே.

நளினமான உடலமைப்பும், கைகளை அசைக்கும் விதமும் வேட்கையைத் தூண்டி விட, 'அப்போதே அவள் வேண்டும்' என்று மனம் விடாமல் இம்சை செய்ததும் நிஜமே.

இது வரை எந்தப் பெண்ணும் அவனை இப்படி அவமானப் படுத்தியதில்லை. கண்ணசைவில் வந்து விழும் பெண்களைத்தான் பார்த்திருக்கிறான்.

'இவளானால் யார் மாட்டுவார்கள் என்று வந்த அத்தனை ஆண்களையும் கண்களால் அளந்து கொண்டிருந்தாளே... யாரோடு வந்தாளோ, அவனைப் பார்க்காமல் கண்களை அலைபாய விட்டிருந்தாளே...' என்று மனம் கேள்வி கேட்க, அவள் விழிகளோடு, எரிக்கும் தன் விழிகளை மோதவிட்டான்.

நிமிடத்திற்குள் நடந்த நிகழ்ச்சியில் அதிர்ந்து போய் நின்றிருந்த பிரதாப், சட்டென்று "ரஞ்சன்! வேணாம்... கையை விடு... ப்ரீத்தி நீ நினைக்கற மாதிரிப் பொண்ணில்ல..." என்று விலக்க முயற்சித்தான்.

கோபத்தை நிமிடத்தில் கட்டுப்படுத்தியவன், "வேற எந்த மாதிரிப் பொண்ணு இவ? நானும் வந்ததிலிருந்து பாத்துட்டுத்தானே இருக்கேன்... உன்னை விட்டுட்டு



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

எல்லாரையும் எடை போட்டுட்டு இருக்கா... போயும் போயும் இவளை எங்கடா பிடிச்ச... இவளோட ரேட் என்ன?" என்று குரலில் ஏளனத்தைத் தேக்கியவாறு கேட்டான்.

"டேய்..." என்று கோபத்தில் சட்டையைப் பற்றிய பிரதாப், பிரச்சனை என்று தெரிந்ததும் ஆவலோடு பார்க்க வந்த கூட்டத்தையும், கண்களில் தோன்றிய வலியை நிமிடத்தில் மறைத்த ப்ரீத்தியையும் பார்த்தவன்,

"எங்க நியூஸ்பேப்பர்ல வொர்க் பண்ற பொண்ணு ரஞ்சன்... நியூஸ் கலெக்ட் பண்ண வந்திருக்கா... நீ நினைக்கற மாதிரியெல்லாம் எதுவுமில்ல... எங்கயோ எப்படியோ நடந்துட்டுப் போ... ப்ரீத்தி கிட்ட இது போலப் பேசினா அப்புறம் என்ன செய்வேன்னே தெரியாது... முதல்ல ஸாரி கேளுடா..." என்றான்.

"என்ன? என்ன பிரச்சனை?" என்று சிலர் விசாரிக்கவும், இறுக்கிப் பிடித்ததால் வலித்த கையைத் தேய்த்து விட்டவாறு "கிளம்புவோம் பிரதாப்... எல்லார் பார்வையையும் விழ வேண்டாம்..." என்று சொல்லி 'இது மாதிரி நடந்துட்டா இப்படித்தான் பதில் கிடைக்கும்' என்ற எச்சரிக்கைப் பார்வையை சித்ரஞ்சனின் மேல் வீசியவாறு வெளியேறினாள்.

பற்றியிருந்த சட்டையை விட்டுவிட்டு, பிரதாப்பும் அவள் பின்னே சென்றான். புயல் வேகத்தில் சீறிப் பாய்ந்த கார், கடற்கரை சாலையில் சென்று நின்றது.

"இதுக்குத்தான் முதல்லையே சொன்னேன்... அப்படி அவனைப் பார்த்து வச்சையே... இப்பப் பாரு என்ன நடந்துச்சுன்னு..." என்று பொறிந்தான்.

"எதுக்கு இவ்ளோ கோபம்... சும்மா என் மேல தப்பு சொல்லாதீங்க... தெரிஞ்ச முகம்னு ஆச்சர்யமாப் பார்க்கறது தப்பா... என் பார்வையில தப்பொண்ணும் இல்ல... அவனோட மனசு முழுக்க வக்கிரம்தான் இருந்திருக்கு... கண்ணில தப்பை வச்சிட்டுப் பார்த்தா பார்க்கறதெல்லாம் தப்பாத்தான் தெரியும்... பெரிய ரோமியோன்னு நெனப்பு அவனுக்கு" என்றாள்.

அவள் மனம் அமைதியடையவில்லை. தாயாக, தாரமாக, மகளாக, தோழியாக பல்வேறு பரிமாணங்களில் சிறந்து விளங்கும் 'பெண்' என்ற பிறவியை, சமுதாயத்தில் ஒரு பிரிவினர் போகப் பொருளாகப் பார்க்கின்றனர்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

கூட்ட நெரிசல் மிகுந்த பேருந்தாகட்டும், இரயிலாகட்டும் எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று சில்மிஷம் செய்யும் ஆண்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்.

இந்த வக்கிர மனப்பான்மையில் என்ன அல்ப சந்தோசம் கிடைத்து விடுகிறதோ?

இது போன்றவர்களுக்கு, தன் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களையும் பிறர் இப்படிப் பார்க்கலாம் என்ற உணர்வு தோன்றவே தோன்றாதா?

எந்தப் பொருளை விற்க வேண்டுமென்றாலும், விளம்பரத்திற்கும் பெண்தான் தேவைப்படுகிறாள். ஆண்கள் உபயோகிக்கும் ஹேர் ஆயில், பெர்ஃபியூம், ஆப்டர் ஷேவ் லோஷன் என்று எந்த விளம்பரமாக இருந்தாலும் ஆணிடம் பெண் மயங்கி அவன் பின்னாலே வருவதாகத்தான் சித்தரிக்கப் படுகிறது.

இதுபோன்ற சிலரின் பார்வைக்கு பெண் கவர்ச்சி பொம்மை. தரத்தை விளம்பரப்படுத்தாமல், கவர்ச்சியை விளம்பரப்படுத்தும் முயற்சியில் பெண்களைக் கேவலப்படுத்துகின்றனர்.

சினிமா நடிகைகளின் திறமையும் கவர்ச்சியில்தான் அடங்கியிருக்கிறது. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் திரைப்படங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

சித்ரஞ்சனுடன் சேர்ந்து நடனமாடிய பெண்களையும் சொல்ல வேண்டும். முதலில் உடன் வந்தவள் ஒரு விதம் என்றால், வேறு யாருடனோ வந்தவளும் சேர்ந்து நடனமாடுகிறாள்.

ஆண்களின் கவர்ச்சியிலும், அழகிலும் மயங்கி, அவர்களின் பின்னால் அலையும் ஒரு சில பெண்களால், ஒட்டு மொத்தப் பெண்களையுமே தவறாகப் பார்க்கும் பழக்கமும் வந்துவிட்டது.

“ப்ரீத்தி… ஒரேயடியா அவனைத் தப்பா நினைக்காத… லேடீஸ் விஷயத்த விட்டுட்டுப் பார்த்தா ரொம்ப நல்லவன்… சிலருக்கு சில வீக்நெஸ் இருக்கும்… அவனோட பணத்துக்காக மட்டுமில்லாம அவனுக்காகத் தேடிப் போற பல பெண்கள் இருந்திருக்காங்க… அவனா யாரையும் தேடிப் போனதில்லை… இஷ்டமில்லாத பொண்ணத் திரும்பிக் கூட பார்க்க மாட்டான்… உன்னோட விஷயத்தில ஏதோ தப்பாப் புரிஞ்சிட்டான்…” என்று சொல்லவும் இடைமறித்தவள்,



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“இப்படிப் பட்ட ஒருத்தனுக்கு சப்போர்ட் பண்ணாதீங்க... அவனோட ஹிஸ்டிரி, ஜியாகரபி எல்லாம் எனக்குத் தேவையில்லை... அவன் தப்பா நடந்துக்க முயற்றி பண்ணினதுக்கு பதிலடி கொடுத்திட்டேன்... இதோட இந்தப் பேச்ச நிறுத்திக்கலாம்” என்றாள்.

பேச்சை நிறுத்தச் சொன்னாலும் அவள் மனதிற்குள் கோபம் எரிமலையாய்ப் பொங்கி வழிந்தது.

“எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு ப்ரீத்தி... ரிப்போர்டர்ங்கறதத் தாண்டி நீ ரொம்ப அழகான பொண்ணு... அதையும் ஞாபகத்தில வச்சுக்க...”

கனல் வீசும் பார்வையோடு “ஆ ஊன்னா இதொன்னச் சொல்ல வந்திடுங்க... காலம் காலமா, கதையிலையும் சினிமாலையும் வர்ற மாதிரி என்னைக் கடத்திட்டா போயிடப் போறான்... எத்தனை பொண்ணுங்களத் திரும்பிப் பார்க்க வச்சிருக்கோம்ங்கறதில ஆணுக்குப் பெருமை இல்லை... ஆளுமையில, கம்பீரத்தில, பெண்களை மதிக்கறதில, பாதுக்காப்புத் தரதுலதான் ஆணோட வீரமே இருக்கு...

பெமினிஸம் எல்லாம் நான் பேசலை... ஆனா, சின்னப் பார்வையைக் கூட தப்பா நினைக்கற ஆட்களை என்னன்னு சொல்ல... நான் கொஞ்சம் சுதாரிக்கலைன்னா இன்னும் எவ்வளவு தூரம் கேவலப் பட்டிருக்கணும்...” என்று சொன்னவள், அதற்கு மேல் பேச்சு எழும்பாமல் இருண்டிருந்த ஆகாயத்தை வெறித்தாள்.

## 4

**இ**ருண்டிருந்த ஆகாயத்தில் ஆதவன் தன் அலைக்கரங்களைத் தவழவிடுவதை வெறித்துப் பார்த்தார் யசோதா.

விடியல் என்பது எல்லா உயிர்களுக்கும் புத்துணர்ச்சி தருவது. பனித்துளியின் குளிர்ச்சியில் உறங்கும் புல்லாகட்டும், பறவையின் அரவணைப்பில் உறங்கும் குஞ்சாகட்டும், விடியலை ஆர்வத்துடன் வரவேற்கும்.

ஆனால், யாசோதாவிற்கு மட்டும் ‘வாழ்வில் இன்னொரு நாள் வந்துவிட்டதா?’ என்று சலிப்பாக இருந்தது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

யாரிடமாவது “கொஞ்சம் மனசு சரியில்லை” என்று சொன்னால், “மனசு சரியில்லையா? உங்களுக்கா? எவ்வளவு பெரிய பிஸினஸ் மேனோட வைஃப் நீங்க... மணிமணியாய் பையன் ஒண்ணு, பொண்ணு ஒண்ணுன்னு ரெண்டு பிள்ளைங்க.... கோடிக்கணக்கில சொத்து... கண்ணசைச்சா வந்து நிக்கற வேலைக்காரங்க... மகாராணி மாதிரி வாழ்க்கை... இதுக்கு மேல என்ன வேணும்?” என்று சிரிப்பார்கள்.

எல்லோரும் சொல்வதென்னவோ உண்மைதான். பார்த்து பிரம்மிக்கும் வகையில் பரந்து விரிந்த இடத்தில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருக்கும் வீடு, பணச் செழுமையைப் பறைசாற்றும் உள் அலங்காரங்கள், முன்பக்கம் புல்வெளியும், பூத்து விரிந்திருக்கும் செடி கொடிகளும், செயற்கை நீரூற்றும், நீச்சல் குளமுமாகத் தோட்டம், அணிவகுத்து நிற்கும் வெளிநாட்டுக் கார்கள் என்று எல்லாமே இருக்கிறதுதான்.

ஆனால், ‘வீடென்றால் இது மட்டும் தானா? இல்லை... இது வெறும் கட்டிடம்... வீடென்பது அன்பாலும், பாசத்தாலும் கட்டப்பட்ட அரண்மனை... கிண்டலும் கேலியுமான பேச்சுக்களும், அன்னியோன்யமும், சின்னச் சின்னச் செல்லச் சண்டைகளும் கொண்டது’.

‘கோடி கோடியாகப் பணம் இருந்தும் இந்தச் சலிப்பு ஏன்? யாரிடம் மன வேதனையைச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்ல நினைத்தாலும் கேட்க யார் இருக்கிறார்கள் இந்த வீட்டில்?’

கணவரிடம் சொல்லப் போனால், “என்ன செலவுக்குப் பணம் வேணுமா யசோ? பத்து லட்சம் அக்கவுண்டில் போடச் சொல்றேன்... பை” என்று கடிகாரத்துடன் பேசிக் கொண்டே முகத்தைப் பார்க்காமல் ஓடுபவர், எப்போது திரும்பி வருவார் என்று தெரியாது.

பெரிய பிசினஸ்மேன் என்ற பெயர்... பணம்... புகழ்... இதுதான் அவரது இலட்சியம். சாதாரண குக்கிராமத்தில் பிறந்து, சாப்பாட்டிற்கு வழியில்லாமல் பசியிலும் பட்டினியிலும் வளர்ந்து, மாற்றி உடுத்த உடையில்லாமல் கிழிந்ததை ஒட்டுப் போட்டு வளர்ந்த காலத்தில் வந்த இலட்சியம்.

நினைத்த எல்லாவற்றிலும் எளிதாக ஜெயித்து விட்டார். பலராலும் பாராட்டிப் பேசப்படும் சாதனையையும் செய்து விட்டார். ஒரு பிசினஸிலிருந்து அடுத்த

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

ஒன்றைப் புதிதாக ஆரம்பிப்பதுதான் அவருக்கு ஓய்வு. போதும் என்ற மனம் வராமல் ஓட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

பணமும், புகழும் மாய வாழ்க்கையின் பெரும் போதைகள். அடிமையான மனிதனைத் தன் பிடிக்குள்ளேயே வைத்திருக்கும். அடிமைப்பட்டுக் கிடப்பதை உணராத மனிதன் ராஜாவாகத் தன்னை உணர்கிறான். இரண்டையும் தக்க வைத்துக் கொள்ள காலத்தையும், சந்தோஷத்தையும் தொலைக்கிறான்.

கணவன் இப்படியென்றால் சித்ரஞ்சனோ அப்பாவிற்குத் தப்பாமல் பிறந்த பிள்ளை. போனில் பேசியபடியே "ஹாய் மாம்!" என்று சொல்வதற்கு மட்டும் அவனுக்கு நேரம் இருக்கிறது. போனில் பேசிக்கொண்டே எடுத்து வைக்கும் உணவை உண்டுவிட்டு, "பை!" என்று கையசைத்துக் கிளம்புகிறான்.

இரண்டு வருடங்களுக்கு முன்பெல்லாம் அவன் இப்படி இருந்ததில்லை. எவ்வளவு வேலை இருந்தாலும் தாய்க்கும், தங்கைக்கும் சிறிது நேரமாவது ஒதுக்குவான். இருபத்தி ஐந்தாவது பிறந்த நாளிலிருந்து அவனிடம் பெரும் மாற்றம்.

ஆரம்பத்தில் நேரம் கழித்து வீடு திரும்பத் தொடங்கியவன், சில நாட்கள் நண்பர்களின் அறையிலேயே தங்கிக் கொள்வதாகச் சொல்லி, அவ்வப்போது வீட்டிற்கு வருவதில்லை.

கைநிறையப் பணமும், கட்டற்ற சுதந்திரமும், கண்டவர் சகவாசமும் அவனை தவறான பாதைக்கு இழுத்துச் சென்று விட்டன. நிறையப் பெண்களோடு சுற்றுவதாகக் கேள்விப்பட்டதிலிருந்து மனதில் வேதனை உண்டாயிற்று.

'என்ன செய்வது? எப்படி மாற்றுவது? என்ற குழப்பம். கணவரிடம் சொன்னதற்கோ, "இந்த வயசில கேர்ள் ப்ரெண்ட்ஸ் இல்லைன்னாதான் நாம கவலைப் படணும்... இதெல்லாம் வயசுக் கோளாறு... அதுவும் இங்கத்த சூழ்நிலைல இத தப்புன்னு சொல்ல ஒண்ணும் இல்லை... கல்யாணம் ஆனா எல்லாம் சரியாப் போகும்... இப்ப இதப் பத்திப் பேச டைம் இல்லை... இன்னொரு நாள் பேசலாம்" என்று சொன்னார். ஆனால் அந்த இன்னொரு நாள் வருவதற்குப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஒருநாள் ஷாப்பிங் மாலில் மிக நெருக்கமாக ஒரு பெண்ணை அணைத்து முத்தமிட்டுச் சுற்றிய மகனை நேரடியாகப் பார்த்ததும் அதிர்ச்சியானது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அவர்கள் வசிக்கும் நாட்டில் அணைப்பும், முத்தமிடுதலும் மிகச் சாதாரணம். அருகிலேயே தான் இருப்பதைக் கூட கவனிக்கவில்லை. எல்லை மீறிய அணைப்பு இதோடு மட்டும் நிற்பது போலத் தோன்றவில்லை.

'வயதிற்குத் தகுந்த ஆசைகள் வந்துவிட்டன' என்று புரிந்தது.

ஒரு முடிவுடன், 'அவனுக்குத் திருமணம் செய்து விடலாம்' என்று சொன்னால், "மேரேஜா? இருபத்தஞ்சு வயசிலையா?" என்று சிரித்தவாறே அலட்சியப் படுத்திய பிள்ளையாகட்டும், "அவன் போக்கே சரியில்லைங்க... கல்யாணமாயிட்டா சரியாயிடுவான்னு நீங்கதானே சொன்னீங்க... மேரேஜை முடிச்சிடலாம்... பையன் கிட்டப் பேசுங்க" என்று பேச்செடுத்தால் பதில் சொல்லாமல் கடிகாரத்தைப் பார்த்த கணவராகட்டும், அவர் கவலையைக் கண்டுகொள்ளவில்லை.

நல்லவேளை அதையெல்லாம் பார்க்க மஹதி உடன் இல்லை. அவள் மட்டும் கொஞ்சம் இந்திய வளர்ப்பில் மாறாமல் இருந்தாள். அங்கேயே பிறந்து வளர்ந்தாலும், தாய்நாட்டின்மேல் எப்போதும் அவளுக்குப் பெருமை அதிகம்.

"படித்தால் இந்தியாவில்தான் படிப்பேன்" என்று அடம் பிடித்து சென்னையில் கல்லூரியை முடிவு செய்து ஹாஸ்டலில் சேர்ந்து கொண்டாள்.

அவள் கல்லூரியில் சேர்ந்ததிலிருந்தே கணவரிடம், "நீங்க நினைச்சபடியே எல்லாம் சாதிச்சிட்டீங்க... இனியும் எவ்ளோ நாள் இப்படி சாப்பிடாமத் தூங்காம பிசினஸ் பிசினஸ்னு ஓடிட்டிருக்கப் போறீங்க... இந்தியாவுக்கே போயிடலாங்க..." என்று நேரம் கிடைக்கும் போதெல்லாம் நச்சரிக்கத் தவறுவதே இல்லை.

இருபத்து ஐந்து ஆண்டு கால அமெரிக்க வாழ்க்கையில் மனம் ஒட்டவே இல்லை. முழுமையாக அந்த வாழ்க்கை முறைக்குப் பழக்கப் படுத்திக் கொள்ள முடியாமல், தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாமல் வாழ்ந்தாயிற்று.

நிறையப் பேருக்கு உடம்பு நன்றாக இருக்கும் வரை சொர்க்கமாகத் தோன்றும் வெளிநாட்டு வாழ்க்கை, உடம்பு தளரத் தளர உறவுக்காகவும் சுற்றத்திற்காகவும் ஏங்கும்.

உறவினர்களையெல்லாம் விட்டு விட்டு, ஒரு சிலரின் கடைசி நிமிஷங்களில் கூட உடன் இருக்கக் கொடுத்து வைக்காத ஏக்கம், மனதிற்குள் அப்படியே இருக்கிறது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'ரோமில் இருக்கும் போது ரோமானியனாக இரு' என்பதெல்லாம் சொல்லளவில். அப்படி இருக்க முடிகிறதா? என்னதான் சொந்த நாட்டை விட்டு, குடியுரிமை வாங்கி பிற நாட்டவராக மாறினாலும் 'நம் வேர் எது?' என்பதை மனம் மறப்பதில்லை.

டேட்டிங், லிவிங் டுகதர், குறைந்த பட்சம் மூன்று திருமணம், டைவர்ஸ் என்று எல்லாமே இந்தக் காலத்தில் சகஜமாகப் போய்விட்டன.

பெரும்பான்மையான இந்தியப் பெற்றோர்களைப் போல, அவராலும் இதெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாட்டினராக மாறும் போது, முழுமையாக அங்கேயிருக்கும் பழக்க வழக்கங்களை ஏற்கமுடிவதில்லை. மனதளவில் இந்தியராகவும், வசிப்பிடத்தில் மட்டும் வெளிநாட்டவராகவும்தான் இருக்க முடிகிறது.

இரண்டு வருடங்கள் போராட்டத்திற்குப் பிறகு ஒரு முடிவுடன் "மேரேஜ் இப்ப வேண்டாம்னே ரஞ்சன் சொல்லிட்டிருக்கான்... இந்த வருஷம் மஹியோட படிப்பு முடிஞ்சிடும்... அவளுக்காவது மேரெஜ் பண்ணிடலாம்... அவ மேரெஜ் முடிக்கற வரைக்கும் கொஞ்ச நாள் நான் அவளோட இருக்கேன்... அங்கேயே மாப்பிள்ளை பார்த்துக்கலாம்... சாகறதுக்குள்ள கொஞ்ச நாள் நான் அங்க இருக்கணும்... அப்பத்தான் நிம்மதியாப் போவேன்" என்று மிரட்டலாகச் சொல்லவும் மாற்றம் வந்தது.

இது நாள்வரை இதுபோலப் பேசிராத மனைவியைக் கோபமாகப் பார்த்தாலும் என்ன நினைத்தாரோ, "சரி எல்லாருமே போவோம்... மஹி மேரேஜ் முடிக்கற வரைக்கும்தான்... அப்புறம் திரும்ப வந்திடலாம்... அங்கேயும் புதுசா ஒரு கம்பனி எஸ்டாப்ளிஷ் பண்ண வேண்டியிருக்கு... இங்கயும் அங்கயுமா நானும் ரஞ்சனும் மாத்தி மாத்திப் பார்த்துக்கறோம்..." என்று சொன்னபோது "இருக்கற பணத்தை வைத்து இன்னும் பல தலைமுறைக்கே வாழலாம்... எப்படியோ பார்த்துக் கொள்ளட்டும்..." என்று சந்தோஷமாகக் கிளம்பி வந்தாயிற்று.

மஹதியோ, "மம்மி இந்த ஒரு செமஸ்டரோட காலேஜ் லைஃப் முடிஞ்சிடும்... கொஞ்ச நாள் தானே... அப்புறம் உங்களோடதானே இருக்கப் போறேன்... நான் ஹாஸ்டல்லயே கண்டினியூ பண்ணிக்கறேன்..." என்று சொல்லி விட்டாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

“அவளைக் கேட்காமல் ஏன் இந்த முடிவெடுத்து எங்களையும் தொந்தரவு செய்தே?” என்று கணவர் கோபப்படுவார் என்று நினைத்தால், எதுவும் பேசாமல் அமைதியாகத் தன் போக்கிற்கு விட்டுக் கொடுத்து விட்டார்.

‘ரஞ்சனின் வாழ்க்கை முறையில் கொஞ்சமாவது மாற்றம் வரும்’ என்று நினைத்தது நிறைவேறியதா என்றும் புரியவில்லை.

வந்த புதிதில் வேலை வேலை என்று அலைந்து கொண்டிருந்தவன், இரண்டு நாட்களாக அளவு மீறிக் குடித்துவிட்டு, தள்ளாடியபடி விடியற்காலையில் வீடு திரும்புகிறான்.

கண்டிப்பைக் காட்ட வேண்டிய வயதில், “இப்படி நிக்க வச்சுக் கேள்வி கேட்கற அளவுக்கு அவன் என்ன தப்புப் பண்ணிட்டான்? டீன் ஏஜ் ஆரம்பிச்சதுக்கு ஃப்ரெண்ட்ஸ் ட்ரீட் கேட்டிருக்காங்க... அதில கொஞ்சம் டிரிங்க்ஸ் எடுத்திருக்கான்... இதெல்லாம் இங்க சகஜம்... உன்னோட பட்டிக்காட்டுத் தனத்தை உன்னோட நிறுத்திட்டு வேலை என்னவோ அத மட்டும் பார்...” என்று பதிமூன்று வயதில் குடித்துவிட்டு வந்ததைக் கண்டித்ததற்கு, கோபத்தைக் காட்டி வேதனைப் படுத்தியிருக்கிறார்.

அன்று நெஞ்சத்தில் விழுந்த அடி பலமாகப் பட்டது.

‘தப்பு செய்யும் பையனைக் கண்டிக்க அம்மாவிற்கு உரிமையில்லையா?’ என்று என்று கண்களில் நீர்வழியப் பார்த்தபோது, கண்டுகொள்ளாமல், “நீ போப்பா... அவ அப்படித்தான்...” என்று தப்பு செய்த மகனை சமாதானம் செய்து, தன் கண்கள் கேட்ட கேள்விக்குத் தீயென பதில் பார்வை பார்த்தாரோ அன்றே வெறுத்து விட்டது.

அந்தப் பார்வை சொல்லும் செய்தி புரிந்தது. அந்த ஒரு விஷயத்திற்காகத்தான் அமைதி காப்பது. இல்லையென்றால் கண்டிப்பைக் காட்ட அவருக்கும் தெரியுமே. மஹதியைக் கண்டிப்புடன் வளர்க்கவில்லையா?

பதிமூன்று வயதில் கண்டித்ததற்குப் பிறகு ஒரு முறை கூடக் குடித்துவிட்டுத் தன் முன்னால் வந்ததில்லை. “மாம்! நான் வர லேட் ஆகும்... நீங்க தூங்கிடுங்க” என்று குரலில் ஒரு வித சங்கடத்தோடு சொல்லிவிடுவான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'பரவாயில்லை இந்த அளவிற்காவது பார்க்கிறானே' என்று சந்தோஷப்பட்டதெல்லாம் வீண். 'இப்போது புதிதாக என்ன வந்துவிட்டது? அதை அவனிடம் கேட்பது யார்?'

முழுக்க முழுக்கக் கணவரின் மேல் கோபம் திரும்பியது. 'இன்று சித்ரஞ்சனின் திருமணத்தைப் பற்றி பேசி முடிவெடுத்துவிட வேண்டும்' என்ற முடிவோடு அமர்ந்திருக்க, "அம்மா!" என்றவாறு சமையல் செய்யும் பெண் வந்தாள்.

"என்ன சாந்தா?"

"அம்மா! கா.ஃபி கொண்டு வரவா? நீங்க இன்னமும் குளிக்கலையே? உடம்பு சரியில்லைங்களா?"

'எப்போதும் குளித்து முடித்துவிட்டு பூஜையில் உட்காரும் முதலாளியம்மா இப்படி இருக்கிறார்களே?' என்று ஆச்சர்யத்தோடு கேட்டாள்.

"கா.ஃபி வேண்டாம் சாந்தா... எல்லாரும் வரட்டும்... அப்புறம் குடிச்சிக்கறேன்..."

மேலும் தயங்கியவாறு சாந்தா நிற்கவும், "அதான் வேண்டாம்னு சொல்றேனே..." என்று சலிப்போடு சொல்லவும், "அது வந்துங்கம்மா..." என்று தயங்கி "சின்னய்யாவோட போட்டோ பேப்பர்ல, புக்ல எல்லாம் வந்திருக்குங்க... டிரைவர் அண்ணன் காமிச்சாருங்க..." என்றாள்.

"யார் ரஞ்சன் போட்டாவா?" என்று ஆச்சர்யத்தோடு கையிலிருந்த நாளிதழை வாங்கிப் பார்த்தார்.

அமெரிக்காவில் இருக்கும் காலத்தில் எதாவது தொழில் தொடர்பு, ஸ்போர்ட்ஸ் என்று எதிலாவது உள்ளூர் பேப்பரில் அவ்வப்போது செய்தி வரும். ஆனால், அவன் இங்கே ஒன்றும் பிரபலமில்லையே என்னவாக இருக்கும் என்று யோசனையோடு படித்தார்.

அது ஒரு பாடாவதி நாளிதழ். யாரோ ஒரு பெண்ணை அணைத்தவாறு நின்றிருக்கும் சித்ரஞ்சன், அவளை முத்தமிட நெருங்கும் சித்ரஞ்சன் என்று ஒரு பெண்ணோடு சேர்த்து எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணிற்கும், எழுதியிருந்த விதத்திற்கும் சம்பந்தமில்லை என்பது போன்ற கண்ணியமான தோற்றம் அவளிடம்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மற்றொரு புத்தகமோ காலம் காலமாகப் பெயரெடுத்த தரமான பத்திரிக்கை. அரை குறை ஆடையுடன் இருந்த பெண்ணோடு மிக நெருக்கமாக முத்தமிட்டுக் கொண்டிருப்பவன் சித்ரஞ்சன் என்றதும் மனம் அதிர்ந்தது. ‘இன்று இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்’ என்று வைராக்கியம் மனதில் எழுந்தது.

## 5

“**இ**ப்படியே விட்டுடாதீங்க மேடம்... சார் கிட்டச் சொல்லி மான நஷ்ட வழக்குப் போடச் சொல்லுங்க...” என்று கோபத்தோடு சொன்ன ஆபிஸ் பியூனை ஏறிட்டாள் ப்ரீத்தி.

“இதுக்கெல்லாம் மான நஷ்ட வழக்குப் போட்டிட்டிருந்தா, நாம வேற வேலை எதுவும் பார்க்க முடியாது.... குப்பை மாதிரி ஒதுக்கித் தள்ளிட்டுப் போயிட்டே இருக்கணும்...” என்று பதில் சொல்லி பியூனை வெளியே அனுப்பிவிட்டுக் கையிலிருந்த நாளிதழை மறுபடியும் பார்த்தாள்.

‘பிரபலமாயிருந்த டென்னிஸ் வீரர் மாய மோகினியின் வலைக்குள்’ என்ற தலைப்பில் இருந்த அரைப்பக்கச் செய்தியை மறுபடியும் படித்தாள்.

‘மயக்கிக் கைப்பிடிக்குள் போட்டுக் கொண்டு பத்திரிக்கை உரிமையாளராக மாறத் திட்டம்... கண்ணகி போல வேஷமிடும் மாதவி ரிப்போர்ட்டர்... ஒரு பக்கம் டென்னிஸ் வீரர், மறுபக்கம் பெரும் தொழிலதிபருடன் சரச நாடகம்... காதலர் தினத்தில் விடிய விடியக் களிப்பு...’ என்றெல்லாம் எழுதி பிரதாப், சித்ரஞ்சன் இருவருடன் அவள் இருக்கும் படங்களைப் பிரசுரித்திருந்தார்கள்.

நாட்டில் எத்தனையோ பிரச்சனைகள் இருக்க இது போல கிசு கிசுவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிக்கைகளை நினைக்க எரிச்சலாக வந்தது. உருப்படியான செய்திகளை அந்தப் பத்திரிக்கையில் படித்ததாக அவளுக்கு நினைவில்லை.

தினம் தினம் எல்லையில் நடக்கும் பிரச்சனையில் உயிர்த்தியாகம் செய்யும் வீரர்களைப் பற்றி, இது போன்ற பத்திரிக்கைகள் எழுதத் தயாராக இல்லை. நாட்டின் வளர்ச்சியையோ, பற்றாக்குறையையோ, விழிப்புணர்ச்சியையோ, சமுதாய சீர்கேடுகளையோ எழுதுவதில்லை.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நடிகைகளின் கவர்ச்சிப் படங்களைப் போட்டுக் காசு பார்க்கும் இரகத்தைச் சேர்ந்தது. கள்ளக் காதல், தகாத உறவு பற்றிய அசிங்கங்களையெலாம் விலாவரியாக காமரசம் சொட்டச் சொட்ட விவரித்து எழுதி, சமுதாயத்தை சீர்குலைக்கச் செய்து நம்பர் ஒன் நாளிதழ் என்று வெற்றுப் பெருமைப் பட்டுக் கொள்வது.

உளவியல் ரீதியாக நாம் திரும்பத் திரும்பப் படிக்கும், பார்க்கும் விஷயங்களை எளிதில் மனம் நியாயப் படுத்தி விடுகிறது. தினம் தினம் கற்பழிப்புகளையும், பாலியல் பலாத்காரங்களையும், தகாத உறவுகளையும் சொல்லிச் சொல்லி சமுதாயத்தில் இதெல்லாம் சகஜம் என்ற நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி விட்டன.

கிளுகிளுப்பான செய்திகளை மக்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்று சொல்லி, ஏதோ நூறு பேர் விரும்பும் விஷயத்தை ஊர் முழுக்கப் பரப்பும் வக்கிர முயற்சி.

அவள் ஒரு சாதாரணப் பெண். இது போல அரைப் பக்கத்திற்கு படத்தைப் போட்டு புரளியைக் கிளப்புமளவு முக்கியத்துவம் வாய்ந்தவள் அல்ல.

'பிரதாப்பின் பெயரைக் கெடுக்கும் முயற்சியோ? யாரோ திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள்' என்று புரிந்தது.

பிரதாப்பின் அறைக்குச் சென்றால், அவனும் அதே நாளிதழை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"வா ப்ரீத்தி! நானே கூப்பிடணும்னு இருந்தேன்... இப்ப ஒரு போன் வந்துது... தேவையில்லாத விஷயங்கள்ல தலையிடக் கூடாதாம்... எழுதக் கூடாதாம்... மீறி எழுதினா நம்ம பேரை இப்படி அசிங்கப் படுத்துவாங்களாம்... இதோட நிக்காதாம்... இந்த ஆபீஸையே கொளுத்திடுவாங்களாம்... எவனோ சொல்லிட்டு வச்சிட்டான்... என்றான்.

"எல்லாம் கட்சிக் காரங்க வேலையா இருக்கும்... யாரையும் ஒண்ணும் எழுதிடக் கூடாது.... இவனுங்களுக்குப் போட நியூஸா கிடைக்கல... யூஸ்லெஸ் நியூஸ்... நீங்க மேட்ச் வின் பண்ணினப்ப எல்லாம் ஒரு நியூசும் போடலை... இப்ப கிசு கிசு மட்டும் போட வந்துட்டாங்க" என்று எரிச்சலாகக் கூறினாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“விட்டுத் தள்ளு… என்றவன், மறுபடியும் அந்த செய்தியைப் பார்த்து, “ரஞ்சனும் நீயும் இருக்கற போட்டோஸ் இப்படித் தெளிவா வரும்னு நான் எதிர்பார்க்கலை…”

அவளுக்கும் அது அதிர்ச்சிதான். சித்ரஞ்சன் அவளை அணைத்தது, முத்தமிடுவது போன்ற வண்ணப் புகைப்படங்கள் தெளிவாக இருந்தன.

அன்றைய நாளை இன்னமும் மறக்க முடியவில்லை. அடிக்கடி இல்லையென்றாலும், கனல் வீசும் பார்வையோடு பொசுக்கிய கண்கள் சில சமயம் மனதிற்குள் மின்னி மறையும்.

அந்தச் சம்பவத்தை ஒதுக்கித் தள்ள முயன்று, ஓரளவு வெற்றியும் பெற்றாயிற்று. பிரஸ் மீட், பிரபலங்களுடன் பேட்டி என்று இடையறாது வேலைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

மீண்டும் அவனை மறக்க முடியாதவாறு புகைப்படங்கள். ‘அவன் கண்களில் இருப்பது என்ன விதமான பார்வை?’ என்று புகைப்படத்தைப் பார்த்து மனம் யோசித்தது.

“எதுக்கு வரச் சொல்ல நினைச்சேன்னா…. இந்த வீக் புக்ல ரஞ்சன் போட்டோ எதுக்கு போட்டீங்க? அதை அவாய்ட் பண்ணிருக்கலாமில்ல…”

“அந்த போட்டா நான் செலெக்ட் பண்ணலை பிரதாப்… யாரோட ஃபேஸும் தெளிவாத் தெரியாத மாதிரி குரூப்பா இருக்கற போட்டோதான் போடச் சொன்னேன்… அவரச வேலையா டெல்லி கிளம்பிட்டது உங்களுக்கே தெரியும் தானே… எல்லா நியூசுமே முதல்ல செக் பண்ணியாச்சுன்னு, இந்த ஒரு ஆர்ட்டிகிள் மட்டும் ரெடி பண்ணி கேப் விட்டிருந்த இடத்தில ஃபில் பண்ணச் சொன்னேன்… வேற போட்டோவை மெயில்ல அனுப்பிட்டேன்…

நான் அனுப்பின போட்டோ கிளியரா இல்லைன்னு எடிட்டர் சார் என்னோட கம்யூட்டர்ல இருக்கற வேற போட்டோ தேடிக்கார்…. அவருக்குப் போயும் போயும் இவன் போட்டாதான் கிடைக்கணுமா… எடுத்த எல்லா போட்டோலையும் இவனோடது நல்லா வந்திருக்குன்னு சொல்றார்… என்னத்தச் சொல்ல… இப்படி இவன் போட்டோ வரும்னு நான் நினைக்கவே இல்லை… இவனைப் பார்த்ததுல இருந்து எல்லாமே தப்புத் தப்பா நடக்குது… வேணும்னே போட்டிருக்கேன்னு நினைச்சுப்பான்…” என்று பெருமூச்சோடு கூறினாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“ஆனா… நீயும் அவனும் இருக்கற போட்டோஸ்ல, இந்த போட்டோல அவனோட பார்வை…” என்று சொல்ல வந்தவன் பேச்சை நிறுத்தவும், கேள்வியோடு முகத்தைப் பார்த்தவள் “அதுக்கென்ன?” என்றாள்.

குறைந்த நாட்களிலேயே பிரதாப்போடு உரிமையோடு பேச முடிந்தது. நட்பின் கரத்தை அவனும் வலுப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கிறான்.

“ஒண்ணுமில்லை…” என்று பேச்சை மாற்றி, “நீ எழுதின ஆர்ட்டிக்கிள் ரொம்ப நல்லா வந்திருக்கு… ஆஸ் யூசுவல் ராக்ஸ்…” என்று பாராட்டியவன் “நீ வீட்டுக்கு வந்தே ரொம்ப நாளாச்சாம்… பாட்டி உன்னைப் பார்க்கணும்னு சொன்னாங்க… எப்ப வர்ற?” என்றான்.

“இந்த வீக் வர முடியாதுன்னு சொல்லிடுங்க… ஈவினிங் போன்ல பேசிக்கறேன்… தாத்தாவைப் பார்த்து ரொம்ப நாளாச்சு… ரெண்டு நாள் லீவ் போட்டுட்டு ஊருக்குப் போகலாம்னு இருக்கேன்…” என்று சொன்னவளுக்கு மீண்டும் மீண்டும் சித்ரஞ்சனின் முகமும், கண்களும் மனதில் மின்னி மறைந்தன.

முதலிலேயே கோபத்தோடு பார்த்தான். இப்போது நேரில் கிடைத்தால் பொசுக்கி விடுவான். ‘சே! சும்மா சும்மா அவனையே நினைக்காதே மனமே…’ என்று திட்டியவாறு வேறு வேலையில் கவனத்தைத் திசை திருப்பினாள்.

*** *** ***

**அ**தே நேரத்தில், “உன்னோட கொஞ்சம் பேசணும்…” என்று தூக்கத்தில் இருக்கும் சித்ரஞ்சனை தொலைபேசியில் எழுப்பினார் யசோதா.

போதிய தூக்கம் இல்லாததால், “அப்புறம் பேசலாம் மாம்… இன்னைக்கு ஒண்ணும் மூட் சரியில்லை… நான் குளிச்சிட்டு வெளில கிளம்பணும்… கொஞ்சம் வொர்க் இருக்கு…” என்று தள்ளிப் போட நினைத்தான்.

எப்போதும் போலத் திருமணப் பேச்சை எடுப்பார்கள் என நினைத்தான். இப்போதெல்லாம், இதைத் தவிர்க்கவே, அவன் வீட்டில் தங்குவதே இல்லை.

சங்கிலியில் கட்டுப் பட்டு வாலை ஆட்டும் நாயைப் போல, கல்யாணம் என்ற பந்தத்தில் ஒரு பெண்ணிடம் கட்டுப்பட அவன் விரும்பவில்லை.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

"எங்க போறீங்க? எப்ப வருவீங்க?" இது போன்ற அற்பத் தனமான கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டு, "ஷாப்பிங் போகணும்" என்று சொல்லும் போதெல்லாம் டிரைவர் வேலை பார்க்க விருப்பமில்லை.

எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தான்.

மறுத்துச் சொன்ன பிறகும், "ரஞ்சன்! உன்னோட மேரெஜ் விஷயமா இன்னைக்குப் பேசி முடிவெடுக்கலாம்னு இருக்கோம்..." என்று தந்தையை அழைத்துக் கொண்டு தன் அறைக்கு வந்து நின்ற தாயைப் பார்த்து, தலைவலியோடு எரிச்சலும் வந்தது.

'மனநிலை புரியாமல் இப்படி உயிரை எடுக்கிறார்களே...' என்று நினைத்தவன் "டாட் எனக்கு இப்ப மேரேஜ் பண்ற ஐடியா எதுவும் இல்லை... முதல்ல மஹியப் பேக் பண்ணி அனுப்புங்க... எனக்குத் தோணும் போது சொல்றேன்... இப்ப ஆளை விடுங்க" என்றான்.

எப்போதும் போல விட்டு விடுவார்கள் என்று நினைத்தால், விடாமல் வாக்குவாதம் செய்வார்கள் என்று அவன் நினைக்கவில்லை.

'அப்படிச் செய்வது சரியில்லை... இப்படிச் செய்வது சரியில்லை...' என்று தாயார் மாறி மாறிக் குற்றம் சாட்டவும், எரிச்சல் எல்லை மீறியது.

"என்னோட மேரேஜ் என்னோட சொந்த விஷயம்... இதில நீங்க தலையிடாதீங்க..." என்று கோபத்தோடு வார்த்தையை விடவும், '"என்னடா சொல்ற? நாங்க தலையிடாம வேற யார் தலையிடுவாங்க? நீ பண்றதெல்லாம் சரியா? அங்க இருக்கும் போதுதான் உன்னோட இஷ்டத்துக்கு இருந்த... இங்க பாரு பேப்பர்ல எல்லாம் உன்னோட போட்டோ எப்படி வந்திருக்குன்னு... சொன்னாக் கேளு ரஞ்சன்..." என்று தாயார் கெஞ்சும் குரலில் சொல்ல, கையிலிருக்கும் நாளிதழையும், புத்தகத்தையும் வாங்கிப் பார்த்தான்.

"பார்ட்டில எடுத்த போட்டோஸ் மாம்... இதில என்ன இருக்கு..." என்று கேட்கவும், "ஆமாம்டா... இப்படி மாத்தி மாத்திப் பொண்ணுங்க கூட வர்ற போட்டோஸ் எல்லாம் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கும்டா... இதில யாரையாவது பிடிச்சிருந்தாலாவது சொல்லு... மேரேஜ் பண்ணி வச்சிடறோம்..."



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

புகைப்படத்திலிருக்கும் ப்ரீத்தியின் முகத்தைப் பார்த்ததும் 'இவளையா?' என்று எண்ணி மனதில் கனல் மூண்டது.

முதலிலேயே உறங்கும் நேரமெல்லாம் மாயப் புன்னகையாலும், விழித்திருக்கும் நேரமெல்லாம் கோபப் பார்வையாலும், விடாமல் துரத்திக் கொண்டிருந்தாள். ஒரு பெண்ணால் அவமானப் பட்டதை மறக்க விடாமல் செய்யும் புகைப்படங்கள்.

இதுவரை யாரிடமும் அடி வாங்கியதில்லை அவன். முதன் முறையாக, அதுவும் 'ஒரு பெண்ணிடம் அடி வாங்கக் கூடும்' என்று கனவில் கூட நினைத்ததில்லை. எத்தனை பேர் சுற்றியிருக்கக் கை நீட்டி அடித்தாள்.

இதுவரை கண்ணசைவில் வந்து விழும் பெண்களையே பார்த்துப் பழக்கப்பட்டவனுக்கு, அந்த அவமானம் தாள முடியாததாக இருந்தது.

'ஒரு பார்வையாவது பார்க்க மாட்டானா...' என்று எத்தனை பெண்கள் ஏங்குகிறார்கள். 'இவளானால்...' எரிமலை போல் கனன்று கொண்டிருந்த கோபத்தால், எந்த வேலையிலும் கவனம் செலுத்த முடியவில்லை.

வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, தாய்க்கும் தந்தைக்கும் இடையில் நடக்கும் வாக்குவாதத்தில் மனம் சலித்தது.

"டாட்! இந்த மாதிரியெல்லாம் தொந்தரவை அனுபவிக்கக் கூடாதுன்னுதான் இப்ப மேரேஜ் வேண்டாம்னு சொல்றேன்... மம்மி கிட்ட நீங்க மாட்டிட்டுப் படற பாட்டப் பார்க்கவே கஷ்டமா இருக்கு... எதாவது சொன்னாக் கேட்கறாங்களான்னு பாருங்க..." என்று கேலிப் பேச்சில் சமாளிக்க முனைந்தான்.

"பாருங்க எப்படியெல்லாம் பேசறான்னு.... என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ... மேரேஜ்கு அவனை ஒத்துக்க வைக்க வேண்டியது உங்களோட பொறுப்பு.... பணம் பணம்னு பின்னாடியே ஓடாம கொஞ்சம் வீட்டையும் பாருங்க... பாழாப்போன பிசினஸக் கட்டிட்டு, செய்ய வேண்டிய கடமைய மறந்திடாதீங்க..." என்று சலிப்போடு கூறவும், விடாமல் தொந்தரவு செய்யும் மனைவியை நினைக்க அவருக்குக் கடுப்பானது.

"ஏய்... என்ன பேசறேன்னு தெரிஞ்சு தான் பேசறயா? நான் மட்டும் தான் பணத்துக்குப் பின்னாடி ஓடிட்டிருக்கேனா? உலகமே அதுக்குப் பின்னாலதான்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

ஓடிட்டிருக்கு... இப்ப இருக்கற வசதி, அந்தஸ்து அதைப் பாத்துத்தான் எல்லாருமே மதிக்கறாங்க... ராப்பகலாக் கஷ்டப்பட்டு சம்பாதிக்கலைன்னா, இந்த மாதிரி சொகுசா வாழ முடியுமா? என்ன இல்லை என்கிட்ட... எல்லாமே இருக்கு.... நினைச்ச நேரத்தில நினச்சத வாங்க முடியுது...

இப்ப ராஜா மாதிரி இருக்கேன்டி... அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன செய்யன்னு யோசிச்சிட்டிருந்த வாழ்க்கையெல்லாம் இப்ப இல்லை... அதுக்கெல்லாம் காரணம் பணம் தான்..." என்று அடுக்கிக் கொண்டே சென்றார்.

கணவரும், மகனும் கோபத்தில் இருப்பது புரிந்தாலும், 'இன்று விட்டால் இன்னொரு நாள் இது போல அமையாது' என்று தோன்ற, "பணத்தை வச்சிட்டு நிம்மதியை விலைக்கு வாங்க முடியுமாங்க... வீட்ல எல்லார்கிட்டயும் பேச உங்களுக்கு டைம் இருக்கா... பையன் எப்ப வெளில போறான், டைமுக்கு வர்றானா இல்லையான்னே தெரிய மாட்டேங்குது... மஹதி இப்படியாங்க இருக்கா... எங்க போனாலும் சொல்லிட்டுப் போவாதானே... ரெண்டு நாளா ஃபுல்லா ட்ரிங்ஸ் எடுத்திட்டு, விடியக் காலைல வந்து சேர்றான்... அதெல்லாம் கேட்க மாட்டீங்க..." என்று முடிப்பதற்குள்,

"உனக்கு இப்ப என்ன நிம்மதி இல்லாமப் போயிடுச்சு... என்னோட நிம்மதியத்தான் கெடுத்திட்டிருக்க... தெரியும்டீ, உனக்கு அந்த கிராமத்திலயே நான் இருந்திருக்கணும்.... அப்பதான் சந்தோசமா இருந்திருப்ப..." என்றவரின் அனல் கக்கும் பார்வையில் இருந்த செய்தியில் யசோதாவின் மனம் தவித்தது.

இந்தப் பார்வையைச் சந்திக்கும் போதெல்லாம் வாயடைத்துப் போகும். 'கடவுளே அவர் வாயால் எதையும் சொல்ல வைத்து விடாதே' என்று மனம் அரற்றியது.

## 6

'**க**டவுளே அவர் வாயால் எதையும் சொல்ல வைத்து விடாதே...' என்ற யசோதாவின் மனதின் அலறல் செவிகளுக்கு எட்டாமல், "பெத்தவளா இருந்தா சரியா வளர்த்திருப்ப.... உன்னோட பொண்ணுக்கும், இவனுக்கும் வித்தியாசம் பார்த்து வளர்த்திருக்க... இவன் இப்படிப் போனதுக்குக் காரணமே நீதாண்டி... இவனை



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நல்லா வளர்க்கத்தானே உன்னைக் கல்யாணம் பண்ணினேன்... ஒழுங்கா வளர்த்திருந்தேன்னா சொல் பேச்சுக் கேட்டிருப்பான்... பண்ணற தப்பெல்லாம் பண்ணிட்டு ஒண்ணுமே தெரியாதவ மாதிரி இப்ப என்ன செய்யறதுன்னு என்னைக் கேளு..." என்றார்.

உடலிலிருக்கும் சக்தியையெல்லாம் யாரோ உறிஞ்சியது போல, கால்கள் நிற்க முடியாமல் வலுவற்றுப் போயின.

'இதுவரை ரஞ்சனுக்குத் தெரியாத விஷயம்... இப்போது போட்டு உடைத்து விட்டார்...' என்று மனம் பதறப் பார்த்தால், அவனும் அதிர்ச்சியுடன் தந்தையைப் பார்த்து, "டாட்! என்ன சொல்றீங்க?" என்றான்.

கேட்கும் போது அதிர்ச்சியான விஷயமாக இருந்தாலும், பெரிதாக வேறுபாடு தோன்றவில்லை அவனுக்கு. பெற்றவர்களோ வளர்த்தவர்களோ, அவனுடைய அம்மா யசோதாதான்.

தயக்கத்தோடு, "உன்னைப் பெத்த அம்மா பேர் லதா... நீ பிறந்ததுமே இறந்திட்டா... மெடிக்கல் ஃபெசிலிடீஸ் எதுவும் டெவெலப் ஆகாத காலம் அப்ப... எவ்வளவு போராடியும் காப்பாத்த முடியலை... லதாவும், யசோதவும் சின்ன வயசில ஒண்ணா வளர்ந்தவங்க... பக்கத்து வீடு வேற... உன்னோட பாட்டியும் உடம்பு சரியில்லாதவங்க... உன்னைப் பார்த்துக்கிட்டது எல்லாம் இவதான்...

எங்க பார்த்தாலும் உன்னோட அம்மா இருக்கற மாதிரியே எனக்கு இருந்தது.... வாழ்க்கையே ஒரு மாதிரி வெறுத்துப் போச்சு... அப்பத்தான் இந்த பாரின் ஆஃபர் வந்தது.... சம்பளம் குறைவா இருந்தாலும் நல்லா டெவலப் ஆக சான்ஸ் இருந்ததால அந்த ஊரை விட்டே கிளம்பிடணும்னு முடிவு பண்ணிட்டேன்...

உங்க பாட்டிதான் நீ சின்னக் குழந்தைங்கறதால என்னோட தனியா அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டாங்க... அவங்களே வளர்த்துக்கறதாச் சொன்னாங்க... அப்படி எடுத்திட்டுப் போகணும்னா, இன்னொரு மேரேஜ் பண்ணி அப்புறம் கூட்டிட்டுப் போகச் சொன்னாங்க... வேற வழியில்லாம நான் சரின்னு சொன்னதும், பாட்டிதான் இவளை எனக்கு மேரேஜ் பண்ணி வச்சாங்க..." என்றார்.

இதுவரை பழைய விஷயங்களைப் பற்றியெல்லாம் பேச விருப்பப் பட்டதே இல்லை அவர். "நம்ம ரிலேடிவ்ஸ் எல்லாம் எங்க இருக்காங்க டாட்..." என்று கேட்கும் போதெல்லாம், "எல்லாம் ஊர்ல இருக்காங்க ரஞ்சன்... தாத்தா,

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பாட்டியெல்லாம் இறந்திட்டதுக்கப்புறம் காண்ட்டாக்ட் விட்டுப் போச்சு…" என்று பேச்சை மாற்றி விடுவார்.

இதுவரை அவனுக்கும் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் வந்ததில்லை. மஹதியாவது தோண்டித் துருவி எதாவது கேட்டுக் கொண்டே இருப்பாள். அவனைப் பொறுத்தவரை நண்பர்கள் உறவினர்களாகிப் போனார்கள்.

இப்போதும், ஊரிலிருக்கும் உறவினர்களைப் பற்றி எந்த ஆர்வமும் தோன்றவில்லை.

ஆனால், திருமணம் என்பது அவனுடைய சொந்த விஷயம். அதற்காக இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வது எதற்காக? எல்லாருக்கும் கிடைத்த தாயை விட ஒரு படி மேல் தான் யசோதா… அவருடைய அன்பைத் தந்தை குறைசொல்வதும் பிடிக்கவில்லை.

அப்பாவும் பிள்ளையும் பேசிய பேச்சுக்கள் காதில் விழாமல் வெறித்துப் பார்த்தார் யசோதா.

தோழியின் இழப்பிற்குப் பின் வீறிட்டு அழும் குழந்தையைப் பார்த்ததுமே தாய்மையுணர்வு பெருகியது. ஒவ்வொரு நொடியும் சித்ரஞ்சனின் அசைவைக் கண்கொட்டாமல் ரசித்தது, பாலிற்காக அழும் குழந்தையைக் கண்டு தவித்தது எல்லாம் நினைவிற்கு வந்தது.

தேவகி பெற்றாலும், யசோதையின் மகனாக வளர்ந்த மாயக் கண்ணனைப் போலத்தான், ரஞ்சனையும் கண்ணின் இமை போலப் பார்த்துக் கொள்கிறார்.

இத்தனை காலம் கழித்து, "நீ வளர்த்தது சரியில்லை" என்கிறார். விருப்பத்திற்குக் குழந்தையை வளர்க்க விட்டாரா?

"ஒரு வயசு கூட ஆகலைங்க… அதுக்குள்ள அவனுக்கு எதுக்குங்க தனி ரூம்? கொஞ்ச நாளாவது நம்ம கூடவே தூங்கட்டுங்க…" என்று சொன்ன காலத்தில் "இங்கெல்லாம் இப்படித்தான்… கைக்குள்ளயே வச்சு வளர்த்தா தைரியமும் தன்னம்பிக்கையும் குறைஞ்சு போயிடும்… முதல்ல பட்டிக்காட்டுத் தனமா யோசிக்கறத நிறுத்து…" என்று வாயை அடைத்தாரே அதெல்லாம் மறந்து விடுமா?

"இங்கத்த பழக்கம் எப்படியோ இருந்துட்டுப் போகட்டுங்க… நம்ம ஊர்ல எல்லாம் எப்படி வளர்த்தறோம்… குழந்தைக்குப் பாதுக்காப்பு உணர்வு, எது



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நடந்தாலும் நாம இருக்கோம்னு நினைப்பு வரணுங்க... கொஞ்சம் பெரியவன் ஆனதும் அந்த ரூம்லையே தூங்கட்டுங்க...” என்றதும்,

“ஷட் அப்... எதுக்கெடுத்தாலும் ஆர்க்யூ பண்ணிட்டிருக்க... இதையெல்லாம் எனக்குக் கேட்க நேரமில்லை... சொன்னதச் செய்... இருக்கற ஒரே ஒரு ரூம்ல குடும்பத்தோட சேர்ந்து வேற வழியில்லாம ஓட்டைப் பாயில தூங்கினதெல்லாம் என்னோட போகட்டும்... என் பையன்டீ அவன்... ராஜாமாதிரி வளரணும்... அவனோட ரூம்ல மட்டும் எவ்ளோ செலவு பண்ணி என்னென்ன வாங்கிப் போட்டிருக்கேன்னு பாரு...” என்று அவர் கருத்தை நிலைநாட்டுகையில் வாய் மூடி வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது.

மனைவி என்ற இடத்தில் எப்போதும் வைத்துப் பார்த்ததில்லை அவர். பட்டிக்காட்டுப் பெண் என்ற எண்ணம் அவர் மனதில் வேர்விட்டு நிற்கிறது. வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொண்ட மனைவி.

சித்ரஞ்சனைப் பெற்ற தாய் லதாவுடன் ஒப்பிடுகையில் அழகு, அறிவு, அந்தஸ்து எல்லாவற்றிலும் குறைவுதான். அதெல்லாம் தெரிந்து தானே திருமணம் செய்து கொண்டார்.

மொழி தெரியாத ஊரில், தெரியாத முகங்களுக்கு மத்தியில் கணவருடைய அன்பும் இல்லாத நிலையில் வாழ்க்கை பரிதவிப்பாய் ஆரம்பித்தது.

இருவர் மட்டுமே இருக்கும் போது அன்னியோன்யம் வர வேண்டும். ஆனால் முதல் மனைவியை மறக்க முடியாமல், இரண்டாவதாக வந்தவளை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் தவித்தார்.

இதுவரை எந்த விஷயத்தையும் பகிர்ந்து கொண்டது இல்லை. ‘எவ்வளவு சம்பாதிக்கிறார்? என்னென்ன தொழில் செய்கிறார்? எங்கெங்கே சொத்துக்கள் இருக்கின்றன` என்று எந்தக் கணக்கு வழக்கும் சொன்னதில்லை.

ரஞ்சன் மீது தனியான பாசம் அவருக்கு. வாய்விட்டுச் சிரிக்கையில், கண்களைச் சுருக்கிப் பார்க்கும் போதெல்லாம் இறந்து விட்ட மனைவியை நினைவுபடுத்தும் மகனது முகம். வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் அவனைக் கீழே இறக்கி விட்டதே இல்லை.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

'காலப் போக்கில் எல்லாம் சரியாகிவிடும்' என்று நினைத்ததெல்லாம் பொய்யாகிப் போனது. அவரை நெருங்க நினைக்கையிலெல்லாம் "மயக்கிக் கைக்குள்ள போட்டுக்கலாம்னு நினைக்கறயா?" என்பது போலக் குத்தல் பேச்சுக்கள் அவ்வப்போது வரவும், நெருங்கவே பயப்பட்டு ஒதுங்கியாயிற்று.

குழந்தைக்கு ஆசை ஆசையாய் ஒரு வாய் சாதம் பிசைந்து ஊட்டப் போனால், "இதென்ன பழக்கம்? அவன் டேபிள் மேனர்ஸ் கத்துக்க வேண்டாமா? டைனிங் டேபிள்ல உட்கார்ந்து சாப்பிடப் பழக்கு... அதுவுமில்லாம கைல ஊட்டினா இன்ஃபெக்ஷன் ஆகவும் சான்ஸ் இருக்கு..." என்று சொல்லி ஒரு வயதுக் குழந்தையை ஃபோர்க், ஸ்பூன், நாப்கின் சகிதம் உட்கார வைத்து, கையால் ஒரு வாய் சாதம் ஊட்ட விடாமல் தாய்க்கும் மகனுக்குமான உறவில் தடைவிதித்தார்.

ஓடிப் பிடித்து விளையாடும் வயதில் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடினால், "ஏய் பட்டுக்காடு... காலம் காலத்துக்கும் இதையே சொல்லித் தருவயா? அவன் வேற எதுவும் கத்துக்க வேணாமா?" என்று மூன்று வயதுப் பையனுக்கு ஸ்கேட்டிங், ஸ்விம்மிங் தொடங்கி எவ்வளவு பயிற்சி கொடுக்க முடியுமோ அத்தனை வகுப்புகளிலும் சேர்த்து விட்டு, அவனை அழைத்துச் செல்லக் கூட தனி ஆளை நியமித்தார்.

அன்பில் குளிப்பாட்ட நினைக்கையிலெல்லாம் தடை சொல்லிச் சொல்லி 'ஒரு வேளை குழந்தையைக் கொடுமை செய்வேன் என்று நினைக்கிறாரா?' என்று நினைத்து மனம் கலங்கியதெல்லாம் ஒரு காலம்.

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பெண்ணை ஒரே வருடத்தில் இழப்பதென்பது கொடுமையான விஷயம். மனம் மாறி தன்னையும் ஏற்றுக் கொள்வார் என்று பொறுமையாக நாட்களைக் கடத்தியாயிற்று.

மனப் பகிர்தல் இல்லாத வாழ்க்கை. 'கடமைக்காகத்தான் தன்னோடு வாழ்கிறார், அதே கடமைக்குப் பிறந்தவள்தான் மஹதி' என்பதும் மனதில் உறுத்திக் கொண்டே இருக்கும். அதெற்கெல்லாம் இப்போது பதில் சொல்லிவிட்டார்.

'உன் பெண்ணாம்... ரஞ்சனையும் மஹதியையும் பிரித்துப் பார்த்தது இல்லையே... இதற்கும் இவனுக்கு அதிக சலுகைகள் கொடுப்பதால் பையனப் பார்த்தாலே ஒரே உருகல்ஸ்தான் மம்மி... என்று மஹதி எப்போதும் சிணுங்குவாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

'ஒரு வேளை தன் மேல் தான் தவறோ? விட்டுக் கொடுத்து அவர் போக்கிலேயே விட்டிருக்கக் கூடாதோ? சண்டை போட்டாவது மனதில் இடம் பிடித்திருக்க வேண்டுமோ? வாய் மூடி மௌனமாக இருந்திருக்கக் கூடாதோ? எத்தனை க்ளாசிற்கு அவன் போனாலும் வீட்டிலிருக்கும் கொஞ்ச நேரத்தில் தப்பை சொல்லித் திருத்தியிருக்க வேண்டுமோ?' என்றெல்லாம் கலங்கியது.

என்ன இருந்தாலும் இத்தனை வருட வாழ்க்கையில் அன்பினைப் புரிந்து கொள்ளாத கணவனை நினைக்க நினைக்கக் கண்களில் நீர் வழிந்தது.

"இத்தன வருஷத்தில, ஒரு தடவை கூட ரஞ்சன் எனக்குப் பிறக்கலைன்னு நினச்சுப் பார்த்ததே இல்லைங்க... இந்த மாதிரி நீங்க சொல்லிடக் கூடாதுன்னுதான் இவனைக் கண்டிக்காம உங்க போக்கிலையே விட்டுட்டேன்... அதான் நான் பண்ணின தப்பு... லதா வேணும்னா இவனைப் பத்து மாசம் வயித்தில சுமந்திருக்கலாம்... நான் இவனை இருபத்தி ஆறு வருஷமா நெஞ்சில சுமக்கறேங்க... இப்படிச் சொல்ல உங்களுக்கு எப்படிங்க மனசு வந்துச்சு..." என்று தவிப்புடன் கேட்டார்.

அருகில் நெருங்கித் தோளோடு அணைத்த சித்ரஞ்சன், "என்னம்மா இது... டாட் கோபத்தில ஏதோ சொல்லிட்டார்... அதுக்காக ஏன் கவலைப் படறீங்க... எப்பவுமே நீங்க தான் என்னோட அம்மா... யார் சொன்னாலும் அது மாறிடப் போறது இல்லை..." என்று தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

மகன் சமாதானம் செய்தாலும், கணவர் பதில் சொல்லாமல் அசைவின்றி நிற்பதைப் பார்த்து, 'இத்தனை நாள் அவர் மனதில் இருந்தது இது தானா? இப்படி எப்படி என்னை நினைக்கலாம்? இனித் தாங்க முடியாது... தனிமை வேண்டும்...' என்று தோன்ற ஆதரவாகப் பிடித்திருந்த மகனின் கைகளை விலக்கிவிட்டுக் கண்களில் கண்ணீர் பெருக அறையை விட்டு வெளியேறினார்.

தந்தையும் எதுவும் பேசாமல் தாயின் பின்னாலேயே வெளியே செல்லவும், 'இருவரும் பேசி சமாதானமாகட்டும்... அப்புறம் அம்மாவிடம் பேசிக் கொள்ளலாம்...' என்று நினைத்து, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான் சித்ரஞ்சன்.

இருக்கும் கோபமெல்லாம் அந்தப் பத்திரிக்கையின் மேல் திரும்பியது. 'பிரதாப் கூட ஏதோ சொன்னானே பத்திரிக்கையில் வேலை செய்யும் பெண் என்று... எல்லாம் அவளுடைய வேலையாகத்தான் இருக்கும்... மறுபடியும் மறுபடியும்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அவமானப் படுத்துகிறாள்...' என்று நினைத்துக் கட்டுரையைப் படிக்கத் தொடங்கினான்.

"நான்சென்ஸ்... கல்ச்சராம் கல்ச்சர்... பெரிதாக எழுதிக் கிழிக்க வந்துவிட்டாள்..." என்று புத்தகத்தைத் தூக்கி எறிந்தான்.

"சாதாரண டேன்ஸ்... உடம்புக்கு நல்ல எக்சர்ஸைஸ்... இதிலென்ன தப்புக் கண்டு பிடித்து விட்டாள்? தமிழ் சினிமாவில் பூசணிக்காய் சைஸ்ல இருக்கறதெல்லாம் முக்கி முணகி ஆடும் ஆட்டத்தை விட மோசமாகப் போய்விட்டதா? அரைகுறை ஆடையாம்... இவங்க சேலைன்னு ஒண்ணைக் கட்டி ஆடுறத விட மோசமா?

இந்த மாதிரி டேன்ஸ் வந்து தான் கல்ச்சரை ஸ்பாயில் பண்ணுதாம்... கல்ச்சரப் பத்தி ஒண்ணுமே தெரியாதுன்னு நினச்சுட்டாளா? தேவதாசின்னு ஒரு டேன்ஸ் கூட்டத்தையே சேர்த்து வச்ச சொஸைட்டி தானே இது... கடவுளுக்கு சேவை செய்யறோம்ங்கற பேர்ல மனுசங்க ப்ராஸ்டிடியூசனத்தானே வளர்த்து விட்டாங்க... அப்ப எங்க போச்சாம் கல்ச்சர்... ஊர்ல அத்தனை பேர் முன்னாடி ஆடினப்ப கல்ச்சர் காணாமப் போகலை...

சாமிக்கு ஆடிட்டிருந்த கரகாட்டத்தை வில்லேஜ்ல குத்தாட்டமா மாத்தினப்ப எல்லாரும் சும்மாதானே வாயப் பொழந்து பார்த்திட்டிருந்தாங்க... அங்கங்க பணத்தச் சொருகறதில அல்ப சந்தோஷப் பட்ட மக்கள் தானே... அப்ப இந்தக் கல்ச்சர் எங்க போச்சாம்...

72 வயசுக் கிழ எம்.பி. பப்ளிக் மீட்டிங்ல சினிமா நடிகைய உரசு உரசுன்னு உரசுது... இந்த வயசிலையும் ஆசை விடலை... என்ன கல்ச்சர் வாழுதாம் இங்க... மனசுக்குள்ள பார்த்து இரசிச்சு சந்தோசப்பட்டுக்கறது மட்டும் சரி... வெளிப்படையா நடந்தா கல்ச்சர் மோசமாப் போயிடுச்சாம்... வெஸ்டர்ன் கல்ச்சர் வந்துதான் எல்லாத்தையும் கெடுக்குதுன்னு பெருசாச் சொல்ல வந்துட்டா...

இந்த ஊர்ல எத்தனை ஆட்டம் வேணும்னாலும் ஆடிக்கலாம்... ஊரே பார்த்து இரசிக்கும்... தனியா ஹால்ல டிஸ்கோ ஆடினா மட்டும் கல்ச்சர் போயிடுச்சுன்னு பக்கம் பக்கமா எழுதித் தள்ளறது....' என்று மனதிற்குள் பொறிந்து தள்ளினான்.

'இந்த மாதிரி மிட் நைட்ல லேடீஸ் வெளில போறத நிறுத்தினா ரேப் இன்சிடெண்ட் எதுவும் நடக்காதாம்... டைய்லி பேப்பரை எடுத்தாலே எதாவது ரேப்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நியூஸ் இல்லாம இருக்கறது இல்லை... அதுக்கெல்லாம் இந்த டிஸ்கொதேதான் காரணமா?

இந்த மாதிரி பார்ட்டில ரேப் பண்ணிட்டா இருக்கோம்... கிஸ் பண்றது எல்லாமே ஒண்ணுமே இல்லாத விஷயம்... அதெயெல்லாம் தப்புன்னு சொல்றா... இது மாதிரி பழைய பஞ்சாங்கத்த எல்லாம் நாடு கடத்தணும்.... பார்க்கற எல்லாத்தையும் தப்பான கண்ணோட்டத்தில பார்த்துட்டு எல்லாரையும் தப்பு சொல்ல வந்திட்டா...

குடிக்கறாங்க... கெட்டுப் போறாங்கான்னு சொன்னா கவர்மெண்ட்தான் எல்லா சரக்கையுமே விக்கறாங்க... அதைக் கேட்க வேண்டியது தானே? காலம் காலமா சோம சுரா பானத்தக் குடிச்சு ரசிச்ச கல்ச்சர் தானே... அதையெல்லாம் மறந்துட்டு குடிச்சு ஹெல்த்தக் கெடுத்துக்கறாங்களாம்...'

ப்ரீத்தி எழுதியிருந்த ஒவ்வொரு வரிக்கும் பதிலடியாய் சித்ரஞ்சனின் மனது எதிர்வாதம் செய்து கொண்டிருந்தது.

அப்போது படபடவென்று கதவு தட்டப்படவும் 'இன்னைக்கு விட மாட்டாங்க போல' என்று சலிப்புடன் நினைத்தான்.

எழுந்து சென்று கதவைத் திறப்பதற்குள் வேகமாகத் தட்டப்பட "வெயிட்... வர்றேன்" என்று சொல்லியவாறு சென்றான்.

"சின்னய்யா! அம்மா பேச்சு மூச்சில்லாம மயக்கமா இருக்காங்கய்யா.... என்ன நடந்துச்சுன்னே தெரியலை... மத்தியானம் என்ன சமைக்கறதுன்னு கேட்க கதவைத் தட்டினா திறக்கவே இல்லை... அதான் உள்ள எட்டிப் பார்த்தேன்... கட்டில்ல இடிச்சி தலைல இருந்து இரத்தம் கொட்டுது..." என்று வேலைக்காரப் பெண் சொல்லி முடிப்பதற்குள், தடதடவென்று படிகளில் இறங்கினான்.

வேகமாக ஓடிச் சென்று பார்த்தவன் அதிர்ந்தான். தரை முழுக்கப் பரவியிருந்த இரத்தம் விபரீதத்தைச் சொல்லியது.

"மாம்! மாம்!" என்று அவரைத் தூக்கி மடியில் கிடத்தி கன்னத்தைத் தட்டியவனுக்கு, எந்த அசைவுமின்றிக் கண்களைத் திறக்காமல் இருந்த அன்னையில் கோலத்தில் மனம் தவியாய்த் தவித்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

# 7

“**அ**ம்மா இப்ப எப்படி இருக்காங்க டாக்டர்? பயப்பட ஒண்ணும் இல்லையே?” என்று படபடப்புடன் கேட்டாள் மஹதி.

24 மணி நேரமாக தாயார் கண் திறப்பார்களா, மாட்டார்களா என்று காத்திருந்த தவிப்பும் பதட்டமும் குரலில் வெளிப்பட்டது.

“ஹைப்பர் டென்ஷனால மயக்கம் வந்திருக்கு... விழும்போது கட்டில் விளிப்பில இடிச்சு, தலைல அடிபட்டிருக்கு... சின்னக் காயம்னாலும் ரொம்ப நேரம் கவனிக்காத்தால ஏகப்பட்ட ப்ளட் லாஸ் ஆகிருக்கு... அவ்வளவு நேரம் யாருமே கவனிக்கலையா?” என்று ஏறக்குறைய குற்றம் சாட்டும் குரலில் டாக்டர் கேட்கவும்,

‘டாக்டரிடம் எதைச் சொல்ல முடியும்? தாயாருக்கு மனம் சரியில்லை என்று தெரிந்த பின்னும் பிசினஸ் மீட்டிங் என்று யாரிடமும் சொல்லாமல் சென்ற தந்தையைக் குறை சொல்வதா? தவிப்புடன் மருத்துவரின் பதிலுக்குக் காத்திருக்கும் அண்ணனைக் குறை சொல்வதா?’ என நினைத்து, “ம்ஹூம்...” என்று சங்கடத்துடன் தலையசைத்தாள்.

“பயப்பட ஒண்ணும் இல்லைன்னு சொல்ல முடியாதும்மா... ரொம்ப நாளாவே இந்தப் பிரச்சனை இருந்திருக்கு... அவங்ககிட்டப் பேசிப் பார்த்ததில சரியா தூங்கறதில்லை, சாப்பிடறதில்லைன்னு தெரியுது... குழப்பத்தையும் கவலையையும் மனசில வச்சிருப்பாங்க போல... ரெண்டு வருஷமாவே தலைவலி அடிக்கடி வருதுன்னு சொல்றாங்க... பட் ரொம்ப நாளா கவனிக்காம விட்டதால ஹார்ட்ல பாதிப்பு வந்திருக்கு... ஹார்ட்ல ஒரு வால்வு சுருங்கிடுச்சு... ”

“ஹைப்பர் டென்ஷனை எக்ஸர்ஸைஸ் அண்ட் ஃபுட் கண்ட்ரோல் மூலமா சரி பண்ணிடலாம்...” அதிர்ச்சியுடன் குடும்ப உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்க டாக்டர் தொடர்ந்தார்.

“இப்போதைக்கு ஒன் மன்த்கு ட்ரீட்மெண்ட் கண்ட்டினியூ பண்ணுங்க... மெடிசன்ஸ் எல்லாம் கரெக்டா எடுத்துக்க வைங்க... மெடிசன்ல க்யூர் பண்ண முடியலைன்னா பைபாஸ் பண்ணிதான் ஆகணும்... இது போல டென்ஷன் ஆகாம

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இயல்பா சந்தோசமா அவங்களை வச்சுக்கங்க... ப்ளட் ப்ரஷரை கண்ட்ரோல்ல வச்சு ஹேப்பியா இருந்தாங்கன்னாலே பயப்பட ஒண்ணும் இல்லை...” என்றார்.

ஆயிரம் சந்தேகங்களையும், விளக்கங்களையும் மஹதி கேட்க மருத்துவர் பொறுமையாக பதிலளித்தார்.

மருத்துவரின் அறையை விட்டு வெளியே வந்து தாயாரைக் கண்டதும், சித்ரஞ்சனின் மனதில் குற்றவுணர்ச்சி எழுந்தது. கனிவும், மென்மையுமான தாயார் கிழிந்த நாராய்ப் படுத்துக் கிடப்பதைப் பார்த்து நெஞ்சுக்குள் ஏதோ பிசைந்தது.

‘தாயின் இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணமோ?’ வர லேட்டாகும் என்ற சொன்னாலும், அரைத்தூக்கமாக விழித்திருக்கும் தாயை நினைத்து எரிச்சல் பட்டதெல்லாம் காணாமல் போய், இப்போது வேதனை மட்டும் மிஞ்சியது.

‘இதயத்தில் அவ்வப்போது வலி இருந்தும் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள்’ என்று டாக்டர் சொன்னது நினைவிற்கு வர ‘வலியைத் தாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப் பட்டிருக்க வேண்டும்? சோர்ந்து இருக்கும் போது ஒரு வார்த்தையாவது கேட்டிருக்க வேண்டுமோ...’ என்றெல்லாம் மனம் சஞ்சலப்பட்டது.

‘அம்மாவிற்கும் தனக்கும் இருப்பது ஜெனரேஷன் கேப்..’. என்று நினைத்துத் தவிர்த்தது, காலையில் நடந்த கருத்து வேறுபாடுகளெல்லாம் இந்த வேதனைக்கு முன் ஒன்றும் இல்லாமல் போனது.

அத்தனை கருவிகள் சுற்றிலும் இணைக்கப் பட்டிருக்கக் கண்மூடிப் படுத்திருந்த தாயின் தலைமுடியைக் கோதி விட்டு அருகில் அமர்ந்தான்.

தாயின் கண்களிலிருந்து கண்ணீர் வழியவும், அவர் விழித்திருப்பதை உணர்ந்து “மா... என்னாச்சு... எங்காவது வலிக்குதா?” என்று பதறிப்போய்க் கேட்டான்.

‘இல்லை’ என்று தலையை மட்டும் அசைக்கவும், மஹதி வழிந்திருந்த தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டு “ரெஸ்ட் எடுங்க மம்மி.... எதையாவது நினைச்சு ஃபீல் பண்ணிட்டே இருக்காதீங்க...” என்றாள்.

மேலும் இரண்டு நாட்கள் மருத்துவமனையிலேயே இருந்துவிட்டு வீடு திரும்பும் வரை பெரும்பான்மையான நேரம் ஆழ்ந்த உறக்கத்திலோ, கண்மூடி அயர்வுடனோ படுத்திருந்தார். அந்த வாரம் முழுக்க வீட்டில் அமைதி நிலவியது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

எப்போதும் இருப்பதை விட சித்ரஞ்சன் நிறைய நேரம் வீட்டில் செலவிட்டாலும், தந்தை குமரன் மட்டும் ஏதோ சிந்தனையிலேலே இருந்தார்.

தாய்க்கும், தந்தைக்கும் இருக்கும் இடைவெளி பெரிதாகத் தோன்றினாலும் நாள்பட சரியாகிவிடும், இப்போதைக்குத் தாயின் உடல்நலம் முக்கியம் என்று அமைதியடைந்தனர்.

"அண்ணா! மம்மி திருச்சி வரைக்கும் போகணுமாம்... டாடி கிட்ட பர்மிஷன் வாங்கச் சொன்னாங்க..." என்று மஹதி சொன்னாள்.

"திருச்சியா? அங்க எதுக்கு மஹி... இப்பத்தான் கொஞ்சம் நல்லா இருக்காங்க... அவ்ளோ தூரம் ட்ராவலா? வேண்டாம்னு நீயே சொல்ல வேண்டியதுதானே..."

"அதெல்லாம் சொல்லிப் பார்த்துட்டேன்... கேட்டாத்தானே... இனிமேல் ரொம்ப நாள் இருக்க மாட்டேன்னு புலம்பறாங்க... அங்க யார் யாரோ இருக்காங்களாம்... எல்லாரையும் பார்த்துட்டு வரணும்னு அடம் பிடிக்கறாங்க..." என்றாள் சலிப்புடன்.

அவளுடன் அறைக்குச் சென்று, "மா! ஹெல்த் சரியானதும் நானே கூட்டிட்டுப் போறேன்... அதுவரைக்கும் ரெஸ்ட்ல இருங்க" என்றான்.

"இல்லை ரஞ்சன்... நேத்து டாக்டர் கிட்டப் போன போது ட்ராவல் பண்ணலாமான்னு கேட்டேன்... ப்ளைட்ல போகப் போறதாச் சொன்னதும் சரின்னு சொல்லிட்டார்... ஒரு வாரத்தில திரும்பி வந்திடறேன்... இனி எல்லாரையும் பார்க்க முடியுமான்னு தெரியலை..." எனவும்,

'என்ன சொல்வது?' என்று குழப்பம் ஏற்பட்டதும், "இப்படியெல்லாம் பேசாதீங்க மம்மி... டாக்டர் கிட்டக் கன்சல்ட் பண்ணிட்டு, டாடிகிட்டப் பேசறேன்மா..." என்றான்.

"ஸாரி ரஞ்சன்... நான் உன்னைக் கம்பெல் பண்ணிருக்கக் கூடாது... அதுக்கான உரிமையும் எனக்கு இல்லை... உனக்கு எப்பத் தோணுதோ அப்ப மேரேஜ் பண்ணிக்க..." என்று அவனைப் பாராமல் வேறு புறம் பார்த்துக் கொண்டு கரகரத்த குரலில் கூறினார்.

அவர் முகத்தைத் தன் பக்கம் திருப்பி, "மா! உங்களுக்கு இல்லாத உரிமை யாருக்கும் இல்லை... உங்களுக்கு என்ன வேணும்... நான் மேரேஜ் பண்ணிக்கணும் அவ்வளவு தானே... சரி பண்ணிக்கறேன்..." என்றான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

தாயும், தங்கையும் இனிய அதிர்ச்சியுடன் பார்க்கவும், “முழு மனசோடதான் சொல்றேன் மாம்... நீங்களும் மஹியுமே பொண்ணை டிசைட் பண்ணுங்க... ப்ராமிஸ்...” என்றான்.

“வாவ்! அண்ணா... ஐ’ம் ஸோ ஹேப்பி... எப்படியோ நான் எஸ்கேப்... அண்ணியோட கொஞ்ச நாள் என்ஜாய் பண்ணலாம்...” என்று துள்ளிக் குதித்தவள், “ப்ரதர்! இப்பவே சொல்லிட்டேன்... எங்களை நம்பிப் பொறுப்ப ஒப்படைச்சுட்டு, அப்புறம் அது சரியில்லை இது சரியில்லைன்னு சொல்லக் கூடாது...” என்று கண்களை உருட்டியவாறு சொன்னாள்.

“அது நீங்க செலக்ட் பண்ற பொண்ணைப் பொறுத்து மஹி...” என்று கண்களைச் சிமிட்டிச் சிரிக்கவும், “மம்மி! உங்க பையன் சரியான அழுத்தம்... என்னையும் நம்பிச் சொல்லிட்டாங்கன்னு பார்த்தா, கடைசில சின்ன சண்டை வந்தாக்கூட நம்ம தலை உருளும் போல...” என்று மகிழ்ச்சியோடு பார்த்த தாயிடம் கூறிவிட்டு,

“இவ்ளோ நாள்ல உங்க மனசுக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணு கூட க்ராஸ் பண்ணலையாண்ணா... இப்பல்லாம் மேரேஜ் முடிச்சுட்டு என்னோட வைஃப்னு இண்ட்ரடியூஸ் பண்றாங்க... லவ் பண்ணி மேரேஜ் பண்ணிக்கறத விட்டுட்டு அரேஞ்ச்டு மேரேஜா... சுத்த வேஸ்ட்ண்ணா... அண்ணி எப்படி இருக்கணும்னு சொல்லுங்க... அது போலவே பார்த்திடறோம்...” என்றாள்.

‘மனைவியாக வருபவள் எப்படி இருக்க வேண்டும்’ என்று ஒரு நொடி யோசிப்பதற்குள் ப்ரீத்தியின் முகம் அவன் மனதில் வந்து புன்னகை பூத்தது.

‘சே... அவளைப் போலவா...’ என்று எரிச்சலுடன் நினைத்தவன், “உங்களுக்குப் பிடிச்ச மாதிரிப் பாருங்க... என்னோட கேரக்டருக்கு ஒத்துப் போனா சரி... தொட்டதுக்கெல்லாம் என்னைக் கேள்வி கேட்காதவளா இருந்தாப் போதும்... அப்புறம் கொஞ்சம் போல்டா எல்லாத்தையும் ஃபேஸ் பண்ணணும்... எனக்கு பிசினஸ்ல ஹெல்ப் பண்ணணும்...” என்று சொன்னான்.

“போண்ணா...” என்று சிணுங்கியவள், “மம்மி! எனக்கு வர்ற அண்ணியைப் பத்தி நான் நிறையக் கற்பனை பண்ணி வச்சிருக்கேன்... அண்ணாவோட ஹயிட், வெயிட்கு ஏத்த மாதிரி இருக்கணும்... கண், மூக்கு...” என்று ஒவ்வொன்றாக



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

வர்ணிக்கவும், 'இனி காதில் இரத்தம் வருமளவு இதையே பேசிக்கொண்டிருப்பாள்' என்று நினைத்தவன் இருவரிடமும் விடைபெற்றுக் கிளம்பினான்.

'வேறு வழியில்லாமல் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டோமோ... வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்வதை விட்டுவிட்டு இது போலக் கட்டுப் பாட்டில் சிக்கிக் கொள்வது சரியா?' என்றெல்லாம் நினைத்து 'அதை சரி என்று சொல்வதற்கு முன்னால் யோசித்திருக்க வேண்டும்... இதுவரை அம்மா ஆசைப்பட்டு எதுவும் கேட்டதில்லை... ஆசையை நிறைவேற்றி விடலாம்... அம்மாவின் உடம்பு சரியாகும் வரை பொறுத்திருக்க வேண்டியது... ஒத்துப் போகவில்லை என்றால் பிரிந்து விடுவது' என்று எளிதாக நினைத்தான்.

மருத்துவரிடமும், தந்தையிடமும் பேசிவிட்டு, மஹதிக்கு ஸ்டடி ஹாலிடேஸ் தொடங்கிவிடும் என்பதால், அம்மாவுடன் அவளையும் ஒரு வாரம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தான்.

"மஹி... பார்த்துப் போங்க... திருச்சி ஏர்போர்ட்ல இருந்து உங்களை ரிசீவ் பண்ணி, கூடவே இருக்கற மாதிரி கார் அரேன்ஜ் பண்ணிட்டேன்... உங்களோடவே நம்ம ஆபிஸ் ஸ்டாஃப் ஒருத்தர் வருவார்... எல்லா ஏற்பாட்டையும் அவர் பண்ணித் தருவார்... சீக்கிரம் வந்திடுங்க... என்று கூற,

"டோண்ட் வொர்ரி ப்ரதர்... என்னை நம்பி அம்மாவை அனுப்புங்க... துணைக்கு வேற யாருமே வேண்டாம்... பத்திரமாக் கொண்டு வந்து சேர்த்திடுவேன்..." என்று இல்லாத காலரைத் தூக்கி விட்டவாறே மஹதி பதிலளித்தாள்.

பல வருடங்களுக்குப் பிறகு சொந்த மண்ணிற்குப் போகிறோம் என்ற சந்தோசத்தில் இருந்த யசோதா, ஊரில் இருக்கும் உறவினர்களைப் பற்றி மகளிடம் பகிர்ந்து கொண்டார். விமானத்தில் பயணம் செய்யும் போது, மனம் அதை விடச் சிறகடித்துப் பறந்தது.

********

"**அ**க்கா எனக்கு இந்த ஸம் போட வரலை, எனக்கு மேத்ஸ் பிடிக்கவே மாட்டேங்குது... ஆயம்மா கிட்ட சொல்லி ஸ்வீட் செஞ்சு தரச் சொல்லுங்க.... சந்து என்னை அடிக்கறான்க்கா, அடிக்க வேண்டாம்னு சொல்லிட்டுப் போங்க... நீங்க லாஸ்ட் டைம் வரும்போது சொல்லிக் கொடுத்த பாட்டு பாடுவேன்கா..." என்று



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

குழந்தகள் ப்ரீத்தியைச் சுற்றிலும் அமர்த்து, விதவிதமான குரலில் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அது ஓர் ஆஸ்ரமம். சமுதாயத்தின் அவலத்தால் அநாதையாக்கப் பட்ட குழந்தைகள் 50க்கும் மேற்பட்டவர்களைக் கொண்டது.

“என்ன ப்ரீத்திம்மா... குட்டீஸ் எல்லாம் என்ன சொல்றாங்க... நீ எப்ப வருவேன்னு மாத்தி மாத்திக் கேட்டு, எல்லாரையும் ஒரு வழி பண்ணிட்டாங்க...” என்று சொன்னவாறு, மெதுவாக சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் சத்யமூர்த்தி.

குழந்தைகளை விளையாடுமாறு அனுப்பிவிட்டு அருகில் அமர்ந்தவள், “ஒரு மாசமாவே வேலை அதிகம் தாத்தா... மாத்தி மாத்தி ஏதாவது பிரச்சனை வந்திட்டே இருந்தது... அதான் வர முடியலை...” என்றாள்.

93 வயதில் தோலெல்லாம் சுருங்கித் தளர்ந்து, பஞ்சான நரை முடிகளோடு இருந்தாலும், கம்பீரம் குறையாமல் இருந்தவரைப் பெருமையுடன் பார்த்தாள். தாத்தாதான் அவளுக்கு ரோல் மாடல். எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக் கொடுத்தவர்.

பத்து வயதிலேயே வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் இராஜாஜியின் பின்னேயே ஆர்வதுடன் சென்று, அறியாத பருவத்தில் சுதந்தரப் போரில் இறங்கியவர்.

அடி உதை பட்டு, பல வருடங்கள் சிறைச்சாலையில் கழித்து, நாட்டிற்காக சொத்து சுகங்களை அர்ப்பணித்தவர்.

“என்னம்மா என்னையே பார்த்திட்டிருக்க... வேலையெல்லாம் எப்படிப் போகுது... ராகவன் எப்படி இருக்கான்?”

“நல்லாப் போகுதுங்க தாத்தா... அங்கிள் நல்லா இருக்கார்... உங்களைப் பார்க்க வரணும்னு சொல்லிட்டிருந்தார்... இப்ப நான் அவர் வீட்டில் தான் இருக்கேன்... எல்லாருமே ரொம்ப நல்லாப் பழகிட்டாங்க... வரும் போது பிரதாப்தான் திருச்சி வரைக்கும் கூட்டிட்டு வந்தார்...”

அரசியல்வாதிக்கு ஜால்ரா அடிக்கும் ரௌடிகளின் கும்பல், ஹாஸ்டலில் மிரட்டிச் சென்றதால், ‘என்ன செய்வது?’ என்று புரியாமல் தவித்த வார்டனிடம்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சொல்லிவிட்டு ஹாஸ்டலை விட்டு வேளியேறியவளை, ராகவன் கட்டாயப் படுத்தி அவரது வீட்டில் பாதுகாப்பாகத் தங்க வைத்ததை சுருக்கமாகக் கூறினாள்.

“அப்ப வெள்ளைக்காரங்க எல்லாத்தையும் சுரண்டிட்டுப் போனாங்க... இப்ப அரசியல்வாதிங்களே கொள்ளைக் காரங்க ஆயிட்டாங்க... எல்லாமே சுயநலமாப் போச்சு... அவங்கவங்க குடும்பம் நல்லாருந்தாப் போதும்... ஜனங்க எப்படிப் போனாலும் யாரும் கவலைப் படறதில்லை... அரசியலே சாக்கடையாப் போச்சு...” என்று வருத்தத்துடன் தாத்தா சொன்னார்.

நீண்ட நேரம் அவருடன் பேசிக் கொண்டிருக்கையில், ஒரு கார் வந்து நிற்கும் ஒலி கேட்கவும், “பிரதாப் உங்களைப் பார்க்க வர்றதாச் சொல்லிட்டு இருந்தார்... அவரா இருக்குமோன்னு பார்த்திட்டு வரேன்...” என்று வெளியே வந்தாள்.

காரிலிருந்து இறங்கிய இருவரும், அவளைப் பார்த்துத் திகைத்து நின்றனர்.

## 8

“**வா**ட் எ சர்ப்ரைஸ்! ப்ரீத்தி... நீங்களா... நான் உங்களைப் பார்ப்பேன்னு கொஞ்சம் கூட எக்ஸ்பெக்ட் பண்ணலை... என்னை ஞாபகம் இருக்கா...” என்று ஆர்வத்துடன் கேட்கவும்,

புருவங்களைச் சுருக்கி ஒரு விநாடி யோசித்த ப்ரீத்தி “ஹாய் மஹதி தானே... உங்களை எப்படி மறக்க முடியும்... எப்படி இருக்கீங்க?” என்றாள்.

“மம்மி! இவங்க ப்ரீத்தி... என்.சி.சி. கேம்ப் போயிருந்த சமயத்தில ரொம்ப க்யூட்டா, இண்டெலிஜெண்ட்டா ஒரு பொண்ணை மீட் பண்ணினேன்னு சொன்னேனே... ரொம்ப ரொம்பப் பிடிக்கும்னு சொன்னேனே... அவங்க தான் இவங்க...” என்று அறிமுகம் செய்தாள்.

ரஞ்சனுக்குப் பெண் பார்க்க வேண்டும் என்று திட்டமிடுகையிலேயே, “எனக்கு ஏஞ்சல் மாதிரி ஒரு பொண்ணைத் தெரியும் மம்மி... என்னை விட டூ இயர்ஸ் பெரியவங்க... என்.சி.சி. கேம்ப்ல மீட் பண்ணினேன்... அவங்களுக்குப் பேரண்ட்ஸ் இல்லை... ஆஸ்ரமம் எதிலையே வளர்ந்தாங்கன்னு சொல்லிருக்காங்க.... அவங்க படிச்ச காலேஜ் கூட திருச்சில தான் இருக்கு...

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

செம டேலண்ட் அவங்களுக்கு... உங்களுக்குப் பார்த்ததுமே பிடிச்சிடும்... அவங்க மட்டும் எனக்கு அண்ணியா வந்தாங்கன்னா ரொம்ப நல்லாருக்கும்... பட் அவங்ககிட்ட செல்போன் எல்லாம் இல்லை... எப்படிக் காண்டாக்ட் பண்றதுன்னே தெரியலை... டைம் கிடைக்கும் போது அவங்க படிச்ச காலேஜ்ல போய் விசாரிச்சுப் பார்க்கணும்..." என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

ரஞ்சனுடன் இணைந்து பத்திரிக்கையில் வந்த பெண்ணைப் போலவே அவள் முகமும் இருக்க யோசனையுடன் பார்த்தார் யசோதா. வண்ணப் புகைப்படம் என்பதால், தெளிவாகத் தெரிந்த முக அமைப்பை மறக்க முடியவில்லை.

எளிமையான கைத்தறிப் புடைவையில், நேர்கொண்ட பார்வையோடு, சர்வ இலட்சணங்களோடு, இடையைத் தொடும் கூந்தலோடு, "வணக்கம்... வாங்கம்மா..." என்று ப்ரீத்தி புன்முறுவல் செய்ததும், அவருக்கு மிகவும் பிடித்து விட்டது.

"ப்ரீத்தி! ஐம் ஸோ ஹேப்பி... உங்களை எப்படியாவது பார்க்கணும்னு கடவுள் கிட்ட வேண்டிட்டே வந்தேன்.... நினைச்ச மாதிரியே நடந்திடுச்சு... வாங்க போங்கன்னு எல்லாம் என்னைக் கூப்பிட்டுப் பெரிய மனுஷி பண்ணாதீங்க... பழைய மாதிரியே வா போன்னே சொல்லுங்க... பழைய போட்டோஸ் எடுத்துப் பார்க்கும் போதெல்லாம் உங்களை நினைச்சுப்பேன்..." என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருக்க,

"அப்ப போட்டோஸ் பார்க்கறப்பத்தான் என்னோட ஞாபகம் வருதா மஹதி... அதென்ன என்னைப் பார்க்கணும்னு வேண்டுதல்..." என்று குறும்புடன் கேட்டாள்.

"ஓ நோ... போட்டோ பார்க்காமலும் உங்க ஞாபகம் வரும்... கேம்ப்ல இருந்த பீரியட் ஃபுல்லா உங்களதானே சைட் அடிச்சேன்... அவ்ளோ சீக்கிரம் மறந்திட முடியுமா... பையானாப் பொறக்காததால் உங்களை மிஸ் பண்ணிட்டேன்... இல்லைன்னா அப்பவே கடத்திட்டுப் போய் மேரேஜ் பண்ணிருப்பேன்... ஆனா வேண்டுதலப் பத்தியெல்லாம் இப்ப சொல்ல மாட்டேன்..."

"நீ கொஞ்சம் கூட மாறலை... அப்பத்தான் பர்ஸ்ட் இயர் படிக்கற பொண்ணு... இப்படியெல்லாம் உளறிட்டு இருந்த... இன்னமும் அப்படியேதானா..." என்று சிரித்தவாறே கேட்டாள்.

"சே... சே... அதெப்படி மாறிட முடியும்... நாங்க அப்ப இப்ப எப்பவுமே ஒரே மாதிரிதான்... அன்னைக்கு ஒரு பேச்சு இன்னைக்கு ஒரு பேச்செல்லம் கிடையாது...



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நாய் வாலை நிமிர்த்தினாலும் இந்த மஹதி வாலை நிமிர்த்த முடியாது… எவ்வளவு சீரியஸா சொல்லிட்டிருக்கேன்… உளறல்னு சொல்லிட்டீங்களே…” என்று பேசிக் கொண்டிருக்க, யசோதா இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் பார்வையை உணர்ந்து, “அம்மா ரொம்ப டயர்டாத் தெரியறாங்க மஹதி… நீங்க எப்படி இந்த ஊர்ல? யாராவது ரிலேடிவ்ஸ் இருக்காங்களா?” என்று கேட்டாள்.

நீண்ட நேரமான பின்பும் ப்ரீத்தி உள்ளே வராததால், சத்தியமூர்த்தி வெளியே வர, “அப்பா!” என்றவாறு யசோதா ஆர்வத்துடன் அவரருகில் சென்றார்.

“மம்மி! இவ்ளோ ஃபாஸ்டா நடக்காதீங்க…” என்ற மஹதியின் எச்சரிக்கையைக் கவனிக்காமல், “அப்பா எப்படி இருக்கீங்க… உங்களையெல்லாம் பார்ப்பேனான்னு இவ்வளவு நாள் தவிச்சிட்டு இருந்தேன்…” என்று பரபரப்புடன் கண்களில் ஆனந்தக் கண்ணீரோடு பேசுபவரை ஆச்சர்யத்துடன் கவனித்தாள் ப்ரீத்தி.

‘இருந்த ஒரு பெண்ணும் இறந்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்… அப்போது வந்திருப்பவர் யாராக இருக்கும்…’ என்று நினைத்துத் தாத்தாவைப் பார்க்க, அவர் உணர்ச்சி வசப்பட்டு, “ய…யசோதாம்மா!” என்று வார்த்தை தடுமாற அழைத்தார்.

“தாத்தா! உள்ள வந்து உட்கார்ந்து பேசுங்க… கால்வலின்னு சொல்லிட்டிருந்தீங்க…” என்று அவர் கையைப் பற்றியவாறு, “நீங்களும் வாங்கம்மா!” என்று இருவரையும் உட்புறமாக அழைத்துச் சென்று அமர வைத்தாள்.

“இவ தான் உங்க பேத்தி மஹதி…” என்று அறிமுகம் செய்து வைக்கவும், ஆசையோடு அவள் கைகளைப் பற்றி அருகில் அமரவைத்து, “நல்லாருக்கையாம்மா…” என்று அன்போடு நீர்த்திரையிட்ட விழிகளோடு விசாரிக்க, அவள் கண்களும் கலங்கின.

பெரியவரின் பார்வையின் தேடலைப் பார்த்து, கண்ணீரோடு யசோதா மறுப்பாகத் தலையை அசைக்கவும், அவர் முகத்தில் ஒரு வலியோடு கண்களை மூடிக் கொண்டார்.

“வயசாகி மனசு எவ்வளவு பக்குவப் பட்டாலும், சில ஏக்கங்கள் அப்படியேதான் இருக்கு… சுத்தியும் எத்தனை குழந்தைங்க இருந்தாலும் எதையும் மறக்க முடியலை… வீட்ல எல்லாம் எப்படி இருக்காங்க… நான் ஒருத்தன் உயிரோட

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இருக்கறதாவது தெரியுமா…" என்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவர் பேச, குற்றக் குறுகுறுப்புடன் தலையைக் குனிந்து கொண்டார் யசோதா.

தாய்நாடு, பொதுநலம் என்று இருக்கும் செல்வத்தையெல்லாம் இயலாதவர்களுக்குச் செலவிட்டது அவருடைய கணவருக்குப் பிடிக்காமல் போயிற்று.

'பிழைக்கத் தெரியாத பைத்தியகார மனிதர்' என்று மாமனாரைத் தாழ்வாக மதிப்பிட்டவருக்கு, அவரைப் பற்றிப் பிள்ளையிடம் சொல்ல இஷ்டப்பட வில்லை.

'ரஞ்சனைப் பெற்றவள் தான் இல்லை' என்ற உண்மை தெரிந்து விடுமோ என்று, பெரியவரைப் பற்றி அவரும் பேச்சை எடுத்ததில்லை.

பேரனைக் கண்ணில் காட்டாமல், தாத்தாவைப் பற்றி அவனிடம் சொல்லாமல் வளர்த்தது பெரிய பாவம். அவர் குழந்தையாக இருக்கும் போது ரஞ்சனைப் பார்த்தது தான்.

அவருடைய சொத்தில் பாகம் பிரித்துத் தரச் சொல்லி, அதில் வந்த பணத்தை வைத்துத்தான் வெளிநாட்டு வாழ்க்கையைத் தொடங்கியதே. இத்தனை வளர்ச்சிக்கும் அடித்தளமிட்டது அவருடைய பணம்தான்.

யசோதா மட்டும் சமயம் பார்த்து எப்போதாவது தொலைபேசியில் பெரியவரின் நலனை விசாரித்ததோடு சரி. அதுவும் காலப் போக்கில் நின்றுவிட்டது.

'வீட்டில் இருக்கும் யாரும் கண்டு கொள்வதில்லை… இயந்திரத்தனமான வாழ்க்கை என்று கவலைப்பட்டதெல்லாம் ஒன்றுமே இல்லையோ…' தள்ளாத வயதிலும் தளராமல் வாழ்க்கையைப் பயனுள்ளதாக மாற்றிக் கொண்ட பெரியவரை நினைக்கையில் பெருமையாக இருந்தது.

'மகனைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லி, இவரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்… சின்னப் பெண்கள் முன்னால் எப்படிப் பேசுவது?' என்று தயக்கமாகப் பார்க்க,

"மஹதி! ரொம்ப நாள் கழிச்சுப் பார்த்திருக்காங்க… அவங்க பேசட்டும்… உன்னைப் போலவே அறுந்த வாலெல்லாம் இங்க நிறைய இருக்கு… வா இண்ட்ரடியூஸ் பண்ணி விடறேன்" என்று பெரியவர்களுக்குத் தனிமை கொடுத்து அழைத்துச் சென்றாள் ப்ரீத்தி.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“அப்பா! ரொம்ப நல்ல பொண்ணா இருக்கா… மனசில இருக்கறதை சீக்கிரமாப் புரிஞ்சுக்கறா…” என்று மெச்சுதலாகக் கூறவும்,

“நீங்க பேரனைக் கூட்டிட்டுப் போனதுக்கப்புறம், அம்மா ரொம்ப கஷ்டப்பட்டுட்டா… லதாவோட நினைப்பிலையும், குழந்தையோட நினைப்பிலையும் நோயாளியாப் படுத்திட்டா… அப்பல்லாம் ரொம்பக் கஷ்டப்பட்டோம்… அப்பத்தான் எங்களுக்குப் ப்ரீத்தி கிடைச்சா… அவ வந்ததுக்கப்புறமாத்தான் பெரிய மாறுதல் வந்துது…

பற்றில்லாமப் போயிட்டிருந்த வாழ்க்கைல ஒரு பிடிப்பு வந்துது… யாரும் இல்லைன்னு ஏன் நினைக்கணும், புறக்கணிக்கப் பட்டவங்களுக்கு சொந்தமா இருக்கலாம்னு முடிவு பண்ணினோம்… இந்தப் பகுதில கிடைக்கற ஒவ்வொரு குழந்தையா சேர்த்து எல்லாரும் சொந்தமா வாழறோம்… குழந்தையோட பேரை மாத்திட்டீங்களா…” என்று கேட்டார்.

“நீங்க வச்ச அதே பேர் தானப்பா… உங்க சித்ரஞ்சன் தான்… அச்சு அசல் உங்களைப் போலவே இருக்கான்… ஆனா…” என்றவர்,

மகனைப் பற்றி மனதில் இருப்பதையெல்லாம் கொட்டிவிட்டு, “உங்களைப் பத்தி எல்லாம் சொல்லி, நல்ல முறையில குழந்தையை வளர்க்கணும்னு அம்மா என்கிட்டக் கேட்டிருந்தாங்க… அதை சரியா செய்யலையோன்னு சில சமயம் தோணுது… என்னால ஒண்ணும் பண்ண முடியலை… அம்மாவோட ஆசையை என்னால நிறைவேத்த முடியலை… அவங்க சாவுக்குக் கூட வர முடியாத பாவி ஆயிட்டேன்…” என்று கதறி அழுதார்.

“நீ ஒண்ணும் வருத்தப்படாதம்மா… கண்ணைத் தொடச்சுக்கோ… யார் யாருக்கு என்ன விதிச்சிருக்கோ அது தான் வாழ்க்கை… ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு எண்ணம்… ஒருத்தரோட எண்ணம் இன்னொருத்தருக்குப் பிடிக்கணும்னு அவசியம் இல்லை… ஆரம்பத்தில இருந்தே எனக்கும் மாப்பிளைக்கும் நிறைய கருத்து வேறுபாடு… எல்லாம் காலப்போக்கில சரியாப் போயிடும்னு நினைச்சோம்… என் பொண்ணே போனதுக்கப்புறம், ரெண்டு பேருமே சரி செய்ய நினைக்கலை… விதியோட கையில நாமெல்லாம் விளையாட்டுப் பொருள்… அதோட போக்கில வாழ்க்கையை மாத்திக்க வேண்டியதுதான்… சாகறதுக்குள்ள ஒரு தடவையாவது பேரனைப் பார்த்திடணும்னு அம்மாதான் ஆசைப்பட்டா… அவளால முடியலை…”

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

"உங்க பேரன் அடுத்த வாரம் வரேன்னு சொல்லிருக்கான்ப்பா... கட்டாயம் வருவான்..." என்று உறுதி சொல்லி, அவர் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

"எனக்கென்ன தோணுதுன்னா, நம்ம கலாச்சாரத்தில வாழுற பொண்ணைப் பாருங்க... நல்ல தைரியத்தோடையும், எந்த சூழ்நிலை வந்தாலும் உறுதியா இருக்கற மாதிரி இருந்தா சரியாயிடுவான்... கவலைப் படாம இரும்மா... எனக்கு உங்க ரெண்டு பேரையும் பார்த்ததில ரொம்ப சந்தோசம்... ஆனா மஹதி வசதியான வாழ்க்கைக்குப் பழக்கப் பட்டவ... ஒரு வாரம் அவளால இங்க இருக்க முடியுமா..." என்று பெருமூச்சுடன் கேட்டார்.

"அவளுக்குப் பிரச்சனையே இல்லப்பா... இருக்கற இடத்துக்குத் தகுந்த மாதிரி மாத்திக்குவா" என்று பதிலளித்தார்.

அவர் சொன்னது போலவே, மஹதி அந்தச் சூழ்நிலைக்குப் பிறந்தவள் போலத் தன்னை மாற்றிக் கொண்டாள். நேரம் தவறாமல் தாய்க்கு மருந்து கொடுப்பது, ப்ரீத்தியை விட்டுவிடாமல் பின்னாலேயே சுற்றுவது, குழந்தைகளுடன் ஓயாத பேச்சும், விளையாட்டுமாக அவள் பொழுது கழிந்தது.

ஒரு நாளில் வருடக் கணக்கில் பழகியது போல, அனைவரிடமும் உரிமை எடுத்துப் பழகியவளை அனைவருக்கும் பிடித்து விட்டது.

சலசலத்தோடும் காவிரி ஆறும், பர்ணசாலை போல் அமைக்கப் பட்டிருந்த குடில்களும், தென்றற் காற்றின் இனிய தழுவலும், பறவைகளின் சங்கீதமும் மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்தன.

"ப்ரீத்தி... உங்க ஊர் ரொம்ப அழகா இருக்கு... காலேஜ் முடிஞ்சதும் ஒன் மன்த்தாவது இங்க வந்து தாத்தாவோட தங்கிடணும்..." என்று ஆற்றங்கரை அருகில் அமர்ந்து, கற்களை நீரினுள் போட்டவாறு சொன்னாள் மஹதி.

"இக்கறைக்கு அக்கறைப் பச்சைதான் மஹி... கொஞ்ச நாள்ல உனக்கு போர் அடிக்க ஆரம்பிச்சிடும்... பிஸியான லைஃப்கு பழக்கப் பட்டவங்களுக்கு, நார்மலா வில்லேஜ் லைஃப் பிடிக்கறது கஷ்டம்... அதுசரி ஒண்ணு கேட்கணும்னு இருந்தேன்... அக்கா அக்கான்னு சொல்லிட்டே இருப்பே... இப்போ அக்கான்னு சொல்றதே இல்லை..."

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'அண்ணியாக வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றிய பிறகு, அக்கா என்று எப்படிக் கூப்பிட முடியும்' என்று நினைத்தவள், "அது அப்படித்தான்... அக்கான்னு சொன்னா மரியாதையாப் பேசணும்... சில சம்யங்கள்ல டிஸ்டன்ஸ் மெயிண்டைன் பண்ணணும்... ஃப்ரெண்ட்னா அப்படியில்லை... எல்லாத்தையும் ஷேர் பண்ணிக்கலாம்... அதனால அக்காவைக் கட் பண்ணிட்டேன்... ஈவினிங் நீங்க ஊருக்குக் கிளம்பறேன்னு சொல்றீங்களே... அதான் கஷ்டமா இருக்கு... ஆஃபிஸ்கு ரெண்டு நாள் லீவ் சொல்லிடுங்க... ஜாலியா ஊர் சுத்தலாம்..."

"லீவ் எல்லாம் சான்ஸே இல்லை... போனதுமே வொர்க் ஸ்டார்ட் பண்ணணும்... அவ்ளோ வேலை இருக்கு... உனக்காக நெக்ஸ் வீக் எண்ட் வரேன்... நீங்க கிளம்பறதுக்குள்ள மறுபடி மீட் பண்ணலாம்... அப்புறமும் எங்கே போயிடப் போறோம்... அதே சிங்காரச் சென்னைல தானே இருக்கப் போறோம்... டைம் கிடைக்கும் போது மீட் பண்ணலாம்..." என்றாள்.

அண்ணன் வரும் நேரம் ப்ரீத்தி இருந்தால், நினைத்ததை நடத்தி விடலாம் என்ற எண்ணத்தில், "சரி கிளம்புங்க... ஆனா, அடுத்த வாரம் கட்டாயம் வந்திடணும்... எதிர்பார்த்திட்டே இருப்பேன்... நான் நிறைய ப்ளான் வச்சிருக்கேன்..". என்று சொல்ல வந்ததைப் பாதியிலேயே நிறுத்திக் கொள்ளவும்,

"அப்படி என்ன ப்ளான்? அதுவும் இந்த ஊர்ல..." என்று வியப்புடன் கேட்டாள்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டு, "யெஸ்... நிறைய நிறைய இருக்கு... ஒரு வாரத்தில மாடு மேய்க்கப் பழகணும்... மாமரம் ஏறப் பழகணும்... வயல்ல நாத்து நடப் பழகணும்... அப்புறம் காவிரியாத்துல ஸ்விம் பண்ணப் பழகணும்... இப்படி இப்படி நிறைய ப்ராக்ராம்ஸ் இருக்கு..." என்றாள்.

சிரிப்புடன் "என்ன பண்ணினாலும் கேர்புல்... தனியா எல்லாம் எங்கேயும் போக வேண்டாம்... எனக்குக் கொஞ்சம் வொர்க் இருக்குடா... கிளம்பலாம்..." என்று கூறவும், இருவரும் பேச்சைத் தொடர்ந்தவாறே வீடு திரும்பினர்.

அந்த மாதத்திற்கான வரவு செலவுக் கணக்குகளைக் கவனிக்கத் தொடங்கினாள் ப்ரீத்தி. செல்போன் ஒலிக்கவும் ப்ரதாப்பின் அழைப்பைப் பார்த்து, "உங்க வொர்க் எல்லாம் முடிஞ்சுதா... ஈவினிங் கிளம்பிடலாமா..." என்றாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“எல்லாம் முடிஞ்சுது ப்ரீத்தி... ஈவினிங் அங்கே வரேன்... ரெடியா இரு... தாத்தாவைப் பார்த்து கொஞ்ச நேரம் பேசிட்டு உடனே கிளம்பிடலாம்...” என்று சொன்னான்.

## 9

**ஜி**பிஎஸ் ட்ராக் மூலம் ஓரளவு பாதையைக் கணித்து காரை ஓட்டி வந்த பிரதாப்பிற்கு, ஓரிடத்தில் சாலை மூன்றாகப் பிரியவும், எந்த வழியில் செல்வது என்று புரியாமல் புதிதாகத் தார் பூசப்பட்டிருந்த வழியில் காரைச் செலுத்தினான்.

‘யாராவது வந்தால் வழி கேட்கலாம்’ என்று சிறிது தூரம் பயணத்தைத் தொடர்ந்த பின்பு, ஒருவரும் வராததால் சலிப்புடன் காரை ஓரமாக நிறுத்தினான்.

ஒரு காலத்தில் நெற்கதிர்களாலும், கரும்பாலும் அணிவகுத்து நின்ற இடமெல்லாம் வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்தன. விவசாயத்தை முதுகெலும்பாகக் கொண்ட நாட்டில் விவசாயிகள் முதுகெலும்பற்றுப் போய் தளர்ந்து நிற்பது பரிதாபமான நிலை.

உலகிற்கே படியளப்பவர்களின் வீட்டில் பஞ்சம். பருவமழை மாறிப் போனதாலும், அதிகரித்து வரும் மக்கள் தொகையாலும் விவசாய பூமிகளெல்லாம் ப்ளாட் போட்டு விற்கும் நிலை.

நெற்பயிர் பயிரிட வழியில்லாமல், பயிரடப்பட்டிருந்த தர்பூசணிச் செடிகளைப் பார்த்து யோசித்துக் கொண்டே மேலும் ஐந்து நிமிடங்கள் காத்திருந்தும் பயனில்லை.

‘ஒருவரைக் கூடக் காணோம்... ஆடு மாடு மேய்ப்பவர்கள் கூட இல்லையே... இவ்வளவு நேரமாயும் ஒரு சின்ன வண்டி கூட வரவில்லையே... தவறான பாதையில் வந்துவிட்டோமா? வந்த வழியில் திரும்பிச் சென்று பார்க்கலாமா?’ என்று குழம்பி நிற்கையில் ‘கிரிங்... கிரிங்...’ என்று சத்தம் எழுப்பியபடி காற்றில் அசைந்தாடும் கொடி போல ஒரு பெண் சைக்கிளில் வரவும் திரும்பிப் பார்த்தான்.

பஞ்சு மிட்டாய் வண்ணத்தில் தாவணியும், பச்சை வண்ணத்தில் பாவாடையும் அணிந்து, அடங்காத தலைமுடியை ரிப்பன் வைத்து இரண்டு பின்னல்களாக



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அலட்சியமாகப் போட்டு, சாலையிலேயே கவனமாக அந்தப் பெண் வந்து கொண்டிருந்தாள்.

ஏதோ சாதனை செய்பவள் போல அந்த விதவிதமான நிறச்சாயம் பூசப்பட்டிருந்த சைக்கிளை அப்படியும் இப்படியும் திருப்பி ஓட்டவும் சிரிப்பு வந்தது.

முகம் மட்டும் குழந்தைத்தனம் மாறாமல் மிக அழகாக இருந்தது. ஒரு நொடி முகத்தையே கூர்ந்து கவனித்தான். பார்த்ததுமே அந்த முகம் பசை போட்டாற்போல் மனதிற்குள் ஒட்டிக் கொண்டது.

முகத்தையே இரசித்துக் கொண்டிருக்கையில், அவள் வேகமாகச் செல்லவும் 'ஓ காட்... வழி கேட்கறதை விட்டுட்டு இப்படி சைட் அடிக்கறோமே' என்று தோன்ற, "ஹலோ... ஹலோ... எக்ஸ்கியூஸ் மீ.... ஒரு நிமிஷம் நில்லுங்க..." என்று கைதட்டி அழைத்தான்.

பல முறை அழைத்தும், அந்தப் பெண் திரும்பிப் பார்க்காமல் வேகத்தை அதிகப் படுத்திச் செல்ல, 'காது கேட்கலையோ' என நினைத்து, காரில் ஏறி வேகமாகச் சென்று அவள் கவனத்தைக் கவர முயன்று, காரின் ஹாரனை பலமாக அழுத்தினான்.

வேகமாக வந்த காரைக் கண்டு, சைக்கிளை நிறுத்த முயன்றாள். ப்ரேக்கை அழுத்திய பின்பும் கட்டுப்பாடில்லாமல் போக, விழுந்து விடுவோம் என்ற நிலையில், சைக்கிளைத் தனியே விட்டு விட்டு சாலையில் குதித்து நின்றாள்.

தடுமாறி சமாளித்து நின்றவளைப் பார்த்து பதட்டத்துடன் காரை விட்டு இறங்கியவன், "ஸாரிங்க... பயந்துட்டீங்களா? பல தடவை கூப்பிட்டுப் பார்த்தேன்... நீங்க திரும்பாததால கொஞ்சம் வேகமா வந்துட்டேன்... இந்தாங்க கொஞ்சம் தண்ணி குடிங்க" என்றான்.

"தண்ணியாம் தண்ணி... நீங்களே குடிங்க..." என்று அவன் மேலேயே தண்ணீரைக் கொட்டிக் கவிழ்த்தவள், 'லூசாப்பா நீ' என்ற ரீதியில் ஒரு பார்வை பார்க்கவும், அவனுக்குச் சிரிப்பு வந்தது.

கவிதை போல இருந்த கண்களாகட்டும், சிரிக்கத் தயார் என்றிருந்த உதடுகளாகட்டும், கன்னங்களில் விழுந்த குழியாகட்டும், எதுவுமே அவளுடைய கோபத்தை வெளிப்படுத்தாததால், விளையாட்டாகவே பேச்சை ஆரம்பித்தான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

‘தெரியாத பெண்ணிடம் இப்படிப் பேசுவது வழக்கமில்லையே… ஆனால் இவளைப் பார்த்தால் புதிதாகத் தோன்றவும் இல்லையே… ஜென்ம ஜென்மமாய்த் தொடரும் பந்தம் போல நினைக்கத் தோன்றுகிறதே…’ என்று ஆச்சர்யப் பட்டுக் கொண்டான்.

“அதான் தண்ணியக் கொட்டிக் கவிழ்த்தாச்சே… அப்புறம் இப்படி முட்டை முட்டைக் கண்ண வச்சிட்டு முழிச்சு முழிச்சுப் பார்த்தா என்ன அர்த்தமாம்…” என்றான் குறும்பு கொப்பளிக்கும் குரலில்.

தண்ணீரை ஊற்றிய பின்னும், கோபப்படாமல் கேலியாக கேட்பவனை மெச்சுதலாகப் பார்த்துவிட்டு, அதே கேலிக் குரலில், “முறைச்சுப் பார்க்கறேன்னு அர்த்தம்” என்றாள்.

“உங்க ஊர்ல இதுக்குப் பேரு தான் முறைச்சுப் பார்க்கறதா மேடம்… பார்த்து முடிச்சிட்டா சொல்லுங்க… எவ்ளோ மார்க் போடலாம்… தேறுவேனா இல்லையான்னு…” ‘மேடம்’ என்பதை அழுத்தமாக ராகம் போல உச்சரித்துக் கேட்கவும்,

“என்னது மே… மே..ட..மா? உங்க மனசில என்ன தான் நினைச்சிட்டு இருக்கீங்க… என்னைப் பார்த்தா வயசான மாதிரியா தெரியுது?” என்று கடகடவென்று பேசியவள், அவன் பேசிய பேச்சின் அர்த்தம் புரிந்து “நான் என்ன ஸ்கூல் டீச்சரா? உங்களைப் பார்த்து மார்க் போட… அதுக்கு வேற ஆளைப் பாருங்க…” என்றாள்.

அவளுக்கும் இவ்வளவு கிண்டலாகப் பேசுபவனுக்கு, சரிக்கு சரி வாயடித்துக் கொண்டு நிற்கிறோமே என்ற குழப்பம்.

“என் மனசில என்னன்னவோ நினைப்பேங்க… அதையெல்லாம் வெளில சொல்ல முடியுமா… இங்க வேற யாருமே இல்லையே… அப்ப உங்ககிட்டத்தானே கேட்க முடியும்…” என்று சொல்லி, காரில் ஸ்டைலாக சாய்ந்து கொண்டு கைகள் இரண்டையும் நீண்டி சோம்பல் முறித்தபின், தலைக்குப் பின்புறமாகக் கைகளைக் கோர்த்தான்.

அவன் நின்ற தோரணை சலனத்தை விதைக்க, “இந்த ஊர்ல இப்படி வம்புப் பேச்செல்லாம் பேசினா, புளிய மரத்திலக் கட்டி வச்சுத் தோலை உரிச்சிடுவாங்க…” என்று முறைப்புடன் கூறியவள், அடக்க மாட்டாமல் கற்பனையில் நகைத்தாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'உன்னுடைய கற்பனையைப் புரிந்து கொண்டேன்' என்று பளிச்சிட்ட விழிகளில் "மீ ரொம்பப் பாவங்க... ரொம்ப நல்ல புள்ளைங்க..." என்றான்.

'ரொம்ப பாவமாம்... பார்க்கறதைப் பார்...' என நினைத்தவளுக்கு, அவன் பார்வையைச் சந்தித்ததும் அதிலிருந்த குறும்பும், உரிமைப் பேச்சும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. வாழ்க்கையில் ஆண்களைப் பார்க்காதவளா என்ன? ஆனால் இவனைப் பார்க்கும் போது மட்டும் ஏன் இந்த உணர்வு?

"நல்ல புள்ளைன்னா காரைப் பேசாம ஓட்டிட்டு வழியைப் பார்த்துப் போயிட்டே இருக்கணும்... அதை விட்டுட்டு போற வர்றவங்களை இப்படித்தான் விழ வைப்பீங்களா..." என்று சண்டைக் கோழி போலக் கேட்டாள்.

"வழி தெரிஞ்சாப் போகாம என்னங்க... அது தெரியாததால தானே உங்களைக் கூப்பிட்டேன்..." என்று ஒருவாறு 'எதற்கு அவளை அழைத்தான்' என்ற விபரத்தை அரட்டைக்கிடையில் தெரிவித்தான்.

"நல்லாக் கூப்பிட்டீங்க... இவ்ளோ பக்கத்தில வந்து காதுல ஓட்டை விழற மாதிரி ஹார்ன் அடிச்சா விழாம என்ன செய்வாங்க... அச்சச்சோ சைக்கிள்..." என்று அப்போதுதான் ஓட்டிக் கொண்டுவந்த சைக்கிளைப் பற்றி நினைவு வந்து பார்க்க, அது பரிதாபமாகக் கிடந்தது.

இருக்கும் சொத்தெல்லாம் தொலைந்து போனால் கூட, இப்படி ஒரு பார்வை யாரும் பார்க்க மாட்டார்கள். அந்த ஓட்டை சைக்கிளைச் சுற்றிவந்து எடுத்து நிறுத்தியவள், அது நிற்க மாட்டாமல் ஒரு புறமாகச் சாயவும்,

"எல்லாம் உங்களாலதான்... ப்ளைட் ஓட்டற நினைப்பில காரை அப்படிக் கொண்டு வந்துட்டு வம்பிழுத்திட்டு இருக்கீங்க... இந்த சைக்கிளை முதல்ல ரெடி பண்ணிக் கொடுத்துட்டுக் கிளம்புங்க..." என்றாள்.

"வாட்..." என்று அலறியவன், "நானா... இந்த சைக்கிளை ரெடி பண்றதா... ஹலோ அதுக்கு வேற ஆளைப் பாருங்க... வழி கேட்கக் கூப்பிட்டது மட்டும்தான் நான் செஞ்சது... சைக்கிள் மேல உட்கார்ந்து டேன்ஸ் ஆடி விழுந்ததெல்லாம் நீங்க தான்..."

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“ஸ்டாப்… ஸ்டாப்… விட்டாப் பேசிட்டே போறீங்க… இதோட ஓனருக்கு நான் என்ன பதில் சொல்றது… என்பாட்டுக்குப் போயிட்டிருந்தேன்… பண்றதையும் பண்ணிட்டு இந்தக் கிண்டலுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை…”

“ஓனர் வேற ஒருத்தங்களா…. ச்ச்… ச்ச்ச்” என்று உச்சுக் கொட்டியவன், “நீங்க சொன்னதுக்கு அப்புறம் தான் தெரியுது… பாவங்க இது… பழைய பேரிச்சம் பழக்காரன் கூட வாங்க மாட்டான்… அல்ரெடி ஆயுசு முடிஞ்ச கேஸுங்க… தொட்டாலே எல்லாம் தனித்தனியாக் கழண்டு வந்திடும் போலருக்கு…. இதையும் மதிச்சு அதுக்கு ஒரு வாழ்வு கொடுத்திருக்கீங்கன்னா க்ரேட்…” என்று பேசியவாறே வளைந்திருந்த ஹேண்டிலை சரி செய்தான்.

“இந்தாங்க… ஏதோ என்னால முடிஞ்சது… இந்த மாதிரி வாயில்லாத ஜீவனை இப்படிக் கொடுமைப் படுத்தக் கூடாதுங்க… சரி செஞ்சதுக்காவது வழியைச் சொல்லிட்டுப் போங்க…”

‘இந்த சைக்கிளையே கிண்டல் பண்றையா… ரொம்பத்தான் ஓவராப் பேசறடா…’ என்று மனதிற்குள் திட்டியவள், “இந்த ஓட்டைக் காரை எடுத்துட்டு யாரைப் பார்க்க வந்திருக்கீங்க…” என்று அவனுடைய பிஎம்டபிள்யூ வைக் கேவலமான பார்வை பார்த்துக் கேட்டாள்.

இந்த முறை கடுப்பான பார்வை பார்த்தவன், “பட்டிக்காட்டு பிகருக்கெல்லாம் என்னோட காரோட அருமை எங்க தெரியப் போகுது…” என்று முணுமுணுத்து ஒருமைக்கு மாறி,

“தியாகி சத்திய மூர்த்தி ஐயா வீட்டுக்கு எப்படிப் போகணும்…” என்றான்.

விழிகள் பளபளக்க ஐ… தாத்… என்று ஆரம்பித்தவள் சட்டென்று நாக்கைக் கடித்து, “என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்…” என்று விசாரிக்க,

“அதெல்லாம் உன் கிட்டச் சொல்ல முடியாது… வழியை மட்டும் சொன்னாப் போதும்…” என்றான்.

“என்ன விஷயம்னு சொல்லலைன்னா வழியெல்லாம் ஒண்ணும் சொல்ல முடியாது…. தெரிஞ்ச வழில அப்படியே திரும்பிப் போங்க… போகலைன்னா பெட்ரோல் தீர்ந்து போற வரைக்கும் சுத்துங்க…” என்று சைக்கிளில் ஏறிக்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

கிளம்பியவள் 'வெவ்வெவ்வே' என்று முகத்தைத் திருப்பி அழகு காட்டியவாறு சென்றாள்.

"ஏய்... ஏய்... பேரையாவது சொல்லிட்டுப் போ... இல்லைன்னா தர்பூஸ்னு கூப்பிடுவேன்..."

சைக்கிளை ஸ்டேண்ட் போட்டு நிறுத்தியவள், "என்னது தர்பூஸா..." என்று சுற்று முற்றும் தர்பூசணிப் பழங்கள் விளைந்திருப்பதைப் பார்த்து, "ஒழுங்கா ஓடிப் போயிடுங்க... அறுபது இலட்சம் கார்னு எல்லாம் பார்க்க மாட்டேன்... நாலு காயப் பறிச்சு எல்லாக் கண்ணாடியையும் உடச்சிடுவேன்" என்று மிரட்டி விட்டு வேகமாகப் பறந்தாள்.

வாய் விட்டுச் சிரித்து, "வெரி நைஸ் கேர்ள்... சரியான வாயாடி.... வாயக் கொடுத்து மீள முடியாது போலிருக்கே... அது சரி... காரோட ரேட் எப்படி கரெக்டா சொன்னா... " என்று நினைத்தவன், 'இது போல ஒரு பெண் மனைவியாக வந்தால் இந்த நிமிஷ சந்தோசம் வாழ்க்கை முழுக்க இருக்கும்' என்று தோன்றத் திகைத்தான்.

யார் என்னவென்று தெரியாமல், இப்படி ஒரு கிராமத்துப் பெண் அவனைக் கவரக் கூடும் என நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

"ஐ... தாத்தா..." என்று அவள் ஆரம்பித்ததை வைத்து, அவருக்குப் பழக்கப் பட்ட பெண் என்று மனம் சொல்ல, அவளைப் பின் தொடர்ந்து காரைச் செலுத்தினான்.

அவள் இரண்டு மூன்று திருப்பங்களைக் கடந்து பெரிய கட்டிடத்தின் முன் மிதிவண்டியை நிறுத்தவும், "மஹி.... இதென்ன கோலம்... இந்த காஸ்ட்யூமை எங்க பிடிச்ச..." என்று கேட்டு, வாய்விட்டுச் சிரித்தது ப்ரீத்தியாக இருக்கவும் "வாவ்... தர்பூஸ்... ப்ரீத்திக்குத் தெரிஞ்ச பொண்ணா நீ..." என்று மனதில் மகிழ்ச்சிப் பெருக்குடன் அருகில் சென்றான்.

ப்ரீத்தியும் அவனைக் கவனித்து விட்டு மகிழ்ச்சியுடன் அழைக்கும் முன் வாயின் மேல் விரலை வைத்து, அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு, "ஹாய் தர்பூஸ்... நீ வழி சொல்லலைன்னா என்ன... என்னால இந்த வீட்டைக் கண்டு பிடிக்க முடியாதா... உன்னோட இத்துப் போன சைக்கிளுக்குப் பின்னாடி ஒண்ணும் வரலை நான்... நானே கண்டு பிடிச்சு வந்தேன்..." என்று ஸ்டைலாக தலைமுடியைக்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கோதிவிட்டுச் சொல்லவும், 'என்ன நடக்கிறது' என்று புரியாமல், இருவரையும் பார்த்தாள் ப்ரீத்தி.

"தாத்தாவைப் பார்க்கணுமாம்... என்ன விஷயம்னு சொல்ல மாட்டாராம்... நம்ம ஊர் இடுகாட்டுக்குப் போக புது ரோட் போட்டிருக்காங்களே அதுக்குப் பக்கம் நின்னுட்டிருந்தார்... பேய் பிசாசு சுத்துதுன்னு இந்த டைம் யாருமே அங்க போறதில்லை... சைக்கிள் ஓட்டிப் பழக வசதியா இருக்குன்னு அங்க போனப்பப் பார்த்தேன்... கொஞ்ச நஞ்ச வாய் இல்லை... கொழுப்புக் குறையட்டும்னு அங்கயே விட்டுட்டு வந்திருக்கணும்..." என்று ப்ரீத்தியிடம் மெதுவாகக் கூறினாள்.

"சரி விடு நான் பார்த்துக்கறேன்..." என்று சொல்லி, என்ன விஷயமா தாத்தாவைப் பார்க்கணும்... சொன்னாதான் பார்க்க விடுவோம்" என்று மிரட்டலாகப் பிரதாப்பிடம் கேட்டாள்.

"பொண்ணுப் பார்க்க வந்திருக்கேன் மேடம்... உங்க ஊர்ல அம்சமா நிறையப் பொண்ணு இருக்காம்... தாத்தாகிட்ட விசாரிக்கணும்... இப்பவாவது உள்ளே விடறீங்களா..."

'அப்ப ப்ரீத்தியைப் பொண்ணுப் பார்க்க வந்திருக்கானோ... அப்படியிருந்தால் தனக்குத் தெரியாமல் இருக்குமா? ஒண்ணும் புரியலையே' என்று சோர்ந்தாள்.

'சில மணித்துளிகளில் சிம்மாசனமிட்டுக் கொண்டவன் தனக்கில்லையோ' என்று தோன்ற கண்களை மூடித் திறந்து வலியை மறைத்தாள்.

"போதும் விளையாட்டு... முதல்ல உள்ள வாங்க பிரதாப்... சொன்ன நேரத்துக்குக் கரக்டா வந்திட்டீங்க... ரூட் கண்டு பிடிக்கறது கஷ்டமாப் போச்சா..."

"பிரதாப்பா... அப்ப முதல்லையே உங்களுக்குத் தெரியுமா இவரை..." என்று மஹதி விழிக்கவும் "எனக்கென்ன உனக்கே நல்லாத் தெரியும்... பேப்பர் அப்பப்பக் கண்ணில பார்த்தாலே தெரிஞ்சிருக்கும்... அதுக்கெல்லாம் நமக்கெங்க நேரம் இருக்கு மஹி... அப்படி கொஞ்சம் சுத்தி சுத்திப் பார்த்திருந்தா ஃபேமஸ் டென்னிஸ் ப்ளேயர் பிரதாப்பக் கண்டு பிடிச்சிருப்ப... சரி உள்ள வாங்க, எவ்ளோ நேரம் இங்கயே நின்னு பேசிட்டிருக்கறது" என்று கண்களைச் சிமிட்டியவாறு சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் ப்ரீத்தி.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'நன்கு பழக்கப்பட்ட முகம்' என்று குழம்பிக் கொண்டிருந்தவள் இதை எதிர்பார்க்கவில்லை.

'எவ்வளவு போட்டோ பார்த்திருக்கிறோம்... ஆள் சூப்பரா இருக்கான்னு ஹாஸ்டலில் பேசிய பேச்சுக்கள் எத்தனை... இப்படி ஒரு குக்கிராமத்தில் சரிக்கு சரி வாயடிப்போம் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லையே...' என்று தன்னுடைய மந்தப் புத்தியைக் கடிந்தவாறே தலையைத் தட்டிக் கொண்டாள்.

"ப்ரீத்தி... இதெல்லாம் ஓவர்... கிரிக்கெட் ப்ளேயரை வேணும்னா எல்லாருக்கும் தெரியும்... என்னைப் போல ஆட்களை இது மாதிரி கிராமத்துப் பொண்ணுங்களுக்குத் தெரிஞ்சிருக்க சான்ஸே இல்லை..." என்று சொல்லிவிட்டு,

"பார்த்து தர்பூஸ்... அடிக்கற அடியில உள்ள இருக்கற களிமண் வெளில வந்திடப் போகுது... பாவம் பூ மாதிரி இருக்கற கைக்கு வலிக்கும்..." என்று அவளது கையை மென்மையாகப் பற்றித் தடவிவிட்டு மென்குரலில் சொல்லிப் போனவனின் ஸ்பரிசத்தில், தன்னைத் தொலைத்தவளாய் திகைத்து நின்றாள் மஹதி.

## 10

**ப**த்திரிக்கை அலுவலகத்தில், தன்னுடைய அறையில் அமர்ந்திருந்தாள் ப்ரீத்தி. இரண்டே நாட்களில் முடித்தாக வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன.

அடுத்து வெளியிட வேண்டிய இதழ் பற்றிய விஷயங்களைப் பேச ராகவன் தொலைபேசியில் அழைக்கவும், அதற்கான கோப்புகளை எடுத்து வைத்து அவரது அறைக்குக் கிளம்பினாள்.

பொறுப்புகளைப் பகிர்ந்து ஒப்படைத்து விட்டாலும், இதழ் அச்சேறும் முன், எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து பார்ப்பதை அவர் நிறுத்தியதே இல்லை.

'எப்படித்தான் நேரம் கிடைக்கிறதோ' என்று வியப்படைவாள். இருக்கும் நேரத்தைத் திட்டமிட்டுச் செயலாற்றுவதை அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அரசாங்க அலுவலர்களைப் பற்றிய ஸ்பெஷல் எடிசன் அடுத்த வாரம் வர இருக்கிறது.

முப்பது வருடங்களாக, வாங்கும் சம்பளத்தில் தனக்கென்று எதுவும் எடுத்துக் கொள்ளாமல் இயலாதவர்களுக்குச் செலவிடும் நூலகர் கல்யாணசுந்தரம், 25 வருடங்களில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நட்டு பசுமைப் புரட்சிக்குத் தனது வருமானத்தின் பெரும் பகுதியைச் செலவிடும் கோவை நகரப் பேருந்து ஓட்டுநர் யோகநாதன், மாணவர்களின் படிப்பிற்கும், ஊனமுற்றவர்களுக்கும் சம்பளத்தைச் செலவிடும் மதுரை தத்தநேரி மயான உதவியாளர் ஹரி உள்ளிட்ட பத்து அரசாங்க அலுவலர்கள் பற்றிய கவர் ஸ்டோரி தயார் செய்தாயிற்று.

இவர்களைப் போலெல்லாம் செய்யாவிட்டால் பரவாயில்லை. ஆனால் வேலையே செய்யாமல் காலம் ஓட்டுபவர்களை என்ன சொல்வது?

பொதி சுமக்கும் கழுதை போலதான் அரசு இயந்திரம். சுமப்பவர்கள் சுமந்து கொண்டே இருக்கிறார்கள். வேலை செய்யாமல் ஏமாற்றுபவர்கள் ஏமாற்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். சேவை மனப்பான்மை உள்ளவர்கள் பெருமளவு குறைந்து விட்டார்கள்.

மருத்துவத் துறையிலேயே ஒரு சில அரசு மருத்துவர்கள் தனியாகக் க்ளினிக் வைத்து சட்ட விரோதமாக சம்பாதிப்பதை குறிக்கோளாக வைத்திருக்கிறார்கள். அலட்சியப் போக்கினால் எத்தனை எத்தனை பேர் பாதிக்கப் படுகிறார்கள்.

கொடுத்த கோப்புகளைப் பார்வையிட்டவரிடம், “சார்! சிட்டில இருக்கற கவெர்ன்மெண்ட் ஆ∴பீஸ்ல இண்டர்நெட் கனெக்ஷனை சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்தறாங்க... எந்த ரெஸ்ட்ரிக்ஸன்ஸ்ம் சில ஆ∴பிஸ்ல இல்லை... நியூஸ் பேப்பர் பார்க்கவும், கிரிக்கெட் பார்க்கவும், பேஸ் புக், ட்விட்டர் மாதிரி சோஷியல் ∴போரம்ல அரட்டை அடிக்கவும் டைம் வேஸ்ட் பண்ணறாங்க... ஹையர் அ∴பிஷியல்ஸ் இது மாதிரி காலத்தைக் கழிக்கற போட்டோஸ் கஷ்டப்பட்டு எடுத்திருக்கோம்... அப்படியே பப்ளிஷ் பண்ணிடலாமா...” என்றாள்.

“தாராளமாப் போடலாம்மா... இதுவும் ஒரு வகையான தேசத் துரோகம்தான்... இ-கவர்னன்ஸ் தேங்கிக் கிடக்கற வேலையை ஸ்பீடா செய்யக் கொண்டு வந்தது... இது போல வொர்க் பண்றதுக்கொண்ணும் கவர்ன்மெண்ட் சேலரி தரலை... எத்தனை வேலைகள் குவிஞ்சு கிடக்கு... அவங்க செய்யலை இவங்க செய்யலைன்னு

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அடுத்தவங்களைக் குறை சொல்லித் தப்பிச்சுக்கறாங்க... இந்த மாதிரி ஆட்கள் விஷச் செடிமாதிரி... களையெடுக்காமப் போனதாலதான் இப்ப இந்த நிலைல இருக்கோம்...”

சிறிது நேரம் சாதாரணமாக அவரிடம் பேசிவிட்டு அவளது அறைக்குத் திரும்பினாள்.

அரசியல்வாதிகள் பெருமளவு கொள்ளையடிக்கிறார்கள் என்றால், அதிகார வர்க்கத்திலும் லஞ்ச லாயண்ய ஊழல்கள் பெருகிவிட்டன.

“என்ன ப்ரீத்தி... யோசனை பலமா இருக்கு...” என்று கேட்டவாறே எதிரே வந்தான் பிரதாப். நண்பனின் திருமணத்திற்குச் சென்றவன் இரண்டு நாட்களுக்குப் பின் இன்றுதான் திரும்பியிருக்கிறான்.

“ஹாய்... எப்ப வந்தீங்க... ட்ரிப் எல்லாம் எப்படி இருந்துச்சு... கல்யாண விருந்து பலம் போல... ஹேப்பியா வந்திருக்கீங்க...”

“நீ ஆ.ஃபிஸ் கிளம்பிக் கொஞ்ச நேரத்திலேயே வீட்டுக்கு வந்துட்டேன்... ட்ரிப் எல்லாம் ஜாலியாப் போச்சு... பழைய ஃப்ரெண்ட்ஸ் நிறையப் பேர் வந்திருந்தாங்க... நீ ரொம்ப பிஸியா இருக்கேன்னு அம்மா சொன்னாங்க... வொர்க் எல்லாம் எப்படிப் போகுது... இந்த வீக் எண்ட் மறுபடி ஊருக்கா...”

“ம்ஹூம்... வொர்க் அதிகம் இருக்கு... அதனால போகலை....”

“ஓ... ஆனா போகலைன்னா மதி சும்மா விடுவாளா...”

‘என்ன சொல்கிறான்... காதில் சரியாகத்தான் விழுந்ததா... மதியா... ஓ மஹதியைத்தான் மதி என்கிறானா... இந்த அளவுக்கு வந்து விட்டதா...’ என்று நினைத்தவளுக்கு, மகிழ்ச்சியாக இருந்தது.

“என்னது மதியா... அதுயார்... எனக்குத் தெரியாதே...” என்று புன்னகையோடு கேட்க, சமாளிப்பாக “மங்கின்னு தானே சொன்னேன்... மதின்னு கேட்டுச்சா... அந்த அறுந்த வாலைப் போய் யாராவது மதின்னு சொல்வாங்களா... எப்படி இருக்கா...” என்றான்.

“நல்லா இருக்கா... உங்களை விசாரிச்சதாச் சொல்லச் சொன்னா... டெய்லி கோழி குஞ்சு பொறிச்சதுல ஆரம்பிச்சு, எல்லாக் கதையும் சொல்லிட்டுத்தான் இருக்கா... எப்படியும் இங்க தானே வரப்போறா... அதனால வீக் எண்ட் போகலை...

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

வொர்க் இருக்குன்னு சொல்லி சமாளிச்சுக்கலாம்…” என்று பதில் சொல்லி விடைபெற்றாள்.

ஊருக்கு வந்தபோது, தாத்தாவுடன் பேசிவிட்டு அவன் சிறிது நேரத்திலேயே கிளம்பி விட்டாலும், பல முறை அவனது கண்கள் மஹதியை ஆவலாகப் பார்ப்பதைக் கவனித்திருந்தாள்.

காரில் திரும்பும் போதும், எதேச்சையாகப் பேசுவது போலப் பேசிய பேச்சுக்கள் மஹதியைச் சுற்றியே வட்டமிட்டன.

எல்லா விஷயகளையும் சுலபமாக எடுத்துக் கொண்டு, கலகலப்புடன் வளைய வரும் அவளைப் பார்த்ததுமே பெரும்பான்மையானவர்களுக்குப் பிடித்து விடும்.

“யூ.எஸ். லையே பிறந்து வளர்ந்த பொண்ணு… கொஞ்சம் வித்தியாசமானவ… காலேஜ் ஃபர்ஸ்ட் இயர் படிக்கும் போது கொஞ்ச நாள் மீட் பண்ணினாலும், அவளோட கேரக்டரை மறக்கவே முடியாது… ரொம்ப ஏக்டிவ்வா எல்லாருக்கும் ஹெல்ப் பண்ணுவா… இது மாதிரி ஒரு ப்ரெண்ட் கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணும்… ரொம்பவுமே அட்டாச்மெண்ட்…

எல்லாரும் படிப்புக்காக ஃபாரின் போவாங்க… இவ மட்டும் அங்கிருந்து இந்தியாவுக்கு வந்திருக்கா… அவங்க அண்ணாவுக்குப் பொண்ணுப் பார்க்கறாங்களாம்… அதுக்காக அவங்க ஃபேமிலி கொஞ்ச நாள் இங்க இருக்கப் போறாங்க… இவ்வளவு தான் எனக்குத் தெரிஞ்ச விஷயம்… நானும் அதுக்கு மேல அதிகம் கேட்டுக்கலை…” என்று தனக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் சொல்லியிருந்தாள்.

“சென்னையில் வீடு எங்கே? எந்தக் காலேஜ்ல படிக்கறா?” என்று பொதுப்படையாகப் பேசுவது போல எல்லா விஷயங்களையும் மறக்காமல் கேட்டுக் கொண்டான்.

ஆனால், ‘மஹதி மனதில் என்ன இருக்கிறது’ என்பது அவளுக்குப் புரியவில்லை.

‘பிரதாப்பும் வெளிப்படையாகச் சொல்லாத வரை எதையும் உறுதிப்படுத்த முடியாது… விஷயம் வெளியே வரும்போது பார்த்துக் கொள்ளலாம்…’ என்று நினைத்து அலுவலைத் தொடர்ந்தாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

*** ** ***

**அ**தே நேரத்தில் யசோதா, “அப்பா... உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்...” என்று பெரியவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

“என்னம்மா... என்ன விஷயம்... ரொம்ப நேரமா கேட்கலாமா வேண்டாமான்னு தயக்கத்தோடு வந்துட்டு வந்துட்டுப் போற... என்கிட்ட என்ன தயக்கம்... உரிமையாக் கேளும்மா...”

“எப்படிக் கேட்கறதுன்னு புரிலைப்பா... அதான் யோசிக்கறேன்... ரஞ்சன் மேரேஜ் விஷயமாப் பேசணும்... நீங்க சொன்ன மாதிரி தைரியமா, எல்லா சூழ்நிலைலையும் சமாளிக்கற பொண்ணு ஒருத்தி என் மனசில இருக்கா... மஹதிக்கும் இதில ரொம்ப ஆசை...”

“ஓ... உங்க ரெண்டு பேருக்கும் பிடிச்சிருந்தா சம்மந்தப்பட்டவங்க கிட்டப் பேசி முடிவு பண்ணிட வேண்டியது தானே... யார்மா அந்தப் பொண்ணு...”

தயக்கத்தோடு, “ப்ரீத்தியைத்தான் சொல்றேன்.... ரஞ்சனுக்குப் ப்ரீத்தியைக் கல்யாணம் பண்ணித் தரீங்களா...” என்று கேட்டு விட்டார்.

பெரியவர் எதுவும் பேசாமல் அமைதியாக முகத்தையே பார்க்கவும், “அவளைப் பார்க்கறப்ப எல்லாம், மனசில இதே நினைப்புதான் தோணுது... உங்களுக்கு அவனைப் பத்தி எல்லாமே சொல்லிட்டேன்... அவனோட இஷ்டத்துக்கே விட்டுப் பழக்கிட்டோம்... அந்தக் கல்ச்சர்குப் பழக்கப் பட்டுட்டான்... ஆனாலும் பாசம் ரொம்ப அதிகம்...

அக்கறையும் நிறைய இருக்கு... இத்தனை நாள் வெளிப்படுத்த சந்தர்ப்பமே கிடைக்கலை அவனுக்கு... ஆபிஸ் ஸ்டாஃப்னு சொல்லி டாக்டரைத்தான் எங்க கூட அனுப்பிருக்கான்... பொறுப்புன்னு வந்திடுச்சுன்னா தட்டிக் கழிக்கறவன் இல்லை... என்னை நம்புங்க... என்ன பிரச்சனை வந்தாலும் எதிர்த்து சமாளிக்கற திடம் எனக்கே வந்திடுச்சு இப்ப... அவளை என் பொண்ணு மாதிரியே பார்த்துக்க வேண்டியது என்னோட பொறுப்பு...” என்று, ‘என்ன முடிவு சொல்வாரோ’ என்று தவிப்புடன் கூறினார்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“இப்படிக் கேட்பேன்னு நான் எதிர்பார்க்கலை யசோதா... சுயமா முடிவெடுத்துப் பழக்கப் பட்ட மனுஷி அவ... நம்ம ஆசையை அவ மேல திணிக்கறதில எனக்கு விருப்பம் இல்லை... அவ மனசில என்ன இருக்குன்னு எனக்குத் தெரியாது...

எங்களுக்குக் கிடைச்ச தெய்வக் குழந்தை அவ... யாருக்கும் எந்தத் தொந்தரவும் கொடுத்ததில்லை... சுயநலமா யோசிக்கத் தெரியது அவளுக்கு... விவரம் தெரியற வயசு வந்ததில இருந்து விவசாய வேலையில இருந்து எல்லாமே செய்வா... இப்ப இருக்கற காய்கறித் தோட்டம் போட்டதெல்லாம் அவ தான்... சம்பாதிக்கற பணத்தில அநாவசிய செலவு எதுவும் செய்யாம, அவ தேவை போக எல்லாத்தையும் இங்க அனுப்பிடறா...

அவளுக்குக் கிடைக்கற சம்பளம் குறைவு தான்... வேலை முடிஞ்சு நைட்டெல்லாம் கண்விழிச்சு ஆன்லைன்ல டியூஷன் எடுத்து வேற சம்பாதிச்சு அனுப்பறா... எத்தனை கஷ்டம் வந்தாலும் எதிர்த்து நின்னு ஜெயிச்சுக் காட்டிருக்கா... நல்ல இடத்தில அவளுக்கு மேரேஜ் பண்ணணும்னு சொல்லி வச்சிட்டிருக்கேன்... பணம் முக்கியம் இல்லை... நல்ல குணமான மாப்பிள்ளை வேணும்... உங்க வீட்டு சூழ்நிலைக்கு அவளால ஒத்துப் போக முடியுமான்னு தெரியலை...

அதுவுமில்லாம மேரேஜ் முடிஞ்சதும் நீங்க பழையபடியே கிளம்பிடப் போறீங்க... ஆனா, ப்ரீத்தி இந்தியாவை விட்டுக் கிளம்ப மாட்டா... அதனால, இது ஒத்து வரும்னு எனக்குத் தோணலை...” என்று நீண்ட விளக்கத்தைக் கொடுத்துத் தன் மறுப்பைத் தெரிவித்தார்.

“இனிமேல் இங்கே தான் இருக்கப் போறோம்... என்னோட உயிரே போனாலும் அப்பா பிள்ளையோட முடிவுக்கு சரின்னு சொல்ல மாட்டேன்... என்னை நம்புங்கப்பா... எதுக்கும் யோசிச்சு அப்புறமா சொல்லுங்க...” என்று அப்போதைக்கு விட்டுவிட்டாலும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் தன்னுடைய ஆசையைச் சொல்ல மறக்கவில்லை.

இரண்டு நாட்கள் யோசித்தவர், “எனக்கு சம்மதம்மா... ப்ரீத்தி வந்தா அவகிட்டப் பேசறேன்... எனக்கு அவ மேல நம்பிக்கை இருக்கு... வளைஞ்சு கொடுக்க வேண்டிய விஷயத்துக்கு வளைஞ்சு கொடுப்பா... ஆனா, தப்புக்கு என்னைக்கும் துணை போக மாட்டா... வாழ்க்கையை சந்தோசமா மாத்திக்கற திறமை அவ கிட்ட இருக்கு... அவளை நம்பி இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கறேன்... அதுக்கு முன்னால உங்க வீட்ல எல்லாருக்கும் சம்மதமான்னு தெளிவு படுத்திக்க...” என்றார்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

ஆனந்தக் கண்ணீரோடு, “ரொம்பத் தேங்க்ஸ்பா… ப்ரீத்தியோடு சேர்த்து இங்க இருக்கற எல்லாக் குழந்தைகளுக்கும் நான் பொறுப்பு எடுத்துக்கறேன்… நீங்க கவலையே படத்தேவையில்லை… இதுவரைக்கும் பயந்து பயந்து வாழ்ந்த காலமெல்லாம் போதும்… இந்த முடிவுக்கு வீட்ல எல்லாரும் கட்டுப் படுவாங்க… சண்டே ரஞ்சனையும், அவங்க அப்பாவையும் கிளம்பி வரச் சொல்றேன்… நீங்களும் ப்ரீத்தியை வரச் சொல்லுங்க…” என்றார்.

உடனடியாக மகனை செல்போனில் அழைத்தவர், “உன்னோட மேரேஜ் விஷயத்தில் எனக்குப் பண்ணின ப்ராமிஸ் ஞாபகம் இருக்கா ரஞ்சன்…” என்றார்.

தாய் சந்தோசமாக இருப்பதையும், ஆரோக்கியமாக இருப்பதையும் அவ்வப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு டாக்டர் தெரிவித்திருந்ததால், அவன் நிம்மதியோடு இருந்தான்.

“உங்களுக்கு ஏன் இப்படியெல்லாம் டவுட் வருது மாம்… ப்ராமிஸ் பண்ணினா பண்ணினதுதான்… சீக்கிரம் ஊருக்கு வந்து பொண்ணுப் பாருங்க… நீங்க இல்லாம வீடு, வீடு மாதிரியே இல்லை… டாடி கூட இப்ப எதுவுமே பேசறதில்லை…. யோசிச்சிட்டே இருக்கார்…”

“இங்கேயே பொண்ணுப் பார்த்தாச்சுடா… பிறந்து வளர்ந்ததெல்லாம் இங்கேன்னாலும், இப்போ சென்னைலதான் ஒர்க் பண்றா… எனக்கும் மஹிக்கும் ரொம்பப் பிடிச்சிடுச்சு… என்ன வேலை இருந்தாலும் அதையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு, நீயும் அப்பாவும் சண்டே இங்க கிளம்பி வரீங்க… அப்பாட்ட விஷயத்தைச் சொல்லிக் கூட்டிட்டு வர வேண்டியது உன்னோட பொறுப்பு… மறுப்பு எதுவும் சொல்லக் கூடாது…” என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டு செல்போனை அணைத்தார்.

“மம்மி நீங்கதானா பேசறது… அதிகாரம் எல்லாம் தூள் பறக்குது…. இவ்ளோ நாள் இந்த வீராங்கனை எங்கே போயிட்டாங்க…. என்னால நம்பவே முடியலை… எங்க அம்மாதானா இது..” என்று மயக்கம் வருமாறு நடித்து மஹதி கேட்டாள்.

“ச்சூ நீ வேற மஹி… உங்க அப்பா என்ன சொல்வாரோன்னு பயமா இருக்கு… இங்க வந்ததுக்கு அப்புறம், ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தைதான் உடம்புக்கு எப்படி இருக்குங்கற மாதிரி விசாரிக்கறார்… நல்ல படியாப் பேசினா திரும்பவும் அவரே எல்லாத்தையும் முடிவு பண்ணி அதட்டுவார்னு நானும் பேசாம இருக்கேன்…

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அவருக்கு இங்க வந்ததே பிடிக்கலை... அதான் அண்ணன் பொறுப்பிலையே எல்லாத்தையும் தள்ளி விட்டுட்டேன்... எவ்வளவு சீக்கிரம் மேரேஜை முடிக்கிறோமோ அவ்வளவு நல்லாது... யார் எப்போ மாறுவாங்கன்னே சொல்ல முடியாது..." என்று பெருமூச்சோடு கூறினார்.

"எப்படியோ, ஐ ஆம் ஸோ ஹேப்பி... ப்ரீத்தி எனக்கு அண்ணிங்கறதை நினைச்சாலே சந்தோசமா இருக்கு" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியவள், "எல்லாம் முடிவாகற வரைக்கும் அண்ணி கிட்ட எதுவும் சொல்ல வேண்டாம்னு வேற சொல்லிட்டீங்க... இல்லைன்னா அண்ணாவைப் பத்தி அவங்க கிட்ட நிறையச் சொல்லுவேன்" என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

பத்திரிக்கையில் வந்த புகைப்படத்தைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது என்பதால், 'ரஞ்சனோடு இருந்த பெண் ப்ரீத்தியாக இருக்குமோ' என்ற சந்தேகத்தை வெளியே சொல்லாமல் "ரெண்டு பேரும் முதல்ல பார்த்துக்கட்டும்... அவங்களுக்குப் பிடிச்சதுக்கப்புறம் முடிவு பண்ணிக்கலாம்... எதிர்பார்ப்பை முன்னாடியே விதைக்கக் கூடாது... ரஞ்சன் பிடிக்கலைன்னு சொல்லிட்டா அப்புறம் ரொம்பக் கஷ்டமாப் போயிடும்..." என்று சொல்லி, அவள் ஆவலுக்குத் தடை விதித்திருந்தார்.

'எல்லாம் நல்ல படியாக நடக்க வேண்டும்' என்று மனமுருகப் பிரார்த்தை செய்து கொண்டு, ஞாயிற்றுக் கிழமைக்காகக் காத்திருக்கத் தொடங்கினர்.

## 11

**அ**ந்திவானம் சிவப்புக் கம்பளமிட்டு, நிலாப்பெண்ணின் வருகைக்காக, வரவேற்பளித்துக் கொண்டிருந்த வேளை.

சிலுசிலுக்கும் ஈரக் காற்றில், விரைந்து மறையும் மரங்களைப் பார்த்தவாறு இரயிலில் பயணம் செய்வது, ப்ரீத்திக்குப் புத்துணர்ச்சி தருவதாக இருந்தது.

சென்னை நகரப் பரபரப்பிற்குப் பழக்கப்பட்டபின், அபூர்வமாகக் கிடைக்கும் இது போன்ற பயணங்களை மிகவும் இரசிப்பாள்.

'தாத்தா எதற்காக வரச்சொல்லியிருப்பார்... என்ன விஷயமாக இருக்கும்... ஆஸ்ரமத்திற்கான செலவு பற்றி, குழந்தைகள் படிப்புப் பற்றி இருக்குமோ...

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அப்படியிருந்தால் போனிலேயே சொல்லியிருப்பாரே…' என்று பலவற்றை யோசித்தும், அவளால் எந்த முடிவிற்கும் வர இயலவில்லை.

திடீரென்று, "உங்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும் ப்ரீத்திம்மா… சனிக்கிழமை ஊருக்கு வாம்மா…" என்று அவர் சொன்னதிலிருந்து, இதே யோசனைதான்.

"என்ன விஷயம் தாத்தா?" என்று பதற்றத்தோடு கேட்டபோது, "பயப்பட ஒண்ணும் இல்லை… எல்லாரும் நல்லாருக்கோம்மா… நல்ல விஷயம் தான்… அதை நேர்லதாம்மா சொல்ல முடியும்… நீ வரும் போது பேசிக்கலாம்" என்று சொல்லி, போனை வைத்து விட்டார்.

திருச்சி இரயில் நிலையத்தை நெருங்கவும், கைப்பையை எடுத்துக்கொண்டு இறங்க ஆயத்தமானாள்.

அதற்குள் செல்போன் ஒலிக்க, மஹதியின் அழைப்பைப் பார்த்து, "சொல்லு மஹி… சென்னையில ஏறினதில இருந்து, இதுவரைக்கும் பத்து காலாவது பண்ணியிருப்ப… ஊர்ல செம போரா… ஸ்டேஷன் வந்திடுச்சு… இறங்கப் போறேன்… இன்னும் ஒன் ஹவர்ல வந்திடுவேன்…ஓகேவா… இப்ப போனை வச்சிடறேன்…" என்றாள்.

போனை அணைத்துக் கைப்பையில் போட்டுக் கொண்டு இறங்கியவுடன், "ஹாய் ப்ரீத்தி!" என்றவாறு, சிவப்பு ரோஜாக்களாலான பூங்கொத்தை நீட்டிவாறு மஹதி வரவும் திகைத்தாள்.

"ஹாய்… ஸ்டேஷன்ல இருக்கறதாச் சொல்லவே இல்லை… இவ்ளோ பெரிய பொக்கே வேற… வரவேற்பு பலமா இருக்கு… இது எனக்குதானா… என்ன ஸ்பெஷல்…"

"யெஸ்… இது ரொம்ப ஸ்பெஷலான வரவேற்புதான்… அம்மா கொஞ்சம் திங்ஸ் வாங்கிட்டு வரச் சொன்னாங்க… அதனால டிரைவரோட பர்சேஸ் வந்தேன்… ரெட் ரோஸ் பார்த்ததுமே உங்க ஞாபகம் வந்துச்சு… சரி வந்ததே வந்துட்டோம், உங்களையும் கூட்டிட்டுப் போயிடலாம்னு வெயிட் பண்ணிட்டிருக்கேன்…"

பேசியவாறே இருவரும் காரை அடைந்தனர்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“இவ்ளோ பர்சேஸ் பண்ணினயா... சென்னையில இல்லாதது இங்க என்ன இருக்கு.... கார்ல உட்கார இடமே இருக்காது போல...”

“இதெல்லாம் கொஞ்சம் தான்... அம்மாக்கு இருக்கற வேகத்துக்குக் கடையையே வாங்கச் சொல்லிடுவாங்க போல... குட்டீஸ் எல்லாருக்குமே ரெண்டு செட் டிரஸ் எடுத்திருக்கேன்... அப்புறம் அது இதுன்னு வாங்கி நிறையச் சேர்ந்திடுச்சு...”

“ஓ! நாளைக்குக் கிளம்பறீங்கல்ல... எனக்கு மறந்தே போச்சு... பக்கத்து ஊர்ல அப்பாவோட ரிலேடிவ்ஸ் எல்லாம் இருக்கறதா சொன்னையே மஹி... எல்லாரையும் பார்த்தாச்சா...”

“எல்லா வீட்டுக்கும் போயிட்டு வந்துட்டோம் அண்...” என்று சொல்லி நாக்கைக் கடித்துக் கொண்டவள், “அண்ணனும் அப்பாவும் நாளைக்கு வராங்க... அவங்க வந்ததும் ரிலேடிவ்ஸ் எல்லாரும் பார்க்க வரதாச் சொல்லிருக்காங்க... இத்தனை வருஷமா நிறைய மிஸ் பண்ணிட்டோம்ங்கறது, இங்க வந்ததுக்கு அப்புறமாத்தான் தெரிஞ்சது... சித்தப்பா பசங்க, அத்தை பசங்கன்னு நிறையப் பேர் இருக்காங்க... ரொம்ப வசதி இல்லாம சாதாரணமா இருக்காங்க... நான் யார்னு தெரிஞ்சதும் எல்லாரும் அழுதுட்டாங்க... எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்துச்சு...” என்று மனம் கனக்கச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இந்த மஹதி புதியவளாகத் தெரிந்தாள். இதுவரை, சொந்த விஷயம் எதுவும் இருவரும் பேசியதில்லை.

பேச்சிற்கிடையில் ‘அண்ணா, அப்பா’ என்று சாதாரணமாகச் சொல்வாள். அதற்கு மேல் தோண்டித் துருவி எதுவும் கேட்டதில்லை.

ஆஸ்ரமத்தில் வளர்ந்ததாலோ என்னவோ, யாருடைய சொந்த விஷயங்களைப் பற்றியும் கேட்கப் பிடிப்பதில்லை. ‘அநாதை’ என்று சொன்னால் இரக்கமாக, இளக்காரமாக பலவிதமான பார்வைகளைச் சந்திக்க நேரிடும். அதைத் தவிர்க்கவே அது போன்ற பேச்சுக்கள் எழாதவாறு பழகுவாள்.

பிரதாப்பிற்காக அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிவு செய்து, “மஹி! நீங்க தாத்தாவுக்கு எப்படி ரிலேடிவ்ஸ்...” என்றாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

ஆச்சர்யத்துடன், "தாத்தா உங்ககிட்ட எங்களைப் பத்திச் சொன்னதில்லையா?" என்று கேட்க,

"ம்ஹூம்... உங்க அம்மாவும், லதாம்மாவும் ஒண்ணாப் படிச்சதாச் சொன்னார்... அதுக்குள்ள தாத்தாவைப் பார்க்க அவரோட ஃப்ரெண்ட் வந்துட்டார்... நானும் வரவு செலவு கணக்குப் பார்க்கறதில பிஸியாயிட்டேன்... அப்புறம் ஞாபகம் வரலை...."

அதற்குள் வீடு வந்து சேரவும், "வாம்மா!" என்று அன்புடன் வரவேற்றார் யசோதா.

எல்லோருடைய வரவேற்பும் வித்தியாசமாக இருக்க, 'என்ன புதிர் இது... என்ன சொல்லப் போகிறார்கள்...' என்று காத்திருந்தாள்.

நலம் விசாரிப்பிற்குப் பின், இரவு உணவு முடிந்ததும், தாத்தா அழைக்கவே அவரது அறைக்குச் சென்றாள்.

அவருக்கும் யசோதாவிற்கும் உள்ள உறவினைப் பற்றிச் சொன்னவர், மருமகனைப் பற்றியும், மகளைப் பற்றியுமான பழைய கதைகளைக் கூறினார்.

பேரனுடைய பெயரை 'சித்ரஞ்சன்' என்று குறிப்பிட்டதுமே, திகைத்தாள்.

'நிச்சயம் அவனாகத்தான் இருக்க வேண்டும்... அவனைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது...' என்று மனம் சித்ரஞ்சனின் முகத்தைக் கொண்டு வந்து நிறுத்துகையில், ஒரு புகைப்படத்தைக் காட்டிய பெரியவர், "இவன் தான் என்னோட பேரன் ப்ரீத்திம்மா... என்னைப் போலவே இருக்கானல்ல..." என்று கேட்டார்.

'அவனேதான்... முதன் முதலாகப் பார்த்ததுமே, அவனைப் பற்றி அதைத்தானே நினைத்தோம்... மனம் சொன்னது சரிதான்... எப்படியோ தாத்தாவுக்கும் அவனுக்குமான உறவு சீர்பட்டு விட்டது... நாளைக்கு வரப்போகிறானா... கடவுளே! எப்படியோ தாத்தாவின் மனதில் இருக்கும் ஏக்கத்தை நிறைவேற்றி விட்டாய்...' என்று நன்றி கூறினாள்.

தன்னை வெறுப்புடன் பார்த்த பார்வையை, அவளால் இன்னமும் மறக்க முடியவில்லை.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

"இவளோட ரேட் என்ன?" என்று இளக்காரமாகக் கேட்ட குரல், அவள் தன்மானத்தைத் தட்டி எழுப்பி, அவன் மேல் கோபத்தை வரவழைத்திருந்தது.

'இப்போது தன்னைப் பார்த்தால் என்ன சொல்வான்? ஒரு வேளை புரிந்து கொள்வானா?' என்றெல்லாம் யோசித்த மனது, 'வேண்டாம்... அவனைப் பார்க்கும் சந்தர்ப்பமே வேண்டாம்... என்ன விஷயம் என்று தாத்தாவிடம் கேட்டு விட்டு, அவன் வருவதற்குள் கிளம்பி விட வேண்டும்' என முடிவெடுத்தது.

"என்னம்மா... ஷாக் ஆயிட்ட... என்னைப் போலவே இருக்கானல்ல..." என்று மீண்டும் கேட்கவும், சுதாரித்துக் கொண்டு, "ஆமாம் தாத்தா... அச்சு அசல் உங்களைப் பார்க்கற மாதிரியே இருக்கு..." என்றாள்.

'குணத்தில் மட்டும் உங்களைப் போல இல்லை...' என்று மனதிற்குள் சொல்லிக் கொள்கையில், பெரியவர் அவளுடைய திருமணப் பேச்சை எடுப்பார் என்று, கனவில் கூட நினைக்கவில்லை.

யசோதாவின் ஆசையைக் கூறி, "நாளைக்கு அவன் வந்ததும் ரெண்டு பேரும் பேசுங்க... அதுக்கப்புறம் உங்க முடிவைச் சொல்லுங்க..." என்றார்.

அந்த நிமிடமே மனம், 'இவனா... முடியவே முடியாது...' என்று அலறியது. இது போன்ற தர்ம சங்கடமான சூழ்நிலை வரும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

கற்சிலை போல அமர்ந்திருந்தவளிடம், "திடீர்னு கல்யாணப் பேச்சை எடுத்திட்டேனா... கொஞ்ச நாளாவே தெரிஞ்சவங்ககிட்டச் சொல்லி வச்சிட்டிருந்தேன்... என்னோட காலம் முடியறதுக்குள்ள, நல்ல பையனாப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சிட்டா, நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து குழந்தைங்களைப் பார்த்துப்பீங்க... உன்னையும் பாதுகாப்பா ஒப்படைச்சுட்டேன்னு நிம்மதியா இருக்கும்.... உனக்குப் பிடிக்கலைன்னாலும் சொல்லிடு ப்ரீத்திம்மா..." என்றார்.

'அவனாவது இந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதாவது... தன்னைப் பார்த்ததுமே வெறுப்பைக் காட்டப் போகிறான்... முதல் கோணல் முற்றிலும் கோணல்தான்... இருவருக்கும் ஒத்துப் போக வாய்ப்பே இல்லை... நடை உடை பாவனைகளும், அவன் பழகும் விதமும் எல்லாமே மாறுபட்டவை... தாத்தாவிற்காகக் கூட அவனோடு வாழும் வாழ்க்கையை நினைத்துப் பார்க்க

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

முடியவில்லை… அவனைப் பார்த்ததுவிட்டு பிடிக்கவில்லை என்று சொல்லிவிடலாம்… அவன் சவகாசமே வேண்டாம்' என்று முடிவெடுத்தாள்.

தாத்தாவை உறங்கச் சொல்லிவிட்டு வெளியே வந்ததுமே, மஹதி ஆவலோடு எதிர்கொண்டாள்.

"அண்… அண்ணி!" என்று தயக்கதோடு அழைத்தவள், "ஸாரி… எனக்கு வேற மாதிரிக் கூப்பிடப் பிடிக்கலை… கூப்பிடலாம் தானே…" என்று வினவினாள்.

பதில் சொல்லாமல் பார்க்கவும், "நாளைக்கு அண்ணாவைப் பார்த்ததுமே உங்களுக்குப் பிடிச்சிடும்… அண்ணாக்கும் உங்களைப் பார்த்ததுமே பிடிச்சிடப் போகுது… அப்புறம் டும் டும் டும் தான்… நாம ரெண்டு பேருமே ஒரே வீட்டில இருக்கப் போறோம்… காட் கிட்ட ப்ரே பண்ணிட்டே இருக்கேன்… இது மட்டும் நடந்திடுச்சுன்னா உலகத்திலேயே சந்தோஷப் படற ஆள் நானாத்தான் இருப்பேன்…" என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

'இது மட்டும் நடந்தால், உலகிலேயே துன்பப்படும் ஆள் நானாகத்தான் இருப்பேன்' என்று நினைத்தவள், சந்தோசத்தில் திளைத்துக் கொண்டிருப்பவளிடம் சொல்ல இஷ்டப் படாமல், "நாளைக்கு நடக்கறதை நாளைக்குப் பார்க்கலாம் மஹி… இப்பத் தூங்கலாமா" என்றாள்.

இருவருக்கும் நீண்ட நேரம் உறக்கம் வர மறுத்தது. மஹதி அதீத ஆர்வத்துடன் அண்ணனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்.

குடும்ப விஷயங்கள், அண்ணன் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாமல் இருந்தது, தாய்க்கு உடல் நலமில்லாமல் போனது என்று இதுவரை சொல்லாத விஷயங்களையெல்லாம் சொல்லவும், ப்ரீத்திக்கு தர்ம சங்கடமாக இருந்தது.

'இது போன்ற தாயும், தங்கையும் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நல்ல குடும்ப சூழ்நிலையிலும், வேறுபட்ட வாழ்க்கையைத் தேடும் சித்ரஞ்சனை என்னவென்று சொல்ல… இவள் சொல்வதை வைத்துப் பார்த்தால், தான் நினைக்கும் அளவு கெட்டவன் இல்லையோ…' என்றெல்லாம் மனதில் குழப்ப மேகங்கள் சூழ்ந்து, உறக்கத்தைத் தடைசெய்தன.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

ஒரு வழியாக உறக்கம் கண்களைத் தழுவும் போது, நள்ளிரவுக்கு மேலானது. காலை உணவை முடித்த சிறிது நேரத்திற்கெல்லாம், யசோதா அவளைத் தேடிவந்தார்.

நீர்த் திரையிட்ட விழிகளுடன், "ப்ரீத்தி!" என்று கைகளைப் பற்றிக் கொள்ளவும், என்ன பேசுவதென்று தெரியாமல் அவரையே பார்த்தாள்.

எந்த விஷயத்தையும் மறைக்கும் எண்ணம் இல்லாமல், வெளிப்படையாக மகனின் குடிப்பழக்கம், பெண்களின் சவகாசம், தன்னுடைய கலக்கம் எல்லாவற்றையும் சொல்லவே, அவளுக்கும் மனம் கனத்தது.

'இது ஒரு தாயின் பரிதவிப்பு… தடம் மாறிச் செல்லும் மகனைச் சீர்படுத்த நினைப்பதைத் தவறேதும் சொல்ல முடியாது… தன்னிடம் இதை எப்படி எதிர்பார்க்கிறார்?' என்று யோசனையோடு பார்த்தாள்.

"என்னம்மா… ரொம்ப சுயநலமா யோசிக்கறேன்னு பார்க்கறையா… மஹதியை இந்த மாதிரி ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணித் தருவீங்களான்னு யோசிக்கறையா…" என்று கேட்கவும்,

"ம்ஹூம்…" என்று தலையை ஆட்டியவள், "எனக்குக் கொஞ்சம் டைம் வேணும்மா… உங்க பையன் வந்ததும் பேசிட்டுச் சொல்றேன்" என்று தன் மறுப்பைச் சொல்வதை, ஒத்தி வைத்தாள்.

"அப்பா கூட அதான் சொன்னார்… நீதான் முடிவு பண்ணணும்னு…" என்று பெருமூச்சோடு சொன்னவர், பெரியவருக்கும் தனக்கும் நடந்த உரையாடலை அவளிடம் தெரிவித்தார்.

அப்படியென்றால், 'அவனைப் பற்றித் தெரிந்த பின்னும், தாத்தா சம்மதம் தெரிவித்திருக்கிறாரா?' நிமிட நேரம் திகைத்தவள், 'யோசிக்கத் தனிமை வேண்டும்' என்று தோன்ற, கோவில் வரை சென்று வருவதாகக் கூறிவிட்டுக் காலாற நடந்தாள்.

வாழ்க்கையில் முதன் முறையாக 'என்ன முடிவெடுப்பது? என்ற குழப்பம். 'வெறுப்பை மனதில் வைத்துக் கொண்டு திருமணம் செய்து கொள்வதா… ஆனால், தாத்தா தன் மீது வைத்த நம்பிக்கை…' என்று மனம் தவித்துத் தத்தளிக்க, முடிவெடுக்க முடியாமல் பிரதாப்பை அழைத்தாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

சுருக்கமாக விஷயத்தைச் சொல்லவும், “அப்பாகிட்ட தாத்தா சொன்னார் ப்ரீத்தி… நான் ரஞ்சனா இருக்கும்னு எதிர்பார்க்கலை… அன்னைக்கு ஒரு நாள் நடந்ததை வச்சு முடிவு பண்ணாதே… சில மோசமான நடத்தைகள் இருந்தாலும், நிறைய நல்ல விஷயங்களும் அவன்கிட்ட இருக்கு… என்னைக் கேட்டா, இதுக்கு சம்மதம் சொல்லிடுன்னு சொல்வேன்… எதுக்கும் யோசிச்சு முடிவு பண்ணு…” என்று மேலும் மனதில் குழப்பத்தை விதைத்தான்.

‘கட்டாயம் ஒத்துக் கொள்ள முடியாது’ என்று இரவு நினைத்தது போய், ‘இப்போது இந்தக் குழப்பம் தேவையா?’ என்று எரிச்சலுடன் வீடு திரும்பினாள்.

யாரைப் பார்க்கவும் பிடிக்காமல், பின் பக்கத் தோட்டத்தின் வழியே நுழைந்தவள் திகைத்தாள்.

“அங்கிள்! என்னையும் இதே மாதிரித் தூக்கிப் பிடிங்க… நானும் ரொம்ப ஹயிட் ஆயிடுவேன்…” என்று குழந்தைகள் ஆளாளுக்கு கூச்சலிட்டுக் கொண்டிருக்க, அவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தவன் சித்ரஞ்சனேதான்.

சரிக்குச் சமமாக அவர்களோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டு, பாராட்டும் விதத்தில் அவர்களைத் தூக்கிப் பிடித்து, உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தான்.

இது போன்ற எளிமையான செய்கையை அவனிடம் எதிர்பார்க்கவில்லை.

“அடுத்த முறை வரும் போது பெரிய பேட், பால் எல்லாம் வாங்கிட்டு வரேன்… வேற என்னென்ன வேணும்னு சொல்லுங்க… எல்லாத்தையும் வாங்கிட்டாப் போச்சு…” என்று பேசுவதைப் பார்த்து, விலகி வேறு புறம் நகர்ந்தாள்.

அதற்குள் அவளைப் பார்த்த ஒரு சிறுவன், “ப்ரீத்திக்கா…. நாங்க இங்க இருக்கோம்… இந்த அங்கிள் சூப்பரா விளையாடறார்… நீங்களும் வாங்க…” என்றான்.

‘யாரை அழைக்கிறான்’ என்று நிமிர்ந்து பார்த்தவன் திகைத்தான்.

அதற்குள் இன்னொரு வாண்டு, “அங்கிள்! இவங்க தான் ப்ரீத்திக்கா… எங்களோட எப்பவும் விளையாடுவாங்க… இவங்க வந்தாலே ஜாலி… நீங்கதான் இவங்களை மேரேஜ் பண்ணிக்கப் போறீங்கன்னு மஹதிக்கா சொன்னாங்க… எங்களுக்கெல்லாம் புது ட்ரெஸ் கிடைக்கப் போகுதே…” என்றான் சந்தோசத்துடன்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

எளிமையான தோற்றத்தோடு, சுற்றியிருந்த பசுமையின் பின்னனியில் அழகோவியமாய் நின்றிருந்தவளைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, சிறுவனின் பேச்சு மெல்ல மெல்ல எட்டியதும் 'இவளா!' என்று அதிர்ந்து போய் நின்றான்.

## 12

'**அ**ம்மா, தனக்குப் பார்த்திருக்கும் பெண் இவளா? உலகத்தில் எத்தனை பெண்கள் இருக்க, இவளைத் தேடிப் பிடித்துத் தேர்ந்தெடுக்க வேண்டுமா?' விதியின் விளையாட்டை எண்ணித் திகைத்து நின்றவன், கண நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

முதன் முறை பார்த்து உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அதே முகம்… அன்று செயற்கை ஒளியில் மனதை மயக்கிய அழகு, இன்று இயற்கையின் ஓவியமாய் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது… எந்த வித ஒப்பனையும் இல்லாமல் ஒரு பெண்ணைப் பார்க்கையில் மனதிற்கு இதத்தை வரவழைக்க முடியுமா? இவளால் முடிகிறதே…

'திருமணத்திற்குப் பின், அவளுடனான வாழ்க்கை எப்படி இருக்கும்?' என்று மனம் நினைத்துப் பார்க்கவே, தன் எண்ணம் செல்லும் போக்கில் திகைத்தான்.

மனதிற்குள் உற்சாகக் குமிழி உற்பத்தியாகி, பூஞ்சாரலாய் சிதறடித்து, இதத்தைப் பரவச் செய்தது. 'அந்த இனிமை எதனால்' என்று மட்டும் புரியவில்லை.

முக்கிய அலுவலில் இருக்கும் பொழுது கூட, அவ்வப்போது மனதில் வந்து மோகனப் புன்னகை புரிவாள். உடனடியாக, அத்தனை பேர் சுற்றியிருக்கத் தன் கன்னத்தில் அடித்ததை நினைவிற்கு வரவழைத்து, மனதை விட்டு அவளைத் துரத்துவான்.

இப்போதும், கவர்ந்திழுக்கும் கண்களும், சிவந்திருந்த அதரங்களும், நடந்த எல்லாவற்றையும் நினைவிற்குக் கொண்டுவந்தன.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'இப்போது என்ன செய்வது? அம்மா தேர்ந்தெடுத்த பெண் இவள்... வேண்டாம் என்று சொன்னால் அம்மா என்ன நினைப்பார்கள்... அம்மாவிற்குக் கொடுத்திருக்கும் வாக்கு என்னாவது...' என்று பெருமூச்சை வெளியிட்டான்.

'எதாவது காரணத்தைச் சொல்லி மறுக்கலாம்' என்று நினைக்கக் கூடப் பிடிக்கவில்லை.

உண்மையில், அன்று மதுவின் மயக்கத்தோடு, அந்த இடத்திற்கான சூழ்நிலையும் சேர்ந்து அவனைத் தடுமாறச் செய்திருந்தது. இரண்டு நாட்கள் உறக்கமின்றித் தவித்தவனுக்கு, 'அவள் மேல் அதிகப்படியான குற்றச் சாட்டைச் சுமத்திவிட்டோம்' என்று புரிந்தது.

பிரதாப்புடன் சேர்ந்து பார்த்த பொறாமையாலும், அவளை அவமானப் படுத்திவிட்டதாகத் தோன்றியது.

இப்படி சிந்திக்கையில், 'ஈகோ' என்னும் அரக்கன், உண்மையை ஒத்துக் கொள்ள மறுத்து, அவனது செய்கையை நியாயப் படுத்தினான்.

'வீட்டில் நடந்த பிரச்சனைகளுக்கு அவளும் காரணம்' என்று குற்றம் கண்டுபிடித்து, வீண்பழி சுமத்தினான்.

'கல்ச்சரைக் காப்பாற்ற வந்தவள் போலல்லவா எழுதினாள்... இவள் முகம் சுளித்த அதே வாழ்க்கையை வாழ வைக்க வேண்டும்... பணமும், வாய்ப்பும் இவளுக்குக் கிடைத்தால் நிச்சயம் அதற்குள் எளிதாக நுழைந்து விடுவாள்... அதுவுமில்லாமல், அத்தனை பேர் முன்னிலையில் அவமானப் படுத்தியதற்கு பதில் சொல்லியே தீரவேண்டும்... பெண்ணே... உன்னுடைய திமிரை அடக்கி, என் கண்ணசைவில் மயங்க வைக்கிறேன்...' என்று மனம் கங்கணம் கட்டிக் கொண்டது.

எது எப்படியிருந்தாலும், இப்போது அவள் அருகாமை அவனுக்குப் பிடித்திருந்தது.

ஆனால், 'இவள் ஒத்துக் கொள்வாளா... என்ன சொல்லப் போகிறாள்... வேண்டாம் என்று சொல்லிவிட்டால்...' என்று தோன்றவே, இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

வில் போன்ற புருவங்களில் சுளிப்பைக் காணவும், 'அவளை வெறித்துப் பார்க்கிறோம்' என்பது புரிய பார்வையை விலக்கினான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

"அண்ணா!" என்று அழைத்தவாறு மஹதி வரவும், "மஹி! நான் இங்கிருக்கேன்" என்று கை காட்டினான்.

"அண்… ப்ரீத்தி! நீங்களும் இங்க தான் இருக்கீங்களா? வாவ்… ரெண்டு பேரும் மீட் பண்ணிட்டீங்களா… இண்ட்ரடியூஸ் பண்ண வேண்டிய தேவையே இல்லை போல…." என்றவள், அண்ணனிடம் கண்களாலேயே 'பிடித்திருக்கிறதா?' என்று ப்ரீத்தியைக் காட்டிக் கேட்டாள்.

கண்களால் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் "இப்பத்தான் பின் வழியா வந்தாங்க… குட்டீஸ் இன்ட்ரோ கொடுத்திட்டாங்க மஹி…" என்று புன்னகையோடு பதில் சொல்லிவிட்டு, ப்ரீத்தியிடம் "ஹாய்… உன்னை இங்கே எக்ஸ்பெக்ட் பண்ணலை…" என்று சொல்லவும், இரு பெண்களுமே திகைத்து நின்றனர்.

'எதுவும் நடக்காதது போல சாதாரணமாகப் பேசுகிறானே? தான் நேற்றிலிருந்து குழம்பிக் கொண்டிருக்கையில், எப்படி இவனால் முடிகிறது?' என்று ப்ரீத்தி யோசிக்கையில்,

"அண்ணா! வாவ்! அப்ப ப்ரீத்தியை உங்களுக்கு முதல்லையே தெரியுமா? ஓ கிரேட்… என்னோட கவலை போயே போச்சு… இட்ஸ் கான்… போயிந்தே…" என்றவள் "அப்ப நான் கிளம்பறேன்… மம்மி கிட்டச் சொல்லப் போறேன்… நீங்க பேசி முடிச்சிட்டு, நல்ல முடிவாச் சொல்லுங்க… நான் தான் லூசு மாதிரி குறுக்க வந்துட்டேன் போல…" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

"ஏய் வாலு! அதென்ன லூசு மாதிரி… இந்த 'மாதிரி'யை விட்டுட்டா சரியா இருக்கும்" என்று கேலி செய்தவாறு, "பார்ட்டில ஒரு முறை மீட் பண்ணிருக்கோம்… அவ்ளோதான்… அதுசரி, தாத்தா வந்துட்டாரா?" என்று கேட்டான்.

"ம்ஹூம்…" என்று உதட்டைப் பிதுக்கியவள், "ப்ரீத்தி! தாத்தா எங்க போயிருக்காருன்னு தெரியுமா? டூ ஹவர்ஸ்கு மேலாச்சு… இன்னும் வரலை" என்றாள்.

"எங்கிட்ட எதுவும் சொல்லலையே… நான் இப்பத்தானே வரேன்… காலைல ப்ரேயர் பண்ணும் போது பார்த்தது… வேற யார்கிட்டயாவது சொல்லிட்டுப் போயிருப்பார்…"



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

"ஓ!" என்றவள், "ஆனா, எல்லார்கிட்டேயும் விசாரிச்சிட்டேனே… அண்ணா வந்ததுமே எல்லாப் பக்கமும் தேடிப் பார்த்துட்டோம்… எங்கேயும் இல்லை… அதான் உங்ககிட்டச் சொல்லிட்டு போயிருப்பார்னு நினைச்சிட்டிருக்கோம்" என்றாள்.

அவன் புன்னகையோடு எளிதாகப் பேசுகையில், பதில் புன்னகை புரிய வேண்டுமே என்று எரிச்சலோடு யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு, பேச்சு திசை மாறிப் போகவே நிம்மதியாக இருந்தது.

"பக்கத்தில எங்கயாவது போயிருப்பார்… முதல்ல மார்னிங்ல வாக்கிங் ரெகுலராப் போவார்… அப்பவும் கூட குட்டீஸ் யாராவது கூடப் போவாங்க… தனியா எங்கேயும் போக வாய்ப்பு இல்லை… இருங்க இன்னொரு முறை விசாரிச்சுப் பார்க்கலாம்" என்று இல்லத்திற்குள் சென்றாள்.

"அதான் எனக்கும் ஆச்சர்யமா இருக்கு… ஈவினிங் எப்ப வரும், பேரனைப் பார்க்கலாம்னு வெயிட் பண்ணிட்டிருந்தார்… அப்பா வராததால, அண்ணா மார்னிங்கே கிளம்பி வந்திட்டாங்க… வந்ததில இருந்து நாங்களும் தேடிட்டிருக்கோம்…" என்று சொல்லியவாறு பின் தொடர்ந்தாள் மஹதி.

"ஹாய்!" என்று சொன்னதற்கு எந்த பதிலும் சொல்லாமல், மென்னடையோடு இடையைத் தொடும் கூந்தலோடு செல்பவளைக் கோபத்தோடு பார்த்தவன், 'திமிர்… கொஞ்சம் கூடக் குறையாம இருக்கு…' என்று நினைத்தான்.

அனைவரையும் விசாரித்த பின்பும், பெரியவர் இருக்கும் இடம் தெரியாததால், அக்கம் பக்கம் முழுக்கத் தேடத் தொடங்கினர். அவர் செல்லும் இடமெல்லாம் ஆள் அனுப்பிப் பார்த்து, தகவல் எதுவும் தெரியாததால், சோர்ந்து போய் அமர்ந்தனர்.

தோட்டத்தில் அதிகப் படியான காய்கறிகளைப் பறிக்க வரும் ஆள், "என்னம்மா… தாத்தாவையா தேடிட்டிருக்கீங்க… நானே உன்கிட்டச் சொல்லணும்னு நினைச்சேன்… அவர் டாக்டர் வீட்டுப் பக்கம் போயிட்டிடுந்தார்… வயசான காலத்தில, அவ்வளவு தூரம் தனியா எல்லாம் போக வேண்டாம்னு சொல்லிட்டுப் போம்மா… நான் சொன்னா கல்லு மாதிரி உடம்பு எனக்கு ஒண்ணும் ஆகாதுன்னு சொல்லிடறார்…" என்று சொல்லவும், அனைவருக்கும் நிம்மதி வந்தது.

"டாக்டர், தாத்தாவோட ப்ரெண்ட்… வாரம் ஒரு முறை இங்க வந்து எல்லாருக்கும் மெடிக்கல் செக்-அப் பண்ணுவார்… எந்த அவசரம்னாலும் அவரைத்தான் கூப்பிடுவோம்…" என்று விளக்கம் சொன்னவள், "இங்கிருந்து ரெண்டு



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கிலோ மீட்டர் தனியா நடந்து போயிருக்கார்… நான் போய்க் கூட்டிட்டு வரேன்…” என்று கவலையோடு எழவும், கார் சாவியை எடுத்தவாறு சித்ரஞ்சன் முன்னே நடந்தான்.

“நீங்க எதுக்கு? நானே கூட்டிட்டு வரேன்…” என்று சொல்லவும், “பேசாம வா ப்ரீத்தி… உனக்காக எல்லாம் ஒண்ணும் நான் வரலை… வயசானவரை டூ கிலோ மீட்டர்ஸ் வாக் பண்ண வச்சிட்டு இங்க என்ன பண்றீங்க… இதில யாருக்கும் எதுவும் தெரியலை…. மறுபடியும் நடக்க வச்சு இவ்ளோ தூரம் கூட்டிட்டு வரப் போறயா?” என்று யாருக்கும் கேட்காதவாறு, கடிந்த வார்த்தைகளைக் கூறவும் பேச்சடைத்தது.

‘எப்படி இவன் குற்றம் சாட்டலாம்?’ என்று எரிச்சல் வந்தாலும், அவன் சொன்னதிலிருந்த உண்மை மனதைச் சுட்டது. காலையில் இருந்து தனக்குள்ளேயே உழன்று கொண்டிருந்தவள், தாத்தாவைப் பற்றி நினைக்கவே இல்லை.

“நடக்க வச்செல்லாம் கூட்டிட்டு வர மாட்டேன்… யார் கிட்டயாவது ஹெல்ப் கேட்கணும்…” என்று அவளும் மெல்லிய குரலில் கூற, “நான் அந்த ஹெல்ப் பண்ணினா என்ன? எனக்கும் உரிமை இருக்கு… எனக்கும் தாத்தாதான்… அவர் மேல அக்கறையும் இருக்கு…” என்றவன், அவளது வியந்த பார்வையைக் கண்டு,

“நிஜமாதான் சொல்றேன்… இந்த மாதிரி பார்க்கறதை முதல்ல நிறுத்து…” என்றான்.

தாத்தாவிடம் தொலைபேசியில் பேசிய நாள் முதலாய், அவன் மனதிலும் வித்தியாசமான கனத்த உணர்வு இருந்து கொண்டே இருக்கிறது.

“உங்க அம்மாவுக்குக் கொஞ்சம் கூட அறிவுங்கறதே இல்லை… நம்ம ஸ்டேட்டஸ்கு ஏத்த மாதிரி பொண்ணுப் பார்க்காம, அநாதைப் பொண்ணைப் போய்ப் பிடிச்சிருக்கா… அதுவும் உங்க தாத்தாவோட வளர்ப்புன்னா, அவரை மாதிரியேதான் இருக்கும்… இதெல்லாம் ஒத்தே வராது ரஞ்சன்… இதுக்குத்தான் அங்க போகவே வேண்டாம்னு சொன்னேன்… சொன்னதைக் கேட்காம அனுப்பி வச்ச… இப்ப பொண்ணுப் பார்த்திருக்கேன்னு இன்ஃபார்ம் பண்ணறா… உடம்பு சரியில்லைன்னு கொஞ்சம் விட்டா அவ இஷ்டத்துக்கு முடிவு பண்ணிட்டு இருக்கா… அந்த ஊருக்கெல்லாம் என்னால வர முடியாது… என்னோட ஃப்ரெண்ட்டோட பொண்ணை உனக்குப் பார்த்திருக்கேன்… எல்லா விதத்திலும் உனக்குப் பொருத்தமா இருப்பா…

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அம்மாவைக் கிளம்பி வரச் சொல்லப் போறேன்…” என்று குதித்த தந்தையைச் சமாளிப்பதே பெரும் பாடாக இருந்தது.

எவ்வளவு சொல்லியும் புரிந்து கொள்ளாதவரை, பிசினஸ் விஷயமாக யூ.எஸ். அனுப்பிவிட்டு, அவருக்குத் தெரியாமல் தாத்தாவைப் பார்க்கக் கிளம்பி வந்தவனின் அன்பை சந்தேகப் படுகிறாள்.

இருக்கும் கோபத்தை கார் ஓட்டுவதில் காட்டவும், அவளும் அமைதியாக வழி சொல்லிக் கொண்டே வந்தாள்.

டாக்டரின் வீட்டில் இருவருக்கும் பெரும் வரவேற்பு இருந்தது.

“வாம்மா ப்ரீத்தி… இவர் தான் சித்ரஞ்சனா? இவர் ஈவினிங் வரதாதானே தாத்தா சொன்னார்…” என்று ஆச்சர்யத்தோடு கேட்டவரிடம், உரிய பதிலைச் சொன்னான்.

தாத்தா சொல்லாமல் வந்தது தெரிந்ததும், “ஒண்ணும் பிரச்சனை இல்லை… சில மெடிசன்ஸ் தேவைப் பட்டுச்சு… அதைச் சொல்லிட்டு, உங்க விஷயத்தைப் பத்தியும் பேசிட்டிருந்தார்… நடந்து வந்தது டயர்டா இருந்திருக்கும் போல, கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டுப் போகச் சொன்னேன்… எழுந்திருக்கற நேரம்தான்…” என்றவரின் பேச்சை அவளால் நம்ப முடியவில்லை.

பேச்சுச் சத்தம் கேட்டுக் கண்விழித்தவர், ‘சித்ரஞ்சன் வந்து விட்டான்’ என்றதும் ஆவலோடு, வேகமாக நடந்து வந்தார்.

“பார்த்து மெதுவா வாங்க… சொன்ன பேச்சைக் கேட்கறதே இல்லை நீங்க…” என்று கடிந்த மருத்துவரின் பேச்சைக் கண்டு கொள்ளாமல் வரவும், சித்ரஞ்சன் வேகமாகச் சென்று அவரை எதிர்கொண்டான்.

கைகளைப் பற்றி, அருகிலிருந்த இருக்கையில் அமர வைத்து, “தாத்தா!” என்றதும், பெரியவரின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

பற்றற்ற வாழ்க்கை அனைவருக்கும் சாத்தியமில்லை என்பது அந்த நிமிடத்தில் புரிந்தது.

பிரிந்த உறவுகள் இணையும் நேரம் இனிமையானது. இளமையும், முதுமையுமான சந்திப்பில் ப்ரீத்தியின் கண்களிலும் நீர் வழிந்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டு வாழும் மனிதர், 'தன் உறவான பேரனைக் காண எவ்வளவு ஏங்கியிருக்கிறார்' என்று புரிந்தது. எந்த வயதானாலும் பாசங்களைத் துறப்பது எளிதல்ல.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிரவும், டாக்டர் கையசைத்து அழைக்க, இருவருக்கும் தனிமை கொடுத்து வெளியில் சென்றாள்.

“உண்மையச் சொல்லுங்க மாமா… தாத்தாவுக்கு என்னாச்சு… நீங்க சொல்றதை சித்ரஞ்சன் வேணும்னா நம்பிருக்கலாம்… எவ்வளவு தூரம் நடந்தாலும் இந்த டைம்ல தூங்கறவர் இல்லை… எதையோ என்கிட்ட இருந்து மறைக்கறீங்க…” என்று கேட்டாள்.

“ரொம்ப நாளா உங்கிட்ட சொல்லணும்னுதாம்மா இருக்கேன்… பெரியவர் வேண்டாம்னு சொன்னதால சொல்ல முடியலை…” என்று பெருமூச்சுடன் கூறித் தொடர்ந்தார்.

“யாருக்கும் இதுவரைக்கும் தெரியாது ப்ரீத்தி… பெரியவரோட உடம்பு முன்ன மாதிரி இல்லை… முதல்லையே ரெண்டு முறை ஹார்ட் அட்டாக் வந்த உடம்பு… இப்ப வீசிங் வேற சேர்ந்திடுச்சு… ரொம்பத் தொல்லை பண்ணுது” என்பதற்குள்,

“ஹார்ட் அட்டாக்கா…. என்ன சொல்றீங்க... எப்ப வந்துச்சு… எங்களுக்கெல்லாம் தெரியாதே… ஏன் சொல்லலை…” என்று பதற்றத்துடன் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினாள்.

“இது நடந்து ரொம்ப வருஷம் ஆச்சும்மா… எங்க அப்பா காலத்தில நடந்திருக்கு… பொண்ணு இறந்த சமயத்தில ஃபர்ஸ்ட் அட்டாக் வந்திருக்கு… கல்யாணம் ஆகி பத்து வருஷத்துக்கும் மேல குழந்தையே இல்லாம தவமிருந்து பெத்த பொண்ணு… ரொம்பப் பாசமா வளர்த்தாங்க… லவ் பண்றேன்னு சொன்னதும், அவங்களுக்குப் பிடிக்காதப்பவும் ஒத்துட்டு மேரேஜ் பண்ணி வச்சாங்க… டெலிவரி டைம்ல இப்படி நடக்கும்னு யாருமே எதிர்பார்க்கலை… ”

“நேத்து தான் தாத்தா இதைப் பத்திச் சொன்னார் மாமா… அந்த சமயத்தில வந்துதா…”

“உடனே வரலை… தெம்பா எல்லாத்தையும் சமாளிச்சார்… சித்ரஞ்சனோட அப்பாவோட நிறைய மனஸ்தாபம் வந்திருக்கு… லதா பேர்ல ட்ரஸ்ட் ஆரம்பிச்சு ஹாஸ்பிடல் கட்டித் தரதா சொல்லியிருக்கார்… பேரனுக்குச் சேர வேண்டிய



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

சொத்தைக் கொடுங்கன்னு கேட்கவும், இவருக்கு மனசே ஆறலை… எல்லாத்தையும் அழிச்சிடப் போறார்னு சொத்தை வாங்கிட்டு சித்ரஞ்சனையும் கூட்டிட்டுப் போயிட்டார்… மனசில் எல்லாத்தையும் போட்டு வச்சிருந்த சமயத்தில முதல் அட்டாக் வந்திருக்கு… அவரோட வில் பவர்தான் அப்பக் காப்பாத்தியிருக்கு…”

“பாட்டி இறந்த சமயத்தில் செகேண்ட் அட்டாக் வந்திருக்கு… அப்ப நீ சின்னப் பொண்ணு… அதனால தெரிய வாய்ப்பில்லை… உன்னோட சேர்ந்து பத்து குழந்தைகளைப் பார்த்துக்கணுமேன்னு அப்பத்தான் என்கிட்ட வந்தார்… தியானம், யோகா எல்லாம் சரியா செய்து கட்டுப்பாடா இருந்தார்…”

“வயசாக வயசாக சின்னச் சின்னப் பிரச்சனைகள் வரது சகஜம் தான்… இப்ப பேரனைப் பார்க்கப் போறோம்னதும் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டிருக்கார்… இவ்வளவு எக்ஸைட்டடா இருந்து, நான் இதுவரைக்கும் பார்த்ததில்லை… நைட்டெல்லாம் முழிச்சிருந்து பாட்டியோட போட்டோவை வச்சு நடக்கறதையெல்லாம் சொல்லி சந்தோசமா இருந்திருக்கார்… காலைல இருந்து ஒரு மாதிரி வலிக்கறாப் போல இருக்குன்னு வந்து நிக்கறார்… ஒரு வாரமா மெடிஷன்ஸ் எடுக்க மறந்து போனதால வலிக்கற மாதிரி இருந்திருக்கு… பயப்படற மாதிரி எதுவுமில்லை… யார்கிட்டயாவது சொல்லிக் கூட்டிட்டு வந்திருக்கலாம்னு திட்டிட்டு இஞ்செக்ஷன் போட்டிருக்கேன்… அசதியில தூங்கிட்டார்…” என்று விளக்கம் சொன்னார்.

“பத்திரமாப் பார்த்துக்கச் சொல்லி வைக்கறேன் மாமா… தனியா விடாம, இனிமேல் கூடவே யாராவது இருக்கற மாதிரிப் பார்த்துக்கறேன்… தாத்தாவை எவ்வளவு சந்தோசமா வச்சுக்க முடியுமோ அப்படிப் பார்த்துக்கறோம்… எங்க எல்லாருக்குமே அவர் தான் கடவுள்…” என்று ஆத்மார்த்தமாகக் கூறினாள்.

## 13

“**வ**யசானவங்களோட ஹெல்த்தைப் பத்தி சுத்தி இருக்கறவங்க தெரிஞ்சுக்கணும்னு தான் உங்கிட்ட சொன்னேன்… கொஞ்சம் கேர்ஃபுல்லாப் பார்த்துட்டாப் போதும்… வீசிங் அதிகமா இருக்கு, காலையில வாக்கிங் போக வேண்டாம்னா கேட்கறதில்லை… நாலு மணிக்கெல்லாம் எழுந்திரிச்சு, கொஞ்சம் வெளிச்சம் வந்ததும் தோட்டத்தைச் சுத்தி வர்றார்… நான் சொல்லிப் பார்த்துட்டேன், கேட்கற மாதிரியே இல்லை” என்று மருத்துவர் சொல்லவும்,



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“நானும் சொல்லிட்டுப் போறேன் மாமா… இவருக்கு ரெஸ்ட் கொடுக்கற மாதிரி முடிஞ்ச வரைக்கும் பண்ணிட்டிருக்கேன்…” என்று கவலையோடு கூறினாள் ப்ரீத்தி.

“காலைல வந்தவர் நிறையப் பேசினார்மா… உன்னோட மேரேஜைப் பத்தி ஆர்வத்தோட சொன்னார்… பேரன் கிட்ட போன்ல பேசினதிலேயே அவருக்குத் திருப்தி வந்திருக்கு… நீங்க ரெண்டு பேரும் சேர்ந்தா, குழந்தைகளை நல்லாப் பார்த்துப்பீங்க… அப்புறம் எனக்கு என்னாவானாலும் பரவாயில்லை, ப்ரீத்தி சமாளிச்சுக்குவா… அவளுக்கு நல்ல குடும்பத்தையும் கொடுத்திட்டுப் போயிட்டா எனக்குக் கவலையே இல்லை… உனக்குப் பிடிச்சாப் போதும்னு சொன்னார்… நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கறதைப் பார்த்தா…” என்று இழுத்தவர், “என்ன முடிவு பண்ணிருக்கீங்க?” என்று ஆவலோடு கேட்டார்.

‘இப்போது என்ன சொல்வது? வேண்டாம் என்று மறுப்பு சொல்லிவிட வேண்டும் என்று நினைத்திருக்கையில் தடுப்பது என்ன?’

தாத்தா இந்தத் திருமணத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறார் என்பது புரிந்தது. தன்னிடம் கட்டளையிடக் கூட உரிமை இருக்கிறது. ஆனாலும், சம்மந்தப்பட்ட இருவருக்கும் பிடித்தால்தான் அடுத்தது என்று சொல்லியிருக்கிறார்.

‘என்ன முடிவெடுப்பது?’ என்று குழம்பியிருந்த மனதைச் சமனம் செய்து, சீர்தூக்கி அலசிப் பார்க்கலானாள்.

‘யாரை நல்லவர்கள் என்று சொல்ல முடியும்? வெளிப்படுத்தும் முகம் ஒன்றாகவும், அகம் ஒன்றாகவும் நிறையப் பேருக்கு இருக்கிறது. சொல்லப் போனால் முகமூடி போட்ட பொய்யான முகத்தைத்தானே எல்லோரும் வெளிப்படுத்துகிறார்கள். அந்த முகமூடியைக் கழற்றினால்தான் உள்ளிருப்பது பாம்பா… பழுதா… என்று சொல்ல முடியும்’.

‘சித்ரஞ்சனைப் பற்றி மறைப்பதற்கு எதுவும் இல்லை. குடிப்பதை அவளே நேரில் பார்த்தாள் தான். பெண்களுடனான தொடர்பு அந்த நடனத்தோடு நிற்கும் என்று சொல்ல முடியாது. அதைத்தானே அவன் தாயும் சந்தேகப் படுகிறார்’.

‘சிகரெட், மது எல்லாம் இந்தக் காலத்தில், ஒன்றுமே இல்லாத விஷயங்களாகப் போய் விட்டன. கொஞ்சம் போராடினால் எளிதாக மாற்றிவிட முடியும். படிப்பறிவில்லாத எத்தனை எத்தனை ஏழைப் பெண்கள், நரக வாழ்க்கை

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

வாழ்ந்து கொண்டு குடிகாரக் கணவனைத் திருத்தப் போராடுகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கையில், கொஞ்சமாவது தனக்கில்லாமல் போய்விடுமா?

அடுத்தது பெண்களுடனான சகவாசம். சகித்துக் கொள்ள முடியாத விஷயம் அதுதான். எந்த அளவிற்கு இருக்கும் என்று தெரியவில்லையே?

முதல் சந்திப்பில், ஆடப் பிடிக்கவில்லை என்றதும் விலகிப் போனானே… கெட்டவனாக இருப்பவன் மதுவின் மயக்கத்திலும் விலகிப் போக முடியுமா? அப்படிப் போனவனுக்கு திடீரென்று என்னவாயிற்று? ஏன் அப்படி நடந்து கொண்டான்?

“எனக்குத் தெரிந்தவரை பெண்களிடம் வலியச் சென்று பேசமாட்டான்… தானாக வரும் பெண்ணுடன் தான் சுற்றுவான்… உன் விஷயத்தில் அவனுக்கு என்னவாயிற்று என்றே புரியவில்லை…” என்று பிரதாப் சொன்னது உண்மையாக இருக்குமோ?

அதற்குக் கூட எதாவது வழி கண்டு பிடித்துச் சரி செய்து விடலாம். ஆனால் அவனுக்குப் பிடித்த வெளிநாட்டு வாழ்க்கையும், கலாச்சாரமும். அதை என்ன செய்ய முடியும்? இந்தியாவில் அவன் இருப்பான் என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை. ஆனால் தன்னால் இங்கிருந்து செல்வதை யோசிக்கக் கூட முடியாது.

அவன் தாயாரே சொன்னாரே, “ப்ரீத்திம்மா… மத்த பழக்கம் எல்லாத்தையும் மாத்தறதுக்கு நான் ஹெல்ப் பண்றேன்… உனக்கு சப்போர்ட்டா எப்பவுமே இருப்பேன்… அவனை இங்கேயே நிறுத்தி வைக்கறது உன் கையிலதான் இருக்கு….” என்று சொன்ன விஷயங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தன.

‘யார் அவனைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறார்கள்… சொல்வதைச் சொல்லட்டும்’ என்று ஏனோதானோவென்று கேட்டுக் கொண்ட விஷயங்கள்.

மஹதியும் சரி, அம்மாவும் சரி நல்ல உறவுகள்… அவர்களைப் பற்றிக் குறையே சொல்ல முடியாது.

அடுத்தது தாத்தா…

வாழ்க்கை முழுவதும் பிறருக்காகவே வாழ்பவர். சுயநலம் இல்லாத மனிதர். “பாட்டன், முப்பாட்டன் சம்பாதிச்சதும்மா… எனக்குத் தேவையானது போக மீதியை



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இல்லாதவங்களுக்குக் கொடுத்தேன்… கடவுள் நமக்குன்னு எதாவது வழி செய்வார்…” என்று இருக்கும் சொத்தையெல்லாம் கொடுத்துவிட்டு, அடுத்த வேளை சாப்பாட்டிற்கு வழியில்லாத நிலையில் சொன்னவர்.

அந்தமான் சிறையில் இருந்த ஒரு வருட காலத்தில், அடியும் உதையும் பட்டு, உடல் முழுக்கத் தழும்புகளைச் சுமந்த நிலையிலும் தளராத மனிதர், அன்பிற்கு முன்னால் தளர்ந்துபோய் நிற்கிறார்.

அவளோடு இங்கிருக்கும் அனைவருக்கும் எல்லாமே அவர்தான். கஷ்ட காலத்தில், இருக்கும் நல்ல அரிசியை, குழந்தைகளுக்குச் சமைத்துக் கொடுத்துவிட்டு, புழுவும் பூச்சியும் அண்டிக் கிடக்கும் அரிசியைக் கழுவி அவருக்காகச் சமைப்பதைப் பார்த்திருக்கிறாள்.

தியாகிகளுக்கான பென்ஷனையே, “நாட்டுக்கு செஞ்சதுக்குக் கூலி வாங்கிக்கக் கூடாதும்மா…” என்றெல்லாம் மறுத்தவரிடம், “அப்படியேன் நினைக்கறீங்க தாத்தா… உங்களோட சேர்ந்து இத்தனை பேர் இருக்கோமே… அரசாங்கம் கொடுக்கற பணத்தை எங்களுக்கெல்லாம் செலவு பண்ணுங்க… எப்படி எப்படியோ அரசாங்கத்தோட காசு போகுது… யாருக்குத் தேவையோ அவங்களுக்கு நீங்க செய்யறீங்க…” என்றெல்லாம் வாதாடி, கல்லூரி வந்த பின்புதான் ஓய்வூதியத் தொகையையே பெற்றுக் கொள்ளச் செய்தாள்.

இதுவரைக்கும், அதிலிருந்து ஒரு பைசா அவருக்காக எடுத்துக் கொண்டதில்லை. தோட்டத்தில் அவர் படும் கஷ்டத்தைக் குறைக்கத்தான், இரவு பகலாக அவளும் சேர்ந்து உழைப்பது.

ஆட்களைப் பற்றி அவரது கணிப்பு எப்போதும் தப்பாது. யசோதா, மகனைப் பற்றி எல்லாவற்றையும் சொன்ன பிறகும், அவனோடு தொலைபேசியில் பேசியதும் அவருக்கு எப்படி நம்பிக்கை வந்தது? உள்மனம் சொல்லும் விஷயங்கள் உண்மையென்றால், தாத்தா நினைப்பது போல அவனும் மாறிவிடுவானா? அவனை மாற்ற முடியுமா?

அழுக்கான ரப்பர் பந்தைத் தூக்கிப் போட்டு முகம் சுளிக்காமல் குழந்தைகளுடன் விளையாடிய விதம், ஊனமுற்ற சிறுவனைத் தோளில் சுமந்து கொண்டிருந்தது, எளிமையான வீட்டை வித்தியாசமாகப் பார்க்காமல் ஏற்றுக்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

கொண்டது, தாத்தாவைப் பார்த்ததும் கலங்கிய கண்கள் என்று ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்த்த உள்ளம் ஊசலாடியது.

'நிச்சயமாக இந்தக் குழந்தைகளின் நல்வாழ்க்கைக்கு வழி செய்ய வைக்க முடியும்... தாத்தாவிற்கும் அவனுக்குமான உறவை மேலும் நெருங்கச் செய்ய முடியும்... திருமண வாழ்க்கையில் தோல்வி வந்தாலும் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு நன்மை செய்ய முடியும்' என்று நம்பிக்கை வரவே, 'திருமணத்திற்குச் சம்மதம் சொல்வது' என்ற முடிவுக்கு வந்தாள்.

"என்னம்மா... இன்னும் ரெண்டு பேரும் பேசி முடிவு பண்ணலையா... இல்லை பிடிக்கலையா... எதுவாயிருந்தாலும் தயங்காமச் சொல்லும்மா..." என்று டாக்டர் கேட்கவும் சிந்தனையிலிருந்து விடுபட்டாள்.

"இன்னும் பேசலை மாமா... தாத்தா எது சொன்னாலும் சரிதான்... எல்லாருக்குமே நல்லதுதான் நினைப்பார்... அவரோட கணிப்பு எப்பவுமே தப்பா இருக்காது..." என்று மறைமுகமாக சம்மதத்தைத் தெரிவிக்கவும், "அப்படிப் போடு... அப்ப உனக்கு ஓகேதான்..." என்று சந்தோசத்தோடு வாய்விட்டுச் சிரித்தார்.

"என்ன சிரிப்புன்னு சொன்னா நாங்களும் தெரிஞ்சுக்கறோம்" என்று சித்ரஞ்சனோடு தாத்தா வரவே, இதுநாள் இல்லாத வகையில் கன்னங்கள் சூடேறிச் சிவந்தன.

'இதென்ன புதுவித உணர்வு....' என்று திகைத்தவள், சமாளித்துக் கொண்டு, "உங்களைத்தான் கிண்டல் பண்ணிட்டிருக்கார் தாத்தா... பேரனைப் பார்த்ததும் உங்களுக்கு வயசு குறைஞ்சு போச்சாம்... சொல்லுங்க மாமா..." என்று அவரிடம் பேச்சைத் தள்ளிவிடவே, அவரும் "ஆமாம்" போட ஆரம்பித்தார்.

பெரியவர் தன் சந்தோசத்தை வெளிப்படுத்துகையில், சித்ரஞ்சனின் பார்வை அவளையே ஆராய்ந்தது.

நட்சத்திரங்களோடு போட்டியிட்டு மின்னிச் சிரித்த பற்கள், அந்திவானத்தைத் தோற்கடித்துச் சிவந்திருந்த கன்னங்கள், நேர்கொண்ட பார்வையை விடுத்து கள்ளப் பார்வை பார்க்கும் விழிகள் என்று எதுவுமே தப்பவில்லை அவனிடம்.

'அப்படி என்ன பேசியிருப்பார்கள்... தான் இருப்பதால் மறைக்கிறாளோ... இல்லை தன்னைப் பற்றி இருக்குமோ...' என்றெல்லாம் தோன்றியது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை. இதுவரை அனுபவித்திராத தவிப்பு… தனக்கு என்னவாயிற்று என்று புரியாத நிலை.

தானும் வருவதாகக் கூறி மருத்துவரும் உடன் வர, அவர்கள் இருவரையும் பேசவிட்டு, மௌனமாகத் திரும்பினர்.

மாலை வேளை வரை இருவரையும் தூண்டித் துருவாமல், ஆவலான பார்வையுடன் அனைவரும் காத்திருப்பதை உணர்ந்தும், இருவரும் மௌனத்தைக் கலைக்கவில்லை.

மஹதி மட்டும், "ப்ளீஸ்யா… எதையாவது சொல்லுங்க… எக்ஸாம் ரிசல்ட்டுக்குக் கூட இப்படி டென்ஷன் ஆக மாட்டேன்… யெஸ்ஸா நோவா… என்னால சர்ப்ரைஸ் தாங்க முடியலை…" என்று புலம்பத் துவங்கினாள்.

"எனக்கு யெஸ் தான்… அங்க ரிசல்ட் என்னன்னு எனக்குத் தெரியாது…" என்று தன்பாட்டிற்குச் சொல்லிவிட்டு ஐபாடில் எதையோ செய்து கொண்டிருக்கவும், 'சரியாகத்தான் கேட்டோமோ' என்ற சந்தேகத்தில், "எண்ணன்னா… எதாவது சொன்னீங்களா…" என்றாள்.

"ம்ம்… எஸ்னு சொன்னேன்… அப்படின்னா எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை… ஓகேன்னு அர்த்தம்" என்று நிமிர்ந்து பார்க்காமல் பதில் வரவும், 'யாஹூ…' என்று துள்ளிக் குதித்தாள்.

'அதை சிரிச்சிட்டே சொன்னா என்னவாம்… சரியான கல்லுளி மங்கன்… சரியான அழுத்தக்காரன்' என்று செல்லமாக அண்ணனை மனதிற்குள் திட்டியவள், தாயிடம் சொல்வதற்காக விரைந்தாள்.

அனைவரும் சந்தோசமாகப் ப்ரீத்தியைப் பார்க்க, 'இதுவரை திருமணத்தைப் பற்றி பேச்சே எடுக்கவில்லை… சம்மதம் சொல்கிறான்… இவன் மனதில் என்ன ஓடுகிறது…' என்று யோசித்தும் புரியாமல் போக, "தாத்தா என்ன சொன்னாலும் எனக்கு ஓகேதான்… ஆனா என்னால ஃபாரின்கு எல்லாம் வர முடியாது… இந்தியாவிலதான் இருப்பேன்… அது போலவே எழுதறது எனக்குப் பிடிச்ச விஷயம்… அதையும் விட மாட்டேன்… அவரோட சுதந்திரத்தில தலையிடக் கூடாதுன்னு சொல்ற மாதிரி, எனக்குப் பிடிச்ச விஷயங்களைத் தடை சொல்லக் கூடாது" என்று தெளிவாக, மனதிலிருப்பதைக் கூறினாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'என்ன சொல்லப் போகிறாள்' என்று இதயம் படபடக்கக் காத்துக் கொண்டிருந்தவன், அவளது சம்மதத்தைக் கேட்டதும் 'ஊப்ஸ்' என்று பெருமூச்சை வெளியிட்டான்.

'எப்படியும் என் பின்னே வந்துதான் தீருவாள்... வர வைப்பேன்...' என நினைத்தவன், அவள் விதித்த நிபந்தனைகளையெல்லாம் தூசு போல ஒதுக்கித் தள்ளினான்.

எதைப் பற்றியும் யோசிக்க அவன் மனம் விரும்பவில்லை. அவள் சம்மதம் ஒன்றே போதும் என்பதுபோல நிம்மதியடைந்தது.

சம்மதம் தெரிவித்தாலும், ஒருவரோடு ஒருவர் பேசுவதைத் தவிர்ப்பது புரிய, யசோதா திருமணத்தை விரைவாக முடிக்க நினைத்தார். இப்போது சம்மதம் தெரிவித்திருப்பது சூழ்நிலையால் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

'முதலிலேயே ஒரு பார்ட்டியில் பார்த்திருகிறேன்' என்று ரஞ்சன் சொன்னதாக மஹதி தெரிவித்ததும், பத்திரிக்கையில் வந்தது இருவருடைய புகைப்படம் என்று உறுதி செய்து கொண்டார்.

இருவருக்குள்ளும் ஏதோ இருக்கிறது. ப்ரீத்தி சித்ரஞ்சனைப் பார்ப்பதை முடிந்த வரையில் தவிர்ப்பதும், மகனது பார்வை ஆவலோடு ப்ரீத்தியைத் தேடுவதும், அவளைக் கண்டதும் மலர்வதும், சில நேரங்களில் இனம் விளங்காமல் வெறிப்பதும் புரிந்தது.

'திருமணத்திற்குப் பிறகு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வார்கள்' என்று நினைத்து, "திருமணத்தை விரைவில் முடித்துக் கொள்ளலாம்" என்று மகனிடம் சொன்னால், அவனோ "எவ்ளோ சீக்கிரம் முடியுமோ, அவ்ளோ சீக்கிரம் வச்சிடுங்க... ரொம்ப சிம்பிளா இங்கயே நடத்திடலாம்... இந்த வாரத்துக்குள்ளேன்னாலும் ஓகே..." என்றான்.

திகைப்புடன், "அப்பா வரணுமேப்பா... அதுக்கப்புறம்தானே முடிவு பண்ணணும்... அதுவுமில்லாம சிம்ப்பிள் மேரேஜ்னா, அவர் ஒத்துக்க மாட்டாரே..." எனவும்,

பதில் சொல்லாமல் ஒரு நொடி தாமதித்தவன், "டாடியால இப்ப வர முடியாதும்மா... வொர்க் ரொம்ப அதிகமா இருக்கு... எனக்குப் பிடிச்சிருந்தா சிம்பிளா



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மேரேஜ் நடத்திடச் சொன்னார்... ரிஷப்சன் கிரேண்டா பண்ணிடலாம்னு சொன்னார்... அதனால மத்த ஏற்பாடுகளைப் பாருங்க...” என்றான்.

“ஊருக்கு வருவதற்கே பிடிக்கவில்லை, அம்மா பார்த்திருக்கும் பெண் வேண்டாம்” என்று சொன்னவர் நிச்சயம் திருமண ஏற்பாட்டிற்குச் சம்மதம் தெரிவிக்கப் போவதில்லை.

‘அவர் வருவதற்குள் திருமணத்தை முடித்தாக வேண்டும் என்று மனம் முடிவெடுத்தது ஏன்?’ என்று அவன் யோசிக்கவில்லை.

## 14

**ம**ணமேடையில் அமர்ந்திருந்த சித்ரஞ்சனுக்கு எரிச்சலாக இருந்தது. ‘புரியாத மந்திரங்களைக் கடமைக்குச் சொல்வது எதற்காக?’ என்று ஆட்சேபம் செய்த போது, அவனது தாய் ஒத்துக் கொள்ளவில்லை.

எளிய திருமணம் என்றாலும், முறைப்படி நடக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார்.

‘அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், தாலி கட்டுதல் என எல்லாச் சடங்குகளுமே காலத்தினால் திணிக்கப் பட்டவை’ என்ற மாறாத எண்ணம் கொண்டவன்.

மனிதன் இயற்கையோடு வாழப் பிறந்தவன். செயற்கையாய் உருவாக்கப்பட்டவை சடங்குகள். அது இல்லாமல் ஆதி மனிதன் வாழவில்லையா? சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் உருவாக்கி மனிதர்களை சாதி, மதம் என்றெல்லாம் பிரித்து வேற்றுமைப் படுத்துகின்றனர்.

அதைத் தாயிடம் சொல்லத் தொடங்கிய போதே, “எல்லாம் தெரிஞ்சவன் மாதிரிப் பேசாதடா... உனக்குப் புரியலைன்னா அதுக்கு அர்த்தம் இல்லாமப் போயிடலை... ஒவ்வொண்ணுக்கும் அர்த்தம் இருக்கு... நிறையப் படிக்கப் படிக்க உங்களுக்கெல்லாமே கிண்டலாத்தான் தெரியும்... உனக்குப் பிடிக்கலைன்னாப் பரவாயில்லை, நீ சொல்ற மாதிரியெல்லாம் கிராமத்தில நடந்துக்க முடியாது... உனக்காக வேணும்னா மந்திரத்துக்கான அர்த்தத்தைத் தமிழ்ல சொல்லச்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சொல்லிடலாம்… என்னோட திருப்திக்காக ஒரு நாளைக்குப் பேசாம, சொன்ன பேச்சைக் கேளு…” என்று உத்தரவிட்டு விட்டார்.

‘உண்மையில், மணமகன் சொல்ல வேண்டிய மந்திரங்களையெல்லாம், புரோகிதர் சொல்வதில் என்ன பயன்? மந்திரங்களுக்குச் சக்தி உண்டென்றால், சொல்வதையாவது திரும்பச் சொல்ல வைக்க வேண்டும். அதை விட்டு விட்டு, மனப்பாடம் செய்து ஒப்பிப்பதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிருக்கிறது’ என்று மனதிற்குள் சலித்துக் கொண்டான்.

கண்களால் தங்கையை அழைத்தவன், “மஹி! இந்த பார்மாலிடீஸ் எல்லாம் வேண்டாம்னு சொன்னாக் கேட்கறீங்களா? கண்ணெல்லாம் எரியுது… இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்” என்று சிடுசிடுத்தான்.

“அண்ணா! இன்னும் கொஞ்ச நேரம் தான்… நீங்க வேண்டாம்னு சொன்னதால, தாலி கட்டும் போது சொல்ற மந்திரம் மட்டும் தான் சொல்லறாங்க… வேற எல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டோம்… கொஞ்சம் சிரிங்க… அப்புறம் போட்டோஸ் எல்லாம் பார்த்தா சகிக்காது… அண்ணியைக் கூட்டிட்டு வர நேரமாச்சு… நான் வரேன்…” என்று சிரித்தவாறே சொல்லிவிட்டுச் சென்றாள்.

‘அண்ணி’ என்று அவள் சொல்லிச் சென்றதும், அவனறியாமல் ஆவலோடு பார்வையை அவள் பின்னே செலுத்தினான். முழுதாக இரண்டு நாட்களாயிற்று அவளைப் பார்த்து.

திருமணத்திற்குச் சம்மதம் சொன்ன இரண்டு நாள் கழித்து முகூர்த்த நாளா இருக்கவே, எல்லா ஏற்பாடுகளும் துரித கதியில் தொடங்கின.

ஒரு வாரமாகத் தாத்தாவின் வீட்டில் இருந்த தாய், “பர்சேஸ் வொர்க் எல்லாம் இருக்கு ரஞ்சன்… ஒவ்வொண்ணுக்கும் திருச்சிக்குப் போயிட்டு வர முடியாது… ஹோட்டல்ல ரூம் போட்டுட்டு அங்கேயே இருந்து எல்லா வொர்க்கையும் பார்த்துக்கலாம்… மேரேஜ் அன்னைக்கு ஏர்லி மார்னிங் கிளம்பி வந்திடலாம்” என்று சொல்லி அவனை அழைத்துச் சென்று விட்டார்.

இரண்டு நாட்களாக ‘என்ன காரணத்தைச் சொல்லி அவளைப் பார்ப்பது?’ என்று யோசித்து, ‘ஏன் பார்க்க வேண்டும்?’ என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நாள் முழுக்க தாய் சொன்ன வேலைகளை உரிய, ஆட்களிடம் ஒப்படைப்பதிலேயே கழிந்துவிட்டது.

சில மணி நேரங்கள் இருந்திருந்தாலும், அவள் அருகாமையில் மயங்கிக் கிடந்த மனம், ஏமாற்றத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது. தங்கை சென்ற வழியை அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தவனின் விழிகள் பிரம்மித்தன.

ரோஜா வண்ணப் பட்டுப் புடவையில், மணப்பெண்ணிற்கான ஒப்பனையோடு, தேவதைகளைத் தோற்கடிக்கும் அழகோடு மென்னடையில் வந்து கொண்டிருந்தாள் ப்ரீத்தி.

எளிமையிலேயே அவனைக் கவர்ந்த அழகு, இப்போதோ மாயாஜாலம் காட்டி மயங்கச் செய்தது.

தன்னருகில் வந்து அமரவும், அவளையே தொடர்ந்த பார்வையை விலக்கிக் கொள்வது பெரும் பாடாயிருந்தது. அதுவரை இருந்த எரிச்சல் மறைந்து, மனதைக் குளிர்மை ஆக்கிரமித்தது.

“மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவனஹேதுநா

கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜிவசரதசதம்”

என்ற மந்திரம் ஒலிக்க அதைத் தொடந்து, மந்திரங்களுக்கான தமிழ் விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருந்தவர், உரிய பொருளைச் சொல்லித் தாலியை வணங்கிக் கொடுக்கவும், அதைப் ப்ரீத்தியின் கழுத்தில் கட்டினான்.

எந்த விதமான ஆரவாரமும் இல்லாமல், வைகறைப் பொழுதை வரவேற்க ஆரவாரக் கூச்சலிடும் பறவைகளின் இன்னிசையும், மகிழ்ச்சியோடு சுற்றித்திரியும் குழந்தைகளின் ஆர்ப்பாட்டக் கூச்சலுமே, அந்த இடத்திற்கு இசையாய் ஒலித்தன.

அவளது முகம் நிமிர்த்தி, நெற்றியில் திலகத்தை இடவும், இருவர் பார்வையும் கலந்தன. விலக்கிக் கொள்ள முடியாமல் தவித்துத் தடுமாறிப் பிரிந்தன.

திடீரென்று எதிர்பாராத வகையில் நடைபெற்ற திருமணம் ப்ரீத்தியின் வாயைக் கட்டிப் போட்டிருந்தது. இதுவரை அவனோடு பேசியதெல்லாம் சில நிமிடங்கள்தான். இப்போது சித்ரஞ்சனின் மனைவி அவள். அவனுடைய வாழ்வில் பாதி. சுகத்திலும் துக்கத்திலும் பங்கேற்கவிருப்பவள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அவன் கையோடு சேர்த்து பிணைத்து ஏழடி வைக்கையில், “என்னோடு ஏழடிகள் எடுத்து வைத்தாய்… என் துணை நீ… இப்போதிலிருந்து நாம் நண்பர்கள்… இந்த நட்பிலிருந்து என்றும் விலகாதிருப்போம்… சேர்ந்தே வாழ்வோம்… எந்த முடிவையும் சேர்ந்தே எடுப்போம்… எதையும் இணைந்தே செய்வோம்… ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டு ஒரே மனத்துடன் வாழ்வோம்…” என்று பின்புறம் விளக்கம் சொல்லவும், மனம் ஒரு முறை சிலிர்த்தது.

எல்லாப் பெண்களுக்கும் திருமணத்தின் போது, வார்த்தைகளால் விவரிக்க முடியாத உணர்வு எழும். இத்தனை நாட்கள் அறிந்தே இராத ஒருவன், இனி வாழ்வின் சகலமும். வாழ்க்கையின் சுழல், இனி அவனை மையப் படுத்தியே சுழலும்.

இருவருமே ஒரு வித தயக்கத்தில் இருந்தார்கள். ‘யார் முதலில் பேசுவது’ என்ற தயக்கத்தில், மௌனத்தை ஆயுதமாகக் கொண்டு, விழிகளால் சண்டையிட்டுக் கொண்டனர்.

முதல் சந்திப்பு சரியாக அமையாததால், இப்போது இயல்பாக நடந்து கொள்ள முடியவில்லை. சித்ரஞ்சன் எளிதாகப் பேசத் தயாராக இருந்தாலும், ப்ரீத்தியிடம் விலகல் இருப்பதாகவே பட்டது.

எளிமையாக நடைபெற்ற திருமணம் என்பதால், காலையில் விருந்து முடிந்ததும் ஒவ்வொருவராக விடைபெறத் தொடங்கினர். நேரம் செல்லச் செல்ல வந்தவர்கள் அனைவரும் கிளம்பிச் செல்ல, பிரதாப்பின் குடும்பம் மட்டும் எஞ்சியிருந்தது.

அவளை நாற்காலியில் அமரச்சொல்லி அருகில் அமர்ந்தவன், “இவன் எதுக்கு வந்தான்… பாடி காட் மாதிரி, நீ எங்க போனாலும் வந்து சேர்ந்திடறான்…” என்று கடுப்போடு கூறினான்.

‘யாரைச் சொல்கிறான்’ என்று அவன் பார்வையைத் தொடர்ந்து பார்த்தவள், பிரதாப்பைப் பார்த்ததும் முகம் மலர்ந்து சிரித்தாள்.

நாள் முழுக்கத் தேவையான ஏற்பாடுகளைக் கவனித்தவன் அவன் தான். குடும்பத்தோடு வந்து எல்லாம் சிறப்பாக நடக்க முதற்காரணமாக இருந்தான்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

“அவங்ககிட்டத்தான் நான் வொர்க் பண்றேன்… அதுவுமில்லாம தாத்தாவோட ஃபேமிலி ஃப்ரெண்ட் அவங்க… இப்ப அவங்க வீட்லதான் ஸ்டே பண்ணிருக்கேன்… என்னோட ஃப்ரெண்ட்ங்கற உரிமைல பிரதாப் வந்திருக்கார்…” என்று சொல்கையில்,

அவள் கவனிப்பதைப் பார்த்து, அருகில் வந்து, “விஷ்ஷிங் யூ லாட்ஸ் ஆஃப் ஜாய் அண்ட் ஹேப்பினெஸ்…” என்று மனமார வாழ்த்தி கையைக் கொடுத்தான்.

சித்ரஞ்சன் அவனைக் கண்டு கொள்ளாதவன் போல, மஹதியை அழைத்து ஏதோ விசாரித்தான்.

நீட்டிய கைகளைப் பற்றி, “தேங்க்ஸ் பிரதாப்… நேத்து வந்ததிலிருந்து பம்பரமாச் சுத்தி எவ்ளோ அரேஞ் பண்ணிருக்கீங்க…” என,

“ஏய்… இதுக்கெல்லாம் தேங்க்ஸ் சொல்லணுமா… விட்டிருந்தா இன்னும் கிராண்டாப் பண்ணிருக்கலாம்… நீங்க ரெண்டு பேருமே ஒரே மாதிரி வேண்டாம்னு சொல்லிட்டீங்க… அதுசரி, யாருக்கு யார் ஜால்ரா அடிக்கறீங்க… நீ சொன்னதுக்கு ஐயா சரி சரின்னு தலையை ஆட்டராறா… எப்படிம்மா இதெல்லாம்….” என்று தணிந்த குரலில் கேட்டான்.

“தலையை ஆட்டறதா… என் தலைய உருட்டாம இருந்தாச் சரி… எதுக்கு வேண்டாம்னு சொன்னார்னு எனக்கொண்ணும் தெரியாது… பட் நான் எதுக்குச் சொன்னேன்னா, எனக்குப் பின்னாடி ஆஸ்ரமத்தில எத்தனை குழந்தைங்க இருக்காங்க… அவங்க மனசில எதிர்பார்ப்பை விதைக்கக் கூடாது… என்னை விட 2வருஷம் சின்னவங்க மூணு பேர் இருக்காங்க… அவங்க கிராண்டான மேரேஜை பார்த்துட்டு, அதேபோல எதிர் பார்த்திடக் கூடாது… அதுசரி, கையில என்ன பெரிசா ஏதோ எடுத்திட்டு வந்திருக்கீங்க…” என்றாள்.

“அது ஒரு சர்ப்ரைஸ்… உங்க ஃபர்ஸ்ட் மீட்டிங் மெமரீஸ்….”

“என்ன சொல்றீங்க… அதான் ஒரே அடிதடில்ல முடிஞ்சுது….”

“அன்னைக்கு உங்க ரெண்டு பேரையும் போட்டோஸ் எடுத்த ரிப்போர்ட்டரைப் பிடிச்சு, எடுத்த எல்லா போட்டோவையும் வாங்கிட்டேன்… அதில ஒரு போட்டோ மட்டும் ரொம்ப ரொம்ப அழகு… அதைப் பெரிசு பண்ணிருக்கேன்… பேப்பர்ல பார்த்தப்ப என்ன நினைச்சேன்னா, உங்க ரெண்டு பேரையும் போல ஒரு ஜோடி அமையாதுன்னு நினைச்சேன்… மேட் ஃபாட் ஈச் அதர்… அதுவும் ரஞ்சன் கண்ணில

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மயக்கத்தோட காதல் தெரியுது ப்ரீத்தி…” என்று சொல்ல, நம்பாத பார்வை பார்த்து கேலிச் சிரிப்புச் சிரித்து, “இதெல்லாம் உங்களுக்கே ஓவரா இல்லை…” என்றாள்.

“கிண்டலா எடுத்துட்டாலும் நிஜம் அதுதான்… உனக்கெப்படியோ தெரியலை… பட் ரஞ்சனுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு… நீ கிண்டலா நினைக்கற மாதிரி இல்லை… அவனுக்கும் ஒருநாள் புரியும்… அப்ப நீயே ஒத்துப்ப… இதை அவன்கிட்ட இப்பக் காமிக்க வேண்டாம்… தையத் தையான்னு குதிப்பான்… கொஞ்ச நாள் கழிச்சு இதை எடுத்துப் பார்க்கும் போது உங்களுக்கே சந்தோசமா இருக்கும்… இதை தாத்தா ரூம்ல வச்சிட்டுப் போறேன்… உனக்குத் தோணும் போது எடுத்துப் பாரு… நிச்சயமா அந்த நாள் வரும் ப்ரீத்தி…” என்று உறுதியாகச் சொன்னான்.

‘இவ்வளவு நேரம் அருகிலேயே இருக்கிறேன்… வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினாளா… பிரதாப்பிடம் மட்டும் சிரித்துச் சிரித்துப் பேசுவதைப் பார்…’ என்று மனம் கடுத்தவன், அருகில் வந்து, “உங்க பேச்சுவார்த்தையை அப்புறம் வச்சுக்கறீங்களா… லன்ச் முடிச்சதும் கிளம்பினாதான் ப்ளைட் டைமுக்குப் போய்ச் சேர முடியும்… பேக்கிங் வொர்க் எதாவது இருந்தா அதைப் பார் ப்ரீத்தி…” என்றான்.

‘இந்த அதிகாரத்துக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்லை’ என நினைத்தவள், “நாளைக்கு அங்க வந்துடுவேனே… அப்புறம் பேசலாம் பிரதாப்…” என்று சொல்லிவிட்டு, யசோதாவின் முகம் வாட்டமுற்று இருப்பதைப் பார்த்து அவரிடம் சென்றாள்.

“அம்மா என்னாச்சு… அப்நார்மலா இருக்கீங்க… உடம்புக்கு எதாவது செய்யுதா…” என்று கேட்டவளைப் பெருமையாகப் பார்த்தவர்,

“உடம்புக்கெல்லாம் ஒண்ணுமில்லை ப்ரீத்தி… அதான் டாக்டர் கூடவே இருக்காரே… ரொம்ப சந்தோசத்தில இருக்கேன்… ரஞ்சனோட அப்பா வரலையேன்னு கொஞ்சம் கவலையா இருக்கு அவ்ளோதான்… அப்படி என்ன வேலைன்னே தெரியலை… மேரேஜ் விஷயம் எதுவுமே அவர்கிட்டப் பேசலை… எல்லாம் ரஞ்சனே பேசிட்டான்… எனக்கு ஒரு போன் பண்ணிக்கூடக் கேட்கலை…” என்றார்.

“மம்மி… இதுக்கெல்லாம் எதுக்குக் கவலைப் படறீங்க… இன்னைக்கு நைட்டே வீட்டுக்குப் போயிடுவோமே… டாடி நாளைக்கு வந்ததும் பார்த்துக்கப் போறார்… ஹேப்பியா இருங்க… அண்ணாவோட இருக்க வேண்டிய கல்யாணப் பொண்ணு தேடி

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

வந்து கேட்கற அளவுக்கு வச்சிருக்கீங்க…" என்று மஹதி கடிந்த குரலில் கூறிவிட்டு, அண்ணனிடம் சென்றாள்.

"அண்ணா! டாடிக்கு இப்பவாவது விஷயத்தைச் சொல்லிடுங்க… மறுபடியும் பிரச்சனை எதாவது வரப் போகுது… டாடிக்கு இதெல்லாம் சொல்லலைன்னு மம்மிக்கும் தெரியாது… அவர் வர்றதுக்குள்ள எல்லா விஷயத்தையும் சொல்ல வேண்டியது உங்க பொறுப்பு" என்று சொன்னாள்.

"நம்ம மேரேஜப் பத்தி அப்பாக்குத் தெரியாதா?" என்று திகைப்புடன் ப்ரீத்தி கேட்கவும், தன்னிடம் பேசியவளை அதிசயமாகப் பார்த்தவன்,

"மேரேஜ் பத்தி டாடிக்கு எதுவும் சொல்லலை… பர்மிஷன் கேட்டா சின்னச் சின்ன ப்ராப்ளம்ஸ் வரும்… அதான் மேரேஜ் முடிஞ்சதும் இன்ஃபார்ம் பண்ணிக்கலாம்னு விட்டுட்டேன்…" என்றான்.

"ஓ… அம்மா மேல கோபப் படப் போறார்…" என்று கவலையோடு சொல்லவும், "அதெல்லாம் நான் சொல்ற விதத்தில சொல்லிக்கறேன்… யூ.எஸ். லையே லவ் மேரேஜ் பண்ணிட்டு வந்திருந்தா ஒண்ணும் சொல்லிருக்க மாட்டார்… பட் அவருக்கு இந்த ஊர், ரிலேடிவ்ஸ்னாலே…" சொல்ல வந்ததை நிறுத்தித் தோள்களைக் குலுக்கியவன், "எனக்குப் பிடிச்சிருக்குன்னு சொன்னா எதுவும் சொல்ல மாட்டார்… டோண்ட் வொர்ரி… நான் பார்த்துக்கறேன்…" என்றான்.

அதன் பின்னர் சாதாரணமாகப் பேசினாலும், இருவருக்கும் இடையில் நடந்த விஷயத்தை அவன் பேசாமல் இருக்கவே, அவளுக்கு மனதில் 'ஏன்?' என்ற கேள்வி, விடாமல் குடைந்து கொண்டே இருந்தது.

அன்று அவன் பார்த்த பார்வையைப் பல நாட்கள் மறக்க முடியவில்லை. 'கோபத்தைக் காட்டுவான்' என்று நினைத்ததற்கு மாறாக, மறந்து விட்டவன் போல நடந்து கொள்ளவும், 'வரும் போது வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்' என்று விட்டு விட்டாள்.

ஆனாலும், அவனுடைய பார்வை தன்னை விடாமல் தொடர்வதை உணர்ந்தே இருந்தாள். 'இத்தனை நாட்களாக, தாத்தாவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம் கிளம்பி வந்தாயிற்று… இனி அடிக்கடி வருவதற்கு என்ன சொல்வானோ…' என்று நினைத்தவளுக்கு, 'எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டும்' என்று பெருமூச்சு வந்தது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

மதிய உணவிற்குப் பின் அனைவரிடமும் விடைபெற்றுக் கிளம்புகையில், குழந்தைகளின் முகத்தில் வருத்தத்தைப் பார்த்து, “நெக்ஸ்ட் வீக் நானும் அக்காவும் வரும் போது நீங்க கேட்டதெல்லாம் வாங்கிட்டு வர்றோம்… இப்ப சிரிச்சிட்டே பை சொல்லுவீங்களாம்…” என்று சித்ரஞ்சன் சொன்னதும், அனைவர் முகமுமே மலர்ந்தது.

அவள் கையைப் பற்றி, தாத்தாவின் காலில் விழுந்து வணங்கி எழுந்தவன், “உடம்பை பத்திரமாப் பாத்துக்கங்க தாத்தா… இனிமேல் தனியா எல்லாம் வாக்கிங் போகாதீங்க…” என்றெல்லாம் சொல்லவும், அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

‘நல்ல படியாகத்தான் நடந்து கொள்கிறான்… தாயிடம் காட்டும் பாசமோ, தாத்தாவிடம் காட்டும் பாசமோ பொய்யில்லை… அன்பும், அக்கறையும் நிறையவே இருக்கிறது… ஒரு வேளை குடியின் போதையில் அன்று அப்படி நடந்து கொண்டானா… தன்னை எதிர்பார்க்கவில்லை என்று சொன்னதிலிருந்தே, அவன் எதையும் மறக்கவில்லை என்று தெரிகிறது… பிரதாப்பிடம் காட்டும் ஒதுக்கம் அப்படியே இருக்கிறது… அன்று நடந்ததைப் பற்றி எதுவும் கேட்கவுமில்லை, எந்த விளக்கம் சொல்லவுமில்லை… ஏன்?’ என நினைத்துக் குழம்பிப் போனாள்.

## 15

**கா**ரிருள் வானில் பிறைச்சந்திரன் அழகுடன் அமர்ந்திருக்க, நட்சத்திரங்கள் மின்னி மறைந்து விளையாடிக் கொண்டிருந்த இனிய இரவு நேரம்.

ப்ளூ டூத் ஹெட் செட்டைக் காதிலிருந்து கழற்றியவாறு வீட்டிற்குள் நிழைந்த சித்ரஞ்சன், சோபாவில் அமர்ந்திருந்த தாயின் அருகில் வந்து அமர்ந்தான்.

“மாம்! வீட்ல யாரையும் காணோம்… ரொம்ப சைலெண்டா இருக்கு… அந்த வாலு எங்க போச்சு…” என்று கேட்கவும்,

ப்ரீத்தியைப் பார்வையால் தேடுவதை உணர்ந்து மனதிற்குள் சிரித்துக் கொண்டவர், “எக்ஸாம்கு ஹால் டிக்கெட் வாங்க நாளைக்குக் காலேஜ் போகணும்னு மஹி சொல்லிட்டிருந்தா… புக்ஸ் எல்லாம் வேற ஹாஸ்டல்ல இருக்கு… அதான் எல்லாத்தையும் பேக் பண்ணி எடுத்திட்டு, வகேட் பண்ணிட்டு வரச் சொல்லி



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அனுப்பிட்டேன்… நாளைக்கு ஈவினிங் வீட்டுக்கே வந்திடுவா…” என்று பதில் சொன்னார்.

“ஊர்ல இருந்து வந்ததுமே போகணுமா… ரெஸ்ட் எடுத்துட்டு அனுப்பியிருக்கலாமில்லை…”

“டயர்டா இருக்குன்னு சொன்னா ரஞ்சன்… காலைல இங்கிருந்து கிளம்பிப் போகணும்னா ரொம்ப சீக்கிரம் எழுந்திரிக்கணும்… அதான் ஹாஸ்டல்லையே போய் நல்லாத் தூங்கச் சொல்லிட்டேன்… லேட்டா எழுந்திரிச்சாலும் வேலையை முடிச்சிட்டு வந்திடுவா… அது சரி கொஞ்ச நேரத்தில வரேன்னு சொல்லிட்டுப் போய் ரெண்டு மணி நேரம் ஆச்சு… இன்னைக்குக் கூட வெளில போகணுமா…”

“டாடியோட போன்ல பேசிட்டிருந்தேன்மா… ஆஃபிஸ்ல ஒரு முக்கியமான வொர்க் இருந்தது… அதான் அவசரமாக் கிளம்பிப் போயிட்டேன்…” என்று பதில் சொன்னவனுக்கு, தந்தையிடம் இவ்வளவு நேரம் நடத்திய விவாதம் சலிப்பைத் தந்திருந்தது.

‘தனக்குப் பிடித்த பெண் என்று சொல்லிவிட்டால் ஓரளவு சமாதானமாகி விடுவார்’ என்று எளிதாக நினைத்தது தவறு என்பது புரிந்தது. கௌரவம், அந்தஸ்து என்று ஆயிரம் காரணங்களை அடுக்கும் பழமைவாதி என்பதை, இன்றுதான் தெரிந்து கொள்ள முடிந்தது.

அவருக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்கையில், அவருடைய இன்னொரு முகம் கோபத் தணலாக வெளிப்படுவதை உணர்ந்தான். தாயிடம் இந்தக் கோபம் வெளிப்பட்டு விடக்கூடாது என்று கொஞ்சம் கவலையோடு இருந்தான்.

அந்த நிமிடம் ‘ப்ரீத்தியின் அருகில் இருந்தால் நன்றாக இருக்கும்’ என்று மனம் சொல்ல, ரிமோட்டை எடுத்து தொலைக்காட்சியில் ஒவ்வொரு சேனலாக மாற்றியவாறு, அக்கறையற்ற தொணியில், “ப்ரீத்தி எங்க மாம்?” என்றான்.

‘இவ்வளவு நேரம் இதைக் கேட்கவா யோசித்தான்’ என்று நினைத்து “மாடியில இருக்கா ரஞ்சன்… மஹியோட சேர்ந்து ட்ரெஸ் எல்லாம் வாட்ரோப்ல அடுக்கிட்டிருந்தா… மஹி கிளம்பினதும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்திட்டு, ரெஃப்ரெஷ் ஆகி வரச் சொல்லிருக்கேன்… அப்புறம், உன்னோட ரூம்ல இருக்கற ஃபைல்ஸ் எல்லாம் வேற ரூம்கு மாத்திக்கடா… ப்ரீத்தியோட ட்ரெஸ் எல்லாம் வைக்கணும்… உங்களுக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க… இப்போதைக்கு உன்னோட

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ரூம்க்குப் பக்கத்து ரூம்ல திங்க்ஸ் எல்லாம் வச்சிருக்கா… உனக்கு கா∴பி கொண்டு வரச் சொல்லட்டுமா… டைம் வேற எட்டாயிடுச்சு, அதனால டின்னரே சாப்பிட்டுக்கறையா…” என்று கேட்டு முடிப்பதற்குள்,

“டின்னரே எடுத்து வைக்கச் சொல்லுங்க… நான் குளிச்சிட்டு ப்ரீத்தியையும் கூட்டிட்டு வரேன்” என்று வேகமாகப் படிகளில் ஏறிச் சென்றான்.

இரண்டு படுக்கையறைகள், இரண்டிற்கும் பொதுவான லிவிங் ரூம், பால்கனி சேர்ந்த மொத்த அமைப்பு அவன் உபயோகப் படுத்துவது.

தன்னுடைய அறையில் ப்ரீத்தியைக் காணாமல் தேடியவன், பக்கத்து அறைக் கதவைத் தட்டினான். அந்த அறை முழுக்க ஆ∴பிஸ் டாகுமெண்ட்களை நிரப்பி வைத்திருப்பான்.

பதில் இல்லாமல் போகவே, தன்னுடைய அறைக்குத் திரும்பிச் சென்று குளித்த பின் மீண்டும் பக்கத்து அறைக்கு வந்தான். அங்கு அவளைக் காணாமல் தேடியவன், பால்கனியில் அவள் நிற்பதைப் பார்த்து அருகில் சென்றான்.

செயற்கைத் தோட்டத்தைப் பார்வையிட்டவாறு நின்றிருந்தாள். கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்று சொல்லி அம்மா அமைத்தது.

முதலில் “இதெல்லாம் எதுக்கு மாம்?” என்று கேள்வி கேட்டவன், பின்னர் எத்தனை அலுவல் இருந்தாலும் உறங்கும் முன் பத்து நிமிடமாவது அங்கு நிற்க மறப்பதில்லை.

“ஹாய்! இந்த ப்ளேஸ் எனக்கும் ரொம்பப் பிடிக்கும்… தலைக்குக் குளிச்சாச்சு போல… ஹப்பா செம லாங் ஹேர் உனக்கு… பட், வெட்டா இருக்கே… இது எப்பக் காயும்… என்று இடையைத் தாண்டி விரிந்திருந்த கூந்தலின் நடுவில் ஏனோதானோவென்று முடிச்சிட்டிருந்தவளைப் பார்த்துக் கேட்டான்.

கூந்தலைத் தொட்டதும், அவள் உடல் சிலிர்ப்பதை உணர்ந்து “குளிருதா ப்ரீத்தி… கையெல்லாம் ஒரு மாதிரி ஆயிடுச்சு…” என்று கேட்க, உதட்டைக் கடித்தவள், “குளிரெல்லாம் இல்லை… லவ்லி ப்ளேஸ்… கார்டன் ரொம்ப அழகா செட் பண்ணிருக்காங்க… இவ்ளோ செடியை வச்சு, ரொம்ப கலர்∴புல்லா இருக்கு…” என்றாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

பளபளக்கும் கன்னங்களோடு, ஆர்வத்துடன் பூக்களில் அழகை அள்ளிப் பருகும் விழிகளோடு பார்த்திருந்தவளைக் கண்டதும், அவனுக்கு ஒரு வித சிலிர்ப்பு பரவியது.

பட்டுப் போன்ற கூந்தலில் கைகளை விட்டு அலைந்தவாறு, "யெஸ்... ரொம்ப கலர்ஃபுல்லா இருக்கு..." என்றவனின் கைகள், கூந்தலிலிருந்து இறங்கி இயற்கையில் செழித்திருந்த கன்னங்களை வருடத் தொடங்கின.

"ஒவ்வொண்ணும் ஒவ்வொரு அழகா இருக்கு ப்ரீத்தி..." என்று வசியம் செய்யும் குரலில் சொல்லி, நீண்டிருந்த புருவங்கள், கண்ணிமைகள் என்று வருடத் தொடங்கிய விரல்கள், உதடுகளைத் தொட்ட போது, அவள் உடல் கூசிச் சிலிர்த்தது.

உணர்வுகளின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டவள், கண்களை மூடிக் கொண்டாள். அவனுடைய ஒவ்வொரு தொடுகையிலும் வேட்கை தெரிந்தது.

ஒரு கையால் இடையை வளைத்தவன், மறுகையால் அவள் முகத்தை நிமிர்த்தவும், மனதின் சங்கமம் இல்லாததால், இந்த நெருக்கத்தை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

சட்டெனக் கண்களைத் திறந்து, நெருக்கத்தில் இருந்த அவனுடைய முகத்தை விலக்கவும், அவன் முகம் செந்தனல் போல ஜொலித்தது.

'ஒரு முத்தத்தைக் கூட அவளால் ஏற்க முடியவில்லையா? எவ்வளவு ஆவலோடு நெருங்கினோம்... அவளும் கண் மூடி முகம் சிவக்க நின்றிருந்தாளே... இப்போது என்ன வந்துவிட்டது?' என்று மனம் குமுறியது.

இரண்டாவது ஏமாற்றம் அவனுக்கு. அன்று இதே போல முத்தமிட நெருங்குகையில், விலக்கித் தள்ளி அவமானப் படுத்தினாள். இன்று, உரிமை பெற்றபின்னும் விலக்கித் தள்ளுகிறாள்.

ஏதோ வெறுமை, இழப்பு மனதைச் சூழ்ந்து கொண்டது. கட்டுப் படுத்த முடியாத கோபம், எரிமலைக் குளம்பைக் கக்கத் தயாராக இருந்தது.

"நீயென்ன மிஸ் யுனிவர்ஸா... உன்னை விட்டா வேற பொண்ணுங்களே இல்லையா... சரிதான் போடி... உனக்கு உடம்பு முழுக்கத் திமிர்... அன்னைக்குத்தான் நான் பண்ணினது தப்புன்னு சொல்லி எல்லார் முன்னாலேயும் அவமானப் படுத்தின... இன்னைக்கு என்ன வந்துச்சு... இப்ப உன்னோட ஹஸ்பெண்ட் நான்... கல்ச்சர்

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

கல்ச்சர்னு எழுதினையே, இப்படி கிஸ் பண்ண வந்த ஹஸ்பண்டை விலக்கித் தள்ளறதுதான் கல்ச்சரா?

இந்தக் கயித்தைக் கட்டிருக்கேனே அதுக்கு அர்த்தம் என்ன? நீ எனக்கு சொந்தம்... எனக்கு மட்டுமேயான ப்ராப்பர்டி... இப்ப என்ன பண்ணிட்டேன்னு இப்படித் திருப்பிக்கற... எவ்ரி டைம் இப்படியேதான் அவமானப் படுத்தற... பிடிக்கலைன்னா எதுக்கு மேரேஜ்கு ஒத்துகிட்ட...” என்று கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டவும் திகைத்து நின்றாள்.

‘தான் என்ன கல்லாலும், மண்ணாலுமான பொருளா? மனம் என்ற ஒன்று தனக்கு இருக்கிறது... அதில் உணர்வுகளும் இருக்கின்றன... மனதின் பகிர்தல் இல்லாமல் இப்படி நடந்தால் தனக்கு எப்படி இருக்கும் என்று யோசித்துக் கூடப் பார்க்க மாட்டானா? அனிச்சைச் செயல் போல விலக்கினாள்தான்... கண்மூடியிருக்கையில் முத்தமிட வந்ததைக் கூட உணரவில்லையே... தொடு உணர்ச்சியையே சமாளிக்க முடியாமல் தானே விலக்கினேன்... பேசிப் பழகுவதற்கு கொஞ்சமாவது நேரம் ஒதுக்க மாட்டானா?” என்று நினைத்தவள், ‘அவனுக்கு என்ன விளக்கம் கொடுப்பது?’ என்று புரியாமல் தவித்தாள்.

அவளது தோற்றத்தில் என்ன கண்டானோ, தன்னைக் கட்டிப் படுத்திக் கொள்ள முயன்றான்.

“எனக்குக் கொஞ்சம் டைம் வேணும்... தாத்தாவுக்காகத்தான்...” என்று சொல்ல ஆரம்பித்தவள், தான் சொல்லவிருப்பதன் அர்த்தம் புரிந்து, அதிர்ச்சியுடன் நிறுத்தினாள்.

“ம்ம்... சொல்ல வந்ததைச் சொல்லிமுடி... தாத்தாவுக்காகத்தான் இந்த மேரேஜ்கு ஒத்துகிட்டேன், எனக்கு உங்களைப் பிடிக்கலைன்னு தானே சொல்ல வந்த...” என்று கடினமான குரலில் கேட்கவும், அவன் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்க, எதுவும் சொல்லாமல் மௌனம் காத்தாள்.

முழு உயரத்துக்குமாக நிமிர்ந்தவன், “அப்ப என்னைப் பிடிக்காமத்தான், வேற வழியில்லாம மேரேஜ் பண்ணியிருக்க... என் மேல நல்ல ஒபினியன் வச்சிருக்கறேன்னு தெரியுது... இப்ப சொல்றேன் கேட்டுக்க... நானும் உன் பின்னாடி அலைஞ்சு திரிஞ்சு ஏங்கிப் போய்க் கிடக்கலை... அம்மாவுக்காகத்தான் நானும் ஓகே

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சொன்னேன்… நீ *சீச்சீன்னு* சொன்ன கல்ச்சருக்கு உன்னை மாத்திக் காட்டணும்னுதான், உன்னை மேரேஜ் பண்ணிட்டேன்…

நான் எதுக்காகவும் என்னை மாத்திக்கத் தயாரா இல்லை… உன்னால முடிஞ்சா மாத்திக்க ட்ரை பண்ணு… இல்லைன்னா…" என்று நிறுத்தி, "நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை…. நான் சொல்ல வரது உனக்கே புரியும்னு நினைக்கறேன்… பிடிக்கலைன்னு சொன்னதுக்கப்புறம் உன்னைத் திரும்பிப் பார்க்கற அளவுக்கு நான் ஒண்ணும் கீழ்த்தரமானவன் இல்லை… அம்மாவுக்காகத்தான் இன்னமும் உன்னை இந்த வீட்ல சகிச்சிக்கறேன்… இல்லைன்னா…" என்று முழுதாக முடிக்காமல் வேகமாக வெளியேறினான்.

இதற்கு மேலும் அங்கிருக்கப் பிடிக்காதவன், காரின் சாவியை மட்டும் எடுத்துக் கொண்டு, தாயிடம் கூடச் சொல்லாமல் வெளியேறினான்.

'தாத்தாவிற்காகத் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டோம் என்று இப்படி வெளிப்படையாகச் சொல்லியிருக்கக் கூடாது' என்று மனம் நொந்து கொண்டாள்.

பெரும்பான்மையான இந்தியத் திருமணங்கள் பெற்றோருக்காகவும், உறவினர்களுக்காகவும்தான் நடக்கின்றன. ஆனால், தன்னால் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே?

'ஈகோ அதிகம் என்று பிரதாப் பழைய கதையைச் சொல்லிய பின்னும் இப்படி நடந்து கொள்ள வேண்டி வந்துவிட்டதே… நிச்சயம் பெரிய அவமானமாக நினைப்பான்… ஆனால், அவளால் வேறு என்ன செய்ய முடியும்… ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருந்தால் இது போல நடந்திருக்காது… இப்போது அம்மாவையும் வேறு சமாளிக்க வேண்டும்…' என்று சில நிமிடங்கள் புரியாமல் அமர்ந்திருந்தாள்.

தெளிந்த மனமோ, 'ஒருவகையில் இது நல்லதுதான்… பிடிக்கவில்லை என்றே வெறுப்பைக் காட்டட்டும் அவன்… எப்படியும் அம்மாவிற்காக நேரடியாகக் கோபத்தைக் காட்ட மாட்டான்… தனிமையில் இருக்கும் நேரங்களில் வெறுப்பைக் காட்டுவான்… சிறிது காலத்திற்குள் இருவரும் புரிந்து கொள்ளலாம்' என்று முடிவு செய்தது.

கீழே செல்கையில், யசோதா கவலையோடு படிகளில் ஏறுவது கண்ணில் பட, "நானே கீழே வரேன்மா… இருங்க" என்று சொல்லிவிட்டு வேகமாகப் படியிறங்கினாள்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

“என்னாச்சு ப்ரீத்தி… இவ்ளோ கோபமாப் போறான்… சொல்லாமக் கூட இந்த நேரத்தில எங்க போறான்…” என்று கவலையுடன் கேட்கவும்,

தயார் செய்து வைத்தவாறு, “ஏதோ போன் வந்துது… கோபமாப் பேசினார்… அப்புறம் அவசரமா ஒரு வொர்க் இருக்கு, இப்பவே முடிக்கணும்… சீக்கிரமா வர ட்ரை பண்றேன்னு சொல்லிட்டுப் போறார்… வந்ததுக்கப்புறம்தான் கேட்கணும்… உங்களைச் சாப்பிடச் சொல்லிட்டுப் போனார்மா… டேப்லெட் வேற எடுத்துக்கணும்… வந்து சாப்பிடுங்க…” என்றாள்.

அவள் குரலில் எந்த வேறுபாடும் இல்லாத போதும், “வேற எந்தப் ப்ராப்ளமும் இல்லையே… ஏன்னா, உங்க ரெண்டு பேரோட ஃபோட்டோஸை ஒரு புக்ல பார்த்தேன் ப்ரீத்தி... ஏதோ பார்ட்டில மீட் பண்ணினீங்கன்னு மஹிகிட்ட சொல்லிருக்கான்… அதான் கேட்டேன்…” என்றார்.

எதையும் தோண்டித் துருவ விரும்பாவிட்டாலும், தன்னுடைய தலையீடு தேவைப்படுமா என்பதற்காகக் கேட்டார்.

‘மகனுக்கு ஏற்ற பெண் ப்ரீத்தி… அவனிடம் இருக்கும் தீய பழக்கங்களை மாற்றி விடுவாள்…’ என்ற உறுதி அவர் மனதிற்கு இருந்தது.

“நியூஸ் கலக்ட் பண்ண பார்ட்டிக்குப் போயிருந்தப்பதான் அவரை மீட் பண்ணினேன்… பிரதாப் இண்ட்ரடியூஸ் பண்ணி வச்சார்… அப்ப போட்டோ எடுத்து கிசு கிசு எழுதிட்டாங்க… எங்களுக்குள்ள எந்தப் பிராப்ளமும் இல்லைம்மா… அவரைப் பத்தி உங்களுக்கே தெரியுமே… அவரோட போக்கிலையே இருந்து பழகிட்டார்… போகப் போக சரியாயிடும்… என்று அவர் நம்பும் விதத்தில் எளிதாகச் சொல்ல,

“அப்பாவுக்கும் புள்ளைக்கும் இதே வேலைதான்… எப்பப் பார்த்தாலும் இவங்களுக்கு எதாவது வொர்க் வந்திட்டே இருக்கும்… நேரம் காலம் எல்லாம் ஒண்ணுமே தெரியாது… இது மாதிரியெல்லாம் நடந்துக்க விடாத ப்ரீத்தி… என்னாலதான் முடியலை… நீ ஆரம்பத்தில இருந்தே அவன் கிட்டச் சொல்லிவை… நானும் பேசறேன்…” என்று மனநிம்மதியுடன் சொன்னார்.

“நீயும் உட்காரும்மா… இவங்களுக்காக வெயிட் பண்ணி, சாப்பிடாம இருந்ததோட எஃபெக்ட் வயசாக வயசாகத்தான் தெரியுது… நம்ம உடம்பை நம்ம தான் பார்த்துக்கணும்… பசிக்கும் போது சாப்பிட்டுக்கம்மா… ரஞ்சன் வந்ததும் சாப்பிட்டுக்கட்டும்” என்று சொல்லி உடன் உண்ணவைத்தார்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

‘திருமணமான முதல் நாளே இப்படிச் செய்கிறானே… ப்ரீத்தி என்ன நினைப்பாள் என்பது கூட யோசிக்க மாட்டானா’ என்று வருத்தத்துடன் யோசித்து, பழைய கதைகளையெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்திலேயே திரும்பி வந்தவன், சாதாரணமான குரலில், “நீங்க இன்னும் தூங்கப் போகலையா மாம்…” என்று கேட்கவும், முறைத்துப் பார்த்தவர், “இனிமேல் எங்க போறதுனாலும் சொல்லிட்டுப் போ ரஞ்சன்… எப்ப வருவேன்னும் சொல்லு… போனை சுவிட்ச் ஆ‌ஃப் பண்ணிட்டா நாங்க என்ன நினைக்கறது…” என்று கோபமாகச் சொன்னார்.

“ஓகே… ஓகே… இனிமேல் சொல்லிட்டுப் போறேன்… முக்கியமான வொர்க் ஒண்ணை மறந்திட்டேன்… அதுக்காகப் போயிருந்தேன்… நீங்க போய்த் தூங்குங்க…” என்று தணிவாகச் சொன்னான்.

“சீக்கிரம் சாப்பிட்டுட்டுத் தூங்கு ரஞ்சன்… இனிமேல் என்ன வேலை இருந்தாலும் ஈவினிங் வீட்டுக்கு வந்திடணும்…” என்று கட்டளையிட்டுவிட்டுத் தாயார் அவரது அறைக்குச் செல்லும் வரை பார்த்திருந்தவன், மறந்தும் கூட ப்ரீத்தியின் பக்கம் பார்வையைத் திருப்பவில்லை.

சமாதானம் செய்யும் விதத்தில், “உங்க கிட்டக் கொஞ்சம் பேசணும்…” என்று சொல்ல, “சொல்றதுக்கு இனி என்ன இருக்கு…” என்று கிண்டலாகக் கேட்டவன், அவளது தளராத பார்வையைப் பார்த்து, “இங்க எதுவும் சொல்ல வேண்டாம்… வா! ரூமுக்குப் போய்ப் பேசிக்கலாம்” என்று சொல்லிவிட்டு மாடிப் படிகளில் ஏறினான்.

## 16

“**நீ**ங்க இன்னும் சாப்பிடலை…” என்ற ப்ரீத்தியை வித்தியாசமாகப் பார்த்த சித்ரஞ்சன், “இப்பப் பசிக்கலை… பசிக்கும் போது சாப்பிட்டுக்கறேன்… என்ன பேசணும்…” என்று கேட்டுவிட்டு, ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

வெளிவந்த புகையை சுவாசிக்க முடியாமல், அவள் முகம் சுளிக்கவும், “இந்த ஸ்மெல் உனக்குப் பிடிக்கலைன்னா டென் மினிட்ஸ் கழிச்சு வா…. நோ ப்ராப்ளம்… எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு…” என்றான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஒரே நாளில், பிடிக்கவில்லை என்று மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டிருந்தால், மேலும் வெறுப்பு வளரும் என்பது புரிந்ததால், அவனுக்கு எதிராக இருந்த சோஃபாவில் அமைதியாக அமர்ந்தாள்.

“நம்ம ஃபர்ஸ்ட் மீட்டிங்கே சரியா அமையலை… தாத்தாவைப் போல இருக்கீங்கன்னு நினைச்சுத்தான் அன்னைக்கு அதிசயமாவும், ஆச்சர்யமாவும் உங்களைப் பார்த்தேன்… தாத்தாவோட பழைய போட்டோஸ் எல்லாம் பார்த்தீங்கதானே… ரெண்டு பேருக்கும் இருக்கற ரிஸம்ப்லென்ஸ் பார்த்ததும் அவரோட பேரனா இருப்பீங்களோன்னு தோணிச்சு… அந்த சந்தோசத்தில பார்த்ததைத்தான் தப்பாப் புரிஞ்சிட்டீங்க… என்னோட மனசில வேற எந்த எண்ணமுமே இல்லை…

என்னோட வொர்க்கைத்தான் நான் பார்த்திட்டிருந்தேன்… எல்லாரையும் வாட்ச் பண்ணிட்டிருந்ததைப் பார்த்து மறுபடியும் தப்பாப் புரிஞ்சிட்டீங்க…” என்று தன்னிலை விளக்கம் சொல்லவும், எதுவும் பேசாமல் இறுக்கமாக அமர்ந்திருந்தான்.

“இங்க ஒரு பொண்ணைக் கிஸ் பண்றது சாதாரண விஷயம் இல்லை… நீங்க பார்த்துப் பழக்கப்பட்ட லைஃப் வேற மாதிரி இருந்திருக்கலாம்… நாங்க ஒருவனுக்கு ஒருத்திங்கற கல்ச்சர்ல வளர்ந்தவங்க… நீங்க அதுபோல நடந்துட்டதும், எனக்கு என்ன நடக்குதுன்னே புரியலை… எப்பவும் இருக்கற ஜாக்கிரதை உணர்வில அடிச்சிட்டேன்… அதை தப்புன்னு நான் நினைக்கலை… என்னைப் பொறுத்தவரைக்கும் சரிதான்…” எனவும்,

“நீ இன்னும் எந்தக் காலத்தில இருக்க ப்ரீத்தி… மூணு மாசமா அதே டிஸ்கொதேக்கு ரெகுலரா போறேன்… நீ சொல்ற கல்ச்சரை நான் இதுவரைக்கும் பார்க்கலை… மேரேஜ் ஆன லேடீஸே என்னோட கேஷுவலா டேன்ஸ் பண்றாங்க… அன்னைக்கு என்னோட ஆடின பொண்ணுக்கு மூணு முறை மேரேஜ் ஆயிருக்கு… எல்லாமே ஃபெயிலியர்…” என்றான்.

“கொஞ்சம் பேரைப் பார்த்துட்டு ஒட்டு மொத்தமா எல்லாரையும் ஜட்ஸ் பண்ணாதீங்க… இந்த டிஸ்கொதே கல்ச்சர் எல்லாம் உங்கள மாதிரி ஆட்கள் கொண்டு வந்ததுதான்…”

கூர்மையாக அவள் கண்களையே பார்த்தவன், “அப்ப நடந்தது முடிஞ்சு போனதாவே இருக்கட்டும்… இப்ப நடந்ததுக்கு என்ன சொல்லப் போற… இங்க

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

நடக்கறதுல பாதிக்குப் பாதி அரேஞ்ட் மேரேஜ் தானே… இன்னைக்கு உனக்கு வந்த அதே சிஷுவேசன் தானே அந்தப் பொண்ணுங்களுக்கும் வருது… அவங்ளால எல்லாம் ஹஸ்பெண்டை ஈஸியா ஏத்துக்க முடியற போது, உன்னால மட்டும் ஏன் முடியலை…" என்று கேட்டான்.

'இது வரை, இது போல வெளிப்படையாகப் பேசிப் பழக்கமில்லை என்பதால், எப்படிச் சொல்வது' என்று தயக்கத்தோடு இருக்கவும், "பேச முடியலையா… இதுக்கு பதில் நானே சொல்றேன்… ஏன்னா, என்னைக் கெட்டவனாவே மனசில முடிவு பண்ணிட்ட… இன்னைக்கு நடந்த நம்ம மேரேஜை விட அன்னைக்கு நான் நடந்துகிட்டதுதான் உன் மனசில இருக்கு… அதனால என்னோட தொடுகையை உன்னால சகிச்சிக்க முடியலை… அதானே சொல்ல வறே…" என்று கேள்வி கேட்கவும், அவளுக்கு வாயடைத்துப் போனது.

"ஆனா, அன்னைக்கு ஏன் அப்படி நடந்துட்டீங்க… டேன்ஸ் பண்ணக் கூப்பிட்டப்பவே வேண்டாம்னு ஒதுங்கித்தானே போனேன்… அப்புறமும் ஏன்…" என்று வெளிப்படையாகப் பேசக் கூச்சப்பட்டு நிறுத்தவும், அவனுக்கும் பலமுறை மனதில் தோன்றிய அதே கேள்வி அப்போதும் தோன்றியது.

கண்களை மூடித் திறந்தவன், "ஏன்னா, உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது… பிடிச்சிருந்ததுன்னா பார்த்ததுமே லவ்னெல்லாம் நினைச்சுக்காதே… எனக்கு லவ் மேலெல்லாம் நம்பிக்கையே கிடையாது… வேற மாதிரிப் பிடிச்சிருந்தது… ஏதோ ஒரு விதத்தில அட்ராக்ட் பண்ணின… உன்னை மிஸ் பண்ணிடக் கூடாதுன்னு தோணிச்சு… அதான் என்னையறியாம அந்த மாதிரி நடந்துட்டேன்…" என்று உண்மையை மறைக்காமல் வெளிப்படையாகக் கூறினான்.

'அவள் திருமணத்திற்கு ஒத்துக் கொள்வது சந்தேகம் என்று முன்னமே மனதில் தோன்றியதுதான்… அப்புறம் எதற்காகக் கோபத்தை அவளிடம் காட்ட வேண்டும்? தனக்கேற்ப அவளை மாற்றிக் காட்டுவது என்று சவாலாக நினைத்தது என்ன ஆயிற்று? ஏன் இந்த ஏமாற்றம்?' என்றெல்லாம் மனம் அவனிடம் கேள்விகள் கேட்டது.

கோபத்தை விட முடியாமலும், சாதாரணமாகப் பேச முடியாமலும் இருந்தவனுக்கு, இப்போது அவளாகத் தணிந்து பேசவும், உரையாடுவது எளிதாக இருந்தது.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

“ரஞ்சன்! இதுவரைக்கும் நாம மனசு விட்டு எதுவுமே பேசிக்கலை… உங்களைப் பத்தி எனக்கோ, என்னைப் பத்தி உங்களுக்கோ எதுவுமே தெரியாது… புரிஞ்சுக்கக் கொஞ்சம் டைம் கொடுங்கன்னுதானே கேட்கறேன்…”

“என்னைப் பத்தி என்ன தெரிஞ்சுக்கணும் ப்ரீத்தி… உன்னோட பாஷைல சொல்லணும்னா, நீ எழுதின மாதிரி நான் அக்மார்க் கெட்டவன்… அப்பப்போ சிகரெட் பிடிப்பேன்… தோணும் போது ட்ரிங்க்ஸ் எடுத்துப்பேன்… இதெல்லாம் அம்மாவுக்குப் பிடிக்காததால, வீட்ல எடுத்துக்கறதில்லை… முதல்ல எல்லாம் டென்னிஸ், கிரிக்கெட்னு விளையாடுவேன்… ரெண்டு வருஷமா ஸ்போர்ட்ஸ் மேல இண்ட்ரஸ்ட் போயிடுச்சு… நீ பார்த்தயே அது போல பார்ட்டி, டிஸ்கொதே இதான் என்னோட ஹாபி… நிறைய கேர்ள் ப்ரெண்ட்ஸ் இருக்காங்க… என்ன இதுக்கே இடிஞ்சு போயிட்டயா..” என்று கேட்கவும், “ம்ஹூம்… சொல்லுங்க…” என்றாள்.

“ஃப்ரெண்ட்ஸ்னா சில முறை எல்லை மீறிப் பழகற ஃப்ரெண்ட்ஸ்… இதெல்லாம் எனக்குத் தப்பப் படலை…” என்று தெளிவாகச் சொல்லவும் அவளுக்கு முகம் சிவந்தது.

‘விளக்கமாக அவன் வாய்வழியாகவே கேட்டாயிற்று… ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சொல்லி விட்டான்… இது ஒரு வழிப்பாதை… திரும்பி வர முடியாத பாதை… இதே பாதையில் இவனோடு சேர்ந்து பயணிக்க வேண்டும்…’ என்று நினைத்து மௌனமாக அமர்ந்திருந்தவளின் முகச்சிவப்பைப் பார்த்ததும், அவன் முகம் மென்மையானது.

‘இது போன்ற பேச்சுக்களுக்கே இப்படி முகம் சிவந்தால் எப்படி?’ என நினைத்தவன், “ப்ரீத்தி! நம்ம ரெண்டு பேரோட கேரக்டரே வேற வேற… நீ நார்த் போல்னா நான் சௌத் போல்… ரெண்டும் கோஇன்சைட் ஆகவே முடியாது… உன்னால எனக்கேத்தமாதிரி மாறி என்னோட டேஸ்ன்ஸ் பண்றதெல்லாம் நடக்குமான்னே தெரியலை… அதுவுமில்லாம, இங்க எஸ்டாப்ளிஷ் பண்ணிட்டிருக்கற வொர்க்கையெல்லாம் பார்த்துக்கறதுக்கு கரெக்டான ஆளை செட் பண்ணிட்டு நான் கிளம்பிடுவேன்… அம்மாவும், நீயும் நினைக்கற மாதிரி இண்டியாலையே இருக்கற ஐடியா எனக்கு இல்லை…” என்று தோளைக் குலுக்கி, பேச்சை நிறுத்தினான்.

“நான் ஒண்ணு சொல்லவா?”



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

"ம்ம்…" என்றவனிடம், "நாம ரெண்டு பேருமே ஃபர்ஸ்ட் டைம் மீட் பண்ணினப்ப நடந்ததையே மனசில வச்சிருக்கோம்… நான் தாத்தாவுக்காக மேரேஜ்கு ஒத்துகிட்டேன்… நீங்க அம்மாவுக்காக ஓகே சொல்லிருக்கீங்க… என்னை மாத்திடலாம்னு நீங்களும், நீங்க மாறிடுவீங்கன்னு நானும் நினைச்சிட்டிருக்கோம்… மாத்தி மாத்தி இப்படிப் பேசிட்டே இருந்தா, எதுக்காக சரின்னு சொல்லி இவ்ளோ தூரம் வந்தோமோ, அதுக்கு அர்த்தம் இல்லாமப் போயிடும்…. பெரியவங்க ரெண்டு பேருமே இன்னைக்கு ரொம்ப சந்தோசமா இருக்காங்க… அவங்க சந்தோசத்தைக் கெடுக்கற மாதிரி நடந்துக்க வேண்டாம்…

முதல் நாள்லையே ஏன் மறுபடியும் வெறுப்பை வளர்த்துக்கணும்… நடந்ததை மறக்க ட்ரை பண்ணுவோம்… அதுவரைக்கும் நார்மலா மத்தவங்ககிட்டப் பேசற மாதிரி எங்கிட்டேயும் பேச ட்ரை பண்ணுங்க… முடியலைன்னா பிரிஞ்…" என்று சொல்ல வந்தவள், சொல்லவிருப்பதன் விபரீதத்தை உணர்ந்து பேச்சை நிறுத்தினாள்.

அவன் எதுவும் பேசாமல் இருக்கவும், "யோசிச்சுப் பாருங்க… குட் நைட்…" என்று சொல்லிக் கிளம்புகையில், "நீ சொல்றதும் ஒரு வகையில சரிதான்… ட்ரை பண்ணலாம்… குட் நைட்… போகும் போது டோரை க்ளோஸ் பண்ணிட்டுப் போ…" என்றான்.

'இந்த அளவிற்காவது ஒத்துக் கொண்டானே… வருகிற நாட்களில் நடப்பது நடக்கட்டும்' என்று எண்ணி அறைக்கதவைச் சாத்திவிட்டு வெளியேறினாள்.

படுக்கையில் படுத்த பின்னும் உறக்கம் வருவதாயில்லை. வேட்கையுடன் நெருங்கிய சித்ரஞ்சனின் முகமே, மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்தது.

உதடுகளில் வந்து கோலமிட்ட அவன் விரல்களின் ஸ்பரிசத்தை எண்ணி உடல் சிலிர்த்தது.

'இதென்ன புதுவித அனுபவம்… முதல் முறை கட்டுக்கடங்காக் கோபத்தோடு அவனை அறைந்துவிட்டு, இப்போது ஒரு நொடியாயினும் அவன் தொடுகையில் சிலிர்ப்பது எப்படி? அவனுடைய மனைவியாக உணரத்தொடங்கி விட்டேனா… இல்லையே, அவன் நெருக்கத்தில் இருக்க முடியாமல்தானே விலக்கினேன்…' என்று நிகழ்ந்தவைகளில் மனம் சுழல, உறக்கம் நெருங்குவதாயில்லை.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சித்ரஞ்சனும் கைகளைத் தலையின் பின்புறம் கோர்த்து சிந்தனையில் அமர்ந்த்திருந்தான்.

‘கோபம் இருந்த போதும், ப்ரீத்தியைத் தன்னால் விலக்க முடியவில்லை… எத்தனை பெண்களை உணர்ந்திருந்த போதும், அவளைத் தொட்ட அந்த நொடியில் வந்த சிலிர்ப்பு எதனால்? கோபத்திற்குக் காரணம் அவள் விலகிப் போனது…’ என்று தெளிவாகப் புரிந்தது.

கூசிச் சிலிர்த்த பட்டான சருமமும், அவன் தொட்ட போது விழிகளை முத்தமிட்ட இமைகளும், விரல்களின் ஸ்பரிசத்தில் துடித்த உதடுகளும், மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து நித்திரையைத் தொலைத்தன. வேட்கை மட்டும் குறைவதாக இல்லை.

இது நாள் வரை, வீட்டில் செய்யாத காரியமாக, வாங்கி வைத்திருந்த மதுக் கோப்பையை எடுத்துத் தொண்டையில் சரித்தான். ஃப்ரிட்ஜில் ஐஸ் துண்டுகளைத் தேடிய போது இல்லாது போகவே, எரிச்சலுடன் ஃப்ரிட்ஜின் கதவை மூடினான்.

அப்போது ‘பால்கனியிலாவது சிறிது நேரம் உட்காரலாம்’ என்று வெளியே வந்த ப்ரீத்தி, அவன் நின்றிருந்த கோலத்தையும், மது வாடையிலும் திகைத்து நின்றாள்.

“தனக்குப் பிடிக்காது என்று தெரிந்ததால், வீட்டிற்குக் குடித்துவிட்டு வரமாட்டான்” என்று யசோதா பலமுறை பெருமையாகச் சொன்ன விஷயம் நினைவிற்கு வந்தது.

‘வீட்டிலேயே குடிக்கிறான் என்றால், மனது சரியில்லையோ என்று நினைத்தவள், “ஏதாவது வேணுமா… ஃப்ரிட்ஜ்ல தேடறீங்க” என்றாள்.

“ஐஸ் க்யூப்ஸ் இருக்கானு பார்க்க வந்தேன்… இங்க இல்லை…”

‘இன்னும் இரவு உணவு உண்ணவேயில்லை… வெறும் வயிற்றில் குடிக்குமளவு தான் அவனை விலக்கியது பாதித்திருக்கிறதா?’ என்று தவிப்புடன் நினைத்தாள்.

கீழிறங்கிச் சென்றவள், ஹாட் பாக்கில் வைக்கப்பட்டிருந்த உணவுகளில், இட்லியையும் சாம்பாரையும் மட்டும் எடுத்துக் கொண்டு, யோசனையுடன் ஐஸ் க்யூப்ஸையும் எடுத்துக் கொண்டு திரும்பினாள்.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்று, “ஃபுட் இதில எடுத்திட்டு வந்திருக்கேன்… நைட் பசிச்சாச் சாப்பிட்டுக்கங்க…” என்று சொல்லி வைத்துவிட்டு, “அப்புறம் ஐஸ் க்யூப்ஸ்…” என்று அவனிடம் நீட்டவும், ஆச்சர்யத்தோடு வாங்கிக் கொண்டான்.

‘ஏன்? எதற்கு?’ என்று தோண்டித் துருவாமல், அவளுக்குப் பிடிக்கவில்லை என்ற போதும், தனக்காகச் செய்யும் செய்கை மனதை ஏதோ செய்தது.

‘கோபத்தில் அவளை விட்டு விலக்கிப் பேசாமல் இருப்பது சாத்தியமில்லை’ என்ற உண்மை மனதிற்குப் புரிந்தது.

“தூங்கலையா…” என்று கேட்க, “ம்ஹூம்… தூக்கம் வரலை…” என்று பதில் சொன்னாள்.

“எனக்கும் தூக்கம் வர்ற மாதிரி இல்லை… தனியா ட்ரிங்க்ஸ் எடுத்துக்கவும் போர் அடிக்குது… கொஞ்சம் கம்பெனி கொடு ப்ரீத்தி…”

கண்களில் அதிர்ச்சியோடு பார்க்கவும், சிரித்தவாறு “உன்னையும் சேர்த்துத் தண்ணியடிக்கக் கூப்பிடலை… தூக்கம் வரலைன்னா கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாம்… உனக்கு அப்ஜெக்ஷன் இல்லைன்னா உட்காரு…” என்றான்.

மது வாசனை பிடிக்கவில்லை என்ற போதும், அவன் பேச விரும்புவது புரிய, “ம்ம்… சொல்லுங்க…” என்றாள்.

“எதுக்கு இப்படி ஷாக் ஆன… டிஸ்கோல அன்னைக்கே பார்த்தையல்ல… இப்பத்த லேடீஸ் எல்லாம் என்னையே தூக்கி சாப்பிடுவாங்க… அதுவும் குளிர்ல இது இல்லைன்னாத் தூக்கமே வராது…”

இயல்பாகப் பேசத் தொடங்கவும், பதில் சொல்வது எளிதாக இருக்கவே, “உங்க ஐட்டத்தை நீங்களே வச்சுக்கங்க… எனக்கொண்ணும் வேணாம்…” என்றாள்.

“எதுக்கும் ட்ரைப் பண்ணிப் பாறேன்… சங்க காலத்தில ஒரு பாட்டி இருந்தாங்களே…” என்று யோசித்தவன், “ஆங்… ஔவையார்… அவங்க கூடக் குடிச்சிருக்காங்களாம்… நீயும் பழகிட்டா உனக்கு இன்னும் நல்லா எழுத வரலாம்…” என்று சொன்னான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

"இதென்ன கதை… யார் சொன்னாங்க… நேர்ல பார்த்த மாதிரி சொல்றீங்க…" என்று கிண்டலாகக் கேட்டுவிட்டு, 'இவனிடம் இவ்வளவு இயல்பாகப் பேச முடிகிறதே' என்று வியந்தாள்.

"அதானே…. நம்ப மாட்டயே… தமிழர் நாகரிகமும் பண்பாடும் எடுத்துப் படிச்சுப் பாரு…" என்று சொல்லவும், அவளது ஆச்சர்யப் பார்வையைப் பார்த்துவிட்டு, "அதெல்லாம் படிச்சிருக்கேன்னு பார்க்கறயா… எல்லாம் எங்க அம்மாவோட உபயம் தான்… நம்ம கல்ச்சரைப் பத்தித் தெரிஞ்சுக்கோ தெரிஞ்சுக்கோன்னு சொல்லி புக்கைக் கொடுத்து தொந்தரவு பண்ணிட்டே இருந்தாங்க… படிக்காம விட மாட்டாங்கன்னு சும்மா புரட்டிப் பார்த்தேன்… அதில தான் அதியமான் நிறைய கள் இருந்தா ஔவையாருக்கும் கொடுப்பார்னு போட்டிருந்தது…" என்றான்.

"அதெப்படி ரஞ்சன், இந்த மாதிரி விஷயம் மட்டும் கரக்டா உங்க கண்ணுக்குப் படுது… நானும் படிச்சிருக்கேன்… எனக்கு நினைவிலையே இல்லை… அந்தக் காலத்தில வேற ஏதாவது வார்த்தையைக் குறிக்கக்கூட கள்னு யூஸ் பண்ணிருக்கலாம்… அன்னப் பறவைக்கு ஆப்போசிட் நீங்க… அதுதான் பால்ல தண்ணியைக் கலந்து வச்சா, பாலை மட்டும் குடிச்சிட்டு தண்ணியை வச்சிடுமாம்… நீங்க இருக்கற நல்லதெல்லாம் விட்டுட்டு இது மாதிரி ஒண்ணு ரெண்டை நல்லா ஞாபகம் வச்சிருக்கீங்க…" என்றாள்.

'அதிகப்படியாகப் பேசிவிட்டோமோ?' என்று உதடுகளைக் கடித்துக் கொள்ளவும், கிண்டலாக எடுத்துக் கொண்டு, அவனும் பதில் கொடுக்கத் தொடங்கினான்.

'எவ்வளவு நேரம் பேசினோம்' என்று தெரியாமல், பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு நேரம் செல்வதே தெரியவில்லை. சண்டையிடும் அளவுக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்த போதும், சளைக்காமல் ஒருவரையொருவர் வாரிக் கொண்டனர்.

நீண்ட நேரத்திற்குப் பிறகு, "ரொம்ப லேட் ஆச்சு… தூங்கலாம்…" என்று சொல்லி விட்டு எழுந்து சென்ற ப்ரீத்தியின் மனது லேசாக இருந்ததென்றால், சித்ரஞ்சனின் மனதோ சிறகடித்துப் பறந்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

‘இரவின் தனிமையில், ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, மனதால் இத்தனை இதத்தை உணர முடியுமா?’ என்று யோசித்தவாறே படுக்கையில் சரிந்தான்.

## 17

‘**தா**ன் பேசியது எவ்வளவு பெரிய தவறு?’ என்று வேதனையுடன் வரவேற்பறையில் அமர்ந்திருந்தாள் ப்ரீத்தி.

‘எதற்காகத் திருமணத்திற்குச் சம்மதம் சொன்னேன்? ஆயுள் முழுக்க அவனுடன் தன்னைப் பிணைத்துக் கொள்ளத் தானே? திருமணம் என்ற பந்தத்தைப் பற்றி நம்பிக்கை இல்லாதவன், பிரிவைப் பற்றிச் சொல்லவே இல்லை. அத்தனை கோபத்திலும் பிரிவு என்ற வார்த்தையைச் சொல்லாமல் யூகத்திற்கு விட்டுவிட்டான்.

ஆனால் தான் செய்தது என்ன? இல்லையென்றால் பிரிவைப் பற்றி யோசிக்கலாம் என்று மனதில் எப்படித் தோன்றியது… திருமணமான முதல் நாளே, இப்படி நினைத்தது எவ்வளவு பெரிய தவறு… தன்னுடைய தன்னம்பிக்கை எங்கே போனது… உண்மையில் தன்னை விட திருமண பந்தத்தை அவன் தானே மதிக்கிறான்… முதலில் கணவன் என்ற எண்ணத்தை ஒவ்வொரு நொடியும் மறக்காமல், வார்த்தைகளை விட வேண்டும்…’ என்று தன்னையே நொந்து கொண்டிருந்தாள்.

“ஹாய்! சீக்கிரமே எழுந்திருச்சாச்சு போல… மாம் எங்க ப்ரீத்தி…” என்று கேட்டவாறு அருகில் அமர்ந்தான் சித்ரஞ்சன்.

“என்ன கேட்டீங்க?” என்று கனவிலிருந்து விழித்தவள் போலக் கேட்கவும், “பேப்பர் படிக்கறேன்னு நினைச்சா, உட்கார்ந்திட்டே தூங்கிட்டிருக்கையா? உங்க நியூஸ்பேப்பரைப் படிச்சாத் தூக்கம் வர்ற மாதிரியா இருக்கு… அம்மா எங்கேன்னு கேட்டேன்…” என்றான்.

“தூக்கம் எல்லாம் இல்லை… எதோ யோசனைல இருந்தேன்… அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்களாம்… உங்களுக்கு காஃபியா டீயா…”

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“காஃபி குடிச்சிட்டுத்தான் வந்தேன்… இன்னைக்கு என்ன ஸ்பெஷல் நியூஸ்?” என்று கேட்டு விட்டு, முகத்தை ஊன்றிக் கவனித்தவன், “இப்ப உன்னோட கெட்-அப் ரொம்பக் கரக்டா இருக்கு…” என்றான்.

கையில் வைத்திருந்த நாளிதழை அவனிடம் கொடுத்து, “புரியலை… என்ன கெட் அப்…” என்றாள்.

“கண்ணாடில உன்னோட ஃபேஸைப் பார்க்கவே இல்லையா…”

நெற்றிக்குப் பொட்டிடும் போது பார்த்தது நினைவிற்கு வர, குழப்பத்துடன் “பார்த்தேனே… டிஃப்ரெண்டா எதாவது இருக்கா?” என்று முகத்தைத் தடவியபடியே கேட்டாள்.

“மேரேஜ்கு அடுத்தநாள் எப்படி இருக்கணுமோ அப்படி இருக்கு…”

“ம்ஹூம்… என்ன சொல்ல வரீங்கன்னே புரியலை…”

நமட்டுச் சிரிப்புடன், “தூக்கமே இல்லாத ஐஸ்… பார்த்தாலே டயர்டாத் தெரியுது… இப்ப உன்னைப் பார்க்கறவங்க என்ன நினைப்பாங்கன்னா…” என்று சொல்ல வந்ததை முடிக்காமல், முகத்தைப் பேப்பரில் புதைத்துக் கொண்டான்.

ஒரு நொடி புருவங்களைச் சுருக்கி யோசித்தவள், அடுத்த நொடி ‘சூடாகிச் சிவக்கும் கன்னங்களை என்ன செய்வது?’ என்று புரியாமல் தவித்தாள்.

‘நல்ல வேளை இவன் கவனிக்கவில்லை… சொல்வதைச் சொல்லிவிட்டு மும்மரமாகப் படிக்கிறான்…’ என்று நினைக்கையில், இரசனையுடன் புருவங்களை உயர்த்தி, “இப்ப இருக்கற ஃபேஸ் ரொம்ப ரொம்ப நல்லாருக்கு… ஸோ க்யூட்…” என்று சொன்னவனை, நிமிர்ந்து பார்க்க முடியவில்லை அவளால்.

அழகுசாதனப் பொருட்களின் உதவியோடு சிவந்திருக்கும் முகத்தையே பார்த்து பழக்கப் பட்டவனுக்கு, இயற்கையான அவளது உணர்வுகள் இரசிக்க வைத்தன.

முகம் சிவந்திருந்த ப்ரீத்தியையும், ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மகனையும் பார்த்தவாறு உள்ளே நுழைந்த யசோதாவிற்கு, மனம் மகிழ்ச்சியில் நிறைந்தது.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

“ரெண்டு பேரும் சாப்டீங்களா?” என்று கேட்கவும், ‘அம்மா வருவதைப் பார்த்துத்தான் இது போலப் பேசியிருக்கிறான்’ என்று நினைத்த ப்ரீத்தி, புன்முறுவலுடன் “லேட்டா எழுந்திருச்சோம்மா… இப்பதான் காஃபியே குடிச்சார்” என்றாள்.

கோயிலிலிருந்து கொண்டு வந்திருந்த குங்குமத்தை அவளது நெற்றியில் வைத்தவர், “பிரசாதம் எடுத்துக்க ப்ரீத்தி…” என்று கொடுக்கவும் வாங்கிக் கொண்டாள்.

அவர் சமையலறைக்குள் செல்வதைப் பார்த்து, “அம்மா… இவருக்கு வைக்கலை…” என,

“ரஞ்சனுக்குதானே… இன்னமும் குளிக்காமக் கூட உட்கார்ந்திருக்கான் பாரேன்… குளிச்சிருந்தாலும் ஃபார்மாலிட்டிக்குக் கூட வச்சுக்க மாட்டான்… எனக்கு அப்படியே ஆப்போசிட்… நான் கோயிலைக் கண்ணுல பார்த்தாலே கன்னத்தில போட்டுப்பேன்… இவன் அந்தப் பக்கம் கூடத் திரும்ப மாட்டான்…”

அதுவரை பேப்பரில் கவனமாக இருந்தவன், “மாம்! காலங் கார்த்தால ஆரம்பிச்சிட்டீங்களா… உங்க நம்பிக்கையை உங்களோட வச்சுக்கங்க… என்னைப் பொறுத்த வரைக்கும் கடவுள் இல்லை… இல்லாத கடவுள் மேல நீங்க நம்பிக்கை வைக்கறீங்க, நான் இருக்கற மனுஷங்க மேல நம்பிக்கை வைக்கறேன்…”

“நீங்க கோயிலுக்குப் போய் பாலாபிஷேகமும், நெய்யாபிஷேகமும் பண்றேன்னு சிலையில ஊத்தி வேஸ்ட் பண்றீங்க… நான் அதை இல்லாத மனுஷங்களுக்குக் கொடுங்கன்னு சொல்றேன்… கோடி கோடியா உண்டியல்ல கொட்டறதுக்கு நாலு பேரைப் படிக்க வைக்கலாம்… அதைச் சொன்னாப் புரிஞ்சுக்க மாட்டீங்கறீங்க…” என்றான்.

“பார்த்தையா ப்ரீத்தி… இதுக்குத் தான் பிரசாதத்தை இவன் பக்கமே கொண்டு போகலை…”

அவன் பேசுவதைக் கேட்க, ப்ரீத்திக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவளுக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம். அண்ட சராசரங்களையும் சரியாக இயங்க வைக்கும் சக்தியை ‘கடவுள்’ என்று நம்புபவள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இத்தனை நம்பிக்கைகளுக்கு இடையிலும், அவன் சொன்ன விஷயங்கள் மறுக்க முடியாத உண்மை. ஏழைகளுக்காக சிந்திப்பவன் இவன். மனிதர்களை நேசிப்பவன்.

கண்ணிமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவனுடைய புதிய முகம் புலப்பட்டது.

அவளைத் திரும்பிப் பார்த்து, கண்களாலேயே 'என்ன?' என்று கேட்கவும், 'ம்ஹூம்.. ஒண்ணுமில்லை…' என்பது போலத் தலையசைத்தாள்.

"சொல்ல நினைக்கறதைச் சொல்லிடணும்… இல்லைன்னா என்னையே பார்த்திட்டிருக்கறதை நான் வேற மாதிரி நினைச்சுப்பேன்… நான் என்ன நினைக்க ப்ரீத்தி… உன்னை அட்ராக்ட் பண்ற மாதிரி இருக்கேனா…." என்று வம்பாகக் கேள்வியைக் கேட்டான்.

'பெண்களை வசீகரிப்பவன்' என்பது முதல் சந்திப்பிலேயே தெரிந்து கொண்ட விஷயம் தான். பல பெண்களின் பார்வை அவன் மேல் இருந்ததை அன்றே கவனித்திருந்தாள்.

அவன் கேலிப் பேச்சைக் கண்டு கொள்ளாமல், "நம்மால புரிஞ்சுக்க முடியாத ஒரு விஷயத்தை இல்லைன்னு சொல்ல முடியுமா ரஞ்சன்… கெமிக்கல் ரியேக் ஷன்ஸ் எல்லாமே நம்ம கண்ணுக்குத் தெரியறதில்லை… அதுக்காக ரியேக்ஷனே இல்லைன்னு சொல்லிட முடியுமா… கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ விஷயத்தை உணர்றோமே, அதுக்கு என்ன அர்த்தம்… நம்மைச் சுத்தி இருக்கற காத்து நம்ம கண்ணுக்குத் தெரியலை… பட் நாம அதை ஃபீல் பண்றோம் தானே… கண்ணுக்குத் தெரியாததால காத்தே இல்லைன்னு சொல்லிட முடியுமா… அது போலதான் கடவுளும்… பார்க்க முடியலைன்னாலும் உணர முடியும்…"

"ப்ரீத்தி! நீ சொல்றது எல்லாமே நேச்சர் அண்ட் சயின்ஸ்… அதுக்கும் கடவுளுக்கும் ஏன் முடிச்சுப் போடற…"

"என்னைப் பொறுத்தவரை இயற்கையும் கடவுள்தான்… எல்லாத்திலையும் அவர் இருக்கார்… நல்லது நினைக்கற, செய்யற மனுஷங்க எல்லாத்திலையும் இருக்கார்… பூமி சுத்தறது, மழை பெய்யறது, உலகம் இயங்கறது எல்லாம் எதனால… ஒரு செகண்ட் இந்த பூமியோட ரொடேஷன் மாறிப் போச்சுன்னா நாம எல்லாம் என்ன ஆவோம்னு சொல்ல முடியுமா… எல்லாத்தையும் எதோ ஒரு பவர்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கண்ட்ரோல் பண்ணுது… அந்தப் பவர் தான் கடவுள்னு நம்பிக்கை வச்சிருக்கோம்… அந்த நம்பிக்கைலதான் தப்புப் பண்றவங்க பயப்படறாங்க… நேர்மையா இருக்க நினைக்கறாங்க…”

“ம்ம்… நான் கடவுள், நீ கடவுள், எல்லாமே கடவுள்னுதான் சொல்லுவீங்க… கடவுளுக்கு எத்தனை பேர் பயப்படறாங்க ப்ரீத்தி… கடவுள் பேரைச் சொல்லி ஊரை ஏமாத்தறவங்கதான் நிறையப் பேர் இருக்காங்க… சாமியார்ங்கற போர்வைல லீலைகள் நடத்தற ஆட்கள், வாங்கற லஞ்சத்தையும், அடிக்கற கொள்ளையையும் கடவுள்னு சொல்றவருக்கே ஷேர் கொடுக்கற ஆட்கள், கடவுள் பேரைச் சொல்லி சாப்பிடற மனுசங்க இவங்க தான் ஜாஸ்தி…”

“ஒரு சிலர் தப்புப் பண்றாங்கன்னா ஒட்டு மொத்தமா நம்பிக்கையா வாழறவங்களையும் தப்பு சொல்வீங்களா…”

“ப்ரீத்தி… இந்த வேர்ல்ட் ஃபார்ம் ஆகக் காரணமான பார்ட்டிக்கிள்சக் கண்டுபிடிச்சு எப்படி ஃபார்ம் ஆச்சுன்னு ப்ரூஃப் பண்ணிட்டிருக்காங்க… சயின்ஸ் எங்கயோ போயிட்டிருக்கு… பூமி ஏன் சுத்துது எப்படி சுத்துது, மழை ஏன் எப்ப எப்படிப் பெய்யும், எல்லாத்துக்கும் சயின்ஸ்ல விளக்கம் இருக்கு… அதுக்கெல்லாம் கடவுள் காரணம்னு குருட்டுத் தனமா நம்பினா எந்த டெக்னாலஜியும் வளராது… பஜனை பண்ணிட்டே வாழ்ந்து முடிச்சிடலாம்…”

“சயின்ஸ்கும் ஒரு லிமிட் இருக்கு ரஞ்சன்… அதால விளக்கம் சொல்ல முடியாத கண்டு பிடிக்க முடியாத விஷயங்களும் இருக்கு… எவ்ளோ டெக்னாலஜி வளர்ந்தாலும் மனுஷனை அன்போட, பண்போட வாழ வைக்கறது கடவுள் நம்பிக்கைதான்…”

என்னைப் பொறுத்தவரைக்கும் கடவுள்னு எப்பச் சொல்ல ஆரம்பிச்சாங்களோ அப்பவே பிரச்சனையும், வேறுபாடுகளும் வளர்ந்திடுச்சு… கடவுள் இப்படி இருப்பார், அப்படி இருப்பார்னு யார் சொன்னாங்களோ அவங்களையெல்லாம் கடவுள்னு கும்பிட ஆரம்பிச்சு ரிலிஜியன் பெருகிப் போச்சு… கிருஷ்ணர், ஏசு, புத்தர் யாருமே இதுக்கு விதிவிலக்கு இல்லை… மதங்கள்ல ஃபாலோயர்ஸ வச்சு சண்டை போட்டு ப்ரான்ச்சஸ் உருவாயிடுச்சு… தலைல இருந்து தோன்றினவன், தோள்ல இருந்து தோன்றினவன், கால்ல இருந்து தோன்றினவன்னு புருஷ சுக்லத்தில என்னைக்கு சொன்னாங்களோ அப்பவே ஜாதி உருவாயிடுச்சு… என்று தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்கையில்,



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

“ரெண்டு பேரும் அப்புறமா ஆர்க்யூ பண்ணுங்க… ப்ரேக்ஃபாஸ்ட் டைம் முடியவே போகுது… சாப்பிட்டு என்னவோ பண்ணுங்க…” என்று யசோதா சொன்னார்.

“டைம்கு கரெக்டா ஞாபகப்படுத்த நீங்க இருக்கீங்க மாம்… சாப்பிட்டு அப்புறமா கண்டினியூ பண்ணலாம் ப்ரீத்தி… எனக்குக் கொஞ்சம் வொர்க் இருக்கு… வெளில கிளம்பணும்…” என்றான்.

யசோதா பார்வையிலிருந்து மறையவும், “ரஞ்சன்! ஒண்ணு சொல்லவா?” என்று கேட்டாள்.

“இவ்ளோ நேரம் எதுவுமே சொல்லாத மாதிரி இந்தக் கேள்வி எதுக்கு ப்ரீத்தி… எவ்ளோ வேணும்னாலும் சொல்லு, உன்னோட வாய்ச்சண்டை போட எனக்கு ரொம்ப இண்ட்ரெஸ்டிங்கா இருக்கு…”

“டெய்லி தூங்கும் போது எதுக்கு அலாரம் வைக்கிறோம்…”

“இதென்ன கேள்வி… மார்னிங் கரெக்ட் டைமுக்கு எழுந்திரிக்கத்தான்…”

“நாளைக்குன்னு ஒண்ணு நிச்சயமா வருமா… அதை நம்மால சொல்ல முடியுமா… அடுத்த நிமிஷம் என்ன நடக்கும்னே நமக்குத் தெரியாது… ஆனாலும் நம்பிக்கையோட அலாரம் வைக்கறோமே… அது போலதான் வாழ்க்கையும்… அதான் எல்லாரும் கடவுளை நம்பறோம்… உங்களுக்கு நம்பிக்கை இல்லைனாலும், அம்மாவோட நம்பிக்கையை மதிக்கலாமே… பிரசாதத்தை எடுத்தா அவங்களுக்கு ஒரு திருப்தி… அந்தத் திருப்தியைக் கொடுக்கலாமே…” என்று கேட்டாள்.

“நீ சொல்ற விஷயத்தை என்னால ஏத்துக்க முடியலை… ஆனா, மம்மி திருப்திக்காக இனிமேல் ட்ரை பண்றேன்… அப்புறம் இதைப்பத்திப் பேசலாம்… டென் மினிட்ஸ்ல குளிச்சிட்டு வந்திடறேன்… நீங்க ரெண்டு பேரும் சாப்பிட ஆரம்பிங்க… வந்து ஜாயின் பண்ணிக்கறேன்…” என்று சொல்லிச் சென்றான்.

இந்த அளவிற்காவது, ‘சரி’ என்று சொல்கிறானே, என அவள் மனதிற்கு நிறைவாக இருந்தது.

“என்ன ப்ரீத்தி! என்ன சொல்றான்… அவனோட பேசி ஜெயிக்கணும்னா ஒரு வேளை சேர்த்துச் சாப்பிடணும்… இது மாதிரியெல்லாம் எனக்குப் பேசத் தெரியாது… ட்ரை பண்றேன்னு சொல்லிட்டுப் போறானே அதுவே பெரிய விஷயம்… அதெல்லாத்தையும் விட இந்த வீட்ல பேச்சுச் சத்தம் கேட்டே நாளாச்சு… மஹி



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

இருந்தா மட்டும் தான் கலகலன்னு இருக்கும்... காலைல எழுந்திரிச்சா போன்ல பேசுவான், இல்லைன்னா லேப்டாப் எடுத்து வச்சிருப்பான்... சாப்பிடறப்பக் கூட எதாவது வொர்க் பண்ணிட்டே இருப்பான்... பல வருஷங்களுக்கு முன்னாடி பார்த்த ரஞ்சனை இன்னைக்குப் பார்க்கறேன்... அதுவே எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு...” என்று நெகிழ்வுடன் கூறினார்.

குளித்துவிட்டு வந்தவுடன், மூவரும் சேர்ந்து சிறு சிறு பேச்சுக்களோடு உணவருந்தியபோது நிறைவாக இருந்தது.

“எப்பருந்து நீ ஆ∴பிஸ் போகணும் ப்ரீத்தி...” என்று கேட்கவும்,

“இன்னும் ரெண்டு நாள் கழிச்சு போகட்டுமாம்மா...” என்று யசோதாவிடம் திரும்பிக் கேட்கவும், “சரி ப்ரீத்தி... ஆனா அப்பா வந்ததும் ரிஷப்சனைப் பத்திப் பேசி முடிவு பண்ணிடலாம்... அந்த சமயம் மட்டும் ஒன் வீக் லீவ் எடுக்கற மாதிரிப் பார்த்துக்க...” என்றார்.

இருவரிடமும் கிளம்புவதாகச் சொல்லியவன், ப்ரீத்தியிடன் கண் ஜாடையில் உடன் வருமாறு அழைக்க, அவனைப் பின் தொடர்ந்தாள்.

“டாடி இன்னைக்கு வர்றார்... ஏர் போர்ட்லையே பிக் அப் பண்ணிட்டு, நேர்ல பார்த்துப் பேசிடறேன்... மம்மி முன்னால எந்தப் பிரச்சனையும் வேண்டாம்னு நினைக்கறேன்... அதனால நான் ஈவினிங் வர்றதுக்கு லேட் ஆகும்... இன்னும் வரலைன்னு அம்மா கேட்டா சமாளிச்சுக்க...” எனவும், அவளுக்குச் சிறு கவலை எட்டிப் பார்த்தது.

“மேரேஜ்ங்கறது இங்கே சாதாரண விஷயம் இல்லை ரஞ்சன்... உங்களுக்கு இதெல்லாம் சாதாரணமா இருக்கலாம்... அப்பாவுக்கு சொல்லாம நடத்தினது ரொம்பப் பெரிய தப்பு... உங்க மேரேஜ் பத்தின கனவுகள் எவ்வளவு அவருக்கு இருந்திருக்கும்... அவரை சமாதானப் படுத்துங்க... ஆர்க்யூ பண்ணாதீங்க...”

“ஹேய்! டோண்ட் வொர்ரி... வீட்டுக்குள்ள வரும் போது கோபமில்லாம வருவார்... ஈவினிங் மஹியும் வந்திடுவா... ஜாலியா இரு...” என்று சொல்லிவிட்டு, தலையைப் பிடித்துச் செல்லமாக ஆட்டிச் சென்றான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அவனது கனிவான அந்தச் சிறு செயல், மனதிற்குப் புத்துணர்ச்சி தருவதை உணர்ந்தாள். ஆண்டாண்டு காலங்களாக, அவன் இது போலவே விடைபெற்றுச் செல்வதும், தான் கையசைத்து வழியனுப்புவதுமான பிரம்மையில் நின்றிருந்தாள்.

## 18

“**அ**ட! கல்யாணப் பொண்ணு… அதுக்குள்ள ஆ.ஃபிஸ் வந்தாச்சா…” என்று ஆச்சர்யமாகக் கேட்டபடி எதிரில் வந்தான் பிரதாப்.

“என்ன செய்யறது பிரதாப்… இல்லைன்னா என்னோட பாஸ்கிட்ட யார் திட்டு வாங்கறது… ராகவன் சார்னா எவ்ளோ லீவ் வேணும்னாலும் தருவார்… புது பாஸ் ஒண்ணும் சரியில்லை…” என்று போலி சோகத்துடன் சொல்ல,

“மேரேஜ் ஆனா, பொண்ணுங்க அமைதி ஆயிடுவாங்கன்னு கேள்விப் பட்டிருக்கேன்… இங்க வாய் ஓவராப் போகுது போல…” என்று முகத்தை ஊன்றிக் கவனித்தவன், “ரெண்டு நாள்லையே நிறைய சேஞ்சஸ் தெரியுது ப்ரீத்தி… செம ஃப்ரெஷ்ஷா வந்திருக்க…” என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

மஹதியும் சரி, ரஞ்சனும் சரி இதையே அவ்வப்போது கிண்டலடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளிப்படையாக முகத்தில் என்ன தெரிகிறது?

“எத்தனை ரூபாக்குச் சேஞ்ச் தெரியுது பிரதாப்… ஆ.ஃபிஸ்குள்ள எண்டர் ஆனதில இருந்து எல்லாரும் இப்படியே கிண்டல் பண்ணிட்டிருக்கீங்க… என்னோட விஷயம் போகட்டும்… வொர்க் எல்லாம் எப்படி போகுது… சார் டெய்லியும் ஆ.ஃபிஸ் வரீங்க போல… இப்பதான் அப்பாவைப் பார்த்திட்டு வரேன்… ரொம்ப ஹேப்பியா ஃபீல் பண்ணினார்…”

“இன்னும் டூ மந்த்ஸ்கு ப்ராக்டீஸ் எதுவும் ஸ்டார்ட் பண்ணக் கூடாதுன்னு ஸ்ரிக்டாச் சொல்லிட்டாங்க… நார்மலா எல்லா வொர்க்குமே பண்றேன்… கார் ட்ரைவ் பண்ணும் போதெல்லாம் எதுவுமே தெரியலை… பட், கையைத் தோளுக்கு மேல கொண்டு போனா மட்டும் செம பெயின்… வேற என்ன பண்ண முடியும்… அதான் ரெகுலரா வர்றேன்… ஆ.ஃபிஸ் வந்தா ரொம்ப நல்லாருக்கு….” அது சரி, மேரேஜ் லைஃப் எப்படிப் போகுது…” என்று கேட்டவனின் குரலில் சிறு அக்கறை எட்டிப் பார்க்க,

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“ம்ம்… சூப்பர்பாப் போகுது… இப்பக் கொஞ்சம் வொர்க் இருக்கு… ஈவினிங் உங்க வீட்டுக்குத்தான் வரேன்… என்னோட திங்க்ஸ் எல்லாம் எடுக்கணும்… அப்படியே அம்மா, பாட்டி எல்லாரையும் பார்த்த மாதிரி இருக்கும்… போகும் போது பேசிட்டே போகலாம்…” என்று சொல்லிவிட்டு, அவளது அறைக்குச் சென்றாள்.

அவனிடம் சொன்னது போலவே வாழ்க்கை மகிழ்ச்சியோடு செல்கிறது. இத்தனை வருட காலத்தில் இல்லாத பிரத்தியோக அன்பு கிடைத்திருக்கிறது. ஆஸ்ரமத்தில் எல்லோருக்கும் பெரியவள் என்பதால், மற்றவர்களுக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்துதான் பழக்கம்.

யசோதாவின் அன்பு மழையிலும், மஹதியின் அன்பு மழையிலும் நனைந்து மனம் நெகிழ்ந்து போய் இருக்கிறது.

“அண்ணி! அண்ணி!” என்று வார்த்தைக்கு வார்த்தை அழைத்து, சுற்றிச் சுற்றி வரும் மஹதியை நினைக்கப் புன்னகை வந்தது. தேர்வுக்குத் தயார் செய்த போதும், ஓய்வு நேரங்களில் அன்பைக் காட்டத் தவறுவதில்லை.

தாய், தந்தையில்லாமல் வளர்ந்தவளுக்கு இன்னொரு தாயாக யசோதா கிடைத்திருக்கிறார். ரஞ்சன், தந்தையை எப்படிச் சரிசெய்தான் என்று தெரியவில்லை. வெளிப்படையாக எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளவில்லை அவர். வீட்டில் இருக்கும் குறைந்த நேரத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுகிறார்.

ரஞ்சனின் மேல் இருந்த கசப்புகள் எல்லாம் நீங்கி, அவனுடைய புதிய பரிமாணத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது அவளால். அவன் அருகில் இருக்கும் போது, மனதிற்கு இதம் ஏற்படுவதை மறைக்க முடியவில்லை.

அவனுடைய கருத்துக்களை விட்டுக் கொடுக்காமல் பிடிவாதமாக இருந்தாலும், பேசும் தருணங்களில் ஒவ்வொரு முறையும் நெருங்கி வருகிறான்.

இரண்டு நாட்களின் நினைவுகளை அசை போட்டபடி, அதிகப்படியான வேலைகளைச் செய்து முடிக்கும் போது, எப்போதும் கிளம்புவதை விட நேரம் அதிகமாகி இருந்தது.

“ப்ரீத்தி! கிளம்புவோமா… அப்புறம், பாஸ் நிறைய வேலை வாங்கறார்னு சொல்லுவ…” என்று பிரதாப் வரவே, பார்வையிட்ட பக்கங்களையெல்லாம் தொகுத்து, தனி ஃபைலில் போட்டுவிட்டுக் கிளம்பினாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அமைச்சர்கள் வாங்கிக் குவித்திருக்கும் சொத்து விவரங்களைச் சேகரித்து, அடுத்த இதழ் அச்சேறப்போகிறது. நிச்சயம் பெரும் எதிர்ப்புகளையும், சவால்களையும் சந்திக்க வேண்டியிருக்கும் என்று புரிந்தது.

அவள் காரில் ஏறியவுடனேயே, பிரதாப்பிற்கு முதன் முறை அவளை அழைத்துச் சென்ற பயணம் நினைவிற்கு வந்தது. அந்தப் பயணம் வாழ்க்கையின் பாதையை மாற்றிவிட்டதை நினைத்துப் பார்த்தான்.

“ப்ரீத்தி! ப்ராப்ளம் எதுவும் இல்லையே… மனசுக்குள்ள சின்னதா ஒரு பயம் இருந்திட்டே இருக்கு… கவலைப் படற மாதிரி எதுவும் இல்லையே… அவ்வளவு சீக்கிரம் மன்னிக்கவே மாட்டான்… அதான் ஒரு மாதிரி இருக்கு…”

“ஸ்மூத்தாப் போயிட்டிருக்கு பிரதாப்… முதல்ல கொஞ்சம் கோபத்தைக் காட்டினார், இப்ப ரொம்ப ஃப்ரெண்ட்லியாத்தான் பழகறார்… நோ ப்ராப்ளம்… அது சரி, உங்களுக்கும் அவருக்கும் என்ன பிரச்சனை… யூ.எஸ்.ல ஒரே யுனிவர்சிட்டில படிச்சதாச் சொன்னீங்க… அப்புறம் ஏன் பேசிக்கறதே இல்லை… இன்னொரு நாள் சொல்றேன்னு சொல்லிட்டு அப்படியே விட்டுட்டீங்க…”

“யார் மேல தப்புன்னு சொல்றது… என்று பெருமூச்சு விட்டவன், “நான் டென்னிஸ் ப்ராக்டீஸ் பண்றதுக்காகத்தான் யூ.எஸ்.ல கோர்ஸ் ஜாயின் பண்ணினேன்… நல்ல கோச் அமைஞ்சார்… டென்னிஸ்தான் எனக்கு எப்பவும் ஃபர்ஸ்ட், ஸ்டடீஸ் செகண்ட் தான்…

ரஞ்சன் அப்படியில்லை ப்ரீத்தி… எல்லாத்திலையும் நேம் வாங்கின ஸ்டூடண்ட்… பர்சனலா அவனைப் பத்தித் தெரியாட்டியும், அவனோட டேலண்ட்டைப் பத்தி நிறையப் பேர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன்… அவனைப் பார்க்காததுக்கு முன்னாலையே கேள்விப்பட்ட விஷயங்கள்ல இம்ப்ரெஸ் ஆயிருந்தேன்… முதன்முதல்ல ஒரு மேட்ச்ல தான் மீட் பண்ணினேன்… டென்னிஸ்ல அவன் தான் யுனிவர்சிட்டி சாம்பியன்… ஜஸ்ட் ஒரு கேமாதான் நினைச்சு ஜாலியா விளையாடுவான்… நானெல்லாம் உயிரைக் கொடுத்து விளையாடுவேன் அவனை ஜெயிக்க…

ரெண்டு பேருக்கும் காம்படிஷன் ஹெவியா இருக்கும்… தனித்தனியா எங்க ரெண்டு பேருக்குமே கேங் ஃபார்ம் ஆச்சு… அதுக்கப்புறம் விளையாட்டை நாங்க



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சீரியஸா எடுத்துகிட்டோம்… மாத்தி மாத்தி சண்டை போட எங்களைச் சுத்தி இருந்தவங்க காரணமாயிட்டாங்க…

ரெண்டு கேங்குக்கும் சுத்தமா ஆகாமப் போயிடுச்சு… விரிசல் விழுந்து அது பெரிசாயிட்டே போச்சு… நான் வெறியோட ஆடுவேன்… நான் ஜெயிச்சா என்னைச் சுத்தி இருக்கறவங்க அவனைக் கிண்டல் பண்ணுவாங்க… அவனோட ஃப்ரெண்ட்ஸும் அதே மாதிரிதான்… ஒரு முறை அடி தடி சண்டை நடக்கற அளவுக்குப் போயிடுச்சு… யாருமே விட்டுக் கொடுக்க ட்ரை பண்ணலை…

அவனைச் சுத்தி கேர்ள்ஸ் கூட்டமே இருக்கும்… அவங்க முன்னால தோத்துப் போறதை அவமானமா நினைக்க ஆரம்பிச்சான்… முக்கியமான ஒரு மேட்ச்ல, ஜெயிக்கறதுக்காக அம்பயருக்குப் பணம் கொடுத்திருக்கான்னு எவிடென்ஸோட சொன்னப்ப முதல்ல நான் நம்பலை… ரொம்ப நேர்மையானவன் ரஞ்சன்… சொன்ன பையனும் நல்லவன்… நம்பறதா வேண்டாமானு குழப்பத்தில இருந்தேன்…

மேட்ச் ஆரம்பிச்சதுமே அம்பயர் தப்புத் தப்பா பாயிண்ட்ஸ் கொடுக்க ஆரம்பிச்சிட்டார்… ராங் டெசிஷன்ஸ் நிறைய எடுத்ததில ரஞ்சன் ஜெயிச்சிட்டான்… அவனைச் சுத்தி இருந்தவங்க எல்லாம், நான் எதுக்குமே லாயக்கில்லைன்னு ரொம்பப் பேசினாங்க… அதில வின் பண்ணினா நெக்ஸ்ட் லெவெல்ல டாப் பிளேயர்ஸோட விளையாட சான்ஸ் கிடைக்குங்கற நிலைமை…

தோத்துப் போயிட்டோமேங்கற கோபத்தில, பணம் கொடுத்து சீட் பண்றதுக்கு விளையாடாம இருக்கலாம்னெல்லாம் கொஞ்சம் அவமானப் படுத்தற மாதிரிப் பேசிட்டேன்… இது போலச் செய்யலைன்னு ரஞ்சன் சொன்னதை நான் கேட்கலை… எனக்குக் கிடைச்ச எவிடென்ஸ் எல்லாம் காட்டினேன்… அடுத்த மேட்ச் விளையாட முடியாதமாதிரி அவனுக்கு பனிஷ் பண்ணிட்டாங்க… அப்ப அவன் என்னைப் பார்த்த பார்வையை மறக்கவே முடியாது…” என்று சொல்லவும்,

“ரஞ்சனா… மேட்ச் பிக்ஸிங் அளவுக்குப் போவார்னா நம்பற மாதிரியே இல்லையே… அவர் கிட்ட நேர்மை இருக்கு பிரதாப்…” என்று கூறினாள்.

“அதான் நான் பண்ணின தப்பு ப்ரீத்தி… அந்த வயசில எனக்கும் உண்மை எதுன்னு ஆராய்ச்சி பண்ணத் தோணலை… அந்த மேட்ச் பிக்ஸிங்குக்குக் காரணம் இன்னொருத்தன்னும், எங்க ரெண்டு பேரையும் சண்டை போட வச்சு அதில குளிர்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

காய்ஞ்சிருக்காங்கன்னும் ரொம்ப லேட்டாத்தான் தெரிய வந்துது… அதுக்குள்ள நிறைய நடந்திடுச்சு…"

"உண்மை தெரிஞ்சதும் நீங்க எதுவும் பேசலையா?" என்று கேட்டாள்.

"ரெண்டு பேருக்குள்ள போட்டியும், சண்டையும் இருந்தாலும், ரஞ்சனை எனக்கு ரொம்பப் பிடிக்கும் ப்ரீத்தி… உண்மை தெரியாததுக்கு முதல்லையே அவன் கிட்டப் பேசினேன்… அவமானப் படுத்தற மாதிரிப் பேசின அதிகப்படியான பேச்சுக்களை மன்னிச்சுக்கச் சொன்னேன்… அவன் பதிலே சொல்லாமத் திரும்பிப் போயிட்டான்… தப்புப் பண்ணினவனே முகம் திருப்பிட்டுப் போறான், எதுக்குப் பேசணும்னு நானும் விட்டுட்டேன்…

கோர்ஸ் முடியும் போதுதான், அவன் மேல தப்பு இல்லைன்னு தெரிஞ்சுது… அவனோட வாய்ஸ் மாதிரியே செட் பண்ணி யாரையோ பேசச் சொல்லி ரெகார்ட் பண்ணிருக்கற விஷயம் தெரியவந்துச்சு… அம்பயரும் அவன் பணம் கொடுத்திருக்கான்னு பொய் சொல்லிருக்காருங்கறது தெரிய வந்துச்சு… ரொம்ப வருத்தப்பட்டேன்… பலமுறை ஸாரி கேட்டேன்…

எல்லா உண்மையும் அவனுக்கு முதல்லையே தெரியுமாம்…. ஆனாலும் அவன் என்னோட பேசலை… தப்பு அவன் மேல இல்லைன்னு வெளிப்படையாச் சொல்லிருக்கலாம்… நானா தேடிப் போகும் போதெல்லாம் என்னை அவாய்ட் பண்றான்னு கடுப்பில நானும் விட்டுட்டேன்… காலேஜ் டேஸ்ல இது மாதிரி சண்டைகள் சகஜம்… மெசூரிட்டி இல்லாத ஸ்டேஜ் அது…

ரொம்ப வருஷம் கழிச்சு டிஸ்கொதேலதான் மறுபடி மீட் பண்ணினோம்… நிறையப் பொண்ணுங்க அவனோட பணத்துக்கு மட்டுமில்லாம, அவனுக்காகவும் சுத்தி வருவாங்க… ஈஸியா அட்ராக்ட் பண்ணிடுவான்… ரெண்டு வருஷமா பெண்கள் விஷயத்தில எல்லை மீறிப் பழகறதாக் கேள்விப்பட்டேன்… அன்னைக்கு உங்க ரெண்டு பேரோட பார்வையைப் பார்த்ததும் கவலையா இருந்துச்சு… உன்னை பிரம்மிச்சுப் போய்ப் பார்த்திட்டிருந்தான்… அவனுக்கு மேரேஜ்னாலே பிடிக்காதுன்னு தெரியும்… அதான் அவசரமா உன்னைக் கூட்டிட்டுப் போயிட்டேன்… மெச்சூரிட்டி வந்ததுக்கப்புறமும் எங்களையறியாம முறைச்சிக்கறோம்…" என்று வருத்தத்துடன் சொல்லி முடித்தான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டால், சரி செய்ய முயல வேண்டும். பெரிதாகிப் போகும் விரிசல்களால், உறவுகள் சிதைந்து விடுகின்றன.

எப்போதோ நடந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொண்டு, 'அன்று அப்படிச் செய்தாயே?' என்று கேட்பதில் பயன் எதுவும் இல்லை. மறப்பதும், மன்னிப்பதும்தான் மனித வாழ்வைச் சிறப்படையச் செய்யும்.

ரஞ்சனும் சரி, பிரதாப்பும் சரி ஒருவரையொருவர் குற்றம் குறையெல்லாம் சுமத்திக் கொள்வதில்லை. தேவையற்ற வெறுப்பை மனதில் சுமப்பதாகவே அவளுக்குப் பட்டது. இருவருக்கும் ஒருவர் மீது மற்றொருவருக்கு மதிப்பும், மரியாதையும் இருக்கிறது. 'தான்' என்ற அகங்காரம் அதை வெளிப்படுத்த விடவில்லை என்பது புரிந்தது.

பெண்களாவது மனதில் வெறுப்பை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். நீண்ட காலம் எதையும் மறக்காமல் வைத்திருக்கும் திறன் இருக்கிறது. ஆனால், ஆண்கள் அப்படியில்லையே. அந்த விரிசலைச் சரி செய்து விட்டால், எளிதில் நட்புப் பாராட்ட முடியும் அவர்களால்.

"இனி மேல் பேசாம இருந்திட முடியுமா பிரதாப்... நேர்ல அடிக்கடிப் பார்க்கும் போது பேசாமப் போயிட முடியுமா... எல்லாம் சரியாயிடும் விடுங்க..." என்றாள்.

"சரியாயிடும்தான்... ஆனா..." என்று சொல்ல வந்ததை நிறுத்தவும், 'என்ன?' என்பது போலப் பார்த்தாள்.

"நத்திங்மா... சின்ன வயசுல நடந்த சண்டையை மனசில வச்சிருக்கோமேன்னு தோணும்... சரியானா ரொம்ப சந்தோசம்... என்னோட இனிய தோழியோட கணவன்... அப்படியே விட்டுட முடியுமா..." என்றான்.

ப்ரீத்தியுடன் பழகத் தொடங்கிய பின், அவள் தன்னுடைய வீட்டில் தங்கியிருந்த சில நாட்களில், அவளைப் போல தோழி கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வான்.

வீட்டில் பெற்றோர்களுக்கு வேறு மாதிரி ஆர்வம் இருந்த போதும், அவனால் தோழமையாகத்தான் பழக முடிந்தது.



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

ரஞ்சனுடன் இணைந்திருந்த புகைப்படத்தைப் பார்த்ததிலிருந்து, இருவரின் பொருத்தத்தைப் பார்த்து மகிழ்ச்சி பொங்கியது நிஜம். இருவரும் 'கருத்தொருமித்து காதல் வாழ்வை வாழ வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

காதல் என்றதுமே மஹதி நினைவிற்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் மனதில் பூப்பூத்த தருணத்தை நினைத்துப் பார்த்தான். பார்த்த ஒரு நாளிலேயே, 'தனக்கான இணை' என்று மனம் முடிவு செய்து விட்டது.

'மனதையும் உடலையும் சிலிர்க்கச் செய்யும் செயல், அவளை நினைக்கும் போது மட்டுமே நிகழ்கிறது. அவளால் மட்டுமே முடியும், வேறு யாராலும் தன் அகம் புக முடியாது' என்பது அவனுக்கு உறுதி.

'ரஞ்சனுடன் சுமுகமாகப் பேசியபின், மஹதியைத் திருமணம் செய்து தருமாறு கேட்க வேண்டும்' என்று நினைத்தான். அவளது படிப்பு முடிந்து, அதன்பின் சில மாதங்களாவது காத்திருக்க வேண்டும்.

ப்ரீத்தியின் திருமணத்தின் போது தன்னைத் தேடி அலைந்த பார்வையிலிருந்து, அவளுக்கும் தன் மேல் ஆர்வம் இருப்பது உறுதிப்பட்டது. ரஞ்சனுடன் சுமூகமாக நட்பை வளர்ப்பதற்கு முன், அப்பார்வையை ஊக்கப் படுத்த விரும்பவில்லை அவன்.

'காலம் வரும் போது உரிமையுடன் அவளைத் தருமாறு கேட்போம், அதுவரை காத்திருப்போம்' என்று முடிவு செய்திருந்தான்.

பிரதாப்பின் வீட்டில் அனைவருடனும் சிறிது நேரம் பேசிவிட்டு, அவளுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பும் போது, "அவளைக் கொண்டு போய் வீட்டில் விட்டு விடுமாறு" ராகவன் சொன்னார்.

"எதற்கு சிரமம்…" என்று மறுத்த போது, "இருக்கட்டும்மா… இதிலென்ன சிரமம் இவனுக்கு… இந்த டைம்ல லக்கேஜ் எல்லாம் எடுத்துட்டுத் தனியாப் போக வேண்டாம்… அதுவுமில்லாம வர போக பழகினாதான் ஃபேமிலிக்குள்ள அட்டாச்மெண்ட் இருக்கும்… இந்த வீட்டுக்கு நீயும் ஒரு பொண்ணு மாதிரிதான்… அம்மா வீடு மாதிரி நினைச்சு உரிமையா வா… அடுத்த வாரம் உங்களை முறைப்படி விருந்துக்குக் கூப்பிட வரோம்மா…" என்று சொன்னபோது, நெகிழ்வுடன் விடைபெற்றாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

"என்ன பாஸ்… உம்முன்னு வர மாதிரி இருக்கு… ட்ரைவர் வேலை பார்க்க வச்சிட்டேன்னா… டோண்ட் வொர்ரிப்பா… நல்ல சாப்பாடு போட்டு அனுப்பறோம்…"

"சேச்சே… ட்ரைவ் பண்றதுக்கெல்லாம் கஷ்டப் படுவேனா… என்னைப் பார்த்தா ரஞ்சன் என்ன சொல்வானோன்னு யோசிக்கிறேன்…"

உண்மையில், 'மஹதி வீட்டில் இருக்கிறாள்' என்று ப்ரீத்தி சொன்னதிலிருந்து, அவனுக்குக் கவலையாக இருந்தது. அவளின் நினைவுகளே சிறகில்லாமல் பறக்கச் செய்கின்றன.

'அவளைப் பார்க்கப் போகிறோம்' என்ற எண்ணமே விழிகள் இரண்டிலும் ஆர்வத்தையும், ஏக்கத்தையும் நிறைக்கின்றது.

மஹதியும் 'நிறையப் பேச வேண்டும்' என்ற ஆர்வத்தில் இருப்பது புரிந்தது. அவளைத் தவிர்க்கும் தருணங்களில், புரியாமல் அடி வாங்கிய குழந்தையாய், அவள் பார்க்கும் பார்வைகள் மனதைத் தைக்கின்றன. அந்த வலியையும், வேதனையையும் அவளுக்குக் கொடுக்க விரும்பவில்லை.

வீட்டு வாயிலில் காரை நிறுத்தவும், "உள்ளேயே போங்க… எப்படியும் டின்னர் முடிக்காம அனுப்ப மாட்டோம்… இப்படியே எஸ்கேப் ஆக நினைச்சா எல்லாம் முடியாது…" என்றாள்.

"வந்தே ஆகணுமா… கொஞ்சம் கருணை காட்டி விட்டிடக் கூடாதா…"

"ஓய்… ரொம்பத்தான் கொழுப்பு… ஜெயில்குள்ள வர்ற மாதிரி பில்ட் அப் கொடுத்திட்டு… ஒழுங்கு மரியாதையா இறங்குங்க கீழே…" என்று மிரட்டலாகச் சொல்லவும், "வர வர யாருக்கு யார் பாஸ்னே புரிய மாட்டேங்குது… என்னோட கதியே இப்படின்னா, பாவம் ரஞ்சன்…" என்று கிண்டலாகச் சொல்லிவிட்டு, கேட்டிற்கு உள்ளே சென்று காரை நிறுத்தினான்.

வீட்டிற்குள் நுழைகயிலேயே கடுப்புடன் பார்த்த ரஞ்சனைக் கவனித்து விட்டு, "அங்க பார் உன்னோட ஆள் டெர்ரர் லுக் விடறதை… இதுக்குத்தான் இன்னொருநாள் வரேன்னு சொன்னேன்…" என்றான்.

'ரஞ்சனுக்கு என்ன ஆயிற்று… நன்றாகப் பேசிக் கொண்டுதானே இருக்கிறான்… ஏன் இந்தக் கோபப் பார்வை? பிரதாப்பைப் பார்த்துவிட்டா என்று திரும்பிப் பார்த்தால் அதுவுமில்லை… அவனைக் கண்டு கொண்டதாகவே காட்டிக்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கொள்ளவில்லை... அப்போது தன் மேல்தான் கோபம்...' புரியாமல் தோளைக் குலுக்கியவள், காதல் மொழி பேசும் கண்களோடு, இமைக்க மறந்து நின்றிருந்த மஹதியை சுவாரஸ்யம் மிகப் பார்த்தாள்.

## 19

**மி**க முக்கியமான ஒப்பந்தம் கையெழுத்தாகவே, சித்ரஞ்சன் மகிழ்ச்சியோடு இருந்தான். மகிழ்ச்சியை நண்பர்களுடன் கொண்டாடித்தான் அவனுக்குப் பழக்கம். இந்தியாவில் நெருங்கிய நட்புகள் யாருமில்லை. டிஸ்கொதேவின் மூலம் கிடைத்த நண்பர்கள்தான் இங்கிருப்பவர்கள்.

இத்தனை நாட்கள் இல்லாதவாறு, 'வீட்டிற்குச் செல்வோம்... குடும்பத்துடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோம்' என்று மனம் சொன்னது.

'மாலை நேரச் சிற்றுண்டியைக் கொறித்தவாறே மஹதியும், ப்ரீத்தியும் கலகலப்புடன் பேசிக் கொண்டிருப்பார்கள்... செஸ், கேரம் என்று எதையாவது விளையாடிக் கொண்டு, அவனிடமும் எதாவது சொல்வார்கள்...' என்றெல்லாம் நினைத்துக் கொண்டு ஆவலுடன் வீடு திரும்பினால், கலகலப்பு இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது.

மஹதி கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு, பால்கனியில் படித்துக் கொண்டிருந்தாள். அம்மாவோ 'கோவிலுக்குப் போக வேண்டும்' என்று கிளம்பி விட்டார்கள். ப்ரீத்தியும் வீடு திரும்பவில்லை.

'எப்போது வருவாள்?' என்ற கேள்வி மனதைக் குடைய, 'அவள் செல்போன் நம்பரையாவது வாங்கி வைத்திருக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

'ஏன் இந்த வெறுமை?' என்று யோசித்துக் கொண்டே, லேப்டாப்பில் தன்னுடைய மெயில்களைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, 'மனம் ப்ரீத்தியைத் தேடுகிறது... அவள் வராமல் தாமதிப்பதால் கோபம் கொள்கிறது...' என்று புரியவில்லை.

எதையும் செய்ய முடியாமல் கவனம் சிதைய, அவ்வப்போது விழிகளை வாயிலில் செலுத்திக் கொண்டிருந்தான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

தங்கையைக் கேட்டால், "ஈவினிங் சீக்கிரம் வரேண்ணு அண்ணி சொன்னாங்கண்ணா… கால் பண்ணிப் பார்க்கறேன்…" என்று சொல்லும்போதே, கார் ஒன்று உள்ளே வந்து நிற்க, அதிலிருந்து அவளே இறங்கினாள்.

ஆவலுடன் காத்திருப்பதை உணரவே இல்லை அவள். 'பிரதாப்பிடம் சிரித்துச் சிரித்துப் பேச முடிகிறது… காத்துக் கிடப்பவன் கண்ணில் படவே இல்லை' என்று கடுப்புடன் நினைத்தான்.

உள்ளே நுழைந்தவள் 'ஏதாவது கேட்பாள் என்று பார்த்தால், அவளோ மஹதியை விழி விரியப் பார்க்கிறாள்' என்று மனம் குறை சொல்லிக் கொண்டிருந்தது.

"உட்காருங்க பிரதாப்… என்ன சாப்பிடறீங்க…" என்று கேட்டுவிட்டு, "வீட்டுக்கு வந்தவங்களை வான்னு கூடச் சொல்லாம, ஏன் ரெண்டு பேரும் இப்படிப் பார்க்கறீங்க…" என்று பொதுவாகக் கேட்டாள்.

"லேட் ஆகும்னு சொல்லிட்டுப் போறதில்லையா…" என்று அவளுக்கு மட்டும் கேட்குமாறு, கடினமான குரலில் ரஞ்சன் கேட்கவும்,

"அம்மாட்ட சொல்லிட்டுத்தானே போனேன்… பிரதாப் வீட்டில இருக்கற திங்ஸ் எல்லாத்தையும் எடுட்திட்டு வரணும்னு நேத்து நைட் உங்க கிட்டயும் சொன்னேனே… வொர்க் முடிஞ்சதும் அவங்க வீட்டுக்குப் போயிட்டு வரேன்…" என்றாள்.

'ஆமாம் சொன்னாள்தான்… பிரதாப்பின் பெயரை எடுத்ததும் பேச்சில் கவனத்தைச் செலுத்தவில்லை… தவறாக நினைத்துக் கொண்டாலும், எத்தனை முறை மன்னிப்புக் கேட்டு விட்டான்…' மனதில் வீம்பை வைத்துக் கொண்டு, தவிர்த்த சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்த்தான்.

கல்லூரிக் காலத்தில் நடந்த விஷயத்தைப் பெரிது படுத்தியிருக்க வேண்டியதே இல்லை. ஆரம்ப காலத்தில் கைகுலுக்கிக் கொண்டவர்கள்தான் இருவரும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சதிசெய்ய, என்னென்னவோ நடந்து விட்டது. பிரதாப்பின் கனவையும், திறமையையும் நன்கு அறிந்தவன்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அவன் திறமையை வளர்க்கத் தூண்டுகோலாக இருக்கத்தான் விடாப்பிடியாகப் போட்டி போட்டடதே. ரஞ்சனைப் பொறுத்தவரை வெற்றியையும், தோல்வியையும் சமமாகப் பாவிப்பவன்.

உடற்பயிற்சிக்காக டென்னிஸ் விளையாடுவானே தவிர, கனவுகளைச் சுமந்தவன் அல்ல. இப்போது நினைத்துப் பார்க்கும் போது 'பனிப்போரை வளர்த்து விட்டிருக்கக் கூடாது' என்று தோன்றியது.

'ஏமாற்றி வெற்றி பெற்றான்' என்று சொன்ன வார்த்தையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்தனை பேர் முன்பு தன்னுடைய இமேஜ் குறைந்து போன நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. 'எப்படிக் குற்றம் சுமத்தாலாம்' என்ற கோபமும், 'ஏமாற்றுக்காரன்' என்ற பேச்சும், மனதில் வெறுப்பை விதைத்து விட்டன.

எதிர்பாராமல் வரும் ஒரு சொல் கூட உறவுகளைப் பிரித்து விடுகிறது. தெளிவாக முடிவெடுக்க முடியாத வயதில், மன்னிப்புக் கேட்டவனை ஒதுக்கித் தள்ளியவனுக்கு, இப்போது விலக்கி வைக்க முடியவில்லை.

டிஸ்கொதேவில் பார்த்த போதே, அவனுடன் சுமூகமாகப் பேச மனம் விழைந்தது. ஆனால் ப்ரீத்தியுடன் சேர்ந்து பார்த்ததால், அவனறியாமல் எழுந்த பொறாமை உணர்வு, அந்த எண்ணத்தைச் சுட்டுப் பொசுக்கியிருந்தது.

'திருமணத்தின் போது அவனைத் தவிர்த்தது சரியில்லை... இனி அவனை அவாய்ட் செய்யக் கூடாது...' என்று நினைத்திருந்தான். அவனை கவனித்துப் பார்க்கையில்,

"கொஞ்ச நேரத்துல அம்மா வந்திடுவாங்க பிரதாப்... இருந்து சாப்பிட்டுப் போங்க..." என்று ப்ரீத்தி வற்புறுத்திய பின்பும், "இன்னொரு நாள் வரேன்..." என்று கிளம்புவதிலேயே குறியாக இருந்தான்.

"எப்படி இருக்கிறாய்?" என்று நலம் விசாரிப்புக் கேள்வியை மஹதியிடம் கேட்டுவிட்டு, தேர்வுக்கு "ஆல் தி பெஸ்ட்" சொல்லவும், அவள் முகம் மலர்ந்தது. அகமும், முகமும் சேர்ந்து மலர்ந்ததில், தன் மனதில் நேசப் பூக்கள் மலர்வதை உணர்ந்தான். தன்னைத் தொலைத்தவனாய், பார்வையை விலக்கிக் கொள்ள முடியாமல் தவித்தான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'இன்னும் சிறிது நேரம் இருந்தால், கண்கள் கட்டுப்பாட்டை இழந்து அவளை விழுங்கும் பார்வை பார்க்கும்… ரஞ்சனோ ஒன்றும் பேசாமல் இருக்கிறான்… இன்னும் இங்கே இருப்பது சரியில்லை…' என்று நினைத்தவனிடம்,

“அதான் சொல்றாளே… சாப்பிட்டு அப்புறமாக் கிளம்புடா…” என்ற குரல் ஒலிக்கவும் ஆச்சர்யத்துடன் நிமிர்ந்தான்.

அந்த வார்த்தைகளைச் சொன்னது ரஞ்சனேதான். இருவரும் இமைக்காமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

நம்ப முடியாமல், கண்களை மூடித் திறந்து, 'நடப்பது நிஜம் தானா?' என்று ப்ரீத்தி உறுதிப் படுத்திக் கொண்டிருக்கையில், 'டா' என்று உரிமையோடு அண்ணன் சொன்னதைக் கேட்டு, 'இப்படியெல்லாம் ஒரு சிலரிடம்தான் பேசுவான்… பிரதாப்பை உரிமையுடன் அழைக்கிறான் என்றால் அண்ணனுக்குப் பிடித்திருக்கிறது' என்று மகிழ்ச்சியில் மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தாள் மஹதி.

உறவுகள் சேர்தல், வாழ்வின் மிக அழகான தருணம். மனதின் கசப்புகளை விட்டுவிட்டு, இயல்பாகக் கைகுலுக்கிக் கொள்வது அனைவருக்கும் எளிதல்ல. இருவருக்குள்ளும் விரோதம் இல்லாத போது, சுற்றியுள்ளவர்களால் பகைமை கொண்டிருந்தது போலான மாயத்திரை விலகிய உணர்வு.

எந்த விதமான தயக்கமோ, தடுமாற்றமோ இன்றி இயல்பாக, ஆண்டாண்டு காலம் பேசுவது போல அதட்டியவிதம் பிரதாப்பை மிகவும் கவர்ந்தது.

மஹதியைப் படிக்கச் சொல்லியும், ப்ரீத்தியை டின்னர் எடுத்து வைக்கச் சொல்லியும் அனுப்பிவிட்டு, “ஸாரிடா… உன்னைப் பத்தித் தெரிஞ்சும், அப்படிப் பேசிருக்கக் கூடாது…” என்று சொல்ல,

“நானும் உன்னை அவாய்ட் பண்ணிருக்கக் கூடாது பிரதாப்… ரெண்டு பேர் மேலேயும் தப்பு இல்லை… ஈகோதான் எல்லாத்துக்கும் காரணம்….” என்று பேசிச் சிரித்தான்.

பிரிந்தவர்கள் கூடினால், உலகையே வென்ற உணர்வு தோன்றும். சிறிதுநேரம் பேசிவிட்டுக் கிளம்பிய பிரதாப்பின் மனம் திருப்தியில் நிறைந்திருந்தது.

அவன் சென்ற பின், “வரும்போது கோபமாப் பார்த்தீங்களா, நான் கூட செம பாட்டு வாங்கப் போறேன்னு நினைச்சேன் ரஞ்சன்… ஆண்ட்டி க்ளைமேக்ஸ் மாதிரி



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஆயிடுச்சு… இத்தனை வருஷமா இருந்த பகை போயே போச்சா… இதை நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை…” என்று ப்ரீத்தி சொல்ல,

“எனக்கும் அவனுக்கும் என்ன பகை இருந்துச்சு… அப்படின்னு யார் சொன்னா உங்கிட்ட…” என்று கண்களைச் சிமிட்டியவாறு கேட்டுவிட்டு, “மஹியோட சேர்ந்து நீயும் வர வர ரொம்பப் பேசற ப்ரீத்தி… செம பாட்டு வாங்கற ஆளுதான் தோளைக் குலுக்கிட்டுக் கண்டுக்காமப் போவாங்களா… கண்ணை வேற மூடித் திறந்து என்ன ஒரு நம்பாத பார்வை…. உன்னை….” என்றவன், காதைப் பிடித்துச் செல்லமாகத் திருகினான்.

அதை எதிர்பார்க்காதவள், லேசாக முகம் சிவந்து, தடுமாறி அவன் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். சிவந்த முகத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தவன், மாயச்சுழலில் சிக்கியது போலத் தடுமாறி நின்றான்.

யசோதா திரும்பியதும், சிறிது நேரம் அனைவருடனும் உரையாடும் போது, அவன் பார்வை அவ்வப்போது உயர்ந்து, ஆவலுடன் அவளைப் பருகியது.

உறங்கச் செல்லும் முன், தனிமையில் பேசுவதற்கான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது மனது. தனிமை கிடைத்ததும், நிறையப் பேசினான். தனக்கும், பிரதாப்பிற்கும் இடையில் நடந்தவற்றையும், தன்னுடைய மனநிலையையும் வெளிப்படையாகச் சொன்னான். கடிகார முள் நகர்ந்ததற்கேற்ப, பேச்சும் நேரம் தெரியாமல் நகர்ந்தது.

“நான் ஒண்ணு கேட்கணும்னு நினைச்சேன்… தாத்தா ஏன் ப்ரீத்தி லதான்னு உனக்குப் பேர் வச்சிருக்கார்… நார்மலா ப்ரீத்தின்னு வைப்பாங்க… ரெண்டு பேரும் ஒண்ணோட ஒண்ணு சேராத மாதிரி இருக்கு… அம்மா பேரோட சேர்த்து ப்ரீத்தி லதான்னு வச்சிட்டாரா…” என்று பார்த்தே இராத தாயின் நினைவில் கேட்டான்.

“ம்ஹூம்…” என்று மறுத்தவள், “ப்ரீத்தி லதா வேடதார்-ங்கறவங்க இந்தியன் ஃப்ரீடம் ஃபைட்டர்… பெங்கால்ல சூர்யா சென்னு ஒரு ஸ்கூல் டீச்சர் புரட்சி இயக்கத்தில ஆட்களைச் சேர்த்தார்… அதில ப்ரீத்தி லதா மாதிரி நிறையப் பெண்கள் துப்பாக்கியைத் தூக்கி ப்ரிட்டிஷ்கு எதிராப் போராடினாங்க… சிட்டகாங்கை பெங்கால்ல இருந்து பிரிச்சு, இந்தியக் கொடியப் பறக்க விட்டாங்க… அந்த ஊர்ல, டெலிபோன், டெலகிராம், ரயில்வே லிங்க் எல்லாத்தையும் கட் பண்ணி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பெரும் சவால் விட்டாங்க… அப்ப நடந்த அடக்குமுறைல ப்ரீத்தி

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

லதா இறந்திட்டாங்க… அவங்க நினைவுநாள்ல நான் தாத்தாவுக்குக் கிடைச்சேனாம்… அதனாலதான் எனக்கு இந்தப் பேரை வச்சிட்டார்…” என்றாள்.

அவனுக்கு இந்திய சுதந்திரப் போரட்ட வீரர், வீராங்கணைகளைப் பற்றி அதிகம் தெரியாது. தாத்தாவைப் பற்றித்தெரிந்து கொள்ள விரும்பி ஆர்வத்துடன் கேட்டான்.

தாத்தாவினுடைய தியாகங்களையும், போராட்டங்களையும் பற்றி அவள் சொல்லச்சொல்லக் கேட்டவனுக்கு, உடம்பில் ஒரு வித சிலிர்ப்பு ஓடுவதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

“ஸ்கூல் படிக்கும் போது டிஸ்ட்ரிக் மாஜிட்ரேட்டை சுட்டுக் கொன்ன சாந்தி கோஷ், சுனிதி… காலேஜ் கான்வகேஷன் பங்ஷன்ல கவர்னரைச் சுட்டுக் கொன்ன பினா தாஸ்… இப்படி உயிர்த்தியாகம் செய்தவங்களோட பேரைத்தான் எங்களுக்குக்கெல்லாம் வச்சிருக்கார்… அம்மு, ஜானகி, பர்வதவர்த்தினி இவங்க எல்லாம் தமிழ்நாட்டு சுதந்திரப் போராட்ட வீராங்கனைகள்…”

“ஓ! நான் கூட மாடர்ன் நேம்ஸ் கொஞ்சம், ஓல்ட் நேம்ஸ் கொஞ்சம்னு கலந்து கலந்து வச்சிருக்காங்கன்னு யோசிச்சேன்… இப்படி இருக்கும்னு நினைக்கலை…”

“உங்களோட பேர் கூட ‘தேசபந்து’ன்னு சொல்ற சித்ரஞ்சன் தாஸோட பெயர்ல இருந்துதான் வச்சிருக்கார்… நாட்டுக்காக சொத்தையெல்லாம் தியாகம் செய்த தியாகி அவர்… அவர் பிறந்த நாள் நவம்பர் 5ல நீங்களும் பிறந்திருக்கீங்க…” என்று சொல்லி முடிக்கும் போது, ப்ரீத்தியின் மனம் பெருமையில் விம்மியது.

அவனுக்கும் மனம் நெகிழ்ந்திருந்தது. தாத்தாவின் தியாகங்களையும், அவர் உடலில் இருக்கும் காயங்களையும், கேட்டபோது நடந்த நிகழ்வுகள் கண்முன்னால் நடப்பது போலிருந்தது.

ஒவ்வொரு மனிதனும் அடிமைத்தளையை நீக்கி, சுதந்திரக் காற்றையே சுவாசிக்க விரும்புகிறான். எத்தனை எத்தனை பேர் கண்ணீரும், செந்நீரும் சிந்திப் பெற்ற சுதந்திரம். எத்தனை எத்தனை பேர் சிறையில் அடைபட்டு, உடல் முழுதும் வலியோடு போராடி, மரணத்தின் வாயிலை முத்தமிட்டுப் பெற்ற சுதந்திரம்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பல்லாயிரக் கணக்கான தியாகிகளின் தியாகத்தின் மேல் எழுப்பிய மாளிகைதான் சுதந்திரம். அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்களுக்குத்தான் சுதந்திரத்தின் முக்கியத்துவம் புரியும்.

'கொண்டாட வேண்டிய மனிதர்களை விட்டுவிட்டு, கண்டவர்களையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்' என நினைத்தான். நீண்ட நேரம் இருவருக்கும் இடையில் நிலவிய மௌனம், மனம் கனத்திருப்பதை உணர்த்தியது.

தாத்தாவிடம் அவன் கொண்ட மதிப்பு, அந்த வார இறுதியில் திருச்சிக்குச் சென்றதும் வெளிப்பட்டது. ஆவலோடு பார்த்தவரிடம், அவருக்குச் சற்றும் குறையாத ஆர்வத்தைப் பேச்சிலும், செயலிலும் காட்டவும், அவள் மனம் நிறைந்தது.

குழந்தைகளுக்குத் தேவையான பரிசுப் பொருட்களை வாங்கிக் குவித்திருந்தான்.

"இருக்கட்டும் ப்ரீத்தி… நானெல்லாம் இத்தனை நாள் பெருமைக்காக வாங்கிக் குவிச்சிருக்கேன்… யூ.எஸ்.ல நம்ம வீட்டுக்குப் போகும் போது காட்டறேன்… தேவையே இல்லாதது நிறைய இருக்கும்… தேவையான பொருட்கள் கூட இவங்க கிட்ட இல்லை… ஏக்கத்தோட வளரக் கூடாது… என்னால முடிஞ்சதை வாங்கித் தரேன்… அவளோதான்…" என்று காவிரியாற்றங்கரையில் நடந்தவாறே சொன்னான்.

'நம்ம வீடு' என்று இருவரையும் ஒன்றாக இணைத்துப் பேசியதற்கு சந்தோசப்படுவதா… இல்லை யூ.எஸ். திரும்பப் போவதில் உறுதியாக இருப்பதை நினைத்துத் துயரப்படுவதா?' என்று அவளுக்குப் புரியவில்லை.

"இதுமாதிரி வாழறது எங்களுக்குப் பழகிப்போச்சு… தன்னோட தேவைகள் என்னன்னு இங்க எல்லாருக்குமே தெரியும் ரஞ்சன்… நீங்க இதுபோலக் கொடுத்திட்டு யூ.எஸ். கிளம்பிடுவீங்க… அப்புறம் சில குழந்தைகள் எதிர்பார்த்து ஏமாந்திடுவாங்க…" என்று கூறவும், அந்தப்பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதை முகம் வெளிப்படுத்தியது.

திருச்சி வந்ததிலிருந்து அவளை விட்டுப் பிரியவே இல்லை. சென்னையில் வீடு முழுக்க வேலைக்காரர்கள் இருக்கையில், அவனுக்கென்று தனியாக எதுவும் செய்யவேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. இங்கு வந்ததிலிருந்து



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

தாத்தாவிற்குச் செய்வதுபோலவே அவனுக்கும் செய்யவும், ஒருநாளில் மனம் நிறைய மாற்றங்களைச் சந்தித்தது.

இரவுப் பயணத்தில் களைத்து உறங்கியவனை, அதிகாலையில் எழுப்பித் தேனீர் கொடுத்த ப்ரீத்தி, குளிப்பதற்குத் தேவையானவற்றை எடுத்து வைத்த ப்ரீத்தி, உணவு உண்ணுகையில் பார்த்துப் பார்த்துப் பரிமாறிய ப்ரீத்தி, தண்ணீர் வேண்டும் என்று தோன்றிய அடுத்த கணம் கையில் தண்ணீரைக் கொடுத்த ப்ரீத்தி என்று அவனுடைய எல்லாச் செயல்களிலும் இருந்தாள்.

தனியாகக் கிளம்புவதை அவனால் யோசித்துப் பார்க்க முடியவில்லை. மாறுபட்ட கருத்துக்கள் நிறைய இருந்தாலும் 'ப்ரீத்தி தன்னுடைய வாழ்வின் முக்கிய அங்கமாகி விட்டாள்' என்பதை அந்த ஒரு வாரத்தில் உணர்ந்தான்.

ஏகாந்தமான அந்த இடமும், சலசலத்தோடும் காவிரியாறும், ப்ரீத்தியின் கூந்தலிலிருந்த மல்லிகையின் நறுமணமும் இதுவரை தோன்றாத உணர்வுகளைத் தோற்றுவித்தன.

'இதென்ன மாயம்' என்று நினைத்தாலும், தன்னுள் பொங்கிப் பெருகும் உணர்வுகளைக் கட்டுப் படுத்த முடியாமல் நின்றான்.

## 20

"**அ**ண்ணி!" என்று அழைத்தவாறே வீட்டிற்குள் நுழைந்த மஹதியின் கையில், துணிப்பைகள் நிறைய இருந்தன. இப்போதெல்லாம் அம்மாவை அழைப்பதைவிட, அண்ணியைத்தான் அதிகம் அழைக்கிறாள்.

"என்ன மஹி… இவ்ளோ பெரிய பார்சல்… திடீர்னு பர்சேஸ் போயிருக்க, என்ன ஸ்பெஷல்… எக்ஸாம் முடிஞ்சதும் ஹேப்பில அவுட்டிங்கா… அதுசரி, இன்னைக்கு எக்ஸாம் எப்படி எழுதின…"

"நல்லா எழுதிருக்கேன் அண்ணி… இனிமேல் படிக்க வேண்டியதில்லை… ஜாலிதான்… லாஸ்ட் டேங்கறதால ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் வெளியில போனோம்… ஹேண்ட் லூம் ஸ்டால் போட்டிருந்தாங்க… பார்த்ததுமே உங்க ஞாபகம் வந்திருச்சு… உள்ள போய்ப் பார்த்தா, கலெக்ஷன்ஸ் எல்லாமே ரொம்ப அழகாருந்துது…

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

உங்களைக் கூப்பிட்டா வர மாட்டீங்க… அதான் எடுத்திட்டு வந்திட்டேன்… உங்க மேரேஜ் முடிஞ்சு நாளையோட ஒன் மன்த் ஆகப் போகுது… அதுக்கு என்னோட கி∴ப்ட்…” என்று சொல்லிக் கையில் கொடுத்தாள்.

“∴பர்ஸ்ட் மன்த் முடியுதுன்னா, அதுக்குக் கூட கி∴ப்ட்டா… அப்ப ஒவ்வொரு மாசமும் எதிர்பார்ப்பேனே… ஓகேவா…”

“நீங்க ம்ம்னு மட்டும் சொல்லுங்க… டெய்லியும் நான் கி∴ப்ட் வாங்கித் தருவேன்… அதான் பாக்கெட் மணி தர அண்ணன் இருக்காறே… எனக்கு என்ன கவலை…”

சித்ரஞ்சன் எதுவுமே சொல்லப் போவதில்லை. அவனைப் பொறுத்தவரை நிறையப் பணம் சேர்ப்பதே, செலவு செய்யத்தான்.

‘நேற்று என்பது மாற்ற முடியாத கனவு, நாளை என்பது வெறும் கற்பனை… இன்று என்பதுதான் உறுதியான உண்மையான வாழ்க்கை…’ என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவன்.

‘நாளை வரும் என்ற நிச்சயம் இல்லாத போது, எதற்காக வெற்றுக் கனவுகளும், ஆசைகளும்… இன்றைக்கே இப்போதே நினைத்தவாறு வாழ்ந்து விட வேண்டும்… மறுநாள் ஒத்திப்போடுவதால் எந்தப் பயனும் இல்லை’ என்று அடிக்கடி சொல்வான்.

இந்தியர்கள் ‘வருங்காலத்திற்குச் சேர்த்து வைக்கிறோம்’ என்று வாழ்க்கையை வாழத் தெரியாதவர்கள். பணம் சேர்த்துச் சேர்த்து வைத்து, அடுத்தவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறார்கள். சம்பாதிப்பது ஜாலியாக செலவு செய்யத்தான் என்பான்.

“அண்ணி!” என்று தோளைப் பிடித்து உலுக்கிய மஹதி, “ஹப்பா… அண்ணனைப் பத்திச் சொன்னா, பூலோகத்தில இருக்கோமான்னே மறந்து போயிடுதா… அப்படியே ப்ரீஸ் ஆயிட்டீங்க…” என்று கேலியாகக் கேட்டாள்.

நினைவுகளிலிருந்து தன்னை மீட்டுக் கொண்டவள், “ம்ம்… என்ன கேட்ட மஹி… ஸாரி… நான் எதோ யோசனையில இருந்தேன்…” என,

“அண்ணனைப் பத்தி யோசிச்சேன்னு சொன்னா நான் ஒண்ணும் தப்பா நினைக்க மாட்டேன்… ஆனாலும் இப்படி அநியாயத்துக்கு ஹனி மூன் கூடக்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

கூட்டிட்டுப் போகாம வேலை வேலைன்னு இருக்கக் கூடாது… ரிஷப்சன் வைக்கக் கூட அப்பா வரமாட்டேங்கறார்…” என்று அலுப்போடு சொன்னாள்.

‘மூன்றே நாட்களில் கிளம்பிச் சென்ற தந்தை, இன்னும் திரும்பவில்லையே’ என்ற கோபம் அவளுக்கு.

“என்னோட ஸ்டடீஸ் முடிஞ்சதால, அங்கேயே வரச் சொல்லிட்டுப் போயிருக்கார் அண்ணி… அம்மாவை சம்மதிக்க வைக்கறது என்னோட பொறுப்புன்னு சொல்றார்… இங்க இருக்கவே பிடிக்கலையாம் அவருக்கு… அண்ணாவை விட்டுப் பேசச் சொல்லணும்…” என்று கவலையோடு சொன்னாள்.

‘சிபாரிசுக்கு நல்ல ஆள் பிடிக்கிறாள்’ என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டாள் ப்ரீத்தி.

அப்பா எட்டடி பாய்ந்தால், மகன் பதினாறு அடி பாய்கிறான். இங்கிருக்கும் குறைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி, அவளையும் அழைத்துக் கொண்டு போகப் பார்க்கிறான்.

எங்காவது சின்ன ட்ரைவ் போனால் கூட, “இங்க எனக்கு ட்ரைவ் பண்ணவே பிடிக்கறதில்லை… ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் யாருமே ஃபால்லோ பண்றதில்லை…” என்பான்.

அவன் சொல்வதென்னவோ உண்மைதான். அவரவர் அவசரம் அவரவருக்கு. ‘சிக்னலில் காத்திருந்து செல்ல வேண்டும்’ என்று நிறையப் பேர் நினைப்பதில்லை. போக்குவரத்து விதிகளே தெரியாமல், லஞ்சம் கொடுத்து லைசென்ஸ் வாங்கி ஓட்டுபவர்கள் அதிகம். சட்டத்தின் ஓட்டைகளைக் கண்டு பிடித்து, சட்டத்தையே எளிதாக வளைப்பவர்களை மாற்ற முடியாது.

“இங்க இருக்கற பொல்யூஷன்ல வெளிய போகணும்னாலே எரிச்சலா இருக்கு… அங்க நாள் முழுக்க வெளியில இருந்தாலும் கொஞ்சம் கூட டயர்ட் தெரியவே தெரியாது… க்ளைமேட், சுத்தமான காத்து, நீட்டான ரோடு இதெல்லாம் இங்கே வரவே வராது… சின்ன மழைக்கே போட்ல போற மாதிரி மிதந்து போக வேண்டியிருக்கு… எதுவுமே ப்ராப்பர் இல்லை…” என்று சலித்துக் கொள்வான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

"பொருளாதாரத்தில் வளர்ந்துவிட்ட நாடுகளோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது… கொஞ்சம் கொஞ்சமாக டெவலப் ஆவோம்…" என்று சொன்னால் ஒத்துக் கொள்ள மாட்டான்.

"இங்க எல்லாத்திலையுமே கரப்ஷன்… பிரிட்டீஷ் பீரியட்ல கட்டின டேம், பில்டிங் எல்லாம் எப்படி நிக்குது… நம்ம ஆளுங்க எப்படி சுருட்டலாம்னே நினைக்கறாங்க… நாட்டுக்காக அதைச் செய்யறோம்னு சொல்றதெல்லாம் சும்மா வெளி வேஷம்… பரம்பரைக்கே சொத்து சேர்க்கறாங்க… வேர்ல்ட் வார்ல நசிஞ்சு போன நாடு ஜப்பான்… இன்னைக்கு அதோட வளர்ச்சியைக் கண்ணால பார்க்கறோமே… இங்கே ஏன் அப்படி இல்லை… உண்மையான நாட்டுப் பற்று இருக்கறவங்க ரொம்பக் குறைவு…" என்று திட்டும் போதும், கேட்டுக் கொள்வாள்.

படித்து முடித்தவர்கள் எல்லாரும் பணமும், படிப்பும், வாழ்க்கை வசதிகளையும் தேடி வெளிநாடுகளுக்குப் பறந்து விடுகிறார்கள். ஏழை மக்களும், ஓரளவு படித்தவர்களும் அவ்வளவு விரைவில் மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியுமா?

பண்டைய அரசர்களின் கட்டிடங்களும், கோட்டைகளும், கோயில்களும் இன்னும் தலை நிமிர்ந்து நிற்கின்றன. ஹரப்பாவிலும், மொஹஞ்சதாராவிலும் இருந்த நகரங்கள் உலகிற்கே சிறந்த அரசாங்கத்தைப் பறை சாற்றுகின்றன. இதெல்லாம் சொன்னால், "இண்டஸ் வேலி சிவிலைசேஷன்னு ஒண்ணு இருக்கறதைக் கண்டு பிடிக்கவே பிரிட்டீஸ் வேணும்…" என்று கிண்டல் செய்வான்.

"தப்பு செய்யக் கூடாதுங்கற எண்ணம் ஒவ்வொருத்தரோட மனசில இருக்கணும்… குப்பையைப் போட வேண்டிய இடத்தில போடறதில்லை… நடக்கும் போதே முகத்தைச் சுழிச்சிட்டு நடக்க வேண்டியிருக்கு… பப்ளிக் டாய்லெட் ஃபெஸிலிடி இல்லை… அப்படி இருந்தாலும் பக்கத்திலையே போக முடியாது… நம்ம ஆட்கள் எந்த இடம்னு பார்க்கறது இல்லை… எல்லா இடத்திலையும் எச்சில் துப்பறது, யூரின் போறது, சிகரெட் பிடிக்கறது, குடிச்சிட்டு உருண்டு கிடக்கறதுன்னு எல்லா அசிங்கத்தையும் நடத்தறாங்க…" என்று முகம் சுழித்தவாறு சொல்வான்.

படித்தவர், படிக்காதவர் என்று வித்தியாசமின்றி நிறைய மக்கள் இதைத்தான் செய்கிறார்கள். மேற்கத்திய நாகரிகத்திலிருந்து கண்டபடி ஆடை குறைப்பும், கண்ட நேரத்தில் ஊர் சுற்றுவதையும் கற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களின் நல்ல பழக்கங்களைக் கற்க மறந்து விடுகிறோம்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

இறுதியில், “சுத்தமும், சுகாதாரமும் தெரிஞ்சுக்கணும்னா அங்க வா ப்ரீத்தி… சிகரெட் பிடிக்கறதைக் கூட, அடுத்தவங்களுக்குத் தொந்தரவில்லாமத்தான் பிடிப்போம்… ஒருத்தருக்கு ஒருத்தர் ஹெல்ப் பண்றதில அவங்களை மாதிரி இருக்கவே முடியாது… ஆனா இங்க அப்படி இல்லை… நண்டு கதை மாதிரி, அவங்களும் மேல ஏற மாட்டாங்க, ஏற நினைக்கறவங்களையும் ஏற விட மாட்டாங்க… நல்ல இடத்தில சந்தோசமா வாழணும்னுதானே எல்லாரும் நினைப்பாங்க… கொஞ்ச நாள் அங்க இருந்து பார்த்துட்டு அப்புறம் முடிவு செய்துக்கலாம்…” என்று கிடைக்கும் நேரமெல்லாம், ‘இங்கு இருக்கப் பிடிக்கவில்லை’ என்று சொல்ல மறப்பதில்லை.

‘அவன் மனதில் இருப்பது முழுமையாக வரட்டும்’ என்றுதான் விவாதங்களைக் குறைத்துக் கொண்டு, அவன் சொல்வதைக் கேட்டுக் கொள்வது.

இந்த ஒரு மாதத்தில் அவ்வப்போது பார்வையால் வேட்கையை உணர்த்திக் கொண்டிருக்கிறான். அவன் விழிகள் ஆவலோடு பதிவதைக் கண்டு கொள்ளாமல் இருக்கப் பழகிக் கொண்டாள்.

சில விஷயங்களில் அவன் சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும், இருவரிடையில் நேசம் இன்னமும் முழுமையாக வளராததால், அவன் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதில் அவளுக்கு முழு விருப்பம் இல்லை.

ஓர் ஆணுக்கு வேண்டுமானால் பெண்ணைப் பார்த்தவுடன் காம உணர்வு பொங்கி எழலாம். ஆனால், மனதால் நெருங்காமல், அவன் எப்பேர்ப்பட்டவனாக இருந்தாலும் பெண் ஏற்றுக் கொள்வதில்லை என்பது அவனுக்குப் புரியவில்லை.

அருகில் யாரோ நெருங்கி அமரும் உணர்வு வந்ததும், அழுத்தமாக உரசிய வலிய கரங்களிலிருந்து, அது சித்ரஞ்சன் என்பது தெளிவாகப் புரிந்தது.

“அண்ணா! அண்ணி ஒரே ட்ரீம்லையே இருக்காங்க… கொஞ்சம் கீழ இறங்கி விடுங்க…” என்று மஹதி கிண்டல் செய்து கொண்டிருக்கவும்,

“ஏய் வாலு… நான் எங்க ட்ரீம்ல இருக்கேன்… உனக்கு வர வர வாய் ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சு…” என்றாள்.

“ம்ஹூம்… இந்தப் பொய் தானே ஆகாதுங்கறது… இவ்ளோ நேரம் அண்ணனைப் பத்தி நீங்க நினைக்கலைன்னு சொல்லுங்க…” என்று சவலாகக் கேட்க,



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

'நினைத்ததென்னவோ உண்மைதான்… ஆனால் நீ நினைப்பது போல இல்லை' என்று எப்படிச் சொல்வது, அதுவும் ரஞ்சனை அருகில் வைத்துக் கொண்டு… இப்போதெல்லாம் அவள் கேலி, கிண்டல் அளவு மீறிக் கொண்டிருக்கிறது.

"என்ன கேட்டேன்னு சொன்னாதானே தெரியும்… இப்ப ஒரு முக்கியமான வேலையா வெளில போகணும்… அதைப் பத்தி யோசிச்சிட்டிருந்தேன்…" என்று சமாளித்தாலும், லேசான முகச்சிவப்பு, ரஞ்சனைப் பற்றி நினைத்ததைக் காட்டிக் கொடுத்துவிட அண்ணனும், தங்கையும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இந்த ஸேரி உங்களுக்குப் பிடிச்சுதான்னு கேட்டேன் அண்ணி…"

மிக அழகான கைத்தறிப் புடவை. குட்டிக் கண்ணன் வெண்ணெய் திருடித் தின்பது என்று விதவிதமான சேட்டைகளை அங்கங்கே வருமாறு நெய்திருந்தார்கள். இந்த வேலைப்பாடுகளிலிருந்தே மிக விலை உயர்ந்தது என்று தெரிந்தது.

"ப்யூட்டிஃபுல்… இவ்ளோ அழகா டிசைன் பண்ணிருக்காங்க… கண்ணில எவ்ளோ குறும்பு…" என்று ரசனையாகச் சொல்கையில், சித்ரஞ்சனும் அவளையே ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

கடந்த சில நாட்களாகவே, அவன் மனதில் அக்கினிக் குழம்பொன்று கொதித்துக் கொண்டிருந்தது. உடலின் ஒவ்வோர் அணுவும் ப்ரீத்திக்காகத் துடித்துக் கொண்டிருந்தது.

மனதிற்குள் சத்தமில்லாமல் யுத்தம் நிகழும் உணர்வு. ஓடும் இரத்தத்தைச் சிலிர்க்கச் செய்யும் இனிமையான நிகழ்வுகள்.

அவளோடு பேசிக் கொண்டிருக்கையில், பனிச்சாரலில் நனைவதும், அருகில் இல்லாத போது அனலில் தகிப்பதுமாய் நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

'இது போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றவில்லையே… தன் அருகாமையை விரும்புகிறாள்… ஆனாலும், சிறு ஒதுக்கம் தள்ளி நில் என்று சொல்லாமல் சொல்கிறது…

அதிக வேலையில் எரிச்சலுடன் வீடு திரும்பும் போது இதமாகப் பேசத் தெரிகிறது. தலைவலி என்று சொல்லாமலேயே சூடான காஃபியையும், தைலமும் எடுத்துவரத் தெரிகிறது. வீட்டிலேயே தாய்க்குத் தெரியாமல் மது அருந்துவதை மறைக்கவும் தெரிகிறது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஆனால், எதனால் இப்போதெல்லாம் அதிகம் மது அருந்துகிறோம் என்பதை யோசிக்கத் தெரியவில்லை... தன் மனதின் வேட்கையைப் புரிந்து கொண்டாளா இல்லையா...' என்றெல்லாம் எரிச்சலோடு யோசித்துக் கொண்டிருந்தான்.

அநாவசிய அலட்டல்கள் இல்லாமல், எதையும் வற்புறுத்தாமல், இயல்பாக இருக்கும் ப்ரீத்தி தன்னைக் கவர்ந்து விட்டாள்... அவள் அருகாமையை விரும்புகிறோம்...' என்று புரிந்து கொண்டான்.

'அவளுக்குத் தன்னை ஏற்பதில் என்ன தயக்கம்?' என்று மட்டும் புரியவில்லை. கையோடு கை உரசுகையில், தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்த முடியாமல், எழுந்து கொண்டான்.

"அண்ணா! இந்த கலக்ஷன்ல அண்ணிக்கு எது ரொம்ப நல்லருக்கும்னு சொல்லிட்டுப் போங்க... நாளைக்கு உடுத்திக்கச் சொல்லலாம்..." என்றாள் மஹதி.

"உங்க அண்ணிக்குத் தானே, எல்லாமே நல்லா இருக்கும்..." என்று ஒரு மாதிரியான குரலில் சொன்னவனை நிமிர்ந்து பார்த்தாள் ப்ரீத்தி.

காலையில் கூட புடவை விஷயத்திற்காக இருவருக்குமிடையில் விவாதம் நடந்து முடிந்திருந்தது.

"நீ ஏன் எப்பவுமே புடவையையே கட்டற ப்ரீத்தி... ஃபர்ஸ்ட் டைம் சல்வார்ல பார்த்ததுதான்... அப்புறம் பார்க்கறப்ப எல்லாம் ஸேரி தான்... லீவ் நாள்ல, வீட்ல ஃப்ரீயா இருக்கும் போது இதையே சுத்திட்டிருக்கணுமா... எங்க பாட்டி காலத்தில இருந்திருக்க வேண்டியவ..." என்று சலிப்புடன் சொன்னான்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில், நெசவாளர்களுக்கு ஆதரவாக, கைத்தறிப் புடவைகள் மலிவு விலையில் நியாயவிலைக் கடைகளில் அரசாங்கம் விற்பனை செய்தபோது உடுத்தத் துவங்கியது.

வேறு ஆடைகளை வாங்க அப்போது பணமுமில்லை என்பதும் ஒரு காரணம். அவளது அதிகப் படியான உயரத்தை மேலும் அதிகப்படுத்தி கம்பீரமாகக் காட்சிதரும். பின்னர் அதுவே வழக்கமாகப் போய்விட்டது.

வீட்டில் அவன் முன்னர் நைட்டி அணிவதற்குக் கூச்சப்பட்டு, உறங்கச் செல்லும் போது மட்டும் வேறு உடை மாற்றிக் கொள்வாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“இதுவே பழகிடுச்சு ரஞ்சன்… பாட்டி காலத்து ட்ரெஸ்னாலும், நம்ம ஊர்ல நார்மல் ட்ரெஸ் இதுதானே… எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு… இதில கம்ஃபர்டபிளா ஃபீல் பண்றேன்…”

“ஆ ஊன்னா இது போல சொல்லிட வேண்டியது… நம்ம ஊர் ட்ரஸ்ஸா இது… கோயில் சிலையைப் பாரு, எதாவது சிற்பத்துக்குப் புடவை உடுத்தி விட்டிருக்காங்களான்னு… முதல்ல இது மாதிரியா ட்ரெஸ் பண்ணினாங்க… எல்லாம் நடுவில புகுந்தது… ஹிஸ்டரில அலெக்ஸாண்டர் இன்வேஷன் அப்ப, அவர் கூட வந்த படைத்தளபதி செலுகஸ் நிகேடரோட பொண்ணு ஹெலன் இண்டியால சேலையை இண்ட்ரடியூஸ் பண்ணியிருக்கலாம்னு படிச்சிருக்கேன்… இது கிரேக்ல இருந்து வந்த ஃபேஷன்… இதை அக்செப்ட் பண்ணின மாதிரி இப்ப மாடர்ன் ட்ரெஸ் ஃபேஷனா வந்திருக்கு… அதையும் அக்செப்ட் பண்ணிக்க வேண்டியதுதானே…” என்று அழுத்தமாகக் கேட்டான்.

“அந்தக் காலத்தில லேடீஸ் எல்லாம் வெளிலையே வர மாட்டாங்க… வீட்டுக்குள்ள இருக்கறவங்க வேற மாதிரி ட்ரெஸ் பண்ணிருக்காலாம்… இப்ப அப்படியா நடக்குது… ஜெண்ட்ஸ்கு ஈக்குவலா எல்லா ஃபீல்ட்லையும் வொர்க் பண்றாங்க… ட்ரெஸ்ங்கறது கண்ணியமான தோற்றத்தைத் தரணும்… உடம்பை மறைக்கத்தான்… உங்க கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் போடற மாதிரி எல்லாரும் உடுத்திட்டுப் போனா, இருக்கற க்ரைம்ஸ் இன்னும் அதிகம் தான் ஆகும்…” என்றெல்லாம் காலையில் வாதாடினாள்.

எதைச் சொன்னாலும் அதற்கு எதிராக இன்னொரு விளக்கத்தைச் சொல்வான். ‘இப்போது எதற்காக இப்படிப் பார்க்கிறான்… என்ன சொல்லப் போகிறான்…’ என்று பார்த்தால்,

“ஏன் இராமரை விட நிறையப் பொண்ணுங்களுக்கு கண்ணனையே பிடிக்குது…” என்று கேட்டான்.

மஹதி, “குட்டிக் கண்ணன்னாலே எல்லாருக்கும் இஷ்டம்தானே…” என்று சொல்லிவிட்டு, தாய்க்குக் காட்டுவதற்காக அவருடைய அறைக்குச் சென்றாள்.

அவன் சொல்லிச் செல்வது ப்ரீத்திக்குத் தெளிவாகப் புரிந்தது. இந்த ஒரு மாத வாழ்க்கையில் அவன் பேசுவதெல்லாம் அத்துப் படியாகிவிட்டன.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

'ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்த இராமனை விட, பல பெண்களோடு வாழ்ந்த கண்ணனை பெண்களுக்கு ஏன் பிடிக்கிறது?' என்று கேட்டுவிட்டுப் போகிறான்.

இங்கு எப்போதும் ஒரே விதமான கலாச்சாரம் இல்லை. காலத்திற்கேற்ப மாற்றம் இருந்திருக்கிறது என்பதை நிலைநாட்டச் சொல்லிவிட்டுப் போகிறான் என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள்.

## 21

'**ர**ஞ்சனுடைய கொள்கைகளை என்னவென்று சொல்வது? தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறான்? அவனுடைய பழக்க வழக்கங்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளச் சொல்கிறானா? அதற்காகத்தான் கலாச்சார மாற்றம் என்று பட்டியலிட்டதற்கெல்லாம் தன்னுடைய வாதத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்…" என்று யோசித்தாள் ப்ரீத்தி.

இந்த ஒரு மாத காலத்தில், பெரும்பான்மையானவர்கள் நம்நாட்டில் கடைப்பிடிக்கும் எல்லாப் பழக்கங்களையும் தாக்கிப் பேசியாயிற்று.

"தாலிக்கு இவ்ளோ முக்கியத்துவம் தரணுமா? ஆதிகாலத்து மனுசனெல்லாம் தாலி கட்டிட்டா குடும்பம் நடத்தினான்… நம்ம கல்ச்சர்ல தாலி கட்டற பழக்கமே இல்லை, தெரியும் தானே… சங்க காலத்தில மேரேஜ்ல இந்த சடங்கு சம்பிரதாயம் எதுவுமே பார்க்கலை… தாலியைப் பத்தின விஷயமே டெந்த் சென்சுரில முதன் முதல்ல நமக்குத் தெரிய வருது… இல்லாத பழக்கம் வந்தவுடனே அதை புனிதம் சொல்லிடறீங்க… இருக்கற பழக்கம் மறையும் போது அதையும் ஏத்துக்கணும்…" என்பான்.

"மெட்டிங்கறது ஜெண்ட்ஸ்தான் அந்தக் காலத்தில போடுவாங்க… அவங்க போடறதுக்கு கஷ்டப்பட்டு லேடீஸ்கிட்டத் தள்ளி விட்டுட்டாங்க… அதையெல்லாம் கல்ச்சர்னு விடாமப் பிடிச்சுப் பெருமைப் பட்டுக்கறீங்க…" என்று எல்லாவற்றையும் எதிர்த்து வாதாடுவான்.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதே கேலிக்கூத்து என்பான். ஆறாயிரம் மனைவியர் வைத்திருந்த தசரதன், கோகுலத்தில் லீலைகள் புரிந்த கண்ணன், ஐந்து



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

பேருக்கு மனைவியான திரௌபதி, வெவ்வேறு கடவுளுக்கு ஆறு மகன்களைப் பெற்ற குந்தி என்று அத்தனை உதாரணங்களையும் தேடிப் பிடித்துச் சொல்வான்.

புராணங்களையே அவன் நம்பவில்லை என்றாலும், உதாரணம் சொல்வதற்கு மட்டும் குறைவே இல்லை.

“இந்தக் கலாச்சாரம் புராண காலத்திலேயே இருந்திருக்கு, வெஸ்டர்ன் கல்ச்சர் உள்ள வந்ததால மாறிடலை… பூஜை ரூம்ல நீங்க ப்ரே பண்ற கடவுளுக்கு எல்லாம் ஒரு மனைவி மட்டும் தான் இருக்காங்களா…” என்று சாதிப்பான்.

சுற்றிச் சுற்றி அவனுடைய பேச்சு, “எந்தக் காலத்தில் இதெல்லாம் தப்பான விஷயமே இல்லை… காலம் காலமாக நடப்பதுதான்…” என்று வந்து நிற்கும்.

நமது பழக்க வழக்கங்களைக் குறை சொல்பவன், மேற்கத்தியக் கலாச்சாரத்தைப் பெருமையாகப் பேசுவான்.

“லிவிங் டுகெதர்னாலே ஏன் தப்பாவே பார்க்கற ப்ரீத்தி… இதெல்லாம் கல்ச்சர்குக் கெட்டதுன்னு நினைக்க ஒண்ணுமில்லை… மேரேஜ் ஆன கொஞ்ச வருஷத்தில நிறையப் பேருக்கு லைஃப் சலிச்சுப் போயிடுது… வேண்டா வெறுப்பா வாழறதுல என்ன பிரயோஜனம்… கோர்ட்ல எவ்ளோ டைவர்ஸ் கேஸ் இருக்கு, தமிழ் பேப்பர் ஒரு சிலதை எடுத்தாலே கள்ளக் காதல் தான்… இதுக்கெல்லாம் என்ன காரணம்… பிடிக்கலைன்னாலும், மனசுக்குள்ளையே போட்டுப் புதைச்சுட்டு தப்புப் பண்ண சான்ஸ் கிடைக்கும் போது, ஒளிவு மறைவா நடந்துக்கறதுக்கு வெளிப்படையா வாழறது தப்பில்லை… ஒருத்தருக்கொருத்தர் அலுப்புத் தட்டும் போது பிரிஞ்சு போயிடறது பெட்டர்…” என்பான்.

“நீங்க என்ன சொன்னாலும், என்னால அக்செப்ட் பண்ண முடியாது ரஞ்சன்… அலுப்புத் தட்டுதுன்னா அவங்க மேல குறையை மட்டுமே பார்க்கறோம்னு அர்த்தம்… குறைகளுக்காக விட்டு விலகிட்டே இருந்தா யாரோடையும் நட்பாக் கூட இருக்க முடியாது… குற்றம் குறையை பார்க்கத் தெரிஞ்ச மனுஷன், உணர்ச்சி வசப்பட்டு முடிவு எடுக்கும் போது லைஃப்ல யாரோடையும் சேர்ந்து வாழ முடியாது…

சின்னச் சின்ன சண்டைக்கெல்லாம் பிரிஞ்சு போயிட்டா இருக்கணும்… நம்ம ட்ரடிஷனல் மேரேஜ்ல, எத்தனை பிரச்சனை வந்தாலும் ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்கற காதல் எல்லாத்தையும் ஜெயிக்கும்… அந்த அன்பில தான் வாழ்க்கையோட அர்த்தமே இருக்கு…

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

ஒருவனுக்கு ஒருத்திங்கற கான்செப்ட் இல்லைன்னா அம்மா, அப்பா யார்னே தெரியாமப் போயிடும்… கூட்டுக் குடும்பம்னு ஒண்ணு இல்லாமலேயே போயிடும்… சுயநலம்தான் அதிகமா இருக்கும்… அநாதைக் குழந்தைங்களும், முதியோர் இல்லங்களும்தான் அதிகமாகும்… எதிலையுமே நல்ல விஷயத்தை மட்டும்தான் எடுத்துக்கணும்… நம்ம வாழ்க்கை முறையைப் பார்த்து எத்தனையோ ஃபாரினர்ஸ் இங்கேயே வந்து தங்கி, மேரேஜ் பண்ணி இந்தியனாவே வாழறாங்க…" என்று பதில் கொடுப்பாள்.

"ஓர் ஆணும், பெண்ணும் மேரேஜ் பண்ணிக்காம சேர்ந்து வாழ்றது அவங்களோட உரிமை, அதை சட்டப்படி குற்றம்னு ஏத்துக்க முடியாதுன்னு சுப்ரீம் கோர்ட்டே சொல்லியிருக்கு… கிருஷ்ணனுக்கும் ராதைக்கும் இருந்த உறவு ஏறக்குறைய இதே போலதான், அதுக்காக அவங்களைக் குற்றம் செய்தவங்கன்னு சொல்றோமான்னும் ஜட்ஜஸ் கேட்டிருக்காங்க… உனக்குப் பிடிக்குதோ இல்லையோ, காலப்போக்கில எல்லாமே சாதாரணமாயிடும் ப்ரீத்தி… ஒரு காலத்தில லவ் மேரேஜ்னாலே கூடாதுன்னு சொல்லிட்டிருந்தாங்க… இப்ப நிறையப் பேர் அதை சாதாரண விஷயமா எடுத்துக்கறாங்க… அது போலத்தான் லிவிங் டுகெதரும்… நெக்ஸ்ட் ஜெனரேஷன்ல நிறையப் பேர் இப்படித்தான் வாழப் போறாங்க… இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது…" என்று சொல்லியவனுக்கு, எத்தனை பதில் கொடுத்தாலும் புரியவே இல்லை.

'இவன் ஒருவனுக்குப் புரிய வைக்கவே முடியவில்லை… இதுபோல எத்தனை எத்தனை இளைஞர்கள்… நிச்சயம் கலாச்சார மாற்றதை நோக்கிப் போய்க் கொண்டுதான் இருக்கிறது… ஏற்பவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடும்… ஏற்க முடியாதவர்கள் எதிர்த்துக் குரல் கொடுக்கத்தான் முடியும்…' என்று பெருமூச்சு விடத்தான் முடிந்தது.

'நாற்பதாவது திருமண நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுபவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்… குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து குதூகலித்து, இதயம் சங்கமப்பட்டு வாழும் வாழ்க்கை எப்படி இருக்கும்…' என்று இவனுக்குத் தெரியவில்லை.

'லிவிங் டிகெதர் உடலின் சங்கமத்தை மட்டும்தானே பார்க்கிறது… இரண்டு மனங்களின் நேசத்தைவிட வேறு தேவைகள் தானே பெரிதாக இருக்கின்றன… இவனுக்கு இதையெல்லாம் எப்படிச் சொல்லிப் புரிய வைக்க முடியும்… எப்படி



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

வெளிப்படையாகப் பேசுவது…' என்று தயக்கத்துடன் சில நேரம் அமைதியாகிவிடுவாள்.

இது போன்ற கொள்கைகளிருந்தாலும் நிறைய நல்ல விஷயங்கள் அவனிடம் கற்றுக் கொள்வதற்கும் இருக்கின்றன. தன்னாலான உதவிகளைப் பிறருக்குச் செய்ய மறுப்பதில்லை.

தாத்தாவிற்கு முற்றிலும் ஓய்வு கொடுத்துவிட்டு பராமரிப்புக்கென ஆட்களை நியமித்து விட்டான். ஆஸ்ரமத்திற்காக அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய கட்டிடம் கட்ட முடிவு செய்து விட்டான்.

ஆனாலும், அவனுடைய கொள்கைகளும், கோட்பாடுகளும் கொஞ்சம் இடைவெளி விட்டுப் பழக வைக்கின்றன.

'பிரதாப்பிடம் உதவி கேட்க வேண்டியதுதான்… கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்குப் பழக்கப் பட்டவன்... தாத்தா, பாட்டி, அத்தைகள் என்று அனைவரும் அருகருகே உள்ள குடும்பம்… அந்நியோன்யமும், பிணைப்புகளும் நிறைந்த குடும்ப வாழ்க்கையைப் பார்த்தால் இவனது கொள்கைகள் மாறும்…' என முடிவெடுத்து, அவளுடைய அறைக்குச் சென்றாள்.

அதே நேரத்தில் செல்போன் ஒலி எழுப்ப, எடுத்துப் பார்த்தவள், "இப்பத்தான் உங்களை நினைச்சேன்… அதுக்குள்ள கால் பண்றீங்க…" என்று ஆச்சர்யத்துடன் சொல்ல,

"ஸ்பீக் ஆ.ப் தெ டெவில் அண்ட் ஹி வில் அப்பியர்…" என்று சிரித்தவாறே கூறியவன், "எதுக்கு என்னை நினைச்ச ப்ரீத்தி…" என்றான்.

"அதுவா, லன்ச்சுக்குக் கூப்பிடறேன்னு சொல்லிட்டே இருக்கீங்க, கூப்பிடற மாதிரியே இல்லையேன்னு நினைச்சேன்… உங்க வீட்ல இருக்கறதெல்லாம் காலி பண்ணிடுவேன்னு பயமா…"

அவனும் அதற்காகத்தான் அழைத்திருந்தான். 'மஹதியின் தேர்வுகள் முடிந்தால் அவளையும் சேர்த்து வீட்டிற்கு அழைக்கலாம்' என்று நினைத்து, இவ்வளவு நாட்களாக ஒத்திப் போட்டிருந்தான்.

"அதுக்குத்தான் கால் பண்ணினேன்மா… நாளைக்கு அப்பாவும், அம்மாவும் நேர்ல வந்து இன்வைட் பண்றேன்னு சொல்லச் சொன்னாங்க…"



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சிறிது நேரம் அவனிடம் பேசிவிட்டு, “பிரதாப்! நாம லாஸ்ட் வீக் பப்ளிஷ் பண்ணின மேட்டர் சம்மந்தமா முக்கியமான எவிடென்ஸ் கிடைச்சிருக்கு… மினிஸ்டர் யார் கிட்டயோ பேசினதை வீடியோ ரெகார்ட் பண்ணிருக்காங்க… கோடிக்கணக்கில கரப்ஷன் நடந்திருக்க வாய்ப்பு இருக்குன்னு நம்ம ரிப்போர்ட்டர்குக் கால் வந்திருக்கு… நானும் அவனும் அந்த வீடியோ ரெகார்ட் பண்ணின ஆளைப் பார்க்கப் போறோம்…” என்றாள்.

யோசனையுடன், “இன்ஃபார்ம் பண்ணினவன் சரியான ஆள்தானானு செக் பண்ணிட்டீங்களா… எதுக்கும் நீ போக வேண்டாம் ப்ரீத்தி… உன் மேல ரொம்பக் கோபத்தில இருக்காங்க…” என,

“எல்லாம் செக் பண்ணிட்டோம்… நம்பிக்கைக்குரிய ஆள்தான்… சின்னப் பையனை மட்டும் தனியா எப்படி அனுப்பறது… அதனாலதான் அவனை முதல்ல போகச் சொல்லிட்டு நான் ஃபாலோ பண்றேன்… அதுவுமில்லாம பார்க் எங்க வீட்ல இருந்து வாக்கபிள் டிஸ்டன்ஸ்… பப்ளிக் ப்ளேஸ்ங்கறதால பயப்பட ஒண்ணும் இல்லை… வீடியோ கைக்குக் கிடைச்சதும் வாங்கிட்டு பத்திரமா வந்திடறேன்… வேற யார்கிட்டையும் பொறுப்பை ஒப்படைக்க முடியாது…” என்றாள்.

‘எங்கே? எத்தனை மணிக்கு?’ என்ற விபரங்களைக் கேட்டுக் கொண்டு, “நானும் வரேன் ப்ரீத்தி… எனக்கோ, அப்பாவுக்கோ இந்த விஷயத்தைச் சொல்லாம, டைரக்டா உங்க ரெண்டு பேருக்கும் கால் பண்ணிருக்காங்க… எனக்கு என்னவோ சரியாப் படலை… பார்க்கோட எண்ட்ரன்ஸ்லையே வெயிட் பண்ணு… நான் வந்ததும் ரெண்டு பேருமே சேர்ந்து போயிட்டு வரலாம்… இன்னும் அரை மணிநேரத்தில அங்க வந்திடுவேன்… நானும் பர்ஸனலா ஒரு விஷயம் பேசணும்… பேசிட்டு உங்க வீட்டுக்கு வந்திட்டுப் போறேன்…” என்று சொல்லி, போனை வைத்து விட்டான்.

சின்னதாக ஒரு குளியல் போட்டுவிட்டு, அரை குறையாக உடைகளைச் சுற்றிக் கொண்டு வெளியில் வந்தால், சித்ரஞ்சன் அறைக்குள் நின்றிருந்தான்.

“கதவைத் தட்டிப் பார்த்தேன் சத்தமே இல்லை… அழுத்தமாத் தட்டினா அதுவா திறந்திடுச்சு…” என்று சொன்னவன், பேச்சைப் பாதியின் நிறுத்து விழுங்கி விடுவதைப் போலப் பார்க்கவும்தான், நின்ற கோலம் அவளுக்கு உறைத்தது.

உடலிலிருக்கும் மொத்த இரத்தமும் முகத்தில் ஏற, விழிகள் அவனை ஏறிட்டுப் பார்க்க மறுக்க, இதயம் படபடவென்று துடிக்க, தொண்டையில்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

வார்த்தைகள் சிக்கிக் கொள்ள, “கொ… கொஞ்சம் வெயிட் பண்ணுங்க… ஃபைவ் மினிட்ஸ்ல வரேன்…” என்றாள் குனிந்த தலையுடன்.

பிரதாப்போடு பேசியவாறே கதவைத் தாழிட மறந்ததை நொந்து கொண்டிருக்கையில், கதவைச் சாத்தும் ஒலி கேட்கவும், அது வரை இழுத்துப் பிடித்திருந்த மூச்சை வெளியிட்டாள்.

‘ஹப்பாடா!’ என்று நிமிர்ந்து பார்த்தால், அவன் விழிகளில் தாபத்தோடு நெருங்கி வந்து கொண்டிருந்தான்.

‘வெளியே போவதற்கு பதில் கதவைத் தாழிட்டு விட்டு வருகிறான்’ என்று பதற்றத்துடன், “ரஞ்சன்!” என்று அழைக்க, கண்ணிமைக்கும் நேரத்தில் கை வளையத்திற்குள் வேட்கையுடன் இழுத்துக் கொண்டான்.

பளீரென மின்னிய இடையில் கைகளைத் தவள விட்டவன், உதடுகளால் ஊர்வலம் நடத்தியவாறே, “இதுக்கும் மேல என்னால வெயிட் பண்ண முடியாது ப்ரீத்… பார்த்த நாள்ல இருந்தே உன்னை எனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டுத்தான் இருக்கேன்… உனக்கும் என்னைப் பிடிச்சிருக்குன்னு தெரியும்… ஆனாலும் ஏன் என்னோட ஃபீலிங்ஸைப் புரிஞ்சுக்க மாட்டேங்கற… இப்பெல்லாம் எனக்குப் பொறுமையே போச்சு… இதுவும் அடிப்படைத் தேவைதான் ப்ரீத்… என்ன பயம் உனக்கு…” என்று கேட்டான்.

நெற்றியில் துவங்கிய உதடுகளின் ஊர்வலம், கண், மூக்கு, கன்னம் என்று இறங்கி உதடுகளைச் சிறை செய்ய முயன்றது.

‘தன்னை மட்டும் தான் பிடித்திருக்கிறது… இனி வாழ்க்கையில் வேறு பெண் இல்லை…’ என்று சொல்லியிருந்தால், அவளது மனம் சமாதானமடைந்திருக்குமோ என்னவோ.

‘இவனிடம் பொங்கிப் பெருகுவது காதலா? காமமா? ஒரு வார்த்தை கூட காதலைப் பற்றிப் பேசியதில்லை… ’ என்று யோசிக்கையில், அவனது கைகள் எல்லை மீறவும், அவள் உடல் விறைப்புற்றது.

அவளிடம் வந்த மாற்றத்தை உணர்ந்து, சிறிது விலக்கி முகத்தைப் பார்த்தால் கண்களை இறுக மூடிக் கொண்டு நின்றிருந்தாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

'இவ்வளவு நேரம் நன்றாகத்தானே இருந்தாள்… திடீரென என்ன வந்து விட்டது? முழு சம்மதம் அவளிடம் தெரியவில்லையே…' என்று முடிவெடுக்க முடியாமல் தடுமாறுகையில் தொலைபேசி ஒலித்தது.

முற்றிலும் விலக்கி நிறுத்தியவன், தொலைபேசியை எடுத்துக் காதில் வைத்துக் கேட்க ஆரம்பித்தான்.

"கிளம்பிட்டிருக்காம்மா… போயிட்டு எப்ப வருவான்னு தெரியாது… கொஞ்ச நேரத்தில் கீழே வரும் போது நீங்களே கேட்டுக்கங்க…" என்று சொல்லிவிட்டு, திரும்பியும் பாராமல் அறையை விட்டு வெளியேறினான்.

'ஒவ்வொரு முறை நெருங்கும் போதும், விலகிப் போய்விடுகிறாள்… தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறாள்?' என்று எரிச்சலுடன் நினைத்து, சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

'தனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்கிறாள்… தன்னுடைய முகத்தை வைத்தே உணர்வுகளைப் படிக்கும் வித்தையைக் கற்றுவிட்டாள்… தன் தொடுகையை சகஜமாக எடுத்துக் கொள்கிறாள்… ஆனாலும், இன்று என்ன வந்து விட்டது… விலக்கித் தள்ளவும் இல்லை… அதே சமயம் முழுமையாகத் தன்னோடு ஒன்ற முடியாமல் தடுப்பது என்ன…" என்று என்ன யோசித்தும், அவனுக்குப் புரியவில்லை.

நேரம் போவது தெரியாமல் நின்றிருக்கையில், கையில் சிகரெட்டின் சூட்டை உணர்ந்ததும், "ஸ்ஸ்ஸ்…" என்றவாறு அதை நசுக்கி எறிந்தான்.

'இன்று அவளிடம் பேசி ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும்… இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தை இன்றோடு நிறுத்திவிட வேண்டும்…' என்று முடிவெடுக்கையில், விடாமல் செல்போன் ஒலி எழுப்பியது.

எரிச்சலுடன் எடுத்து, "ஹலோ!" என்றதுமே, "ரஞ்சன்! பார்க்ல ப்ரீத்திக்கு பலமா அடி பட்டிருக்கு… ஹாஸ்பிடல் கொண்டு போயிட்டிருக்கேன்… சீக்கிரமாக் கிளம்பி வாடா… வந்ததுக்கப்புறம் எல்லாத்தையும் விவரமாச் சொல்றேன்…" என்று மருத்துவமனையின் பெயரைச் சொல்லி வைத்துவிடவும், அதிர்ச்சியுடன் நின்று விட்டான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'என்ன நடந்தது?' என்று புரியாமல், தவிப்புடன் புயல் வேகத்தில் காரைக் கிளப்பிக் கொண்டு பறந்தான். மருத்துவமனையை அடையும் போது, பிரதாப்பின் காரும் வேகத்துடன் உள்ளே நுழைந்தது.

தலையில் இருந்து கொட்டிய இரத்தத்தைக் கட்டுப்படுத்த டவல் சுற்றப் பட்டிருந்தது. கைகளில் நிற்காமல் இரத்தம் சொட்டியவாறு இருக்க, கண்களை மூடிக் கிடந்த ப்ரீத்தியைப் பார்த்ததும் மனம் துடித்தது.

யாருக்கும் காத்திருக்காமல், அரை மயக்க நிலையில் இருந்தவளைக் கையில் தூக்கினான். அந்த நிலையிலும் அவனை உணர்ந்தவள், "ரஞ்சன்!" என்று மெல்லிய குரலில் அழைத்து, கண்களைத் திறக்க முயன்று, முடியாமல் மயங்கிச் சரிந்தாள்.

பாதி சிதைந்திருந்த கைகளைப் பார்த்து, தாங்கிக் கொள்ள முடியாமல் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அவளுடைய தலையிலிருந்து வழிந்த இரத்தம், அவன் சட்டையை நனைத்தது.

## 22

**கு**ளிர்ந்த நீர்த்துளிகள் முகத்தில் விழவும், சிரமத்துடன் கண்களைத் திறக்க முயன்ற ப்ரீத்திக்கு, இமைகளைப் பிரிக்க முடியவில்லை.

'மழையில் நனைகிறோமா? இல்லையே… முகத்தில் மட்டும்தானே குளிர்நீர்… கண்களுக்கு என்னவாயிற்று? இத்தனை நேரம் இருந்த இருள் மறைந்து வெளிச்சப் புள்ளிகள் கண்களைக் கூசச் செய்யும் உணர்வு…' எவ்வளவு முயன்றாலும், கனத்துப் போயிருக்கும் இமைகளைத் திறக்கவே முடியவில்லை.

மிதந்து கொண்டிருக்கையில், எதிர்பாராமல் எங்கேயோ விழுவது போலத் தோன்றவே, எதையாவது பற்றிக் கொள்ள நினைத்தாள். கைகளைத் துளாவ முயன்றால், அசைக்க முடியவில்லை.

'என்ன நடந்தது?' என்று யோசித்து யோசித்து எதுவும் நினைவிற்கு வராமல், தலை விண்ணென்று வலித்தது. புருவங்களைச் சுருக்கி யோசித்தால், தாங்க முடியாத வலி முகம் முழுக்கப் பரவியது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“நினைவு திரும்புது… இனி பயப்பட ஒண்ணும் இல்லை…” என்று யாரோ சொல்வதும், அதைத் தொடர்ந்து விதவிதமான மெல்லிய பேச்சுக் குரல்களும் கேட்டன. புருவங்களை இதமாக யாரோ தடவி விடவும், அதுவரை உறக்கமும் விழிப்பும் அல்லாத நிலை போய், மயக்கம் ஆட்கொண்டது.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ தெரியவில்லை. சுயநினைவு திரும்பியதும், கண் விழித்துப் பார்த்தது, முகம் இறுக கண்களை மூடி அமர்ந்திருந்த சித்ரஞ்சனைத்தான்.

உணர்ச்சிகளைப் பிரதிபலிக்காக முகத்தோற்றத்தைக் கண்டதும், ‘இப்போது என்னவாயிற்று இவனுக்கு…’ என்று யோசித்தவளுக்கு, இருந்த இடம் வித்தியாசமாகப் பட்டது. மருந்துகளின் நெடியும், படுத்திருந்த நிலையும் நடந்ததையெல்லாம் நினைவுபடுத்தின.

மாலை வேளையில் வேட்கையுடன் நெருங்கிய சித்ரஞ்சனின் முகமும், தாபத்துடன் அழைத்த குரலும் அவளை நிலைகுலையச் செய்திருந்தன. வெளியே செல்லவே பிடிக்கவில்லை.

எனினும் ‘பிரதாப்பையும் வரச்சொல்லியாயிற்று’ என்று எண்ணி, சிறிதுநேரத்திலேயே பூங்காவிற்குச் சென்று விட்டாள்.

அவனுக்காக வெளிப்புறமாகக் காத்திருக்கையில், கவனம் சுற்றுப் புறத்தில் பதியவில்லை. ரஞ்சனைப் பற்றியே நினைத்தவாறு, ஒரு வித கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

‘நெருங்கவும் முடியாமல், விலகவும் முடியாமல் இதென்ன புதுவித அனுபவம்? உடலிலிருக்கும் செல்கள் ஆர்ப்பரிக்க, மூளை மட்டும் தடுக்க, தன்னுள்ளேயே சத்தமில்லாமல் ஒரு யுத்தம் ஏன்?’ என்று தன்னுள்ளேயே கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கையில்,

“ப்ரீத்தி! தள்ளிப்போ…” என்ற அலறல் கேட்டது.

அனிச்சைச் செயலாக விலகியவளின் தலையில், மடாரென ஓர் அடி விழுந்தது. சமாளிப்பதற்காக அருகில் நிறுத்தியிருந்த பைக்கைப் பிடித்துக் கொண்டாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“டேய்! அடிக்காதடா…” என்று அலறலோடு கூடிய பிரதாப்பின் குரல் நெருங்கவும், “பொம்பள உனக்கே இவ்ளோ திமிரா… எங்க தலைவருக்கு எதிராவா எழுதற… இனிமேல் எழுதறதுக்கு இந்தக் கை இருக்கான்னு பாருடி…” என்று ஆத்திரத்தில் சொல்லிய ஒருவன், கையிலிருந்த முட்களாய்த் தோற்றமளித்த இரும்புத் தடியால், பைக்கைப் பிடித்திருந்த வலது கையில் தாக்கத் தொடங்கினான்.

சதையைப் பிய்த்துக் கொண்டு நாலாப்புறமும் சிதறிய இரத்தம், விபரீதத்தைப் பறை சாற்றியது. ‘என்ன நடக்கிறது…’ என்பதை உணர்ந்து கொள்வதற்குள், அவளை அடித்தவன், அருகில் வந்து நின்ற பைக்கில் உடனடியாகப் பறந்து விட்டான்.

ஓடிவந்த பிரதாப் நிற்கமுடியாமல் தடுமாறியவளைப் பார்த்து, உடனடியாகத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

அதற்குப் பின் என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரியாது. அரைகுறை மயக்கத்தில் காரில் அழைத்துப் போவதும், அவளைத் தூக்கி எங்கோ கிடத்துவதும், கனவில் நடந்தவை போல இருக்கின்றன.

‘மோசமாகச் சிதைந்திருந்த தன்னுடைய கை என்னவாயிற்று?’ என்று திடுக்கிட்டுப் பார்க்கவும், அசைக்க முடியாதவாறு வெள்ளை நிறத்தில் முழுக்கக் கட்டுப் போடப் பட்டிருந்தது.

‘ஒரு கை போனால் என்ன… இரண்டு கைகளும் கால்களும் இல்லாதவர்களே தன்னம்பிக்கையோடு வாழும் போது தனக்கு என்ன வந்து விட்டது…’ என்று உறுதியுடன் நிமிர்ந்தாள்.

தலை தாங்கொணா பாரமாகக் கனத்த போதும், எழுந்து அமர முயற்சிக்கையில் “ப்ரீத்தி! நோ…” என்று அதட்டிய சித்ரஞ்சன், “நான் இங்க தானே இருக்கேன்… எதாவது வேணும்னா என்னைக் கூப்பிட வேண்டியதுதானே… அதுக்குள்ள என்ன அவசரம்… இன்னொரு கையில இவ்ளோ நேரம் ப்ளட் கொடுத்திட்டிருந்தாங்க… அதையும் அதிகம் அசைக்க வேண்டாம்…” என்று சொன்னவாறு அவளைச் சரித்துப் படுக்க வைத்தான்.

“டைம் என்னாச்சு?”

“ஒன் ஓ க்ளாக் ஆகப் போகுது…”

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'அப்படியென்றால் ஆறு மணி நேரம் மயக்கமாகவா இருந்திருக்கிறோம்... பிரதாப் எங்கே...' என்று பார்வையைத் திருப்பிப் பார்த்தாள்.

"ஒருத்தர் தான் ஹாஸ்பிடல்ல தங்க முடியும்... அதான் பிரதாப்பை வீட்டுக்குப் போகச் சொல்லிட்டேன்..." என்றவனின் குரலில், ஒரு விலகல் தன்மை இருப்பதாகப் பட்டது.

'இவனுக்கு என்னதான் ஆயிற்று?' என்று யோசித்தவளுக்கு, மாலையில் அவன் தன்னைத் திரும்பியும் பார்க்காமல் கோபமாகச் சென்றது நினைவில் வந்தது. 'ஓ! இன்னும் கோபம் தீரவில்லை போல...' என்று மனம் சோர்ந்தாள்.

உடலும் மனமும் சோர்ந்திருக்கும் போது, அவனது இறுகிய முகத்தோற்றம் மனவலிமையைக் குறைத்தது.

சித்ரஞ்சனுக்கோ, 'இந்த நிலைமையில் கூட தன்னுடைய அருகாமையை விரும்பாமல், தானே எழுந்து அமர முயற்சி செய்கிறாள், தான் உதவி செய்ய மாட்டோமா... பிரதாப்பைத்தானே எதிர்பார்க்கிறாள்...' என்ற ஆதங்கம் மனதில் எழுந்தது.

பெருமூச்சுடன், "கொஞ்சம் ஜூஸ் கொடுக்கச் சொன்னாங்க" என்று அவளை மெதுவாகத் தூக்கி அமர வைத்தவன், வாயில் டம்ளரை வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டினான்.

வறண்டிருந்த தொண்டைக்கு இதமாக இருக்கவும், 'இத்தனை வலிய கை இவ்வளவு இதமாகத் தூக்கிப் பிடிக்குமா...' என்று தன்னைத் தூக்கிப் பிடித்த வலிய கரங்களையே பார்த்தாள்.

"கொஞ்ச நாள்ல எல்லாம் சரியாயிடும்... கை இருந்த பொஸிசன் பார்த்து ரொம்பக் கவலைப் பட்டிட்டிருந்தோம்... மூணு ஃபிங்கர்ஸ்ல மைனியூட் ப்ராக்சர் தான்... எல்லாத்தையும் சேர்த்துக் கட்டுப் போட்டிருக்காங்க... போன்ஸ் ஒண்ணாச் சேர்ந்து, மஸில்ஸ் எல்லாம் கவர் ஆக ஒன் ஆர் டூ மன்த்ஸ் ஆகும்னு டாக்டர் சொல்லிருக்கார்..." என்று வாயைத் துடைத்து விட்டபடியே கூறினான்.

சில நிமிடங்கள் இருவருக்குமிடையில் கனத்த மௌனம் நிலவியது. அவள் சோர்வது தெரிந்ததும், "நர்ஸ் இப்பதான் வந்திட்டுப் போனாங்க... இனிமேல்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

காலையிலதான் மெடிசன் சாப்பிடணும்… நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடுடா…" என்று தலையிலிருந்த கட்டின் மேல் மெதுவாகத் தொட்டு வருடி விட்டான்.

இவ்வளவு நேரம், உணர்ச்சிகளற்ற அவன் முகத்தைக் கண்டு தவித்துக் கொண்டிருந்த மனது அவளறியாமல் அமைதியானது.

அவள் உறங்கியதும் அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்குத் தன்னுடைய மனநிலையே வித்தியாசமாக இருந்தது. அவ்வளவு நேரம் இருந்த மனநிலையைத் திரும்பப் படித்தான்.

அரை மயக்க நிலையில் அவளைப் பார்த்ததும், அவனது உலகம் நின்றுவிட்டதாகத் தோன்றியது. அவளைத் தன்னோடு சேர்த்து தூக்கிப் பிடிக்கையில், மயங்கிச் சரியவும் இதயம் ஒரு கணம் நின்று தாறுமாறாகத் துடித்தது.

இரத்தம் வழிய, உணர்வு மயங்கிக் கொண்டிருந்த நிலையிலும் "ரஞ்சன்!" என்று அழைத்த ப்ரீத்தியின் குரல் பசி, தூக்கத்தை மறக்கடித்தது.

"எந்தப் பிரச்சனையுமில்லை…" என்று மருத்துவர் சொல்லும் வரை, நேரம் எப்படிப் போனதென்றே தெரியவில்லை. கண் மணிகள் அசைவது தெரியும் வரை, சட்டையிலிருந்த இரத்தத்தை வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

'இந்த உணர்வுகளுக்குக் காரணம் என்ன?' என்பது புரியவில்லை. என்றாலும் 'அவளின்றித் தன் உலகம் இயங்காது' என்பது புரிந்தது. கண்மூடி சாய்ந்து அமர்ந்தவன், எப்போது உறங்கினான் என்றே தெரியவில்லை.

இருவரும் கண்விழித்த சிறிது நேரத்திலேயே, பிரதாப், மஹதியையும் அம்மாவையும் அழைத்து வந்தான்.

பதறியபடி, "என்னடா இது… சொல்லிட்டாவது வரக்கூடாது… அரக்கப் பறக்கக் காரை எடுத்திட்டுப் போனதைப் பார்த்து பயந்து போயிட்டோம்… போன் பண்ணிக் கேட்டா, வேற யாருக்கோ ஏக்சிடென்ட், ப்ரீத்தி ப்ளட் டொனேட் பண்ணிட்டிருக்கா, முடிஞ்சதும் நான் கூட்டிட்டு வரேன்னு பொய் வேற சொல்ற… டேப்லெட் போட்டதால எனக்குத் தூக்கம் வந்திடுச்சு… இல்லைன்னா உங்க ரெண்டு பேரையும் கண்ணில பார்க்கற வரைக்கும் தூங்கிருக்க மாட்டேன்… இனிமேல் இது மாதிரி எந்த

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

விஷயத்தையும் மறைக்காதடா…” என்று மகனைத் திட்டியவர், “ப்ரீத்தி! இப்ப எப்படிம்மா இருக்கு…” என்று தலை முதல் கால் வரை ஆராய்ந்தார் யசோதா.

மஹதியும் “அண்ணி!” என்று கண்கலங்க அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

“பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை… இப்ப நல்லாருக்கான்னு சொல்லித்தானே கூட்டிட்டு வந்தேன்… அம்மாவுக்கு சமாதானம் சொல்லாம நீயும் அழுதா எப்படி மஹதி…” என்று பிரதாப் கேட்கவும், கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

“காலம் கெட்டுப் போச்சுப்பா… பப்ளிக் ப்ளேஸ்ல அவ்ளோ பேர் சுத்தி இருக்கும்போதே இப்படி தைரியமா வந்து அடிச்சிட்டுப் போறாங்களே… இவங்க எல்லாம் உருப்படுவாங்களா… அடி கொஞ்சம் பலமாப் பட்டிருந்தா என்ன ஆகறது…” என்று இயல்பிற்கு மாறாக யசோதா புலம்பிக் கொண்டிருந்தார்.

டாக்டர் வந்து பரிசோதித்துவிட்டு, “நடந்ததையே நினைச்சு வருத்தப்படாதீங்க… இப்ப நல்லா இருக்காங்க… கையை மட்டும் பத்திரமாப் பார்த்துட்டா போதும் ஒரு மாசத்தில பழைய மாதிரி ஆயிடும்…” என்று சொல்லும் வரை அவர் புலம்பல் நிற்கவில்லை.

“பிரதாப்! நீங்க அவனைப் பார்த்ததும், எச்சரிக்கை செய்ய சத்தம் போட்டது ரொம்ப நல்லதாப் போச்சு… யாரோ கவனிக்கறாங்கன்னு அவன் கவனம் கொஞ்சம் திசை திரும்பிருக்கு… ப்ரீத்தியும் கொஞ்சம் விலகிட்டாங்க… இல்லைன்னா தலையில இன்னும் பலமா அடி பட்டிருக்கும்… முழு பலத்தோட அடி இறங்காததால சீக்கிரம் குணமாயிடும்… நீங்க வேகமா ஓடிவர்றது தெரிஞ்சதும் கையிலையும் வேக வேகமாத் தாக்க ட்ரை பண்ணிருக்கான்… அதுவும் பலமா இருந்திருந்தா இன்னும் கஷ்டம்… ஒரே அடியோட ஓடிட்டான்… கெட்டதிலயும் ஒரு நல்லது இதுதான்…” என்று பாராட்டுதலாக டாக்டர் சொல்லவும், அனைவரும் நன்றியுடன் பிரதாப்பைப் பார்த்தனர்.

அருகில் நின்றிருந்த ரஞ்சனின் கை இறுக்கமாகப் பிடிக்கவும், ஆறுதலாகத் தோளில் கைபோட்டுக் கொண்ட பிரதாப், “ஆண்ட்டி! சில மாசத்துக்கு முன்னால நடந்த ஏக்சிடெண்ட்ல எனக்குக் கூட கையில பலமா அடிபட்டிருந்துச்சு… கையையே எடுத்திட வேண்டியிருக்கும்னு நினைச்சேன்… இப்ப எல்லாம் சரியாகி, நான் நார்மலா



**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

இல்லையா… ப்ரீத்திக்கும் சரியாயிடும்… நீங்க கவலைப்படாதீங்க…” என்று ஆறுதல் சொல்லவும், மனம் தெளிந்தார் யசோதா.

குளித்துவிட்டு சிறிது ஓய்வெடுத்து வருமாறு ரஞ்சனை அனுப்பியவன், நாற்காலியை இழுத்துப் போட்டு, ப்ரீத்தியின் அருகில் அமர்ந்தான்.

“எல்லா நியூஸ்பேப்பரும் நேத்து நடந்த இன்சிடெண்ட்டைக் கவர் பண்ண ஹாஸ்பிடல் வந்திட்டாங்க… இன்னைக்கு பேப்பர்ல நியூஸ் வந்திருக்கு ப்ரீத்தி… இது சாதாரண இஷ்யூ இல்லை… இது போல ரிப்போர்ட்டர்ஸ் மேல தாக்குதல் அப்பப்ப நடந்திட்டே இருக்கு… இன்னைக்கு எல்லாப் பத்திரிக்கையாளர்களும் போராட்டம் நடத்தப் போறதா அறிவிச்சிருக்கோம்… இதுக்குக் காரணமானவங்களைக் கண்டு பிடிச்சு நடவடிக்கை எடுக்கற வரைக்கும் போராடப் போறதா சில மகளிர் அமைப்புகளும் முன் வந்திருகாங்க…” என்றான்.

இது போல எத்தனை எத்தனை போராட்டங்கள் அநீதிக்கு எதிராக நடந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் தப்பு செய்த அனைவரும் தண்டிக்கப் படுகிறார்களா? வேறு யாராவது குற்றத்தை ஒப்புக் கொள்கிறார்கள். இல்லையென்றால் எல்லா இடங்களிலும் இருக்கவே இருக்கின்றன லஞ்ச லாவண்யங்கள். நீதியையும் விலை கொடுத்து வாங்க முடியும் அரசியல்வாதிகளால்.

“பிரதாப்! அந்த வீடியோ விஷயம் என்னாச்சு… எவிடென்ஸ் கிடைச்சுதா…”

“இல்ல ப்ரீத்தி… நேத்து நடந்த ப்ராப்ளத்தில அதை மறந்தே போயிட்டோம்… எப்பவுமே கவனமாத்தானே இருப்ப… உன் கண் எதிரிலையேதான் நடந்து வந்திட்டிருந்தான், அவனை எப்படி கவனிக்காம விட்ட… உன் மேல மோதற மாதிரி வர்றான்னுதான் முதல்ல நினைச்சேன்… நீ ஒதுங்கிப் போயிடுவேன்னு பார்த்தா அப்படியே நின்னுட்டிருந்த… கட்டையையும் அதில ஜாயின் பண்ணிருந்த செயினையும் பார்த்ததுக்கப்புறம் தான் டேஞ்சர் புரிஞ்சுது… என்னதான் ஆச்சு உனக்கு… ரொம்ப கேர்லெஸ் ஆயிட்ட…” என்று தணிவாகத் திட்டினான்.

சுற்றுப் புறத்தைக் கவனிக்காமல் நின்றதற்கான காரணம் நினைவிற்கு வர, அவள் முகம் சிவந்தது.

“ஓஹோ… சம்திங் ஸ்பெஷல் இருக்கும் போல…” என்று சிரித்தபடியே முகத்தைப் பார்த்துக் கூறியவன், “நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா… இப்ப

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

யோசிச்சுப் பார்க்கும் போதுதான் ஒவ்வொண்ணா ஞாபகத்துக்கு வருது… ரஞ்சனோட தவிப்பையும், பதட்டத்தையும் நான் நேர்ல பார்த்தேன்… அவ்ளோ சீக்கிரமா எந்த ரியாக்ஷனையும் வெளியில காட்டவே மாட்டான்… அவன் துடிச்ச துடிப்பில உன் மேல வச்சிருக்கற அன்பு வெளில வந்துது… உன்னைக் கையில சுமந்திட்டு வந்தப்ப ஒவ்வொரு அசைவுலையும் லவ் தெரிஞ்சுது… இரத்தக் கறையையே வெறிச்சுப் பார்த்திட்டு எவ்ளோ நேரம் உட்கார்ந்திருந்தான் தெரியுமா… உனக்குப் ப்ராப்ளம் இல்லைன்னு சொன்னதுக்கப்புறம்தான் கொஞ்சமாவது தெளிஞ்சான்… அதுக்கப்புறம் மாத்தறதுக்கு வேற ட்ரெஸ் வாங்கிக் கொடுத்து, ப்ளட் ஆன சட்டையைத் தனியா எடுத்து வச்சிருக்கேன்… உனக்கு முகம் தொடைச்சு விட்டது, வலியில புரண்டு படுத்தப்ப, வசதியா உன்னைத் தூக்கிப் படுக்க வச்சதெல்லாம் அவன் தான்..” என்று சந்தோசமாகக் கூறினான்.

‘அப்படியென்றால், புருவங்களை இதமாகத் தடவிக் கொடுத்தது, கைகளை அழுத்தமாகப் பற்றிக் கொண்டிருந்தது எல்லாமே அவன் தானா… எப்போதுமே அன்பும் அக்கறையும் காட்டுவான் தான்… அதெல்லாம் இயல்பாகத் தோன்றும்… விழித்ததும் ஜூஸ் வேறு குடிக்க வைத்தானே…’ என்றெல்லாம் நினைக்க நினைக்க, அவள் மனதில் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்தன.

‘ஏன்?’ என்று புரியாத போதும், மனதளவில் அவன் மேலும் நெருங்கி வருவது போலிருந்தது.

மருத்துவமனையில் தங்கியிருந்த ஒரு வாரமும், இளவரசி போல உணர வைத்தான். பகலெல்லாம் அம்மாவையும், மஹதியையும் இருக்கச் சொல்லிவிட்டு இரவு முழுக்கத் துணையாக இருந்தான்.

## 23

**ம**ஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த நீரில், வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு, மூன்று முறை சுற்றி, ப்ரீத்தியின் நெற்றியில் திலகமிட்டு “உள்ளே போம்மா…” என்றார் யசோதா.

மருத்துவமனையின் வாசத்தில், முழு ஓய்வில் இருந்ததால் நிற்பதற்குக் கூடத் தடுமாற்றமாக இருந்தது அவளுக்கு.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“மஹி! அண்ணியை உட்கார வை… ரொம்ப டயர்டாத் தெரியறா…” என்று சித்ரஞ்சன் சொல்லவும், தலையைத் திருப்பி பார்வையை அவன் புறம் செலுத்தினாள்.

முன்பு இருந்த கலகலப்பு அவனிடம் இல்லை. சதா சிந்தனையிலேயே இருக்கிறான். எப்போதும் போல இருந்திருந்தால், ஆலம் சுற்றுவதைக் கூட கிண்டல் செய்திருப்பான்.

அவர்கள் திருமணம் முடிந்து வீட்டிற்குள் நுழைகையில், “டயர்டா வந்திருக்கோம்… இப்பக்கூட வெளிலையே வெயிட் பண்ணணுமா மாம்…” என்று ஆலம் சுற்றக் காத்திருக்கும் நேரத்தில் சலிப்புடன் சொன்னவன் தான்.

கண்ணோடு கண் பார்த்துப் பேசுபவன், நிமிர்ந்து பார்க்கவும் காணோம். பெருமூச்சுடன் மஹதியின் கை பலத்திலேயே சோபாவில் சென்று அமர்ந்தாள்.

“ப்ரீத்திம்மா! கொஞ்ச நாள் கீழேயே என்னோட ரூம்ல ஸ்டே பண்ணிக்க… தனியா எந்த வொர்க்கும் பண்ண சிரமமா இருக்கும்… ஓரளவு ஹெல்த் ரெகவர் ஆனதும் உங்க ரூமுக்குப் போயிடுவையாம்…” என்று யசோதா சொன்னதும், ‘ரஞ்சன் எதாவது சொல்வானா?’ என்று பார்த்தாள்.

அவன் முகம் எந்த வித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் இருக்கவே மனம் சோர்ந்தது. உடல் நலமும், மனநலமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மனதில் உள்ள பிரச்சனைகள் உடலையும், உடலில் உள்ள பிரச்சனைகள் மனதிலும் பிரதிபலிக்கின்றன.

தனித்தே தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிப் பழகிக் கொண்டவளுக்கு, சின்னச் சின்ன வேலைகளுக்கும் சார்ந்திருத்தல் சிரமமாயிருந்தது. கீழ் அறையில் தங்கிக் கொண்டால், அம்மாவும் யசோதாவும் எல்லா உதவிகளும் செய்வார்கள்.

ஆனால், ‘சரி என்று உடனே ஏன் சொல்ல முடியவில்லை தன்னால்… தொண்டை அடைத்துக் கொண்டு வார்த்தைகள் வெளிவராத தடுமாற்றம் எதனால்…’ என்று யோசித்தவளுக்கு, ‘ரஞ்சனின் அருகாமையை மனம் விரும்புகிறது’ என்ற உண்மை புரிந்தது.

அவன் உதவிக்கு வருவான் என்று பார்த்தால், உன் இஷ்டம் என்று கைகளைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தான்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

“அம்மா! நான் மேலேயே இருந்துக்கறேன்…” என்று தயங்கியவாறே சொல்லவும், அவனது விழிகள் பளிச்சிட்ட பிரம்மை.

“ரொம்பக் கஷ்டம் ப்ரீத்தி… இங்கயாவது யாராவது வரப் போக இருப்பாங்க… உனக்கும் போர் அடிக்காது… ஆட்கள் நடமாட்டம் இருந்திட்டே இருக்கும்…”

“ஸேரி எல்லாம் கை சரியாகற வரைக்கும் கட்ட முடியாதும்மா… இவ்ளோ சர்வெண்ட்ஸ் முன்னால ஹவுஸ் கோட் போட்டுட்டு இருக்க ஒரு மாதிரி இருக்கு…”

“ஆனா, ப்ரீத்தி! நான் என்ன சொல்றேன்னா…” என்று தடுக்கும் விதமாகப் பேசவும், “மேலேயே இருக்கட்டும் மாம்… அதான் அவளே சொல்லிட்டாளே… நான் ஆ்ஃபிஸ் கிளம்பினதும் நீங்களும் மஹதியும் வேணுங்கற ஹெல்ப் பண்ணுங்க… நான் இருக்கும் போது நானே பார்த்துக்கறேன்” என்று முடித்து விட்டான்.

மினி இட்லியின் சாம்பார் உற்றி, ஒரு ஸ்பூன் போட்டுக் கொடுக்கவும், எளிதாக உண்டு முடித்தவள், சோர்வது போலத் தெரியவும், “கொஞ்சம் ரெஸ்ட் எடு ப்ரீத்தி… ஒன் வீக் டயர்ட் இருக்கும்னு டாக்டர் சொல்லி அனுப்பினாரே….” என்று யசோதா சொன்னார்.

உடலில் வலுக் குறைந்திருக்கவே, தடுமாற்றத்தை மறைத்து படிகளில் மெதுவாக ஏறவும், அவளது இடையில் கைகொடுத்து குழந்தையைப் போலத் தூக்கிக் கொண்டான் ரஞ்சன்.

“அம்மா, மஹி எல்லாம் இருக்காங்க… நானே மெதுவா வரேன்… என்று சிவந்த முகத்தை அவன் நெஞ்சிலேயே மறைத்துக் கொண்டு கிசுகிசுப்பாகச் சொல்ல, “பார்த்தாப் பார்த்துட்டுப் போறாங்க…” என்று விளையாட்டாகவே சொன்னான்.

“அண்ணி! நாங்க வேணும்னா கண்ணை மூடிக்கறோம்… பட் செம ரொமான்ஸ் சீன்… ஸோ நைஸ்…” என்று மஹதி சொல்லிவிட்டு, அன்னையிடம் செல்ல அடியைப் பெற்றுக் கொண்டாள்.

சில நாட்களுக்குப் பிறகு இயல்பாக வந்த விளையாட்டுப் பேச்சில் கண்களை மூடியபடியே வந்தவள், அவன் நின்றதும் கண்களைத் திறந்தாள். பார்த்ததும் வித்தியாசம் கண்ணில் பட்டது.

“உன்னோட ரூம்ல இருந்த காட் தான்… ஹாலுக்கே ஷிப்ட் பண்ணிட்டேன்… தனியா அந்த ரூம்ல இருந்தா உனக்கு என்ன வேணும்னே தெரியாது… கை ரெடி



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஆகற வரைக்கும் இங்கேயே இரு ப்ரீத்தி… மஹி வந்தாலும் இந்த ரூம் ரொம்ப கம்ஃபர்டபிளா இருக்கும்… எல்லாரும் சேர்ந்தே அரட்டை அடிக்கலாம்…”

‘எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு ஒன்றும் தெரியாவதவன் போல நின்றிருக்கிறான்’ என்று மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

“என்ன பதிலையே காணோம்… ஓகே வா… சொல்லும்மா…”

“ம்ம்… ஓகேதான்…” என்று மெல்லிய குரலில் சொல்லவும், கையில் பூங்கொத்துப் போல இருந்தவளைக் கட்டிலில் கிடத்தியவன்,

“சரி ரெஸ்ட் எடு ப்ரீத்தி… எனக்குக் கொஞ்சம் வொர்க் இருக்கு… இங்கிருந்தே பார்க்கறேன்…” என்று சொல்லிவிட்டு, லேப்டாப்பை எடுத்து அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

அவளையும் அறியாமல் பார்வை அவனையே சுற்றிச் சுற்றி வந்தது. ஓர் ஆண் மகனை இதுபோல பார்த்திராததால் குழப்பத்துடன் படுத்திருந்தாள்.

முகத்தின் கடினத் தன்மைக்கு மாறாக, மென்மையோடு கையாளும் அவன் கைகளின் வருடலிலேயே மனம் சுழன்றது. அவனுடைய அன்பிலும், அக்கறையிலும் மனம் அவன் பால் செல்வது புரிந்தது.

கம்பீரம் குறையாமல் அமர்ந்திருந்தவனின் நீண்ட விரல்கள், நர்த்தனம் ஆடுவதை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, உறக்கம் கண்களைத் தழுவியது.

வேலையை நிறுத்தி விட்டு ப்ரீத்தியை நிமிர்ந்து பார்த்தவன், அவள் நன்றாக உறங்கிவிட்டது தெரிந்ததும், அருகில் வந்து உற்றுப் பார்த்தான்.

ஒரு வாரத்தின் சோர்வு முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. அத்தனை வலியிலும், வேதனையிலும் சிறிதுகூடக் கலங்காமல், தைரியத்துடன் இருப்பவளை வியந்து பார்க்காமல் இருக்க முடியவில்லை அவனால்.

அவளை நெருங்க நினைத்த மனநிலைக்கும், இப்போதைய மனநிலைக்கும் உள்ள வேறுபாடு புரிந்தும் புரியாமலும் இருந்தது. அவளை மீண்டும் நெருங்கினால், விலகிப் போய் விடுவாளோ என்ற பயத்தில், விலகி நிற்கிறான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

வாழ்வில் அவனைக் கடந்து சென்ற பெண்களில் யாரும் இவளைப் போல தனி முத்திரையைப் பதிக்கவில்லை. இவளை விட எத்தனையோ அழகிகளைப் பார்த்திருந்தாலும், 'எல்லோரையும் விட ஏன் தன்னைப் பெரியும் பாதிக்கிறாள்… தன்னிடமிருந்து விலகிப் போகும் ஒவ்வொரு நொடியும் ஏன் தனக்கு வலிக்கிறது… எத்தனையோ விபத்துக்களைப் பார்த்திருந்தாலும் அடிபட்டு மயங்கிய அந்த நொடியில் தன் உலகம் சுழலாமல் நின்று போனது ஏன்…' என்று அவனுக்கு விடை தெரியாத கேள்விகளைத் தன்னிடமே கேட்டுவிட்டுப் பெருமூச்சோடு வேலையைத் தொடர்ந்தான்.

நீண்ட நேரம் கழித்து ப்ரீத்தி துயில் கலைந்து எழுகையிலும், மிக மும்மரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது கவனத்தைக் கலைக்காதவாறு மெல்ல எழுந்து அமரவும், "இப்பக் கொஞ்சம் ஃப்ரெஷ்ஷா இருக்கா ப்ரீத்தி?" என்றான்.

இவனுக்கென்ன உடல் முழுக்கக் கண்களா… தான் எழுந்ததைக் கண்டு பிடித்து விட்டானே…" என்று வியப்புடன் நினைத்தவள், "யெஸ், ரொம்ப ஃப்ரெஷ்ஷா இருக்கற மாதிரி இருக்கு… ஹாஸ்பிடல் ஸ்மெல்லையே இருந்து இருந்து பேஷண்ட்னு ஃபீலிங் இருந்திட்டே இருந்தது… இப்ப அது போல இல்லை… பேஸ் வாஷ் பண்ணினா இன்னும் கொஞ்சம் நல்லாருக்கும்…" என்றாள்.

"வார்ம் வாட்டரை பாத் டப்ல ஃபில் பண்ணி வச்சிருக்கேன்… குளிச்சா இன்னும் ஃப்ரெஷ்ஷா இருக்கும்… அடி பட்ட கைக்குப் படாமக் குளிக்க ட்ரை பண்ணு ப்ரீத்தி… உனக்குத் தேவையான திங்க்ஸ் எல்லாம் பக்கத்திலேயே எடுத்து வச்சிருக்கேன்… மஹியை இன்னும் கொஞ்ச நேரத்தில வரச் சொல்லிட்டுப் போறேன்… ட்ரெஸ் சேஞ்ஜ் பண்றதுக்கு ஹெல்ப் பண்ணுவா… நான் திரும்பி வரக் கொஞ்சம் லேட் ஆகும்…" என்று முகம் பார்க்காமல் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவனை நிமிர்ந்து பார்க்காமல் அமர்ந்திருந்தவளுக்கு, தன்னுடைய கூச்சத்தை மதித்து அவன் செயல்படும் விதம் பிடித்திருந்தது. ஆனாலும், ஏமாற்றமாய் ஏதோ ஓர் உணர்வு தன்னுள் பரவுவதை உணர்ந்தாள்.

சிறிது நேரத்தில் அறைக்குள் வந்த மஹதி, "உங்களுக்குக் ஹெல்ப் பண்றதைத் தவிர இந்த அண்ணனுக்கு முக்கியமான வேலை என்னன்னே தெரியலை…" என்று கண்களைச் சிமிட்டிச் சிரித்தவள், தலைக் காயத்திற்குப்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

படாதவாறு, நீண்டு அடர்ந்திருந்த கருங்கூந்தலை உயர்த்திக் கட்டி, ஷவர் கேப்பை மாட்டி விட்டாள்.

“இத்தனை நாள் அண்ணா கடைக்கே வந்ததில்லை அண்ணி… இப்ப உங்களுக்காக ஸ்பெஷல் ஹவுஸ்கோட் அவராப் போய் வாங்கிட்டு வந்திருக்கார்… கைக்கு டிஸ்டர்ப் ஆகாம ஈஸியாப் போட்டுக்கலாமாம்…” என்று பேச்சு வாக்கில் சொல்லவும்,

மருத்துவமனையில் இருந்த நர்ஸ் கூட அவனைப் பாராட்டி, “இந்தக் காலத்தில இப்படி ஒரு ஹஸ்பண்டா மேடம்… கண்ணசைவிலையே எல்லாத்தையும் கண்டு பிடிச்சுச் செய்யறார்…” என்றார்.

“இப்பக் குளிங்க… கொஞ்சநாளைக்குத் தலைல தண்ணியே படக்கூடாதாம்… அண்ணா சொல்லிட்டுப் போறார்… நான் இங்கேயே இருக்கேன், ஹெல்ப் வேணும்னா கூப்பிடுங்க…” என்று சொல்லி, கையில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

புத்தகத்தில் ஆழ்ந்திருக்கையில், ப்ரீத்தியின் செல்போன் ஒலிக்கவும், ‘எடுக்கவா வேண்டாமா…’ என யோசித்து, ‘பிரதாப்’ என்ற பெயரைப் பார்த்ததும், ஆவலோடு “ஹலோ” என்றாள்.

ஒரு நொடி அமைதி காத்த எதிர்முனை, “ஹாய் மஹதி! ப்ரீத்தி இல்லையா?” என்று கேட்கவும், ‘ஹலோ என்ற ஒற்றைச் சொல்லில் எப்படிக் கண்டு பிடித்தான்… இவ்வளவு நாள் பேசாமல் அலைக்கப்பவனால் எப்படி சாத்தியம்…’ என்று பிரம்மிப்பில் ஆழ்ந்தாள்.

அதற்குள் அவன் பல ஹலோக்களைச் சொல்லவும், “அண்ணி கொஞ்சம் பிஸியா இருக்காங்க…” என்று சொல்லவும் “ஃப்ரீயா இருக்கும் போது கால் பண்ணச் சொல்லு…” என்று பேச்சை முடித்தான்.

‘ஏன் இப்படிச் செய்கிறான்? முதல் பார்வையில் கனவுகளை விதைத்தவன்… கண்களாலேயே காதலைச் சொன்னவன்… ஒரு வேளை அது காதல் இல்லையோ? தான் தவறாகப் புரிந்து கொண்டோமோ… இல்லையே… திருச்சியில் இருந்த நேரத்தில் ஆவலோடு தேடிய விழிகள் சொன்னது பொய்யில்லையே… கிளம்பும் போது பார்வையால் விடைபெற்றது பொய்யில்லையே… அவன் ஸ்பரிஷத்தில் தன்னைத் தொலைத்ததும் பொய்யில்லையே…



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

முதல் சந்திப்புக்குப் பின் கல்லூரி செல்லும் வழியில் பலமுறை கடந்து செல்லும் அவன் காரைப் பார்த்து கற்பனையை வளர்த்துக் கொண்டு, அவனே அத்தனையும் என்று சரண் புகுந்த மனதை என்ன செய்வது? அண்ணனின் திருமணத்திலிருந்து மாற்றம் அவனிடம்… கடமைக்காக ஒருசில வார்த்தை பேசுகிறான்… ஒரு நிமிடம் கூட முழுதாக எந்தப் பேச்சும் இல்லை… பேசவில்லை என்றாலும் கண்களைச் சந்திப்பதைத் தவிர்ப்பது ஏன்…?' என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழும்ப, "ஏன் அண்ணிகிட்டத் தான் பேசுவீங்களா?" என்று குரலில் தவிப்புடன் கேட்டே விட்டாள்.

"அப்படியெல்லாம் இல்லை மஹதி… இந்த வீக் மேகசின் பத்திக் கொஞ்சம் டிஸ்கஸ் பண்ணணும்… அதுக்காகத்தான் கால் பண்ணினேன்… முக்கியமான மீட்டிங் இருக்கு இப்ப… அப்புறம் பேசறேன்…"

'அவ்வளவு தானா… தன்னிடம் பேசுவதற்கு ஒன்றுமே இல்லையா… தனக்கிருக்கும் பாதிப்பு அவனுக்கு இல்லையா…' என்று நினைக்க, கண்களில் நீர் பெருகியது.

"ஏய் மஹி! ஹெல்ப் பண்றேன்னு சொல்லிட்டு, கூப்பிட்டது கூடக் காதில விழாம என்ன செய்யற?" என்று குளியலறைக் கதவைச் சிறிது திறந்து கேட்ட ப்ரீத்தி, அவள் அழுது கொண்டிருப்பதைப் பார்த்து, "மஹி! என்னாச்சு?" என்று பதற்றத்தோடு கேட்டாள்.

தேவையான உதவிகளைச் செய்தவாறு, மறைக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் இல்லாததால், பிரதாப்பிற்கும் தனக்கும் இடையே நடந்த முதல் சந்திப்பையும், கண்களால் காதல் பேசியதையும், இப்போது அவன் தன்னைத் தவிர்ப்பதையும் அழுகையோடே சொன்னாள்.

"ஹேய்! நிஜமா டார்லிங்… நீ லவ் பண்றையா… வாலுப் பொண்ணுன்னு நினைச்சா பெரியவங்க ஆயிட்டீங்களோ… நான் கூட பத்து நாளா உன்னை கவனிச்சிட்டேதான் இருக்கேன்… மஹி அமைதியானதுக்குக் காரணம் இதுதானா…"

அழுகையை நிறுத்தி வெட்கத்துடன், "ம்ம்… லவ் தான்… சாப்பிட விடாம, தூங்க விடாம, ரொம்ப இம்சை பண்றான் உங்க ஃப்ரெண்ட்… ஒன் மன்த்தா என்னோட முகத்தைக் கூடப் பார்க்கறதில்லை அண்ணி… எக்ஸாம்கு ஆல் த பெஸ்ட் சொன்னதுதான்… அப்புறம் நீங்க ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆயிருக்கற விஷயத்தைச்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

சொல்லி ஆறுதலா தோளை மட்டும் இறுக்கப் பிடிச்சுட்டான்… அவளோதான்… இப்ப மறுபடி வேதாளம் முருங்கை மரம் ஏறிடுச்சு… பிஸியாம் பிஸி…” என்று பொறிந்து கொட்டினாள்.

“அம்மாடியோவ்… அவன் இவன்னு ஏக வசனமா… வேதாளம்னு பட்டப் பேர் வேறையா… மஹி ரொம்ப ஸ்பீடாதான் போயிட்டிருக்க…”

“ச்சூ போங்க அண்ணி… கையில கிடைச்சா உண்டு இல்லைன்னு பண்ணிடுவேன்… சில சமயம் ரொம்ப உரிமை உரிமை எடுத்துப் பேசறதும், சில சமயம் விலகிப் போறதும் தாங்கிக்கவே முடியலை…” என்று வேகமாகச் சொல்லியவள், “அண்ணி! பிரதாப்புக்கு என்னைப் பிடிக்கும் தானே…” என்று தடுமாற்றத்துடன் கேட்டாள்.

“என்னைக் கேட்டா எனக்கென்ன தெரியும்…” என்று பாவனையாகச் சொல்லிவிட்டு, “ஏய்! இதுக்கெல்லாம் என்ன மூட் அவுட்… பிரதாப் வேற யாரையும் லவ் பண்ணலைன்னு எனக்கு கன்ஃபார்மாத் தெரியும்… உன்னை ரொம்பப் பிடிக்கும்னும் தெரியும்… அய்யா மனசில என்ன இருக்குன்னு நான் பேசிப் பார்க்கறேன்…” என்று சொன்னாள்.

“ம்ஹூம்… வேண்டாம்… இதைப் பத்தி நீங்க எதுவும் பேச வேண்டாம்… அவர் எதாவது சொன்னாக் கேட்டுக்கங்க… இன்னும் ஒரு டென் டேஸ் தான் என்னால வெயிட் பண்ண முடியும்… அதுக்குள்ள என்கிட்டப் பேசலை, அப்புறம் இருக்கு கச்சேரி…”

மனம் விட்டுச் சிரித்த ப்ரீத்தி, “எனக்கென்னவோ லவ் பண்றேன்னு நீதான் சொல்லுவேன்னு தோணுது… யார் சொன்னாலும் எனக்கு சந்தோசம்… எதாவது ஹெல்ப் வேணும்னா கேளு…” என்றாள்.

அடுத்த பத்து நாட்கள் இறக்கை கட்டிப் பறந்தன. ப்ரீத்திக்கு உடல் நலம் திரும்பிருந்தாலும், கை இன்னமும் பழைய நிலைக்குத் திரும்பவில்லை.

அரும்பியிருந்த காதலில் மஹதி மூழ்கிக் கிடக்க, பிரதாப்பின் வீட்டினர் பற்றிய தகவல்களையெல்லாம் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

மஹதியுடனேயே பெருமளவு நேரத்தைச் செலவிட்ட ப்ரீத்தி, சித்ரஞ்சனின் பார்வை தன்னையே தொடர்வதைக் கவனிக்கவில்லை. தான் அவனைத் தவிர்ப்பதாக எண்ணி, விலகிச் செல்வதையும் உணரவில்லை.

## 24

**“ர**ஞ்சன்! என்ன அதிசயமா இருக்கு… ஆஃப்டர்னூனே வந்துட்டீங்க? என்று வியப்புடன் கேட்டாள் ப்ரீத்தி.

எப்போதும் மாலையில் வீடு திரும்புபவன், அன்று மதியமே திரும்பியிருந்தான்.

அமைதியாக ஸோஃபாவில் கண்மூடித் தலை சாய்ந்து அமர்ந்திருக்கவும், மிதமாக ஏ.சி.யைச் சுழல விட்டாள்.

‘நெற்றியில் சூடு இருக்கிறதா?’ என்று தொட்டுப் பார்த்தவளின், இடது கரத்தின் ஸ்பரிஷத்தில் கண்விழித்தவன், “அம்மாவை இன்னைக்கு செக்-அப்குக் கூட்டிட்டுப் போகணும் ப்ரீத்தி… நாளைக்கு டாக்டர்கு முக்கியமான ஆபரேஷன் இருக்காம்… அதான் இன்னைக்கே வரச் சொன்னார்… லன்ச் முடிச்சிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்…” என்றான்.

தாய்க்கும், மகனுக்குமான மனதின் ஆழம் தொடும் பிணைப்பை நினைக்க, அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எத்தனை வேலைகள் இருந்தாலும், தாயின் உடல்நலம் குறித்த அக்கறை அவனுக்கு நிறையவே இருக்கிறது.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்த மஹதி, “அண்ணா! ஜூஸ் இந்தாங்க…” என்று நீட்டியவாறு, “உங்க ரெண்டு பேருக்கும் லன்ச் மேலேயே அனுப்பிடவான்னு மம்மி கேட்டாங்க… அப்புறம் அண்ணி… தாத்தா கால் பண்ணிருந்தார்… உங்களைப் பேசச் சொன்னார்…” என்றாள்.

அவளுக்கு அடி பட்டது தெரிந்ததிலிருந்தே, தாத்தா அவ்வப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறார். ஒரு முறை நேரில் பார்த்துவிட்டால், அவர் மனம் நிம்மதி அடைந்து விடும். ஓரளவு உடல் நலம் திரும்பியிருக்கும் நிலையில், திருச்சிக்கு ஒருமுறை சென்று வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“கீழேயே வரோம் மஹி… எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்…” என்று பதில்சொல்லி அனுப்பியவள், யோசனையுடன் ரஞ்சனைப் பார்த்தாள்.

மனதிலிருப்பதைப் படித்தவனாக, “தாத்தாவைப் பார்க்கணுமா?” என்றான்.

‘பார்வையிலிருந்தே எப்படித்தான் கண்டு பிடிக்கிறானோ’ என வியப்புடன் நினைத்தவள், “டைம் இருந்தா போயிட்டு வரலாமா… குட்டீஸ் எல்லாம் ஸ்கைப்ல இருந்து அன்னைக்குப் பேசினாங்க… எனக்கும் பார்க்கணும் போல இருக்கு… இப்ப ஹெல்த் கொஞ்சம் ஓகேவாதான் இருக்கு…” என்றாள்.

“ஃப்ளைட் டிக்கட் புக் பண்ணச் சொல்லிடறேன்… நாளைக்குப் போகலாம்… ஓகேவா…”

‘நாளைக்கேவா? உண்மையாகத்தான் சொல்கிறானா?’ என்று திகைப்புடன் ஏறிட்டாள். எந்த வித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் இருந்தது அவனது முகம்.

“நிஜமாவா சொல்றீங்க?”

ஆச்சர்யத்தில் மலர்ந்த விழிகளையும், இதழ்களையும் சலனமற்றுப் பார்த்தான்.

“யெஸ்… நீயும் மஹியும் போயிட்டு வரதுனாலும் வாங்க… ட்ராவல்குத் தேவையானதெல்லாம் அரேன்ஞ் பண்ணிடறேன்… இல்லை, நான் வரணும்னாலும் ப்ராப்ளம் இல்லை…” என்று தோள்களைக் குலுக்கியபடியே சொல்லியவன், “சாப்பிடப் போகலாமா… மம்மி வெயிட் பண்ணுவாங்க…” என்றான்.

‘என்ன ஆயிற்று இவனுக்கு… எதாவது கோபத்தில் இருக்கிறானா… உணர்வுகளைப் பிரதிபலிக்காத முகத்தோடு பேசுகிறானே… பார்த்ததும் கண்களில் வரும் பளிச்சிடல், உதடுகளில் வரும் சின்னப் புன்னகை, எதையும் காணோமே…’ என்று நினைத்தவள், அவன் கையைப் பற்றித் தடுத்து,

“என்னாச்சு ரஞ்சன்… எதோ மிஸ்ஸிங் உங்க கிட்ட… எதாவது ப்ராப்ளமா?” என்றாள்.

அவளது கையின் ஸ்பரிஷத்தில் மனதிற்குள் எழுந்த இனிமையான உணர்வில் கட்டுண்டான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'விலக நினைக்கும் போதெல்லாம் நெருங்கி வருவதும், நெருங்கிப் போகையில் விலகிச் செல்வதும் பெண்களின் இயல்போ!' என நினைத்தான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை ப்ரீத்தி… நெக்ஸ் வீக் டாடி இங்க ரிடர்ன் வரார்… அங்க யாராவது இருந்து பார்த்தே ஆகணும்… அதான் என்ன செய்யலாம்னு யோசிச்சிட்டு இருக்கேன்… அதுவுமில்லாம, டாடிக்கும் மம்மிக்கும் இன்னும் டெர்ம்ஸ் எதுவும் சரியாகலை… எவ்ளோ நாள் இப்படியே விட முடியும்… அதான் அவரை இங்க வரச் சொல்லிருக்கேன்…"

"ஓ!" என்றவளுக்கு, ஏனோ மனம் சோர்ந்தது.

"நீங்க அங்க போகணுமா… எவ்ளோ நாள் ப்ரோக்ராம்…" என்று சோர்ந்த குரலில் கேட்கவும், "நெக்ட்ஸ் மன்த் கிளம்ப வேண்டியிருக்கும்… டேட் இன்னமும் முடிவு பண்ணலை… நான் இருந்து செய்ய வேண்டிய வொர்க்ஸ் நிறைய இருக்கு… நீயும் வந்தா நல்லாருக்கும்… யோசிச்சுச் சொல்லு…" என்றான்.

'தன்னையும் உடன் வரச் சொல்கிறான்… ஆனால்…' என்று யோசித்தவள், பதில் சொல்லத் தொடங்கும் முன், விரல்களை அழுந்தப் பற்றினான்.

"உடனே எதுவும் டிசைட் பண்ண வேண்டாம்… ஒன் மன்த் டைம் இருக்கு… அதுக்குள்ள உன்னோட கை சரியாயிடும்… இண்டியால மட்டும்தான் இருப்பேன்னே சொல்லாதே… கண்ட்ரிங்கறது வெறும் ஜியாகரிபிகல் ஏரியா மட்டும் தான்… எந்த ஊரும் நாடும் யாருக்கும் சொந்தம் இல்லை… குளோபலைசேஷனுக்கு அப்புறம் எல்லா கண்ட்ரீஸ்மே உறவு மாதிரி தான்… யாதும் ஊரே யாவரும் கேளிர்னு நம்ம ஆட்கள்தான் சொல்லிருக்காங்க…"

ஐக்கிய நாடுகள் சபையில் நம்மைப் பெருமைப் படுத்தும் வகையில் எழுதியிருக்கும் புகழ் பெற்ற வரி, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது. ஆனால், அப்படி எத்தனை பேர் நினைக்கிறார்கள்?

அனைவரையும் சமமாக நினைத்திருந்தால், இரண்டு உலகப் போர்களுமே நடந்திருக்காது. ஆஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீது நிற வெறித் தாக்குதல், ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டினரைக் குறி வைத்துத் தாக்குதல் என்று எதுவுமே நடந்திருக்காது. தன்னுடைய இனம், தன்னுடைய நாடு என்ற எண்ணம் அனைவருக்கும் பொதுவானது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

இயற்கை அனைவருக்கும் பொதுவானது. மக்கள் வாழ்கின்ற இடத்தை சொந்தமாக நினைக்கத் தொடங்கி விடுகிறார்கள். எல்லைகள் மட்டுமே நாடு இல்லை. அதில் வாழும் மக்கள், பழக்கவழக்கங்கள் என்று எத்தனையோ விஷயங்கள் அடங்கியிருக்கிறது.

மனதில் நினைத்ததை வெளிப்படையாகச் சொல்ல, அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான்.

"செகண்ட் பேபி பெத்துக்கறவங்களுக்கு 15 இலட்சம் பரிசுத் தொகை தரதா ரஷ்யன் கவர்ன்மெண்ட் அனவுன்ஸ் பண்ணிருக்காங்க… அங்க வந்து செட்டில் ஆகற மக்களை அவங்க மக்களா நினைக்க முடியுமா? அவங்க பாப்புலேஷனை இன்க்ரீஸ் பண்ணதானே ட்ரை பண்ணறாங்க… வேலை வாய்ப்பு அமெரிக்கன்ஸ்கு குறையுதுங்கறதுக்காக இந்தியர்களை அங்கிருந்து வெளில போகச் சொல்றாங்களே… அதுக்கெல்லாம் என்ன காரணம்? தன்னோட மக்களுக்கு பாதிப்புன்னு தெரிஞ்சா வெளில இருந்து வந்தவங்களை திருப்பி அனுப்பத்தான் நினைப்பாங்க…" என்று தொடர்ந்தவள்,

"லைஃப்குத் தேவையான வசதிகளைத் தேடிப் போறது தப்புன்னு சொல்லலை… ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு தேவைகள் இருக்கும்… பணத்துக்கு, படிப்புக்குன்னு எத்தனையோ ரீசன்ஸ்… தேவைகள் முடிஞ்சதும் நம்ம வேர் எங்க இருக்கோ அங்க இருக்கறதுதான் பெஸ்ட்… எத்தனை குறை இருந்தாலும், அம்மாவுக்குத் தன்னோட குழந்தை மேல இருக்கற அன்பு பொய்யில்லை… அதுமாதிரிதான் நம்ம நாட்டில பிடிக்காத விஷயங்கள் எவ்ளோ இருந்தாலும், அதை சரி செய்யணும்… என்னோட லைஃப் இங்கதான்… அதில எந்த மாற்றமும் இல்லை… அதுபோலவே, நீங்க வளர்ந்து வாழ்ந்த இடத்தை விட்டுட்டு, இங்கேயே வாங்கன்னும் என்னால சொல்ல முடியாது…" என்றாள் தீர்மானமாக.

"பாட்ரியாட்டிஸம்னா அதே நாட்ல வாழறதுல மட்டும் இல்லை ப்ரீத்தி… எங்க இருந்தாலும் நீ எழுதறதைக் கண்டினியூ பண்ண முடியும்… எத்தனையோ பேருக்கு ஹெல்ப் பண்ண முடியும்… உண்மையைச் சொன்னா, இங்க இருக்கறவங்களை விட வெளிநாட்டில வாழறவங்களுக்குத்தான் நாட்டுப்பற்று அதிகமா இருக்கு…" என்று அழுத்தமான குரலில் கூறினான்.

அவன் சொல்வதை முற்றிலும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அரசாங்கத்தின் உதவி பெற்றுப் படிக்கும் ஐ.ஐ.டி.மாணவர்களாகட்டும்,

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மருத்துவர்களாகட்டும், படித்து முடித்ததும் வளமான வெளிநாட்டு வாழ்க்கையை விருப்பிப் பறந்து விடுகிறார்களே. திறமையானவர்களை உருவாக்க வழங்கப்படும் உதவித் தொகை, நமக்குப் பயனற்றுப் போய் விடுகிறது.

உண்மையான நாட்டுப் பற்றே மக்களுக்கு சேவை செய்வதுதான். எல்லையில் காவல் காக்கும் இராணுவ வீரர்களாகட்டும், குப்பையை சுத்தம் செய்யும் ஊழியர்களாகட்டும், அனைவருக்கும் நாட்டுப் பற்று இருக்கிறது.

மக்களின் வரிப்பணத்தைக் கோடி கோடியாகக் கொள்ளையடிக்காமல், மக்களின் நன்மைக்கு செலவு செய்வதில் அரசியல்வாதியின் நாட்டுப்பற்று அடங்கியிருக்கிறது.

மக்களின் ஊழியர் என்ற உணர்ச்சியோடு, லஞ்ச லாவண்யங்களில் ஈடுபடாமல், வாங்கும் ஊதியத்திற்கு நேர்மையாக வேலை செய்வதில், அரசு ஊழியர்களின் நாட்டுப்பற்று அடங்கியிருக்கிறது.

வியாபாரிகள் வரி ஏய்ப்பு செய்யாமல் இருப்பது… தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளராக இருப்பது… கள்ளச் சந்தையின் பொருட்கள் வாங்காமல் மக்கள் இருப்பது… பொதுச்சொத்துக்களுக்கு சேதாரம் செய்யாமல் இருப்பது… சட்டப்படி நடந்து கொள்வது… வறுமையில் வாடுபவர்களுக்கும், இயலாதவர்க்கும் உதவிகள் செய்வது… என்று எல்லாவற்றிலும் நாட்டுப் பற்று இருக்கிறது.

'பிற நாட்டிற்காக உழைப்பதைவிட, நம் நாட்டிற்கு உழைக்க வேண்டும்' என்பது அவளுடைய எண்ணமாக இருந்தது.

தன் மனதில் நினைத்ததைச் சொல்லி முடிக்கையில், இருவருக்கும் இடையில் கனத்த அமைதி நிலவியது.

மனதின் சோர்வை நீங்க முயன்றாலும், ப்ரீத்தியால் வெற்றி பெற முடியவில்லை. எதிலேயோ தோற்றுவிட்ட உணர்வு.

'திறமையும், வேகமும் மிக்க இளைஞன்… இவனைப் போன்ற ஆட்கள் இருந்தால் எத்தனையோ பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கலாம்… எத்தனையோ மாற்றத்தைக் கொண்டு வரலாம்…' பெருமூச்சுடன் நினைத்தாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

சித்ரஞ்சனின் மனதோ, 'ப்ரீத்தியை விட்டுவிட்டுப் போவது முடியாது' என்று சொல்லிக் கொண்டிருந்தது.

'அவள் தன்னோடு இருக்கும் பொழுதுகளில் மனதில் தோன்றும் இதம், சின்னச் சின்ன ஸ்பரிஷங்களிலேயே தோன்றும் உணர்வுகள், அவளோடு பேச வேண்டும் என்று தோன்றும் எதிர்பார்ப்பு, தன் கைப்பிடிக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம்… இவையெல்லாம் எதனால்…' என்று யோசிக்க மட்டும் மறந்தது.

"நாளைக்கு நீங்களே கூட்டிட்டுப் போங்க ரஞ்சன்… தாத்தாவும் உங்களைப் பார்த்தா சந்தோசப் படுவார்… அப்புறம் தேங்க்ஸ்…" என்றாள் மென்மையாக.

"எதுக்கு தேங்க்ஸ்?"

"எதுக்குன்னு தனியா சொல்லத் தெரியலை… நாளைக்கு ஊருக்குக் கூட்டிட்டுப் போறதுக்கு, திருச்சில நியூ பில்டிங் கட்டித் தரததுக்கு… இப்படி எல்லாத்துக்கும்…"

'எத்தனை பெண்களைக் கடந்திருந்தாலும், இவள் மட்டும் என்ன தனி? எத்தனையோ அழகிகளைப் பார்த்திருந்தாலும் இது வரை தோன்றாத உணர்வு இவளிடம் மட்டும் தோன்றுவதேன்… விலகிப் போக நினைத்தாலும் முடியவில்லை… எப்படியாவது இவளையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும்…' என்று அவன் மனம் சொன்னது.

"ப்ரீத்தி! என்னோட லாங்குவேஜ்ல இப்படியெல்லாம் தேங்க்ஸ் சொல்லக் கூடாது…" என்று கண்களைச் சிமிட்டியவாறு சொல்ல,

"வேற எப்படி…" என்று ஆரம்பித்தவள், அவன் கண்சிமிட்டலில் சிவக்கத் தயாரான கன்னங்களைச் சபித்தவாறு, "எனக்குத் தெரிஞ்ச மாதிரிதானே சொல்ல முடியும்…" என்றாள்.

கிசுகிசுப்பாக வெளிவந்த குரலும், மலர்ந்திருந்த முகத்தையும் பார்த்து, "உனக்கு வேற மாதிரியும் தேங்க்ஸ் சொல்லத் தெரியும் போல… ஆனா சொல்லத்தான் மனசு இல்லையா… நிஜமாவே புரியலைன்னா நான் சொல்லித்தர ரெடியா இருக்கேன்…" என்று வசீகரக் குரலில் சொல்லி, உதடுகளில் மென்மையாக வருடிவிட்டுச் செல்லவே, புதுவித உணர்வில் கண்மூடி நின்றாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

'ஏன் இந்தப் புது வித உணர்வு? ஒவ்வொரு முறையும் தன்னுள் ஏன் இந்த மாற்றம்? அவன் மேல் இருந்த கசப்பெல்லாம் நீங்கி, மனதளவில் நெருக்கமான உணர்வு.

வலியில் முகம் சுழிக்கையில், தோள் சாய்த்து இதம் தரும் தோழனாக, உணர்வுகளைப் படித்து அதை செயல்படுத்தும் விதத்தில் தாயாக, தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் தந்தையாக… என்று ஒவ்வொரு நாளும் அவனுக்கும் தனக்குமான பிணைப்பு அதிகரித்துக் கொண்டு செல்வதாகவே பட்டது.

கண்களைப் பார்த்து மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசும் நேர்மை, எடுத்த காரியத்தை செயல்படுத்தும் விதம், தன்னுடைய வேலைகளைத் தானே செய்தல் என்று பல விஷயங்கள் அவளைக் கவர்ந்திருந்தன.

மனம் சிறகடித்துப் பறந்தாலும், உடல் பாரத்தைச் சுமக்க மாட்டாமல் சுவரில் சாய்ந்து நின்றாள்.

"அண்ணி!" என்று அழைத்தபடியே உள்ளே நுழைந்த மஹதி, பதில் சொல்லாமல் நின்றவளைப் பார்த்து, "என்ன நடக்குது இங்கே… உங்களுக்கு பேக்கிங்கு ஹெல்ப் பண்ணச் சொல்லி அண்ணா சொல்லிட்டுப் போனார்… ஆனா, இப்போதைக்கு நான் வந்ததே தப்பு மாதிரி இருக்கு… ட்ரீம் லேண்ட்ல இருக்கீங்க போல…" எனக் கிண்டலடித்தாள்.

"ஏய் வாலு! எனக்கும் ஒரு காலம் வரும்… அப்ப கவனிச்சுக்கறேன்…" என்று மிரட்டலாகச் சொல்லிவிட்டு, பயணத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்து வைத்தாள்.

## 25

"**கா**லம் காலமா, இது மாதிரியெல்லாம் நடந்துட்டுத்தான் இருக்கு ப்ரீத்திம்மா… எப்பவும் சொல்றதேதான் திரும்பவும் சொல்றேன்… நேர்மையான பத்திரிக்கைன்னா தப்பு எங்க நடந்தாலும் தட்டிக் கேட்கணும்… எவ்வளவு பெரிய ஆள் தப்புப் பண்ணினாலும் பயப்படாம எதிர்த்து நிக்கணும்… நாங்கெல்லாம் வெள்ளைக்காரங்க கிட்ட இருந்து சுதந்திரம் வாங்க அத்தனை அடக்குமுறைகளுக்கும், ஆயுதங்களுக்கும் நடுவில போராடினோம்… இப்போ



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஜனநாயக நாட்டில போராடறீங்க… எப்பவும் சோர்ந்து போயிடக் கூடாது…” என்று ப்ரீத்தியின் தலையை வருடிக் கொடுத்தவாறு சொன்னார் சத்திய மூர்த்தி.

தாத்தாவைப் பெருமையுடன் பார்த்தாள் ப்ரீத்தி. எத்தனை தடைகள் வந்தாலும் அஞ்சாமல் எதிர்த்து நின்ற மனிதர். அவளுடைய துணிவிற்கும், தன்னம்பிக்கைக்கும் காரணமாக இருப்பவர்.

“பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ

பயங்கொள்ள லாகாது பாப்பா!

மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்

முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!”

என்ற பாரதியின் வரிகளை இளம் வயதிலேயே ஆழ வேரூன்றச் செய்தவர். சிறுமை கண்டு பொங்கச் சொல்லிக் கொடுத்தவர்.

“தாத்தா! எத்தனையோ கொடுமையையும், கஷ்டத்தையும் அனுபவிச்சுப் போராடிருக்கீங்க… நீங்க வளர்த்த பொண்ணு நான்… எந்தச் சூழ்நிலை வந்தாலும், எதுக்கும் பயப்பட மாட்டேன்… இந்த அடியெல்லாம் ஒண்ணுமே இல்லை…” என்று அவரது கரத்தைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டு கூறினாள்.

நடந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், இருவருக்கும் இடையில் குறுக்கிட்ட சித்ரஞ்சன், “இதுக்கெல்லாம் காரணம் யார்னு கண்டு பிடிச்சிட்டோம் தாத்தா… அடிச்ச ஆட்களை பிரதாப் பார்த்தான்… மினிஸ்டரோட ஆளுங்க அவங்க… போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணினா அதை வாங்கக் கூட யோசிச்சாங்க… எந்த ஏக்ஷனுமே எடுக்கலை… எதிர்த்துப் போராடத்தைத் தொடரப் போறோம்னு பிரதாப் சொன்னதை இவ வேண்டாம்னு சொல்லிட்டா…” என்று சொன்னான்.

ரஞ்சனுக்கும், பிரதாப்பிற்கும் ‘எந்தப் போராட்டமும் வேண்டாம்’ என்று சொன்ன தனது முடிவு பிடிக்கவில்லை என்பது அவளுக்கும் தெரியும்.

அந்த அமைச்சருக்கு எதிரான அனைத்து ஆவணங்களும் இப்போது கிடைத்துவிட்டன. ஆதாரங்களை மக்களிடமும், சட்டத்திடமும் கொண்டு சேர்ப்பதுதான் இனி நடக்க வேண்டியது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“தனி ஒருத்திக்காக எல்லாரும் பாதிக்கப்படறதுல இஷ்டம் இல்லை தாத்தா… எல்லாரையும் கலைஞ்சு போகச் சொல்லி போலீஸ் அராஜகமா நடந்துட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்… அடியாட்கள் பலமும், அதிகார பலமும் அவங்க கிட்ட இருக்கு… சட்டத்தையே வளைச்சிடுவாங்க… நம்ம மாதிரி ஆட்கள் கிட்ட இருக்கறது ஆத்ம பலம்… எழுத்தின் மூலமா அவங்க முகத்திரையைக் கிழிக்கணும்…”

“ப்ரீத்தி! நீ இப்படியே சொல்லிட்டிரு… சரின்னு ஒரு வார்த்தை சொல்லிருந்தா அடிச்சவங்களை உண்டு இல்லைன்னு பண்ணிருப்போம்… பணம் மட்டும் இருந்தாப் போதும், இது மாதிரி எத்தனை அடியாட்களை வேணும்னாலும் விலைக்கு வாங்கலாம்… எத்தனை எவிடென்ஸ் இருந்தாலும் என்ன நடக்கப் போகுது… கொஞ்ச நாள் ஜெயில்ல இருப்பாங்க… அதுவும் எல்லா வசதிகளோடையும் உள்ள சொகுசா நாளைக் கடத்திட்டு வெளில வந்திடுவாங்க… அந்த கேஸ்கு ஜட்ஜ்மெண்ட் முடியறதுக்குள்ள காலம் ஓடிடும்… அடுத்த பிரச்சனையோ, ஊழலோ நடந்தா முன்ன நடந்ததெல்லாம் மக்கள் மறந்திடப்போறாங்க… அதான் நடக்கும்…” என்றான் சித்ரஞ்சன்.

‘இவன் சொல்வது அப்பட்டமான உண்மை. எத்தனை எத்தனை ஊழல்களைப் பார்த்துவிட்டோம். அநியாய அக்கிரமங்களைக் கடந்து வந்துவிட்டோம். நாளுக்கு நாள் அரசியல் சாக்கடையாகிக் கொண்டிருக்கிறது’ என்று பெருமூச்சுடன் நினைத்தாள்.

“ரஞ்சன்! மக்கள்தான் முதல்ல மாறணும்… நல்லாப் படிச்சு யோசிக்கத் தெரிஞ்சவங்க ஓட்டுப் போடறதே இல்லை… அறியாதவங்களுக்குக் காசைக் கொடுத்து ஓட்டு வாங்கி ஜெயிச்சு வராங்க… எலக்ஷனுக்கு செலவு பண்ணினதை திரும்ப எடுக்கணும்னு பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கறாங்க… இந்த நிலைமை ஒரு நாள் நிச்சயமா மாறும்… மாற்றத்தை என்னால பார்க்க முடியலைன்னாலும், எப்பவாவது எல்லாமே மாறும்… டுனிசியா, லிபியா, ஏமன், சூடான்னு போன வருஷம் எத்தனை நாடுகள்ல மக்கள் புரட்சி மூலமா ஆட்சியாளர்களைத் தூக்கி எறிஞ்சாங்க… அந்த நிலைமை தப்புப் பண்ற அரசியல்வாதிகளுக்கு எதிரா இங்கேயும் வரும்… உலகத்துக்கே சவால் விடற மாதிரி, ஒரு நாள் நம்ம நாடும் மாறும்…” என்று கண்களில் கனவுகளோடு சொன்னார் சத்தியமூர்த்தி.

“இலவசத்தைக் கொடுத்தே மக்களைப் பிச்சைக்காரங்க ஆக்கிடறாங்க தாத்தா… உழைக்கச் சொல்லிக் கொடுக்கறதே இல்லை… ஏமாத்தறதையும், பொதுச் சொத்தைக்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கொள்ளையடிக்கறதையும்தான் அரசியல்வாதிங்க சொல்லித் தராங்க… நேர்மைக்கு மதிப்பு இல்லாமப் போயிடுச்சு…" என்று ப்ரீத்தி கவலையுடன் சொன்னாள்.

"நீங்க ரெண்டு பேரும் கண்டினியூ பண்ணுங்க… பில்டிங் வொர்க் எல்லாம் எப்படி நடக்குதுன்னு நான் பார்த்திட்டு வரேன்…" என்று சித்ரஞ்சன் எழுந்து கொண்டான்.

"என்னப்பா! ரெண்டு பேரும் ரொம்ப போர் அடிச்சிட்டோமா… இது மாதிரியே பேசி எங்களுக்குப் பழக்கம் ஆயிடுச்சு…" என்று ரஞ்சனிடம் சொன்ன பெரியவர், "ப்ரீத்திம்மா! நீயும் கூடப் போயிட்டு வா… குழந்தைங்க எல்லாம் உங்க ரெண்டு பேரையும் பார்க்கணும்னு காத்திட்டிருந்தாங்க… அவங்களைப் பார்த்திட்டுப் போங்க…" என்று சொல்லி, இருவரையும் அனுப்பி வைத்தார்.

"அக்கா!" என்று குழந்தைகள் ஆவலோடு வரவும், "பார்த்து… பார்த்து… மெதுவா வாங்க… அக்காவுக்குக் கையில அடி பட்டிருக்கில்லையா… அதில பட்டா ரொம்ப வலிக்கும்… அதனால அந்தக் கைப் பக்கம் போகாமப் பேசணும்… சரியா…" என்று குழந்தைளின் வேகத்தைத் தடை செய்தான் ரஞ்சன்.

விமான நிலையத்திலும் இதே போலக் கூட்ட நெரிசலில் சிக்கிக் கொள்ளாமல், கை வளையத்திற்குள் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்ததை நினைத்து, ஒரு நொடி அவனையே இமைக்காமல் பார்த்தாள்.

ஒற்றைப் புருவத்தை உயர்த்தி 'என்ன?' என்பது போலக் கேட்க, 'ஒன்றுமில்லை' என்று தலையை அசைத்துவிட்டு, குழந்தைகளிடம் நலம் விசாரிக்கத் தொடங்கினாள்.

சிறிது நேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு கட்டிட வேலைகளைப் பார்க்கச் சென்றனர்.

"ரஞ்சன்! நீங்க சொன்ன ப்ளான் வேற மாதிரி இருந்தது… இப்ப எக்ஸ்ட்ரா பில்டிங் ஆகற மாதிரி இருக்கு…"

"ம்ம்… ப்ளான்ல கொஞ்சம் சேஞ்ச் ப்ரீத்தி… புதுசா ஸ்கூல் ஒண்ணு ஸ்டார்ட் பண்ணிடலாம்னு தாத்தாகிட்ட சொன்னேன்… அவருக்கு அந்த ஐடியா பிடிச்சிருந்தது… இந்த நியூ ப்ளாக்ல ஸ்கூல் ரன் ஆகப் போகுது… நம்ம குட்டீஸ்கு மட்டுமில்லாம எல்லாருக்குமே ஃப்ரீ எஜிகேஷன் தர்றதுக்கு ப்ளேன் பண்ணிருக்கோம்… இந்த சைட்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இருக்கற பில்டிங் ஹாஸ்டல் மாதிரி எல்லா வசதியோடையும் கட்டச் சொல்லிட்டேன்…” என்று வரைபடத்தை எடுத்துக் காட்டியபடியே வேகமாக வளரும் கட்டிடத்தின் அமைப்பினை விளக்கினான்.

அவ்வளவு வசதிகளை எதிர்பார்க்காததால், அவளுக்கு மலைப்பாக இருந்தது. அவனைத் திருமணம் செய்து கொண்டால், அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தர முடியும் என்று நினைத்ததை எண்ணிப் பார்த்தாள்.

இப்போதோ, ரெசிடென்ஸியல் ஸ்கூல் போல சகல வசதிகளையும் கொண்ட கட்டிடத்தின் அமைப்பைப் பார்க்க, அவள் கண்கள் பனித்தன.

“அட என்னது… அத்தனை பெயின்லையும் கண்ணுல ஒரு சொட்டுத் தண்ணி கூட வரலை… இப்ப எதுக்குக் கண் கலங்குது… ப்ரீத்தி ரொம்ப போல்ட்னு நினைச்சேனே…” என்று சொன்னவாறு தோள்களை ஆறுதலாகப் பற்றினான்.

“இதெல்லாம் நான் எக்ஸ்பெக்ட் பண்ணலை ரஞ்சன்… அதான் சந்தோசத்தில என்னையறியாம…” என்று திணறியவாறே சொல்ல, அவள் கண்களைத் துடைத்து விட்டவன் “ரொம்ப சந்தோசமா இருந்தா தேங்க்ஸ் சொல்லிடு ப்ரீத்தி… எப்படிச் சொன்னாலும் எனக்கு ஓகேதான்…” என்று கண்களில் சிரிப்போடு சொன்னான்.

சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டவள், அவனது கையைப் பற்றி புறங்கையில் மென்மையாக இதழ்களை ஒற்றிவிட்டு “தேங்க்ஸ்…” என்றாள்.

விளையாட்டுப் பேச்சில் விளைந்த எதிர்பாராத முத்தத்தில், ஒரு நொடி திகைத்து நின்றவன், “ப்ரீத்… இது ஓகேதான்… ஆனா நான் எதிர்பார்த்தது வேற…” என்று உல்லாசமான குரலில் உதடுகளைப் பார்த்தவாறே கூறினான்.

கண்களோடு கண்களை சிறை செய்ய முயன்றவனின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதைத் தவிர்க்க, “நான்… நான் தாத்தாகிட்டப் போறேன்… நீங்க இதெல்லாம் பார்த்துட்டு வாங்க…” என்று வேகமாகத் திரும்பிச் சென்றாள்.

பார்வையை விட்டு மறையும் வரை இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். காமமற்ற இதழொற்றுதல் மனதிற்கு இதத்தைத் தருவதை வியப்புடன் உணர்ந்தான்.

“தாத்தா! ஸ்கூல் கட்டிட்டிருக்கறதை நீங்களும் சொல்லவே இல்லை…” என்று பெரியவரின் அருகில் சென்ற ப்ரீத்தி ஆர்வத்தோடு கேட்க,



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“ரஞ்சன் சொல்லலையாம்மா… சொல்லிருப்பான்னு நினைச்சேனே… அன்னைக்குப் பேச்சு வாக்கில, நான் ஆசைப்பட்டதெல்லாம் சொல்லிட்டிருந்தேன்… உடனே நிறைவேத்துவான்னு நினைக்கவே இல்லை… இத்தனை பேருக்கும் அவன் மூலமா நல்லது நடக்கணும்னு இருக்கு… பசங்க படிப்பைப் பத்தி இனி நாம கவலைப் படவே வேண்டியதில்லை…” என்று பெருமையுடன் சொன்னார்.

கோடி கோடியாகக் கடவுளின் உண்டியலில் கொட்டுவதற்கு, இயலாதவர்களின் கல்விக்குக் கொடுப்பது சிறந்தது… எவ்வளவு பணம் இருந்தாலும் ஒரு சிலருக்குத்தான் பிறருக்காகச் செலவிட மனம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். அவளது மனதிற்கு நிறைவாக இருந்தது.

‘உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கொடுத்த முத்தத்தை எப்படி எடுத்துக் கொண்டானோ’ என்று அவன் முன் செல்லவே தயக்கமாக இருந்தது.

அவன் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுத் தன்னுடைய நேரத்தைத் தாத்தாவுடன் செலவிட்டாள்.

இரவு உணவு வேளை நெருங்கவே, உணவருந்த வருமாறு அழைக்கவும், “குட்டீஸோடையே சாப்பிட்டுக்கலாம் ப்ரீத்தி… நீயும் வா…” என்று இயல்பாகப் பேசவும் அவளுக்குத் தயக்கம் தீர்ந்தது.

எளிய உணவாக சப்பாத்தி மட்டும் இருக்கவே, ‘எப்படி உண்பது?’ என்று குழப்பத்துடன் யோசித்தவளைப் பார்த்து, நொடியில் புரிந்து கொண்டவன், “குட்டீஸ் அக்காவுக்குக் கையில காயம் இருக்கறதால சாப்பிட முடியாதே… என்னை மாதிரியே சப்பாத்தியைப் பிச்சு ஒரு வாய் ஊட்டி விடுவீங்களாம்… அவங்க சாப்பிட ஈஸியா இருக்கும்… யார் வேணும்னாலும் கொடுக்கலாம்…” என்று சொல்லியவாறு ஊட்டி விட்டான்.

‘நீ… நான்…’ என்று போட்டி போட்டுக் கொண்டு ஆளாளுக்கு ஒரு வாய் சப்பாத்தியைக் கொடுக்கவே அவளுக்கு மீண்டும் கண்கள் பனித்தன. அதன் பின் இயல்பான போக்கில் அவனுடைய உதவிகள் தொடர்ந்தன.

சுத்தம் செய்யும் ஆயா, “பாப்பா! இந்த மாதிரி ஒரு புருஷனைப் பார்த்ததே இல்லை… எனக்கும் வந்து வாச்சிருக்கே ஒண்ணு… எந்திரிக்க முடியாமப் படுத்துக் கிடந்தா திரும்பிக் கூடப் பார்க்காது… ஒரு வாய் கஞ்சி கூட என்னால முடிஞ்சாதான் வச்சுக் குடிச்சிப்பேன்… தம்பியே எல்லாத்தையும் புரிஞ்சுட்டுப் பண்றதைப் பார்க்கறப்ப



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ரொம்ப சந்தோசமா இருக்கு… நாளைக்குப் போறதுக்குள்ள ரெண்டு பேரையும் வச்சு சுத்திப் போடணும்…” என்று போகிற போக்கில் சொல்லிச் சென்றதை நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கையில்,

“இன்னைக்கு நாள் எப்படிப் போச்சுன்னே தெரியலை ப்ரீத்தி… மைண்ட் ரொம்ப ஃப்ரீயா இருக்கு… தூக்கம் தான் சீக்கிரம் வர்ற மாதிரித் தெரியலை…” என்று சொன்ன ரஞ்சன், தலையணையை மடியில் வைத்துக் கொண்டு, “கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாமா… இல்லை உனக்குத் தூக்கம் வருதா…” என்று கேட்டான்.

“ம்ஹூம்… நான் தூங்க இன்னும் கொஞ்ச நேரம் ஆகும்…” என்று பதில் சொன்னாள்.

சென்னையில் விஸ்தாரமான பெரிய அறையில் இருந்துவிட்டு, இந்தச் சிறிய அறையில் எங்கு பார்த்தாலும் அவனே தெரிவது போலிருந்தது. இருவருக்கும் மட்டுமேயான தனிமை அவளது தூக்கத்தைக் கெடுத்திருந்தது.

“மேல படுக்கறதுன்னாப் படுத்துக்க ப்ரீத்தி…” என்று தள்ளி அமரவும், “இது கொஞ்சம் குட்டி பெட்… கீழேயே படுத்துக்கறேன்… கையைத் தனியா வச்சுக்கவும் வசதியா இருக்கும்…” என்று மறுத்தாள்.

இரவு உறக்கம் வரும் வரையில், அவளது சிறுவயதைப் பற்றி, பிடித்தது பிடிக்காதது என்று நிறைய விஷயங்களைப் பொதுப்படையாகக் கேட்டான்.

சிலுசிலுவென்று சாளரத்தின் வழியே வந்த தென்றற்காற்றா, ஒளிவீசிக் கொண்டிருந்த பால்நிலவா, தனிமையில் ப்ரீத்தியுடன் இருக்கும் இரவு நேரமா… எது ரஞ்சனின் மனதை நிறைத்தது என்றே அவனுக்குப் புரியவில்லை.

நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தவளை, நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிகாலையில் ப்ரீத்தியின் அழைப்பில் விழித்தவன், எழ மனமின்றி தலையணையை இழுத்து அணைத்தவாறு திரும்பிப் படுத்துக் கொண்டான்.

“ரஞ்சன்! எழுந்திரிக்கற ஐடியா இல்லையா… மதியம் ப்ளைட் புக் பண்ணிருக்கீங்க… ஞாபகம் இருக்கா… இன்னும் எக்சர்ஸைஸ் பண்ணலை நீங்க… அப்புறம் லேட் ஆகிடப் போகுது…”



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“எல்லாம் ஞாபகம் இருக்கு… இன்னைக்கு எக்சர்ஸைஸ் பண்ற மூட் இல்லை… நாளைக்கு சேர்த்துப் பண்ணிக்கலாம்…” என்று எழுந்து அமர்ந்தவன், “என்ன குளிக்க ரெடியாகற மாதிரி இருக்கு… நான் ஹெல்ப் பண்ணவா…” என்று கேலியாகக் கேட்டான்.

“அதெல்லாம் ஒண்ணும் வேணாம்… நீங்க எந்திரிச்சு வெளில போங்க… நானே மேனேஜ் பண்ணிப்பேன்…”

“நான் உன்னை எதுவும் டிஸ்டர்ப் பண்ணலை… பட், நான் இன்னும் கொஞ்ச நேரம் தூங்கணும்… அதனால வெளில கிளம்பற ஐடியா இல்லை…”

எப்போதும் அந்த அறைக்குப் பின்புறமிருக்கும் குளியலறையை அவள் பயன்படுத்துவது. மற்றவை சிறிது தூரம் நடந்து செல்லவேண்டும். கை சரியில்லாத நிலையில், உடை மாற்றுவதற்கு இது தான் வசதி.

‘தெரிந்து கொண்டே வம்பு செய்பவனை என்ன செய்வது?’ என்று புரியாமல் திணறினாள்.

சில நொடிகள் அவள் திணறலை இரசித்தவன், நானும் காவிரியாத்தில ஒரு குளியல் போட்டுட்டு வரேன்… லாஸ்ட் டைம் வந்த போதே ரொம்ப ஜாலியா இருந்துச்சு… நீயும் சீக்கிரம் ரெடியாகு ப்ரீத்தி…” என்று சொல்லிச் சென்றான்.

குளித்து முடித்து தலையைத் துவட்டியவாறு திரும்பி வந்த போதும் அறைக்கதவு திறக்கப் படவில்லை.

‘இவ்வளவு நேரமாகக் குளிக்கிறாளா?’ என்று ஆச்சர்யமாக நினைத்தவன் கதவைத் தட்டினான்.

கதவை சிறிது திறந்து தயக்கத்தோடு எட்டிப் பார்க்கவும், “என்ன எதாவது ஹெல்ப் வேணுமா?” என்று கேட்டு, அவளை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தான்.

“இந்த ட்ரெஸ்கு ஜிப் போட முடியலை… கை எட்ட மாட்டேங்குது… யாரும் இந்தப் பக்கம் வரலை…” என்று தயக்கத்தோடு சொன்னாள்.

அவள் எளிதாக அணியும் விதத்தில் தைக்கப்பட்டிருந்தாலும், மஹதி உதவி செய்வாள் என்பது அவனுக்கும் தெரியும். அவள் கூச்சத்தை மதித்து மேலே போர்த்தியிருந்த துண்டினை சிறிது விலக்கி தேவையான உதவியைச் செய்தான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பனியில் நனைந்த ரோஜாப்பூவைப் போல இருந்தவளின், பளீரிட்ட முதுகுப் பகுதியிலிருந்து விழிகளை விலக்கிக் கொள்ள முடியாமல், சில நொடிகள் திகைத்து நின்றான்.

சுதாரித்துக் கொண்டவன் "சீக்கிரம் வா ப்ரீத்தி… நான் தாத்தாவோட பேசிட்டிருக்கேன்…" என்று நிமிர்ந்தும் பார்க்காமல் குரல் இறுகச் சொல்லிச் சென்றவனை, 'திடீரென்று இவனுக்கு என்ன ஆயிற்று?' என்று புரியாமல் பார்த்தாள்.

## 26

"**இ**ன்னும் கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துட்டு ஆ..ஃபிஸ் வர வேண்டியதுதானே ப்ரீத்தி… டென் டேஸ்ல கைல இருக்கற கட்டை ரிமூவ் பண்ணிடுவாங்க… அதுக்குள்ள என்ன அவசரம்… அதான் சொன்ன பேச்சைக் கேட்காம, ஆர்ட்டிகிள்ஸ் எல்லாம் ஒரே கைல டைப் பண்ணி அனுப்பறயே…" என்று கடிந்து கொண்டிருந்தான் பிரதாப்.

"சும்மாவே எவ்ளோ நேரம் வீட்ல இருக்கறது பிரதாப்… செம போர்… மஹி மட்டும் இல்லைன்னா ரொம்பக் கஷ்டம்… பாக்ஸிங் பண்ற மாதிரிப் போட்டிருந்ததை எடுத்துட்டு இப்ப சின்னக் கட்டுப் போட்டுட்டாங்களே… அதனால ரொம்ப வசதியா இருக்கு… வீட்ல இருந்தே வொர்க் பண்றேன்… மெயில்ல டீடெய்ல்ஸ் அனுப்புங்கன்னு சொன்னா அனுப்ப மாட்டீங்கறீங்க… அதான் நேர்லையே வந்திட்டேன்…"

"சிரிக்காதே ப்ரீத்தி… உதைக்கணும் உன்னை… ரெண்டு நாள் முன்னால ரஞ்சன் போன் பண்ணி, நான் ஏதோ உன்னை வேலை வாங்கற மாதிரி நினைச்சுத் திட்டறான்… ரெஸ்ட் எடுக்கற வழியப் பாரு… ஹெல்த் ரெகவர் ஆனதும் மீதி வேலையை எல்லாம் பார்த்துக்கலாம்…"

"ரஞ்சன் உங்களைத் திட்டினாரா… சார் தான் ரெண்டு நாளைக்கு முன்னால வாய்ஸ் ரெககனைசேஷன் சா..ஃப்ட்வேர லேப்டாப்ல இன்ஸ்டால் பண்ணிக் கொடுத்தார்… என்ன எழுதணும்னு யோசிக்கறது மட்டும்தான் என்னோட வேலை… நான் சொல்லச் சொல்ல அதுவா டைப் பண்ணிடுது… எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை… நான் என்னோட வொர்க்கைப் பார்த்திட்டிருக்கறதால, அவருக்கு போர்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அடிச்சிருக்கும்… அதான் உங்களைத் திட்டிருப்பார்… இப்ப அவர் வர்றதுக்குள்ள எல்லா வொர்க்கையும் முடிச்சிடறேன்… இனிமேல் எதுவும் சொல்ல மாட்டார்…” என்று சிரிப்புடன் சொன்னாள்.

ரஞ்சன் இருக்கும் நேரங்களில், அலுவலக வேலைகளைப் பார்ப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை என்று உணர்ந்து கொண்டு, எழுதும் நேரத்தை மாற்றிக் கொண்டாள்.

இப்போது கூட, அலுவலகத்திற்கு வந்ததை அவனிடம் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் நிச்சயம் வேண்டாம் என்று சொல்லியிருப்பான்.

உண்மையில், பிரதாப்பிடம் முக்கியமான விஷயத்தைப் பேசுவதற்காகக் கிளம்பி வந்திருந்தாள்.

“உங்க கிட்டப் பர்ஸனலாக் கொஞ்சம் பேசணும்… நீங்க ஃப்ரீயா இருந்தா இன்னைக்கு லன்ச்கு வெளில போகலாமா…” என்று கேட்டவளை அதிசயமாகப் பார்த்தவன்,

“மழை ஏதாவது வரப் போகுதாம்மா… வா வான்னு கூப்பிட்டாக் கூட வரமாட்ட… இன்னைக்கு அதிசயமா நீயே கேட்கற… அப்படின்னா ரொம்ப முக்கியமான விஷயம்னு தெரியுது… இந்த வொர்க்கை முடிச்சிட்டு டென் மினிட்ஸ்ல கிளம்பிடலாம்…” என்றான்.

முன் தினம் அவளைப் பார்ப்பதற்காக வந்த பிரதாப்பினுடைய தாயார், “மேரேஜ் பண்ணிக்கச் சொன்ன போதேல்லாம் தள்ளிப் போட்டுட்டே இருந்தான்… தெரிஞ்ச பொண்ணுங்க எவ்ளோ பேரைச் சொல்லிட்டோம்… எதுக்குமே ஓகேன்னு சொல்லாம, இப்ப லவ் பண்றேன்னு சொல்றான்…” என்று புலம்பினார்.

‘காதலுக்கு அவன் வீட்டில் எதிர்ப்பா…” என்று அதிசயமாக நினைத்தவள், “லவ் பண்ணாம ஏண்டா உயிரை எடுக்கற, எங்களுக்குப் பொண்ணுப் பார்க்கற வேலை மிச்சமாகும்னு சொல்வீங்களே ஆண்ட்டி… ஏன் இப்பக் கவலைப் படறீங்க…” என்று கேட்டாள்.

“அதேன் கேட்கற… யூஎஸ் பொண்ணைப் பார்த்திருக்கானாம் ப்ரீத்தி… வெள்ளைக் காரியைக் கல்யாணம் பண்ணிட்டு வந்தா எங்க குடும்பத்தோட ஒத்துப் போவாளான்னே யோசிக்கலை… நேத்து தாத்தாகிட்ட அவளைத்தான் மேரேஜ்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

பண்ணிக்கப்போறேன்… அவ அப்படி அழகு, இப்படி அழகு, பேசினாக் கேட்டுட்டே இருக்கலாம்னெல்லாம் சொல்றான்… என்ன சொல்றதுன்னே தெரியலை…” என்று கவலையுடன் சொன்னார்.

அவளுக்கும் குழப்பமாக இருந்தது. பெண்ணைப் பற்றிய தகவல்களைக் கேட்க, “அவன் அதெல்லாம் ஒண்ணும் சொல்லலை ப்ரீத்தி… தாத்தாவும் பேரனும் மட்டும் பேசிக்கறாங்க… போட்டோவைக் காட்டச் சொன்னா, சீக்கிரம் நேர்லையே காட்டறேன்… அதுவரைக்கும் சர்ப்ரைஸ்னு சொல்லிட்டுப் போறான்… நீயாவது யார்னு கேட்டுச் சொல்லேன்…” என்று பொறுப்பை அவளிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருந்தார்.

இருவரும் பேசுகையில் அருகில் அமர்ந்திருந்த மஹதி, அடி வாங்கிய குழந்தையைப் போலக் கலங்கவும், விஷயத்தைத் தெளிவு படுத்திக் கொள்ள, பிரதாப்பிடம் பேசுவதென முடிவெடுத்து வந்திருந்தாள்.

விரைவில் வேலையை முடித்தவன், “கிளம்பலாம் ப்ரீத்தி… எங்க போகலாம்னு சொல்லு…” என்றான்.

“எங்கன்னாலும் ஓகேதான்… க்ரவுட் அதிகம் இல்லாம இருந்தாப் போதும்…” என்று சொல்லவும், “நானும் கொஞ்ச நாளா ஒரு விஷயத்தைச் சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன்… ஒவ்வொரு முறையும் சந்தர்ப்பமே சரியா அமையலை… லாஸ்ட் வீக் கூட வீட்டுக்கு வரலாம்னு ப்ளேன் பண்ணினேன்… அதுக்குள்ள நீங்க திருச்சி கிளம்பிட்டீங்க…” என்றான்.

“விஷயம் என்னன்னு நான் வேணும்னா கெஸ் பண்ணவா பாஸ்…”

“எங்கே சொல்லு பார்ப்போம்… கரக்டா கெஸ் பண்ணிட்டா இன்னைக்கு ட்ரீட் என்னோடது…”

“ம்ம்… உங்க லவ்வப் பத்திப் பேசணும்னு நினைச்சிட்டிருக்கீங்க… கரக்டா…” என்று சொன்னவளை ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

“நீ கெஸ் பண்ணிருப்பேன்னு எனக்கும் தெரியும்… அப்போ பெரிய ட்ரீட் கொடுத்திட வேண்டியதுதான்…” என்று க்ராண்ட் சோழாவில் நுழைந்தான்.

“இங்க எதுக்கு… இங்க சாப்பிட்டா பில்லை நினைச்சு எனக்கு ரெண்டு நாள் தூக்கமே வராது…” என்று தடுத்தவளிடம், “ரொம்ப எல்லாம் கவலைப் படாதே… ஒரு



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

தடவை சாப்பிட்டுப் பார்த்தா ஒண்ணும் ஆயிடாது… பேசாம வா… என்னோட மேரேஜ்கு அட்வான்ஸ் ட்ரீட்னு நினைச்சுக்க…” என்று அழைத்துச் சென்றான்.

ஓரமாக இருந்த டேபிளில் சென்று அமர்ந்ததும், மெனு கார்டைப் பார்த்துத் தேவையானவற்றை ஆர்டர் செய்யும் வரை அமைதியாக இருந்தவள், “நீங்க யாரை லவ் பண்றீங்க…” என்று கேட்டாள்.

“போ ப்ரீத்தி… என்ன ஃப்ரெண்ட் நீ… கெஸ் பண்ணிருப்பேன்னு நினைச்சா… என்னையே திரும்பிக் கேட்கறையா…”

“நான் கெஸ் பண்ணிருந்தேன்… பட் நேத்து உங்க அம்மா குழப்பி விட்டுட்டாங்க… அதான் உங்க வாயிலிருந்தே விஷயம் வெளில வரட்டும்னு கேட்கறேன்…” என்று முன் தினம் அவன் தாயார் சொன்ன விஷயங்களைக் கூறினாள்.

“ஓஹோ… அதான் மேடம் கன்ஃப்யூஸ் ஆயிட்டீங்களா… நான் யூ.எஸ். பொண்ணத்தான் லவ் பண்றேன் ப்ரீத்தி…” என்று கண்களில் கனவோடு சொன்னவன், “லவ் அட் ஃபர்ஸ் சைட்… நீ யார்னு நினைச்ச…” என்று விளையாட்டாகப் பேசினான்.

மேலும் குழப்பம் அதிகரிக்கவே, “விளையாடாதீங்க பிரதாப்… முதல்ல பொண்ணு பேரைச் சொல்லுங்க…” என்று மிரட்டலாகக் கேட்டாள்.

“தர்பூஸும் சேர்ந்து குழம்பிடுச்சா… அதான் நேத்து கால் பண்ணினா அட்டெண்ட் பண்ணவே இல்லை…” என்று வாய்க்குள் முணுமுணுத்தவன், ப்ரீத்தி புரியாமல் தன்னைப் பார்ப்பதைக் கண்டு, “உன்னோட நாத்தனார் யூ.எஸ். பொண்ணுதானே… இன்னும் இண்டியன் சிடிசன்ஷிப் வாங்கலையே… அம்மாவைக் கலாய்க்கறதுக்காக நானும் தாத்தாவும் சேர்ந்து அப்படிச் சொன்னா, அவங்க வெள்ளைக்காரின்னு நினைச்சுப் புலம்பிட்டிருக்காங்க… உங்க மாமியார், மாமனார் கிட்ட என்னோட பெருமையை எடுத்துச் சொல்லி அவங்களை எனக்கும் மாமியார் மாமனார் ஆக்கலாமல்ல… நீ என்ன நினைக்கற…” என்று குறும்பு கொப்பளிக்கும் குரலில் கேட்டான்.

ஃபோர்க்கை எடுத்து அவன் கையில் குத்தியவள், “விளையாடறதுக்கு அளவே இல்லையா…” என்று கேட்க, “நோ… நோ… வன்முறையெல்லாம் தப்பு…” என்று அவள் கையைப் பிடித்துத் தடுத்தான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“நானாவது இந்த அளவில விடறேன்… மஹி அடி பின்னி எடுக்கப் போறா… சொல்வீங்க சொல்வீங்கன்னு பார்த்தா ஏன் இப்படிப் படுத்தறீங்க… பாவம் நேத்திருந்து அவ சரியே இல்லை… ரொம்ப டல்லடிக்கறா…”

மஹதியைப் பற்றிப் பேசவும், மலர்ந்த முகத்துடன், “சொல்லணும் ப்ரீத்தி… அவ மனசில நான் இருக்கேன்னு எனக்கு நல்லாவே தெரியும்… ரஞ்சன் என்ன நினைப்பானோன்னு கொஞ்சம் நாள் தள்ளிப் போட்டேன்… இப்பத்தான் நல்லாப் பேசிப் பழக ஆரம்பிச்சிருக்கோம்… மஹதிக்காக உங்க ஃபேமிலியோட பேசறேன்னு நினைச்சுக்கக் கூடாதில்லையா… முதல்ல அவன் ஓகே சொல்லட்டும்… உடனே எங்க வீட்டுக்கு அவளைத் தூக்கிட்டுப் போயிடறேன்…” என்றான் மென்மையாக.

“ஓஹோ… பாஸ்! தூக்கிட்டுப் போற அளவுக்கு வந்தாச்சா…”

“வீட்ல தாத்தாக்கும், அப்பாக்கும் முதல்லையே சொல்லிட்டேன்… சும்மா அம்மாவையும் பாட்டியையும் கலாய்க்கறோம்… ஈவினிங் நானும் ரஞ்சனும் மீட் பண்ணப் போறோம்… எப்படியாவது பேசிடணும்… மதிகிட்ட எதுவும் சொல்லவேண்டாம்… நானே சொல்லிக்கறேன்…”

“ஹேய்… எங்க மஹதி செல்லமா உங்களுக்கு மதியா… நடத்துங்க நடத்துங்க… உங்க கிட்ட எதுவும் சொல்ல வேண்டாம்னு அவளும் சொன்னா… இங்கேயும் அதேதானா… குழப்பம் தீரணும்னுதான் பேசவே வந்தேன்… நீங்க ஆச்சு, அவ ஆச்சு என்னவோ பண்ணிட்டுப் போங்க… உங்க மேரேஜப் பத்திப் பெரியவங்ககிட்ட நான் பேசறேன்…” என்று சொல்லி, சிறிது நேரம் கிண்டலும் கேலியுமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

“ப்ரீத்தி!” என்ற குரல் கேட்கவும், ‘இது ரஞ்சனின் குரலாயிற்றே’ என்று திகைத்துத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் தான், முகம் இறுக நின்றிருந்தான்.

பிஸினஸ் விஷயம் பேசுவதற்காக அதே ஹோட்டலுக்கு வந்திருந்தவன், அவளை அங்கே எதிர்பார்க்கவில்லை.

அவளது உடையை வைத்துத்தான் திரும்பிப் பார்த்தான். முதன் முறையாக அவன் தேடி அலைந்து வாங்கிய உடைகளில் ஒன்றை அணிந்திருந்தாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது, இடையில் எழுந்து வரவும் அவனால் முடியவில்லை. அவன் அமர்ந்திருக்கும் கோணத்திலிருந்து பார்க்க, அவள் மட்டும் தெளிவாகத் தெரிந்தாள்.

'அவள் மேல் இவ்வளவு பெரிய தாக்குதல் நடந்திருக்கும் போது, அவளுக்குப் பாதுகாப்பைப் பற்றி அக்கறையே இல்லையா? தன்னிடம் சொல்லாமல் வந்திருக்கிறாளே…' என்று முதலில் கோபம் கொண்டவன், அப்போதிருக்கும் சூழல் பாதுகாப்பாக இருப்பதை எண்ணி நிம்மதியடைந்தான்.

சுவர் மறைவிலிருக்கும் ஆணுருவம் தெரியாமல் போனாலும், அவளுக்குத் தேவையானதை எடுத்துப் பரிமாறுவது, கையைப் பிடித்து விளையாடுவது, உரிமையோடு தலையில் கொட்டுவது என்று அவ்வப்போது தெரிந்த காட்சிகளைப் பார்க்கப் பார்க்க, மனம் பொறாமையால் தவித்தது.

'கை சரியாகாத போது எதற்கு வந்தாள்?' என்று யோசித்தவன், கலகலப்பாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவனறியாமல் கோபம் எழுந்தது.

தாங்கள் இருவரும் பேசும் நேரங்களில் பெரும்பாலானவை விவாதத்தில் முடிவதை நினைத்துப் பார்த்தான்.

'வேறு யாருடனும் அவள் பேசிப் பழகுவது தனக்குப் பிடிக்கவில்லை… தன்னுடன் மட்டும் உரிமை எடுத்துப் பேச வேண்டும்' என்று மனம் நினைப்பது அவனுக்குப் புரிந்தது.

பேச்சுவார்த்தை முடிந்ததும், மற்ற வேலைகளைப் பார்த்துக் கொள்ளுமாறு ஜி.எம். மிடம் சொல்லிவிட்டு, விரைவாக அவள் பக்கம் வந்திருந்தான்.

"தனியா எங்கேயும் போக வேண்டாம்னு சொன்னேனே… கை இன்னமும் சரியாகாம இவ்ளோ தூரம் எதுக்கு வரணும்…" என்று சீறலான குரலில் கேட்கவும், 'சில சமயங்களில் இவனுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது… திருச்சியிலிருந்து திரும்பிய போதும் இது போலதான் குரல் இறுகப் பேசினான்… இப்போது என்ன சொல்வது…' என்று உதவிக்கு பிரதாப்பைப் பார்த்தாள்.

"நானும் ஒருத்தன் இங்கே இருக்கேண்டா… கொஞ்சம் இங்கேயும் பாரேன்…" என்று பிரதாப் சொல்ல, திரும்பிப் பார்த்தவன், "ஹாய்… ஸாரிடா கவனிக்கலை… உன்னோட வெளிய போறேன்னு சொல்லிட்டு வரதுக்கு இவளுக்கு என்ன கஷ்டம்…

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

எங்கிட்ட எதுவுமே சொல்லலை… திடீர்னு பார்க்கவும்…” என்று சொல்லித் தோளைக் குலுக்கினான்.

‘யாருடன் இப்படிப் பேசிச் சிரிக்கிறாள்?’ என்று கோபத்தில் இருந்தவனுக்கு, பிரதாப் என்று தெரிந்ததும் கோபம் குறைந்தது.

“ப்ரீத்தியைத் தவிர வேற யாரும் கண்ணுக்குத் தெரியறதில்லைன்னு உண்மையை ஒத்துக்க வேண்டியது தானே ரஞ்சன்… நான் ஒண்ணும் தப்பா நினைக்க மாட்டேன்… மீட்டிங் முடிஞ்சதும் ஈவினிங் வரேன்னு சொன்ன, இங்க தான் மீட்டிங்கா…”

“ம்ம்… இப்பதான் முடிஞ்சுது… என்ன திடீர்னு ரெண்டு பேரும் வெளில வந்திருக்கீங்க… என்ன விஷயம்…”

‘என்ன சொல்வது’ என்று தெரியாமல் அவனும் தடுமாறவும், “முக்கியமான விஷயமா… ஓகே நீங்க கண்டினியூ பண்ணுங்க… அப்புறம் பார்க்கலாம்…” என்று கிளம்பினான்.

“வெயிட் வெயிட்… எங்களோட லன்ச் சாப்பிடலாம் வாடா… ஈவினிங் மீட் பண்ணும் போது பேசணும்னு நினைச்சேன்… எப்படி ஆரம்பிக்கறதுன்னு…” என்று தயங்க, ப்ரீத்தியின் அருகில் நெருங்கி அமர்ந்த ரஞ்சன், “எதாவது ஸ்பெஷல் டே-வா இன்னைக்கு…” என்றான்.

மெல்லிய குரலில் ப்ரீத்தி சிரிக்க, தன்னிடம் சொல்லாமல் தனியாகக் கிளம்பி வந்த கோபம் குறையாமல் அவளைப் பார்த்தான்.

அதைப் புரிந்து கொண்டவள், “சொல்லாம வந்ததுக்கு ஸாரி… ட்ரைவர் ஆ∴பிஸ் வரைக்கும் ட்ராப் பண்ணினார்… அப்புறம் பிரதாப்போட கிளம்பி வந்தேன்… தனியா எங்கேயும் போகலை… எனக்கு ட்ரீட் கொடுக்கறார்… எதுக்குன்னு அவரையே கேளுங்க…” என்று சொல்லி, பிரதாப்பின் முறைப்பைப் பெற்றுக் கொண்டாள்.

“ட்ரீட்டா… என்னடா ஸ்பெஷல்…” என்று கேட்க, பதில் சொல்ல சங்கடப்பட்ட பிரதாப்பைப் பார்த்துச் சிரித்தவள், “அது என்ன விஷயம்னா… பாஸ் நீங்க சொல்றீங்களா, இல்லை நான் சொல்லவா…” என்று அவனை வம்பிழுத்து விட்டு, “சார் லவ் பண்றார், தெரியுமா உங்களுக்கு… லவ் அட் ∴பர்ஸ்ட் சைட்…



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பொண்ணுக்கும் இவரை ரொம்பப் பிடிச்சிருக்கு… பட் என்ன ப்ராப்ளம்னா…” என்று அவளும் தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டாள்.

“ஆக மொத்தம் ரெண்டு பேருமே சொல்லப் போறதில்லை… இப்படியே இழுத்திட்டேதான் இருக்கப் போறீங்க… பொண்ணோட அண்ணன் என்ன சொல்வாங்கறதுலதான் உங்க ரெண்டு பேருக்கும் ப்ராப்ளமா…” என்று கேட்டான்.

இருவரும் திகைத்து அமர்ந்திருக்க, “ஏன் இப்படி ஷாக் ஆயிட்டீங்க…” என்று கேட்க, ‘விஷயத்தைத் தெரிந்து பேசுகிறானா, இல்லையா’ என்று குழப்பத்துடன் இருந்த பிரதாப், “பொண்ணோட அண்ணனைப் பத்தின கவலை எனக்கில்லை… என் ஃப்ரெண்ட் என்ன சொல்வான்னுதான் தயக்கமா இருக்கு…” என்றான்.

“பொண்ணோட அண்ணனும் ஒண்ணும் சொல்ல மாட்டான், உன் ஃப்ரெண்டும் ஒண்ணும் சொல்ல மாட்டான்…” என்று ரஞ்சன் சொல்லவும், புரியாமல் பார்த்தவர்களிடம் “எனக்கும் விஷயம் புரிஞ்சிடுச்சு… வீட்டுக்கு வந்தா மஹி உன்னைப் பார்க்கற பார்வையையும், நீ மஹியைப் பார்க்கறதையும் வச்சு முதல்ல இருந்தே டவுட் தான்… இப்ப க்ளியர் ஆயிடுச்சு… உங்க ரெண்டு பேருக்கும் பிடிச்சிருந்தா அதுக்கப்புறம் யார் என்ன சொன்னா என்னடா… மேரேஜ் எல்லாம் உங்க பர்சனல் விஷயம்…” என்று எளிதாகச் சொன்னான்.

எந்த விஷயமாக இருந்தாலும் எளிதாக எடுத்துக் கொள்ளும் அவனுடைய குணாதிசயத்தை வியப்புடன் பார்த்தாள் ப்ரீத்தி. அவளைக் கண்ணிமைக்காமல் ரஞ்சனும் பார்க்க, இருவரின் விழிகளும் புரியாத பாஷை பேசிச் சிரித்தன.

“ஹேய்! பிரதாப் தேங்க்ஸ் சொல்லிட்டானே, நீயும் சொல்லணும்னு நினைச்சா சொல்லிடேன் ப்ரீத்தி…” என்று குரலில் விஷமத்துடன் கேட்கவும், “அவர் தேங்க்ஸ் சொல்றது சரி… நான் எதுக்கு சொல்லணும்…” என்று எதிர்க் கேள்வி கேட்டாள்.

“ஏன்னா… எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கே… கொஞ்சம் கன்சிடர் பண்ணலாமே…” என்று காதருகில் சொல்லிக் கண்களால் சிரித்தான்.

**27**



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

**“பி**ரதாப்பைப் பிடிக்காமப் போகுமா ப்ரீத்தி… ரொம்ப நல்ல பையன்… அவங்க ஃபேமிலியில எல்லாருமே நல்ல டைப்… இது மாதிரி வரன் கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணும்… ஆனால்…” என்று யோசனையுடன் நிறுத்தினார் யசோதா.

“ஆனால், என்னம்மா… உங்களுக்கும் பிடிச்சிருக்குதானே… அப்புறம் என்ன ப்ராப்ளம்…”

“உங்க மாமாவை நினைச்சாதான் கவலையா இருக்கு… உங்க மேரேஜ் நடந்ததையே ரஞ்சன் சொல்லலை… அது பெரிய தப்பு… நானும் தெரியாம அதுக்கு உடந்தையாயிட்டேன்… அவரைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்… இத்தனை வருஷம் யூ.எஸ்.ல இருந்தாலும் அடிமனசில அவர் சராசரி இந்திய ஆண் தான்… பார்க்க மாடர்னாத் தெரிஞ்சாலும் நிறைய விஷயங்கள்ல பழமைவாதி… இன்னும் கோபம் மனசில இருக்கு… என்னோட சரியாப் பேசியே டூ மன் த்ஸ் ஆச்சு… இப்ப மஹியும் லவ் பண்றதாச் சொன்னா, என்ன சொல்வார்னே தெரியலை… ரஞ்சன் கிட்டக் கோபத்தை அவரால வெளிப்படுத்த முடியாது, பட் மஹி மேல கோபத்தைக் காட்டுவார்…”

“லவ் பண்றதாச் சொல்ல வேண்டாம்மா… பிரதாப் வீட்ல எல்லாருக்கும் மஹியை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு மஹியைக் கேட்கறாங்கன்னு சொல்வோமே… எந்தக் குறையுமே சொல்ல முடியாது அவரால… என்ன சொல்றீங்க…” என்று கேட்டதும், ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார்.

“அவரோட முழு சம்மதத்துக்கு நாம எல்லோரும் காத்திருக்கணும்… அவரைப் புறக்கணிச்சிட்டோம்னு காயம் என் மனசிலையும் இருக்கு… அவர் பார்க்கற மாதிரி பொண்ணு ரஞ்சன் கேரக்டரோட ஒத்துப் போக மாட்டான்னுதான் நானே பொண்ணுப் பார்க்கறதா முடிவு பண்ணினேன்… இது மாதிரிப் பண்ணினது பெரிய தப்பு… ரஞ்சனைப் பத்தி ஏகப்பட்ட கனவுகளை மனசில சுமந்திருந்தார்… வெளிப்படையா எங்கிட்ட சொல்லலைனாலும் என்னால சிலதை உணர முடியும்… அவர் மனசைக் காயப்படுத்தாம என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்…”

அவர் சொல்வதிலிருந்த நியாயம் அவளுக்கும் புரிந்தது. சில மனிதர்கள் வெளியில் புதுமைவாதிகள் போலத் தெரிந்தாலும் உள்ளுக்குள் பழமைவாதிகள். அவர்கள் கொடுக்கும் சுதந்திரம் ஒரு வரையறைக்குட்பட்டது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“இன்னொரு ஐடியா சொல்லவாம்மா… டூ மன்த்ஸ்ஸா பிரதாப் வீட்டிலிருந்து விருந்துக்குக் கூப்பிட்டுட்டு இருக்காங்கல்ல, கை சரியானதும் வரோம்னு சொன்னோமே… இப்ப மாமா வந்துட்டாரே, அவரையும் விருந்துக்கு அழைச்சிட்டுப் போவோம்… அவங்களோட பேசப்பழக அவருக்கே பிடிக்கலாமில்லை… நானும் பிரதாப் அப்பாகிட்ட இந்த விஷயமாப் பேசறேன்…”

“நல்ல ஐடியாதான்… ஆனா வர்றதுக்கு அவர் ஒத்துக்கணுமே ப்ரீத்தி… தெரியாதவங்க வீட்டுக்கு வர்றதுக்கு யோசிப்பாரே… அவர்கிட்ட யார் பேசறது… இங்க வந்து ரெண்டு நாளாச்சு… இதுவரைக்கும் சகஜமா டென் மினிட்ஸ் பேசிப் பார்த்தையா… என்ன யோசிக்கறார்னே தெரியலை… எனக்கும் பேசவே கொஞ்சம் பயமா இருக்கு…”

‘இத்தனை வருட காலத் திருமண வாழ்க்கையில், மன நெருக்கம் இல்லையென்றால் எப்படி… சில ஆண்கள் இது போலதான்… மனைவியின் கருத்தைக் கேட்பதையோ, சுதந்திரம் கொடுப்பதையோ விரும்புவதில்லை… பெண்களுக்கும் முழுக்க முழுக்க அவர்களையே சார்த்து வாழ்வதுதான் வாழ்க்கை என்ற எண்ணம் அடி மனதில் ஊறிப் போய்க் கிடக்கிறது…’ என்று நினைத்தாள்.

“அம்மா… நீங்க கவலையே படாதீங்க… பிரதாப்போட அப்பாவை முறைப்படி இன்வைட் பண்ணச் சொல்றேன்… உங்க பிள்ளை எதுக்கு இருக்கார்… விருந்துக்கு அப்பாவைக் கூட்டிட்டு வர்றது இவரோட பொறுப்பு…” என்று சொல்லிவிட்டு, “ரஞ்சன்! அப்பாவை சமாளிக்க வேண்டியது உங்க பொறுப்பு…” என்று அதுவரை பேசுவதைக் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சித்ரஞ்சனிடம் கூறினாள்.

“மாம்… உங்க மருமக எப்படி அதிகாரம் பண்றான்னு பாருங்க… எனக்கு சாய்ஸே இல்லை… சொன்னதைக் கேட்டுக்கணும் போல… என்னைப் பேர் சொல்லியே கூப்பிடறா… நீங்க இதெல்லாம் கேட்கவே மாட்டீங்களா…” என்று குற்றப்பத்திரிக்கை வாசித்தான்.

முகத்தில் இருக்கும் பாவனையை வைத்து, அவன் மனதைப் படிக்க முடியாததால், வருத்தத்துடன் தலைகுனிந்தாள் ப்ரீத்தி.

முதல் சந்திப்பின் பின்னர், ‘ரஞ்சன்’ என்று பிரதாப் இயல்பாகச் சொல்லவே, அந்தப் பெயர் மனதிற்குள் குடியேறிவிட்டது. மனமும் ரஞ்சன் என்றே சொல்லப் பழகிக் கொண்டது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

‘இவனைப் போய் அத்தான், பொத்தான், மாமா, மச்சான் என்றெல்லாம் அழைக்க முடியுமா... அழைத்தால்...’ என்று கற்பனையில் நினைத்துப் பார்த்தவளுக்குச் சிரிப்பு வந்தது. அவன் தன்னையே பார்ப்பது தெரிந்ததால், பொங்கிவந்த சிரிப்பை உதட்டைக் கடித்து அடக்கினாள்.

‘என்ன பதில் சொல்வது?’ என்று தடுமாற்றவும், “டேய் அரட்டை... போடா... பேர் சொன்னாலும் மரியாதை கொடுத்துத்தானே பேசறா... உன்னோட ஃப்ரெண்ட்ஸ் கொடுக்கற மரியாதையை நானும் பார்த்திருக்கேன்... இப்ப எதுக்கு வம்புக்கிழுக்கற...” என்று சொன்ன யசோதா, “நீ எதுக்குக் கவலைப் படற ப்ரீத்தி.... இவ்ளோ நாள்ல இன்னும் இவனைப் பத்தித் தெரியலையா... அப்படித்தான் சொல்லுவேன்னு சொல்லிட்டுப் போ...” என்றார்.

“எனக்கு சப்போர்ட் பண்ணுவீங்கன்னு பார்த்தா இவளுக்கே சப்போர்ட் பண்ணுங்க...”

“என்னோட சப்போர்ட் எப்பவுமே ப்ரீத்திக்குதான்... அதனால டாடியை விருந்துக்குக் கூட்டிட்டு வர்ற வழியைப் பார்...” என்று சொன்னவர் ப்ரீத்தியின் தலையை அன்புடன் வருடிக் கொடுத்தார்.

இருவருக்குமிடையில் இருக்கும் பிணைப்பைப் பார்த்தவன் சிரிப்புடன்,ன்“பேசிப் பார்க்கிறேன் மாம்... அதுசரி மஹி எங்கே ஆளையே காணோம்...” என்றான்.

“ப்ரீத்தி இல்லாமா போர் அடிக்குதுன்னு ஃப்ரெண்ட்ஸைப் பார்த்திட்டு வரேன்னு சொல்லிட்டுப் போனா... வர கொஞ்சம் லேட் ஆகும்...”

“மஹிகிட்ட இதெல்லாம் சொல்ல வேண்டாம்மா... நாளைக்கு பிரதாப் பேசிக்கறேன்னு சொன்னார்...” என்று சொன்ன ப்ரீத்தி, “நீங்க ரெஸ்ட் எடுக்கற டைம்ல பேசிட்டே இருந்திட்டோம்... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கங்க...” என்று சொல்லி அனுப்பினாள்.

அவர் சென்றதும், “ப்ரீத்தி! சிரிப்பு வந்தாக் கண்ட்ரோல் பண்ணக் கூடாது... எந்த ஃபீலிங்ஸ்மே அப்படிதான்... என்ன நினைச்சுச் சிரிச்ச...” என்று கேட்க, அவளும் நினைத்ததைச் சொன்னாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

அவன் முகம் போன போக்கைப் பார்த்து வாய் விட்டுச் சிரிக்க, நெற்றியில் செல்லமாக முடியவன், "நல்லாதான் இருக்கு… உனக்குப் பிடிச்சிருந்தாக் கூப்பிடு… நோ அப்ஜக்ஷன்… அப்புறம் இது மாதிரி தனியாப் போற வேலையெல்லாம் இனிமேல் வச்சுக்காத… உன்னோட சேஃப்டிக்கு செக்யூரிட்டி அரேஞ்ச் பண்ணிடறேன்…" என்று சொல்லிவிட்டு அலுவலகம் கிளம்பினான்.

தந்தையிடம் என்ன பேசினானோ, இரவு வீடு திரும்பியதும், "நாளைக்கு எல்லாரும் பிரதாப் வீட்டுக்குப் போறோம்… டாடி வரேன்னு சொல்லிட்டார்… மார்னிங் ஃப்ரேக்ஃபாஸ்ட் முடிச்சதும் கிளம்பலாம்… அவங்க வீட்டில டைம் ஸ்பெண்ட் பண்ணின மாதிரி இருக்கும்…" என்று சொல்லவே அவளுக்கு சந்தோசமாக இருந்தது.

"என்ன மேடம்கு சந்தோசமா…" என்று காதருகில் கிசுகிசுக்க, "ரொம்ப ரொம்ப ஹேப்பி ரஞ்சன்… அப்பாட்ட என்ன சொன்னீங்க…" என்றாள்.

"அவர் ஒத்துக்கற மாதிரி சொன்னேன்…" என்று சொல்கையில், மஹதி "அண்ணா நீங்க போயிட்டு வாங்க… ஃப்ரெண்ட்ஸோட நாளைக்கு வெளியில போறேன்…" என்றாள்.

"இன்னைக்கு நாள் முழுக்க ஃப்ரெண்ட்ஸோடதானே இருந்த… அப்பாவே வர்றார் மஹி… உனக்கு என்ன வந்துச்சு… என்ன ப்ரோக்ராம் வச்சிருந்தாலும் கேன்சல் பண்ணிட்டு வா… எல்லாரும் சேர்ந்துதான் போறோம்… இப்பப் போய் சீக்கிரம் தூங்குங்க…" என்று கட்டளையிட்டுவிட்டுச் சென்றார் யசோதா.

மஹதியின் கண்களிலிருந்த சோர்வைப் பார்த்து, 'சொல்லிவிடலாமா… ஆனால் பிரதாப் அவனே சொல்ல வேண்டும் என்றானே…' என்றெல்லாம் யோசித்த ப்ரீத்தி, "மஹி! போய்த் தூங்குடா… உனக்கும் எல்லாரையும் தெரியுமே… அப்புறம் என்ன…" என்றாள்.

தனிமையில் குற்றம் சாட்டும் பார்வையுடன் எதிர்கொண்ட மஹதி, "அண்ணி! உங்களுக்கே தெரியும் தானே… பிரதாப் பார்க்கற பார்வையில உரிமை தெரியும்… நிச்சயம் என்னை லவ் பண்றார்… பட் அவங்க அம்மா சொல்றதைக் கேட்டதுக்கப்புறம் ரொம்பத் தவிப்பா இருக்கு… நான் நினைச்சதெல்லாம் கற்பனையோன்னு குழம்பிப் போயிருக்கேன்… எந்த முடிவுக்கும் என்னால வர முடியலை அண்ணி… ப்ளீஸ் நான் வரலை…" என்றவள், கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியாமல், ப்ரீத்தியின் மடியில் படுத்து விம்மினாள்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

அதற்கு மேலும் அவளுடைய உணர்வுகளுடன் விளையாடுவது சரியல்ல என்பது புரிந்தது. முதன் முறையாக வாழப் போகும் வீட்டிற்குள் நுழைகையில் மகிழ்ச்சியான மனநிலையில் செல்ல வேண்டும் என நினைத்து, அவள் தலையை வருடி விட்டவள்,

“ஏய் பேபி… பிரதாப் உன்னோட மொபைலுக்கு கால் பண்ணும் போது ஏன் எடுக்கலை… அப்புறம் ஸ்விட்ச் ஆ∴ப் பண்ணிட்டையாம்… எடுத்திருந்தா இந்த அழுகையெல்லாம் இருந்திருக்காதே…” என்று அவளை நிமிர வைத்துக் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

“அண்ணி…” என்று ஆர்வமும், ஏக்கமும் போட்டியிடப் பார்த்தவளிடம்,

“மை டியர் மஹி… பிரதாப்புக்கு உன் மேல லவ்வோ லவ்… விட்டா இப்பவே தூக்கிட்டுப் போய் அவங்க வீட்ல வச்சுப்பார்… பாஸ்கு நைட்டெல்லாம் தூக்கமே வர்றதில்லையாம்… எங்க பார்த்தாலும் நீ இருக்கிற மாதிரியே தெரியுதாம்… உன்னைப் பார்க்காத ஒவ்வொரு நிமிஷமும் வேஸ்ட்னு ∴பீல் பண்றார்… உன்னை நேர்ல மீட் பண்ணிப் பேசப்போறேன்னு சொல்லிட்டிருந்தார்…” என்று விளையாட்டாகச் சொன்னாள்.

“அ… அண்ணி…. இதெல்லாம் யார் சொன்னா…”

“வேற யார் சொல்வா… எல்லாம் உன் ஆள் தான்… நேத்தே என்கிட்ட, அப்புறம் உங்க அண்ணாகிட்ட சொல்லியாச்சு… அவங்க வீட்ல எல்லாருக்குமே இப்ப விஷயம் தெரிஞ்சிருக்கும்… அம்மாக்கும் நான் சொல்லிட்டேன்…” என்றவள், பிரதாப் சொன்னவற்றையும், மறுநாள் விருந்துக்குச் செல்வது எதற்காக என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறினாள்.

முகமும், அகமும் மலரக் கேட்டுக் கொண்டவள், “எனக்குத் தெரியாம என்னன்னவோ நடக்குதா… இருக்கட்டும், நல்லா கவனிச்சுக்கறேன்… என் கையில கிடைக்கட்டும், உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்… சர்ப்ரைஸாம் சர்ப்ரைஸ்… ஒன் டே ∴புல்லா நான் தவிச்ச தவிப்புக்கு பதில் சொல்லியே ஆகணும்…” என்று சொன்னாள்.

பேச்சில் இருந்த கோபம், உள்ளத்திலிருந்து வெளிப்படாததைக் கண்ட ப்ரீத்தி, “நீயாச்சு உன் ஆளாச்சு… லவர்ஸ் சண்டைல உள்ள வந்தா லாஸ்ட்ல அம்போன்னு



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

கழட்டி விட்டுடுவீங்க… நீ உன்னோட ட்ரீமைக் கண்டினியூ பண்ணும்மா… நான் தூங்கப் போறேன்…" என்று கிளம்பினாள்.

அறைக் கதவைத் திறந்து வெளியேறுகையில், "அண்ணி! ஒன் மினிட்…" என்று ஓடி வந்தவள், இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டு, "தேங்க்ஸ் அண்ணி… தேங்ஸ் எ லாட்…" என்றாள்.

எதிர்பார்க்காத ப்ரீத்தி முகம் சிவந்து, "பிரதாப்புக்குக் கொடுக்க வேண்டியதெல்லாம் எனக்குக் கொடுத்தா எப்படி… ஒரு வேளை ட்ரைனிங் எடுத்துக்கறையா…" என்று கிண்டல் செய்ய, இம்முறை மஹதி முகம் சிவந்தாள்.

"போங்கண்ணி…" என்று சிணுங்கியவள், "உங்க பின்னாடி அண்ணாதான் முறைச்சுப் பார்த்துட்டு நிக்கறார்… ஒரு வேளை அவர் கொடுக்க வேண்டியதை நான் தந்திட்டேன்னு கோபமோ என்னவோ… உங்க ஆளை நீங்களே வச்சுக்கங்க…" என்று மெதுவாகச் சொல்லி, அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு அறைக்குள் ஓடிவிட, தடுமாறினாள்.

பின்புறம் யார் மேலோ மோதிக் கொள்வது புரிய, அணைத்துப் பிடித்த வலிய கைகளிலிருந்தும், "பார்த்து… இன்னமும் கை சரியாகலை… அதுக்குள்ள என்ன விளையாட்டு அவளுக்கு… நாளைக்குக் கவனிச்சுக்கறேன்…" என்ற குரலிலிருந்தும், அவள் சொல்லிச் சென்றது உண்மைதான் என்பதை உணர்ந்தாள்.

'முதலிலேயே அவன் பார்க்கும் பார்வை சரியில்லை… என்ன கிண்டல் செய்யப் போகிறானோ… அண்ணனும் தங்கையும் ஒரே ரகம்… மஹியும் தேங்க்ஸ் என்று இப்படிச் சொல்ல வேண்டுமா…' என்று நினைத்து விடுபட மனமின்றிக் கண்மூடி நின்றாள்.

எதிர்பாராமல், தன் நெஞ்சில் மலர்மாலை போல வந்து விழுந்தவளைத் தழுவிக் கொண்ட ரஞ்சன், அவளை அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றான்.

இடையை அழுந்தப் பற்றியிருந்த கரங்களின் பிடியில் சுகமாகக் கண்மூடியிருந்தவள், அவன் பால்கனிக்கு அழைத்துச் செல்வது புரிய, உடன் சென்றாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இருண்டிருந்த வானில், ஒளிரும் நட்சந்திரங்களின் பின்னணியில், ஜொலிக்கும் பால்நிலவொளியில் நிறுத்தியவன், பின்புறமிருந்து இடையோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

கன்னத்தோடு கன்னம் உரச, தேகங்கள் இரண்டும் ஸ்பரிசிக்க, உணர்வுகளின் பிடியில் சிக்கித் தவித்தான். இது வரை அறியாத உணர்வில் விடுபட முடியாத ப்ரீத்தியும், தன்னை மறந்து ஒன்றினாள்.

நீண்ட நேரம் கழித்து விடுவிக்க மனமின்றி பெருமூச்சுடன், "தூங்கலாம் ப்ரீத்தி… ரொம்ப லேட் ஆயிடுச்சு…" என்று சொன்னபிறகு உணர்வு பெற்று அவனிடமிருந்து விடுபட்டாள்.

"இன்னைக்கு ஃபுல்லா கையைக் கொஞ்சம் ஸ்ட்ரெயின் பண்ணிருக்க… பெயின் இருக்கும்… அதிகமா இருந்தா டேப்லட் போட்டுக்க… குட் நைட்…" என்று வலது கையைப் பற்றியவாறு சொல்ல,

அவன் கண்களை நிமிர்ந்து பார்க்க முடியாமல், "குட் நைட்…" என்று சொல்லிவிட்டுப் படுத்தவளுக்கு உறக்கம் வருவதாக இல்லை.

அவனும் தன்னுள் விளையும் மாற்றங்களை நினைத்தவாறே படுத்திருந்தான். அவளுக்குக் கையில் அடிபட்ட அன்று அணைக்க முயன்றதுக்கும், இன்றைக்கும் இருக்கும் வித்தியாசம் அவனுக்குப் புலப்பட்டது.

அன்று மனம் முழுக்க 'அவள் வேண்டும்' என்று சூறாவளியாய் ஆக்கிரமிக்கத் தயாராக இருந்தான். இன்றோ, அவள் ஸ்பரிசத்திலேயே மனதில் ஒரு நிறைவு.

ஏதோ புரிவதும், புரியாததுமான மனநிலையில் 'எப்படியாவது தூங்கியாக வேண்டும்' என்று ப்ரீத்தியை நோக்கித் திரும்பிப் படுத்தான். முதுகைக் காட்டியவாறு அவள் மறுபுறம் திரும்பிப் படுத்திருக்கவும், வேறு வழியின்றித் தலையணையை அணைத்துப் பிடித்தவாறே உறங்க முயன்றான்.

28



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

**"ம**ஹி! கொஞ்சம் திரும்பி பிரதாப்பைப் பார்க்கலாமில்லை… வந்ததில இருந்து பாஸ் உன்னைத்தான் பார்த்திட்டிருக்கார்… அந்தப் பக்கம் திரும்பக் கூடாதுன்னு முடிவில இருக்கயா…" என்று கேட்டாள் ப்ரீத்தி.

மஹதிக்கு மனதிற்குள் மகிழ்ச்சிப் பெருவெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. மனதிற்குள் இருந்த கலக்கமெல்லாம் தொலைந்து, உலகத்தையே வென்று விட்ட உணர்வில் தத்தளித்தாள்.

"பார்க்கட்டும் அண்ணி… இத்தனை நாளா என்னை மண்டை காய வச்சாரல்ல… கொஞ்ச நேரம் அனுபவிக்கட்டும்… பார்க்க மாட்டாரான்னு நான் தவிச்ச தவிப்புக்கெல்லாம் படட்டும்…" என்று பொறிந்தாள்.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையில், பெரியவர்கள் அறிமுகப் படலத்தை முடித்திருந்தனர்.

பிரதாப்பினுடைய தந்தை ராகவன், சித்ரஞ்சனைப் பெற்ற அன்னை லதாவை சிறுவயது முதலே அறிந்திருந்ததால் பேசுவதற்கு எளிதாக இருந்தது.

"எங்களுக்கும் சொந்த ஊர் திருச்சிங்கறதால சின்ன வயசில அடிக்கடி போவோம்… லதா என்னை அண்ணான்னுதான் கூப்பிடுவா… என்னோட தங்கைங்க ரெண்டு பேரும் லதாவோட சேர்ந்து விளையாடுவாங்க… சென்னைல வந்துசெட்டில் ஆனதுக்கப்புறம் அப்பா மட்டும் அடிக்கடிப் போவார்… எங்களால அதிகம் போக முடியலை… நீங்க வரீங்கன்னு சொன்னதால பழைய போட்டோஸ் எல்லாம் தேடிப் பிடிச்சு எடுத்துட்டு வச்சிருக்கோம்…" என்று ராகவனின் பேச்சு திருச்சியையும், லதாவையுமே சுற்றி வந்தது.

ரஞ்சனுடைய தந்தை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும், பழைய புகைப்படங்களை எடுக்கையில், அவரது கைகளின் நடுக்கத்திலிருந்து உணர்ச்சி வயப்பட்டிருக்கிறார் என்பது புரிந்தது.

ஒவ்வொரு புகைப்படமாகப் பார்க்கப் பார்க்க, அவர் கண்களில் தோன்றிய வலியிலிருந்தும், அதை மறைக்க உணர்ச்சியற்ற பார்வையைப் பதிப்பதிலிருந்தும், ப்ரீத்தியின் பக்கம் திரும்பிய ரஞ்சன், "இந்தப் பேச்சை எடுத்திருக்க வேண்டாம்னு தோணுது…" என்றான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“அங்கிள் ஆட்களை ஈஸியா எடை போடுவார் ரஞ்சன்… அப்பா மனசளவில இறுகிப் போயிருக்கார்… கொஞ்சம் இளக வைக்கணும்… அப்பத்தான் எல்லாம் சரியாகும்…” என்று பதில் சொன்னாள்.

“உங்க ஃபேமிலி பத்தி எங்கிட்டேயும் சில முறை சொல்லிருக்கா சார்…” என்று ரஞ்சனின் தந்தை குமரன் மௌனம் கலைந்து சொல்லவும், யசோதா வியப்புடன் திரும்பிப் பார்த்தார்.

இது வரை லதாவைப் பற்றி அவர் பேசியதே இல்லை. மனதிற்குள் புதைத்துக் கொள்வார். அவராகப் பேசும் போதும் தவிர்த்து விடுவார்.

பன்னிரண்டாவது வயதிலிருந்து லதாவும் அவரும் தோழிகள். சில முறை பேசுகையில் ராகவன் அண்ணா, நித்யாக்கா என்ற பெயர்களையெல்லாம் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறார்.

அதெல்லாம் அவருக்கு முழுமையாக நினைவிற்கு வரவில்லை. ஆனால், லதாவின் நினைவுகள் எதையும் கணவர் மறக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

“இது லதாக்கு ரெண்டு வயசு இருக்கும் போது எடுத்த போட்டோ… அப்பா, அம்மாவோட க்யூட்டா நின்னுட்டிருப்பா… இது அஞ்சு வயசில எடுத்த போட்டோ…” என்று ஒவ்வொன்றாக புகைப்படம் எடுத்ததையும், அதற்கான பழைய நிகழ்வுகளையும் சொல்லச் சொல்ல அவர் முகம் மென்மையானது.

அதற்குள் வீட்டின் உட்புறமிருந்து பிரதாப்பின் தாத்தா வரவும், “பாட்டி எழுந்திருச்சிட்டாங்களா தாத்தா?” என்று கேட்டான் பிரதாப்.

“எழுந்திருச்சாச்சு பிரதாப்… எல்லாரையும் பார்க்கணும்னு ஆசையா இருக்கா… கொஞ்ச நேரம் கழிச்சுக் கூட்டிட்டு வரலாம்…” என்றார்.

அனைவரையும் அவர் வரவேற்க, ப்ரீத்தியைத் தவிர அனைவரும் வியப்புடன் பார்வையை அவர் மேல் பதித்தனர்.

“எங்க அம்மாவோட அப்பா இவர்தான்…” என்று அறிமுகம் செய்து வைத்தான் பிரதாப்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

ஆச்சர்யமான பார்வையைக் கண்டு சிரித்தவாறு ஸோபாவில் அமர்ந்து கொண்டவர், “என்ன எல்லாம் அதிசயமாப் பார்க்கறீங்க… நான் ஆங்கிலோ இண்டியன்… எங்க தாத்தா தியோசாபிகல் சொசைட்டில ரொம்ப ஈடுபாடு வச்சிருந்தார்… அடையாறுல ஹெட் குவார்டர்ஸ் மாத்தினதுக்கப்புறம் சென்னை வந்தவருக்கு இங்கே இருக்க ரொம்பப் பிடிச்சிடுச்சு… அவர் தேடின மெய்ப்பொருள் என்னன்னு இந்தியாலதான் கண்டு பிடிக்க முடிஞ்சது… குடும்பத்தோட இங்கேயே வந்து தங்கிட்டாரு… எங்க அப்பா, அம்மாவைப் பார்த்ததுமே காதலிக்க ஆரம்பிச்சிட்டார்… அந்தக் காலத்தில பல போராட்டங்களுக்கு அப்புறமா ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிட்டாங்க… நானும் லவ் மேரேஜ் தான்… பரம்பரை பரம்பரையா, நாடு மொழி அந்தஸ்து பார்க்காம காதல் திருமணம் தொடருது…” என்றார்.

“பேசிட்டு இருங்க… பாட்டியை அழைச்சிட்டு வரேன்…” என்று சொல்லிச் சென்ற பிரதாப், சிறிது நேரத்திலேயே அவரைக் கைகளில் தூக்கிக் கொண்டு வந்து, தாத்தாவின் அருகில் அமர வைத்தான்.

மிக ஒல்லியாக, கருப்பு நிறத்துடன் இருந்த உருவம் தாத்தாவின் நிறத்துடனும், கம்பீரத்துடனும் ஒத்துப் போகாமல் இருப்பதை வியப்புடன் பார்த்தான் ரஞ்சன்.

“ஸ்ட்ரோக் வந்து கொஞ்ச வருஷமா ட்ரீட்மெண்ட்ல இருக்கா… போன வருஷமெல்லாம் ரொம்ப கஷ்டப்பட்டுட்டா… இப்போ ஆயுர்வேதிக் ட்ரீட்மெண்ட் எடுத்ததுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமா சரியாயிட்டிருக்கு… எதையாவது பிடிச்சு மெதுவா நடக்க முடியுது…” என்று சொன்னவர், பிரதாப் கொடுத்த எண்ணெயைக் கையில் இதமாகத் தேய்த்து விடத் தொடங்கினார்.

ஆச்சர்யமாகப் பார்த்தவர்களிடம், “டூ ஹவர்ஸ் ஒன்ஸ் ஆயில் மசாஜ் பண்ணணும்… பாட்டிக்கு வேண்டியதை அவரே செய்தாத்தான் திருப்தி… நர்ஸ் இருந்தாலும் அவரேதான் செய்வார்…” என்று விளக்கம் சொன்னான் பிரதாப்.

“நர்ஸ் செய்தா கடமைக்காகச் செய்வாங்க… நான் காதலோட செய்யறேன்…” என்று தாத்தா சொல்லவும், கண்கலங்க அவரது தோளில் தலை சாய்த்துக் கொண்டார் பாட்டி.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

முதிய வயதிலும் அன்பாலும், காதலாலும் பிணைக்கப் பட்டு வாழ்பவர்களைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது.

“அறுபது வருஷமா எனக்கு வேண்டியதையெல்லாம் பார்த்துப் பார்த்துச் செஞ்சா… குழந்தை மாதிரிப் பார்த்துட்டா… எத்தனை டென்ஷன் இருந்தாலும் வீட்டுக்கு வந்துட்டா எல்லாமே காணாமப் போயிடும்… குழந்தைகளை வளர்த்தது எல்லாமே அவ தான்… எங்க குடும்பத்துக்குத் தூண் மாதிரி…” என்று தாத்தா தன்னுடைய வாழ்க்கையைப் பற்றிச் சொல்லி முடிக்கையில், அனைவரும் எளிதாகப் பேச்சில் கலந்து கொண்டனர்.

பெரியவர்களைத் திருப்தியுடன் பார்த்த ப்ரீத்தி, “வா மஹி! நாம உள்ள போகலாம்… ஆண்ட்டி தனியா இருக்காங்க… அப்படியே வீட்டைச் சுத்திப் பார்க்கலாம்…” என்று அழைத்துச் சென்றாள்.

இருவரும் சேர்ந்து சமையலறையிலிருந்த பிரதாப்பின் தாயிடம் பேசிக் கொண்டிருக்க, யசோதாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

மதிய உணவிற்குப் பின், ஆவலை அடக்க முடியாத மஹதி, “அண்ணி! பிரதாப்போட ரூம் எங்க இருக்கு…” என்றாள்.

கிண்டலடித்துச் சிரித்தாலும், மேல இருக்கு… ஆனா எந்த ரூம்னு எனக்குத் தெரியாது…உனக்குதான் ரொம்ப முக்கியம்… நீ போய்ப் பாரு மஹி…” என்று சொல்லி அனுப்பினாள்.

தயக்கத்தை ஆர்வம் தடைசெய்ய, இரசனையாக அமைக்கப்பட்டிருந்த உள் அலங்காரங்களைப் பார்வையிட்டவாறு, ஆர்வத்தோடு பிரதாப்பின் அறையைத் தேடினாள்.

‘அனுமதியில்லாமல் அவன் அறைக்குள் எப்படிச் செல்வது?’ என்று ஒரு நொடி தோன்றினாலும், ‘இனிமேல் அது தன்னுடைய அறையும்தான்… எப்படி வைத்திருக்கிறான் என்று பார்க்கலாம்…’ என்று ஒவ்வொரு அறைக்குள்ளும் எட்டிப் பார்த்தாள்.

அதற்குள் மஹதியைப் பார்வையால் தொடர்ந்து கொண்டிருந்த பிரதாப், அவள் மெல்ல நழுவி மாடிப் பகுதியை அடைவதைப் பார்த்து ரஞ்சனிடம் சில நிமிடங்களில் வருவதாகக் கூறிவிட்டுத் தொடர்ந்தான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

'அவளுக்கு என்ன ஆயிற்று? தன்னுடைய பார்வையை ஏன் தவிர்க்கிறாள்?' என்ற கேள்விகள் மனதில் எழுந்தன.

தன்னுடைய அறைக்குள் அவள் நிற்பதைப் பார்த்ததும் மனதில் எல்லையில்லா மகிழ்ச்சி பொங்கியது. தன் காதலைச் சொல்ல இதுதான் சரியான தருணம் என நினைத்தவன் மெல்ல நெருங்கினான்.

"தர்பூஸ்!" என்று அழைக்கவும், வேகமாகத் திரும்பியவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"என்னோட போட்டோ இங்க எப்படி வந்துது... என்னோட பர்மிஷன் இல்லாம எப்படி வைக்கலாம்..." என்று முகம் சிவக்கக் கேட்க,

"அது வந்து மஹி..." என்று தயங்கியவன், "நீ எதுக்கு என்னோட ரூம்குள்ள வந்த..." என்றான்.

வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டவளை "என்ன சொல்ற மஹி... ஒண்ணும் புரியலை..." என்று கேட்க, "நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மாட்டீங்களா? பதில் கேள்வி கேட்கறீங்க... உங்க ரூமா இருந்துட்டுப் போகட்டும்... அதுக்கென்ன வந்துச்சு... என்னோட ஹஸ்பண்ட் ரூமுக்குள்ள நான் எப்ப வேணும்னாலும் வருவேன்... வேண்டாம்னு சொல்லிடுவீங்களா..." என்று தலைசரித்துக் கேட்டாள்.

'காதில் விழுந்தது சரிதானா!' என்று திகைப்புடன் அவளைப் பார்த்தவன், "ஹேய்... என்ன சொன்ன... இன்னொரு டைம் சொல்லு..." என்று பரபரப்புடன் கேட்க, "ஷேர் மார்க்கெட் நிலவரம் ஒண்ணும் சரியில்லைன்னு சொன்னேன்..." என்று பதில் சொன்னாள்.

கண்களிலிருந்த குறும்பும், சுளித்திருந்த உதடுகளும் அவன் கேட்டது உண்மைதான் என்று சொல்ல, பரவசப் புன்னகையுடன் அவளையே பார்த்தான்.

"என்னோட பொண்டாட்டி போட்டோவை என் ரூம்ல வைக்க நான் யார்கிட்ட பர்மிஷன் கேட்கணும் மதி..." என்று உல்லாசக் குரலில் கேட்டவாறு நெருங்கினான்.

உதட்டைச் சுளித்துப் பழிப்புக் காட்டியவள், "இதை முதல்லையே சொல்லிருந்தா சந்தோஷப் பட்டிருப்பேன்... நானே எல்லாத்தையும் சொல்லணும்...

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

சொன்னதுக்கப்புறம் இதுவும் சொல்வீங்க இன்னமும் சொல்வீங்க…” என்று சொல்லியவாறு பின்னடைந்தாள்.

“இவ்ளோ நாள் சொல்லாதது தப்புதான்… நிறைய டைமை வேஸ்ட் பண்ணிட்டேன்னு தெரியுது…” என்று விளையாட்டுக் குரலில் சொல்லி மேலும் நெருங்கினான்.

அதற்கு மேல் பின்னடைய முடியாமல் சுவர் தடுக்க, அப்படியே நின்றாள். மிக நெருங்கியவன், இரு புறமும் அவள் நகர முடியாதவாறு கரங்களால் வேலியிட்டான்.

“விடுங்க… நான் போகணும்… அண்ணி போன் பேசிட்டிருக்காங்க… என்னைத் தேடுவாங்க…” என்று சொல்லி திமிறி விடுபட முயன்றவளை எளிதாக அடக்கினான்.

“தேடினாத் தேடிட்டுப் போறாங்க…”

“விடுங்க… யாராவது வந்தா என்ன நினைப்பாங்க…”

“ஒண்ணும் நினைக்க மாட்டாங்க… சீக்கிரமா மேரேஜ் டேட்டை ஃபிக்ஸ் பண்ணிடுவாங்க…”

நெருங்கிய முகத்தைப் பார்த்து செயலற்றுப் போய் நின்றவளிடம், “தர்பூஸ்… லவ் யூ ஸோ மச்… இவ்ளோ நாள் உன்னை வெயிட் பண்ண வச்சது தப்புதான் டார்லிங்… பார்த்த நிமிஷமே என்னை அட்ராக்ட் பண்ணின மதி… உன்னோட ரசனையான பேச்சு, உன்னோட குறும்பு எல்லாத்திலையும் மீள முடியாம விழுந்திட்டேன்…” என்று கண்களோடு கண்களை உறவாட விட்டவாறு கூறினான்.

“லவ் யூ மதி…” என்று நூற்றுக்கணக்கான முறை மந்திரம் போல ஜெபித்த உதடுகள், முகத்தில் ஊர்வலம் நடத்தத் தொடங்கின.

தன்னுடைய இணையைத் தேடிக் கண்டுபிடித்து இணைய முயல்கையில், “பிரதாப்!” என்ற யாரோ உரக்க அழைக்கும் சப்தம் கேட்டது.

உணர்வு பெற்றவள் சுதாரித்துக் கொண்டு அவனை விலக்கித் தள்ளி, வேகமாக மற்றொரு வழியின் வழியே வெளியேறினாள்.

தடுமாறியவனைப் பிடித்து நிறுத்திய ரஞ்சன், “டேய் என்னாச்சு… எதாவது ப்ராப்ளமா…” என்று கேட்டான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

தர்மசங்கடத்துடன் “ப்ராப்ளம் எல்லாம் ஒண்ணும் இல்லை… மஹியோட தனியாப் பேசலாம்னு வந்தேன்… திடீர்னு நீ வரவும் ஓடிட்டா…” என்றான்.

புரிந்து கொண்டு சிரித்தவன், “உன்னோட போன் விடாம ரிங் ஆயிட்டே இருக்கு… எதாவது எமர்ஜென்சியா இருக்கும்னு நினைச்சு, உன்னைக் காணோமேன்னு தேடி வந்தேன்… அதுவுமில்லாம நாங்க கொஞ்ச நேரத்தில கிளம்பப் போறோம்… தாத்தா உன்னைக் கூட்டிட்டு வரச்சொன்னார்…” என்றான்.

கிளம்பும் நேரத்தில் ஆண்கள் மட்டும் முன்னறையில் அமர்ந்திருக்கையில், பிரதாப்பிற்குப் பெண் தேடுவதாகப் பேச்சு வாக்கில் ராகவன் சொல்லிவிட்டு, “ரஞ்சன் மேரேஜ்ல மஹதியைப் பார்த்ததில இருந்து எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு… உங்களுக்கும் பிடிச்சிருந்தா மேற்கொண்டு இந்த விஷயத்தைப் பேசலாம்… விருந்துக்குக் கூப்பிட்டுட்டு என்ன இப்படிக் கேட்டுட்டாங்கன்னு நினைச்சுக்காதீங்க… வீட்டுக்குப் போனதுக்கப்புறம் யோசிச்சு உங்க முடிவைச் சொல்லுங்க…” என்று வெளிப்படையாகக் கேட்டு விட்டார்.

ஆர்வத்துடன் காத்திருந்த பிரதாப்பிடம், “அவருக்குப் பிடிச்சிருக்குன்னு தோணுது… இதுவரைக்கும் இவ்ளோ நேரம் டாடி டைம் ஸ்பெண்ட் பண்ணினதில்லை… உங்க வீடு அவருக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு… லதாம்மாவுக்குத் தெரிஞ்சவங்களோட பேசறதுக்கு விருப்பப் படறார்னு தெரியுது… மம்மியோட சகஜமாப் பேசறார்… மம்மியோட ஃபேஸ்ல ரொம்ப சந்தோசம் தெரியுது… அவருக்கு யோசிக்கக் கொஞ்சம் டைம் தருவோம்… அதுவரைக்கும் வேற வழியே இல்லை, வெயிட் பண்ணுங்க…” என்றான் ரஞ்சன்.

## 29

**அ**திகாலையிலேயே ப்ரீத்திக்கு உறக்கம் கலைந்துவிட, உறங்கும் ரஞ்சனை சில நொடிகள் பார்த்துவிட்டு, பால்கனியில் சென்று அமர்ந்தாள்.

சூரியனின் வரவின்றி சோம்பலாகக் கிடந்தது பூமி. அவ்வளவு நேரம் குளிரூட்டப் பட்ட அறையில் இருந்துவிட்டு வெளியில் வந்ததால், வெம்மையின் தாக்கம் அதிகமாக இருந்தது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

பெருகி வரும் மக்கள் தொகையில், அடுக்குமாடிக் கட்டிடங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அதிகாலை நேரப் பனியை உணர்வதெல்லாம் இயலாத விஷயமாகப் போய்விட்டது.

அசையாமல் இருந்த மரங்களையும், கீழேயிருந்த செடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவள், இனிய அதிர்ச்சியுடன் இமைக்காமல் கீழே இருந்த மரபெஞ்சைப் பார்த்தாள்.

ரஞ்சனின் தாயும், தந்தையும் அருகருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். யசோதையின் கைகளைத் தன் கைகளுக்குள் வைத்து அவர் எதையோ சொல்லிக் கொண்டிருக்க, நீர்த்திரையிட்ட விழிகளுடன் யசோதா அவரையே பார்த்துக் கொண்டிருப்பது விளக்கொளியில் தெளிவாகத் தெரிந்தது.

இருவரும் மனம் விட்டுப் பேசுவதை உணர்ந்து கொண்டாள். ஐம்பது வயதுகளிலாவது ஒரு வரையொருவர் புரிந்து கொண்டார்களே என்று மனதிற்குள் இதம் வந்தது.

இளமையும், அழகும் வற்றிப் போன பின் முதுமையிலும் அன்பு குறையாமல் இருப்பதுதான் உண்மையான காதல்.

ரஞ்சனின் தாயார் தனிமையில் வாடுவதைப் பலமுறை கவனித்து, அவரைக் கலகலப்பாக்க முயன்றிருக்கிறாள்.

முதுமையில் தனிமையில் வாழ்வது பெரும் கொடுமை. உடலிலும், மனதிலும் வலுக் குறைகையில் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளவாவது யாராவது வேண்டும்.

ரஞ்சனிடம் எதாவது மாற்றம் வரும் என்று எதிர்பார்த்துப் பிரதாப்பின் வீட்டிற்குச் சென்றால், அவன் தந்தையிடம் மாற்றம் வந்திருக்கிறது.

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும், பிரிந்து நிற்கும் பெற்றோர்களைப் பார்த்து ரஞ்சனும் வருத்தப் படுகிறான் என்பது அவளுக்குத் தெரியும்.

இதை அவனிடம் தெரிவிக்க வேண்டும் என வேகமாக அறைக்குள் சென்றவள், "ரஞ்சன்! ரஞ்சன்!" என்று அவனை உலுக்கி எழுப்பினாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

திடுக்கிட்டு விழித்தவனிடம், “ரஞ்சன்! அம்மா… அப்பா…” என்று தடுமாற்றத்துடனும், மகிழ்ச்சியுடனும் சொல்லவும், “ஹேய்! ரிலாக்ஸ்… ரிலாக்ஸ் ப்ரீத்தி… சந்தோசமா இருக்கேன்னு தெரியுது… பொறுமையா என்ன விஷயம்னு சொல்லு…” என்றான்.

“அம்மாவும் அப்பாவும் கார்டன்ல பேசிட்டிருக்காங்க… அப்பா பேசறதே இல்லைன்னு அம்மா கவலையா இருந்தாங்களே, இப்ப சந்தோஷமாப் பேசிட்டிருக்காங்க….”

“ஹேய்… நிஜமா!” என்று ஆச்சர்யத்துடன் கேட்டவன், அவளைக் கைப்பிடியில் அழைத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான்.

தந்தை தாயின் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொள்வதை சில நொடிகள் ஆனந்தத்தோடு பார்த்தவன், அவளை இழுத்துத் தோளோடு அணைத்துக் கொண்டு அறைக்குள் திரும்பினான்.

“இது வரைக்கும் ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசிப் பார்த்ததே இல்லை… என்னோட சின்ன வயசில டாடிகிட்ட பேசவே பயப்படுவாங்க… எதாவது வேணும்னா நான் தான் கேட்பேன்… மஹி வளர்ந்ததுக்கப்புறம் கொஞ்சமா மாறினாங்க… ரெண்டு பேரோட இயல்பே அதுதான்னு நினைச்சிட்டிருந்தேன்… பட் டாடி என்னோட ஃப்ரெண்ட்லியாப் பழகுவார்… நான் காலேஜ் ஜாயின் பண்ணினதும் எங்க ரெண்டு பேருக்கும் ஜெனரேசன் கேப் விழுந்திருச்சு…” என்று தன்னுடைய சிறுவயதின் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டான்.

இந்தியா வந்தபிறகு அவர் அவ்வப்போது அங்கே இருக்க வேண்டிய சூழ்நிலையில் தனிமை அவரைப் பெரிதும் பாதித்திருப்பதைச் சொன்னான்.

அதுவும் இரண்டு மாதங்களாக, சில நாட்கள் தவிர, முழுக்க முழுக்கக் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கிறார். பிரிவொன்றுதான் அன்பின் வலிமையை உணர்த்தக் கூடியது.

“இப்பல்லாம் எனக்கே எங்காவது வெளில போயிட்டு வந்தா வீட்ல யாரும் இல்லைன்னா கஷ்டமா இருக்கு… அதுவும் டாடியோட எல்லா வொர்க்கையும் மாம் பார்த்துப் பார்த்து செய்வாங்க… வீட்டைப் பொறுத்த வரைக்கும் அவருக்கு எந்த வொர்க்குமே இருக்காது… இப்ப தனியா இருக்கும் போது அதெல்லாம் யோசிச்சுப் பார்த்திப்பார்…” என்றான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

அவன் நேரத்தைப் பார்ப்பதைக் கண்டு, “ஸாரி… நீங்க சந்தோசப் படுவீங்கன்னு சீக்கிரமே எழுப்பிட்டேன்… இன்னும் கொஞ்ச நேரம் தூங்குங்க…” என்றாள்.

“ம்ஹூம்… சன் ரைஸ் ஆயிடுச்சே… ரெண்டு பேரும் ஒரு வாக் போயிட்டு வரலாம்… நான் ப்ரெஷ் பண்ணிட்டு டென் மினிட்ஸ்ல வரேன்… நீயும் ட்ரெஸ் மாத்திட்டு ரெடியாகு ப்ரீத்தி…” என்று சொல்லிச் சென்றான்.

தயாராகி வந்தவன், அவள் சமையலறையில் இருப்பதைப் பார்த்துவிட்டு, “பால் காய்ச்சியாச்சு போல… தள்ளிக்க… நான் காஃபி போடறேன்…” என்றான்.

அதிசயமாகப் பார்த்தவளிடம், “என்ன இப்படிப் பார்க்கற… அதென்ன பெரிய அதிசயமா… நான் காஃபி சூப்பராப் போடுவேன்… குடிச்சுப் பார்த்துட்டு அப்புறம் சொல்லு…” என்று சரியான விகிதத்தில் கலந்து, “எடுத்துக்கங்க மேடம்…” என்று நீட்டினான்.

ஒரு சில ஆண்களைப் போல, சமைப்பதெல்லாம் பெண்களின் வேலை என்று அவன் பிரித்து வைக்கவில்லை. இரசித்துக் குடித்தவள், “ரொம்ப நல்லாப் போட்டிருக்கீங்க…” என்று பாராட்டினாள்.

“ப்ரீத்தி! உண்மையைச் சொல்லு… நீ போடற காஃபியை விட பெட்டரா இருக்குதானே…” என்று கேலி செய்யவும், “போனாப் போகுதே, கஷ்டப்பட்டு போட்டிருக்கீங்களேன்னு சும்மா சொன்னா, என்னோட காஃபியையே கிண்டல் பண்ணறீங்களா…” என்று பதிலுக்குக் காலை வாரினாள்.

“நீங்க ஜாகிங் தானே போவீங்க…” என்று அவள் தயங்கவும், “வேகமா வாக் பண்ணிக்கலாம்… உன்னால இன்னும் கொஞ்ச நாள் எக்ஸர்சைஸ் எதுவும் பண்ண முடியாது… அதனால வெயிட் அதிகமாயிடப் போகுது…” என்றான்.

“ஓ…” என்றவள், தன்னையே குனிந்து பார்த்துக் கொண்டாள். வெளியிடங்களுக்குச் செல்லும் எந்த வேலையும் இல்லாததால், முழு நேர ஓய்வில் உடல் பருமன் அதிகரித்திருப்பதாகத் தோன்றியது.

“ஹேய் இப்ப உன்னோட ஹைட்டுக்கு வெயிட் சரியா இருக்கு… ஹெல்த் கான்சியஸ் கொஞ்சம் வேணுமே… இனிமேல் டெய்லி வாக்கிங் போகலாம்…”

அவன் சொல்வது சரியென்று தோன்றியதால் சம்மதமாகத் தலையசைத்தாள். கேலி, கிண்டலுடன் துவங்கிய பயணம் அன்றைய நாளைப் புத்துணர்ச்சியாக்கியது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

வீட்டிற்குத் திரும்பியவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றார் யசோதா. அவரது அறைக்கு ப்ரீத்தியை அழைத்துச் சென்றவர், “ப்ரீத்திம்மா! மஹியைப் பிரதாப்புக்கு மேரேஜ் செய்து கொடுக்க சரின்னு சொல்லிட்டார் அப்பா… அவருக்குப் பார்த்ததுமே பிடிச்சிடுச்சாம்… அவருக்கு டென்னிஸ்னா ரொம்பப் பிடிக்குமாம்… அதனாலதான் ரஞ்சனுக்குக்கூடக் கத்துக் கொடுத்தாராம்… அவனோ டைம் பாஸ்காக விளையாடறானேன்னு ஃபீல் பண்ணினாராம்… டென்னிஸ் ப்ளேயர் மருமகனா வரதில ரொம்ப சந்தோசம்னு சொன்னார்…” என்று கூறினார்.

மகிழ்ச்சியுடன் அவர் அருகில் அமர்ந்து கொண்டவள், “நேத்தே சொல்லிருந்தா அங்கேயும் எல்லாரும் சந்தோசப் பட்டிருப்பாங்கம்மா… என்ன சொல்வாரோன்னு கொஞ்சம் பயத்தோடயே இருந்தோம்…” என்றாள்.

கண்கலங்க அவளை யசோதா பார்க்கவும், “அம்மா! என்னாச்சு?” என்று பதறினாள்.

“ஒண்ணுமில்லை ப்ரீத்தி… நேத்தே சொல்லிருப்பாராம்… என்னோட சம்மதத்தையும் கேட்கணும்னு வீட்டுக்கு வந்திருக்கார்… மெடிசன் எடுத்ததால நைட் சீக்கிரமே நான் தூங்கிட்டேன்… நாலு மணிக்குத் தூக்கம் லேசாக் கலைஞ்சு திரும்பிப் படுத்தா இவர் கட்டில் பக்கத்தில சேரைப் போட்டு உட்கார்ந்துட்டே தூங்கிட்டிருந்தார்… பதறிப்போய் எழுந்திருச்சா, என்னோட அசைவில அவரும் முழிச்சிட்டார்… என்னோட பேச வந்தாராம், நான் எழுந்திருப்பேனான்னு உட்கார்ந்து பார்த்திட்டிருந்தவர் அப்படியே தூங்கிட்டாராம்… இதுவரைக்கும் பேசாததெல்லாம் நிறையப் பேசினார் ப்ரீத்தி…” என்று கண்கலங்க, உணர்ச்சி வசப்பட்டுக் கூறத் தொடங்கினார்.

“உங்களுக்கும் இந்த மேரேஜ்ல இஷ்டமான்னு கேட்கவா வெயிட் பண்ணினாராம்மா…” என்று ப்ரீத்தி கேட்க,

“ஆமாம் ப்ரீத்தி, மஹதிகிட்டேயும் பிடிச்சிருக்கான்னு கேட்கணும்னு நினைச்சு நேத்து ஒண்ணும் சொல்லலையாம்… நான் எல்லாத்தையுமே அவர்கிட்டச் சொல்லிட்டேன்… பிரதாப் லவ் பண்றது, மஹதிக்கும் விருப்பம் இருக்கறது எதையுமே மறைக்கலை… நிஜத்தைச் சொல்லி அவரோட பர்மிஷனுக்காகக் காத்திருக்காங்கன்னு சொன்னேன்… மாப்பிள்ளை வீட்டில பேசறேன்னு சொல்லிட்டுப் போனார்…” என்றார்.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

பிரதாப்பின் தாத்தாவிற்கும், பாட்டிக்குமான அன்னியோன்யம், முதுமையிலும் வாழும் காதல் வாழ்வு அவரைப் பெரிதும் பாதித்திருக்கிறது. கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்காத அன்பான குடும்பத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்.

பாலைவனச் சுடுமணலில் தவித்திருக்கும் போது, இளைப்பாறச் சோலை கிடைத்தது போல பிரதாப்பின் வீட்டிற்குச் சென்ற நிகழ்வு அமைந்து விட்டது.

லதாவின் மீது அவருக்கிருந்த காதலைத் தட்டியெழுப்பி, பின்னர் யசோதாவைப் பற்றியும் மெல்ல மெல்ல அவர் மனதிற்குள் பதிய வைக்க ராகவன் முயன்றதை அவளும் அறிவாள். அவரது முயற்சி பலித்திருக்கிறது.

“பிரதாப்போட ரிலேடிவ்ஸ் நிறையப் பேர் திருச்சில இருக்காங்கம்மா… எல்லாரையும் கூப்பிட்டு மேரேஜ் பண்ணணும்னு அவங்க வீட்டில ஆசைப் படுவாங்க… அப்பா இதுக்கு ஒத்துப்பாரா…” என்று தயக்கத்துடன் கேட்க,

“அதெல்லாம் ஒத்துப்பார் ப்ரீத்தி…” என்று உறுதியுடன் சொன்னார். தொடர்ந்து,

“நேத்து ராகவண்ணன் ஒண்ணு சொன்னாரே ஞாபகம் இருக்கா… எத்தனையோ கஷ்டத்தில வாழ்ந்திருந்தாலும், விடாமுயற்சியாலையும், உழைப்பினாலையும் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கீங்க, உங்க ஊர்ல இருக்கறவங்க உங்களை நினைச்சு ரொம்பப் பெருமைப் படறாங்க… அந்த ஊர் இளைஞர்களுக்கு நீங்க வழிகாட்டிமாதிரின்னு எல்லாம் பேசினாரே, அது இவரை ரொம்ப பாதிச்சிருக்கு…

சாப்பாட்டுக்கு வழியில்லாமக் கஷ்டப்பட்ட காலத்தில இவருக்கு யாரும் உதவலை… படிக்கறேன்னு சொன்னப்ப வீட்டில எல்லாரும் சிரிச்சிருக்காங்க… ஒரு பைசாக் கூட வீட்டில வாங்காம ஃப்ரீ ஹாஸ்டல்ல சேர்ந்து எப்படியோ படிச்சிருக்கார்… ஸ்கூல் படிக்கும் போது இருந்த ஒரே ஒரு யுனிஃபார்ம்ல தையல் போட்டுப் போட்டு அது முழுக்கத் தையலா இருக்குமாம்… கோல்ட் மெடல் வாங்கியும் யாரும் பாராட்டலையாம்… வேலை கிடைக்கலைன்னு எல்லாரும் கேலி பண்ணிருக்காங்க… கஷ்டப்பட்டுப் படிச்ச படிப்பைத் தூக்கிப் போட்டுட்டு ஈரத்துணியை வயத்தில கட்டிட்டு குடும்பத்துக்காக சின்ன நிலத்தில விவசாயம் பார்த்தாராம்…

பணம் இருந்தாதான் உலகமே மதிக்கும்னு முடிவு பண்ணிருக்கார்… அப்பத்தான் லதாவோட அறிமுகம் கிடைச்சு ரெண்டு பேரும் லவ் பண்ணிருக்காங்க…



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

லதாதான் இவர் மனசில நம்பிக்கையை விதைச்சிருக்கா, மேரேஜ்குப் பிடிவாதம் பிடிக்கும் போதுதான் இவங்க லவ் பண்ற விஷயமே எனக்குத் தெரியும்… அதுவரைக்கும் லதாவும் எங்கிட்ட எதுவுமே சொல்லலை… சொத்தையெல்லாம் நாட்டு சேவைக்கு லதாவோட அப்பா செலவு பண்ணினது பிடிக்காம, பணம்தான் வாழ்க்கைன்னு சொல்ல ரெண்டு பேருக்கும் ஆரம்பத்தில இருந்தே பிடிக்காமப் போயிடுச்சு… அப்புறம் நடந்ததுதான் உனக்கே தெரியுமே…” என்று பெருமூச்சோடு நிறுத்தினார்.

“தாத்தாவோட மனசைக் கஷ்டப்படுத்தாம இருந்திருக்காலாம்மா… அதான் எங்களுக்கெல்லாம் சின்னக் குறை… பேரனைக் கண்ணில காட்டாமலேயே இத்தனை வருஷம் இருந்திட்டார்…” என்று வருத்தத்துடன் சொல்கையில்,

“உண்மைதான் ப்ரீத்தி… மாமா மனசை ரொம்ப நோகடிச்சிட்டேன்… லதா போனதுக்கப்புறம் இருந்த சொந்தம் நாங்கதான்… வயசான காலத்தில யாரோட துணையும் இல்லாம வாழற வாழ்க்கை நரகம்னு புரிஞ்சிடுச்சு…” என்று ரஞ்சனின் தந்தை உள்ளே நுழையவும், ஆச்சர்யத்தோடு எழுந்து நின்றாள்.

“உட்காரும்மா…” என்று சொன்னவர், “என்னைப் பொறுத்த வரைக்கும் என்னோட ஊரைப் பத்தி நினைச்சாலே பசி, பட்டிணிதான் ஞாபகத்துக்கு வரும்… எந்த சொந்த பந்தமும் உதவலைன்னாலும் பரவாயில்லை என்னோட படிப்பையும் என்னையும் அவமதிச்சாங்க… ஊரைப் பத்தி நினைச்சாலே அவங்க கேவலமாப் பேசினதை நினைச்சுப்பேன்… என்னோட அவமானச் சின்னம் இங்கே இருக்குன்னு தப்பாவே நினைச்சிருக்கேன்… சொந்தக்காரங்க பேசினா இப்பப் பணம் வந்திடுச்சுன்னு பேசறாங்கன்னு நினைச்சுப்பேன்… ஏன் யசோதாவைக் கூட சந்தேகத்தோடதான் பார்த்தேன்… கொஞ்சம் இடம் கொடுத்தா ரஞ்சனைக் கொடுமைப் படுத்துவான்னு நினைச்சேன்… லதாவையும் என்னால மறக்க முடியலை… நாளாக நாளாக இவளைப் புரிஞ்சுட்டாலும் என்னோட ஈகோ இறங்கி வந்து மனசைத் திறக்க இடம் தரலை… மோசமான கணவனா நடந்திருக்கேன்…” என்று வருத்தத்துடன் சொன்னார்.

“அதெல்லாம் இல்லைங்க… இதையே எத்தனை முறை சொல்வீங்க… இனிமேல் இதைப்பத்திப் பேசக்கூடாதுன்னு சொன்னேனே…” என்று பதற்றத்துடன் யசோதா பதிலளித்தார்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இருவரும் பேசிக்கொள்ளட்டும் என்று மௌனமாக ப்ரீத்தி வெளியேறவும், "ஒன் மினிட் ப்ரீத்தி…" என்று தடுத்து, "இன்னைக்கு மாப்பிள்ளை வீட்ல இருந்து முறைப்படி பேசறதுக்காக வராங்க… அதுக்கு வேணுங்கற ஏற்பாட்டைப் பண்ணணும்… நீயும் ரஞ்சனும் சேர்ந்து என்ன செய்யணும்னு அவங்க வீட்ல கலந்து பேசி ஏற்பாடு பண்ணுங்க…" என்றார்.

இது போலெல்லாம் தன்னிடம் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை ப்ரீத்தி. அப்படியென்றால் தங்கள் திருமணத்தையும் முழுமனதுடன் ஒப்புக் கொண்டுவிட்டார் என்றுதானே அர்த்தம் என்று நினைத்தவளுக்கு மனதிற்குள் நிம்மதி பரவியது.

'சரி'யென்று அவரிடம் சொல்லிவிட்டு, ரஞ்சனைத் தேடிச் சென்று அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

## 30

"**மா**மா! என்கேஜ்மெண்ட்டுக்கு மஹதிக்கு ஸேரி, ஜ்வெல்ஸ் எல்லாம் வாங்கணும்… அவளுக்குப் பிடிச்ச மாதிரி வாங்கித்தரச் சொல்லி அம்மா சொன்னாங்க… நான் அழைச்சிட்டுப் போகலாமா…" என்று அனுமதி கேட்டான் பிரதாப்.

அவனுக்காகச் சிற்றுண்டி எடுத்துக் கொண்டு வந்த ப்ரீத்திக்கு சிரிப்பு வந்தது. கண்கள் பளபளக்க ரஞ்சனைப் பார்த்தால், அவனும் அதே சிரிப்போடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்த நாள்முதலாய், தினம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி மஹதியைச் சந்திக்க வந்து விடுகிறான். அவனால் வர முடியாத நாட்களில், மஹதி அவனைச் சந்திக்க வெளியே சென்று விடுகிறாள்.

எப்படியோ இருவரும் சந்திப்பதற்கு ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

"தாராளமாக் கூட்டிட்டுப் போங்க… அதான் மேரேஜ் டேட் பிக்ஸ் பண்ணி, ரிஷப்சனுக்கு ஹால் புக் பண்ணியாச்சே…" என்று பதில் சொல்லிவிட்டுக் கிளம்பினார் குமரன்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

அவருக்கு விடை கொடுத்ததும், “என்னடா ரெண்டு பேரும் கிண்டலாச் சிரிக்கறீங்க…” என்று ரஞ்சனிடம் கேட்டான்.

அதற்கு பதிலளித்த ப்ரீத்தி, “சேச்சே… சிரிச்சோமா… நாங்களா… எங்களைப் பார்க்கறதுக்கெல்லாம் உங்களுக்கு டைம் இருக்கா பாஸ்… மாமாவைப் பார்த்ததும் பர்மிஷன் கேட்கற மாதிரி பாவ்லா எல்லாம் எதுக்கு… ஸேரி வாங்க இன்னைக்குப் போயிட்டு ஜ்வெல்ஸ் நாளைக்கு வாங்கணும்னு சொல்லிருந்தா, நாளைக்கு எந்த ரீசனும் தேட வேண்டியிருக்காதே…” என்று கேலியாகக் கேட்டாள்.

“இன்னைக்கு ட்ரெஸ் மட்டும் தான் ப்ளான்… நாளைக்குத்தான் ஜ்வல்ஸ் வாங்கணும்… ட்ரெஸ் செலக்ட் பண்ணவே டைம் ஆயிடுச்சுன்னு சொல்லிடலாம்னு நினைச்சேன்…” என்று அசராமல் பதில் சொல்ல அனைவரும் நகைத்தனர்.

“நீங்க ரெண்டு பேர் மட்டும் தனியாப் போக வேண்டாம்…. ப்ரீத்தியையும், ரஞ்சனையும் கூடக் கூட்டிட்டுப் போங்க…” என்று யசோதா சொல்லவும், “அவங்க ரெண்டு பேரும் தனியாப் போயிட்டு வரட்டும்மா… நாங்க எதுக்கு?” என்று சங்கடத்துடன் வினவினாள் ப்ரீத்தி.

“உன்னோட கை இப்ப சரியாயிடுச்சு ப்ரீத்தி… ஸேஃப்டிக்காக இன்னும் டென் டேஸ் இந்தக் கட்டைப் போட்டிருக்காங்க… இதை ரிமூவ் பண்ணினதும், உங்க ரெண்டு பேருக்கும் ரிஷப்சன் வைக்கலாம்னு நானும் அப்பாவும் முடிவு பண்ணிருக்கோம்… அதனால உனக்குத் தேவையானதைப் பர்சேஸ் பண்ணணும்… உங்களுக்குப் பிடிச்சதையெல்லாம் நீங்களே செலக்ட் பண்ணிக்கங்க… அதான் சேர்ந்து போயிட்டு வாங்கன்னு சொல்றேன்…”

இருவருமே, “இவ்ளோ நாள் கழிச்சு எதுக்கும்மா ரிஷப்சன்… மஹி மேரேஜப்பப் பார்த்துக்கட்டுமே…” என்று ஒரு மனதாகச் சொன்னார்கள்.

“கட்டாயம் பங்ஷன் வைக்கணும் ரஞ்சன்… உன்னோட ஃப்ரெண்ட் குழந்தை பொறந்ததுக்கப்புறம் மேரேஜ் இன்விடேசன் கொடுத்துட்டுப் போறான்… உங்களுக்கு என்னடா வந்துச்சு… ப்ரீத்திக்கு உடம்பு சரியில்லாததால இவ்ளோ நாள் வைக்க முடியலைன்னு உண்மையை சொல்லிட்டாப் போச்சு…” என்றார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் திருமணப் பத்திரிக்கை எடுத்த வந்த ரஞ்சனின் தோழனை நினைத்துப் பார்த்தாள் ப்ரீத்தி.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

"மனிதன் ரசனைகளாலும் குணத்தாலும் வேறுபட்டவன்… யாரையும் ஒரே விதத்தில் எடைபோட முடியாது… திருமணம் செய்து கொண்டால், ரசனை ஒத்துவராத பட்சத்தில் விட்டுக்கொடுத்துப் போக முடியாது… சமுதாயத்திற்கோ, ஊர்கூடிச் செய்த திருமணத்திற்கோ, குழந்தகளுக்கோ பொறுத்துப் பொறுத்துப் போய் சண்டை சச்சரவுகளோடு வாழ வேண்டும்… சட்டப்படியான விவாகரத்திற்கும் பலவருடங்கள் காத்திருக்க வேண்டும்... இந்தப் பிரச்சனைகளுக்கு லிவிங் டுகெதர்தான் சிறந்தது…" என்று சொல்லி அந்த நண்பன் மூன்று வருடங்களாகத் திருமணமின்றி இணைந்து வாழ்வதை, முதலிலேயே ரஞ்சன் சொல்லியிருந்தான்.

இப்போது அவனும் மனம் மாறியிருக்கிறான். அவனுடைய பெற்றோர்கள் திருமணமின்றி ஒத்துக் கொள்ள முடியாது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டனர். குழந்தை உருவானதும், உடலிலும் மனதிலும் ஏற்பட்ட மாற்றத்திலும், உறவினர்களின் தவறான பேச்சாலும், மனைவி மனச் சிதைவிற்கு ஆளானதாகவும், அவளுக்காகத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று அவன் காரணம் சொன்னபோது அவளுக்குப் பெருமூச்சு வந்தது.

நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி யாரும் நினைப்பதில்லை. நமது சமுதாயத்தில் ஆண்களை யாரும் குற்றம் சுமத்துவதில்லை. இது போல வாழும் பெண்களுக்குத்தான் பல விதமான பெயர்களைச் சூட்டி அவமானப் படுத்துகிறோம்.

எல்லாக் கருத்துக்களும் இப்படித்தான், நாளாக நாளாக நீர்த்துப் போகின்றன. வயதும் அனுபவமும் அதிகரிக்கும் போது கொள்கைகளும், கோட்பாடுகளும் மாறிப் போகின்றன.

'ரஞ்சனும் மாறி விடுவான், அதற்காகக் காத்திருக்க வேண்டும்…' என்று சிந்தித்துக் கொண்டிருந்தவளிடம், "அண்ணி சீக்கிரம் கிளம்புங்க… யோசிச்சிட்டே இருக்கீங்க… இதெல்லாம் லைஃப்ல மறக்க முடியாத ஸ்வீட் மெமரீஸ் அண்ணி… கொஞ்ச வருஷம் கழிச்சு ஃபீல் பண்ணுவீங்க… உங்க மேரேஜ்ல கூட நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கற போட்டோஸ் அதிகமா இல்லை… விதவிதமா எடுத்து வச்சு வயசானதுக்கப்புறம் எடுத்துப் பாருங்க…" என்றாள் மஹதி.

உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு கிளம்பியவள், கடைக்குள் சென்றதும் எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பத்துடன் நின்றாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“மஹி! நீங்க ரெண்டு பேரும் உங்க செலக்ஷனை முடிங்க… நாங்க ரொம்ப கிரேண்டான டிஸைனர் ஸேரிஸ் பார்த்துட்டு வர்றோம்…” என்று ரஞ்சன் கூற,

“அண்ணா! மம்மி, அண்ணிக்கும் நிறைய எடுக்கச் சொல்லிருக்காங்க… எந்த மாதிரி எடுக்கணும்னும் சொல்லி அனுப்பினாங்க…” என்று சொன்னாள்.

“உங்க அண்ணிக்கு இந்தப் பட்டு ஸேரீச விட டிசைனர் சேரீஸ் ரொம்பப் பிடிக்கும்… மேரேஜ்னா ட்ரடிஷனலாப் பார்க்கலாம்… ரிஷப்சனுக்கு இது மாதிரி இருந்தாதான் நல்லாருக்கும்…” என்று சொல்லிவிட்டு, ப்ரீத்தியை அழைத்துச் சென்றான்.

‘பட்டு சேலைகள் பிடிக்காது என்று எப்போது சொன்னோம்?’ என்று யோசித்தாள் ப்ரீத்தி. திருமணமான புதிதில் சொன்னது நினைவிற்கு வந்தது.

கலைநயம் மிக்க புடவைகள், பார்ப்பவர்களின் கண்களைக் கவரும். ஆனால், அவளுக்கு மட்டும் அந்தப் புடவைகளுக்குப் பின்னால் உயிரிழந்த எத்தனையோ பட்டுப் பூச்சிகள் நினைவிற்கு வரும்.

பள்ளி நாட்களில் பட்டுப் பூச்சி வளர்ப்பதை ஆர்வத்தோடு பார்த்திருக்கிறாள். குக்கூன் எனப்படும் பருவம் வந்ததும், கொதிக்கும் நீரில் அந்தப் பூச்சிகள் போடப்பட்டு, துடிதுடிப்பது மனதில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

அத்தனை உயிர்களின் துடிப்பும், உயிர்ப்போராட்டமும் நின்ற பின், அதைச் சுற்றியுள்ள கூட்டைப் பிரித்து புழுக்களைத் தூக்கியெறிவதை வேதனையுடன் நினைத்துக் கொள்வாள்.

பேச்சுவாக்கில் “பட்டு ஸேரீஸ் பார்த்தாலே பட்டுப் பூச்சியைக் கொன்னு எடுக்கறோம்னு தோணும்…” என்று அவனிடம் ஒரு முறை சொல்லியிருக்கிறாள்.

“ப்ரீத்தி! நம்ம யூஸ் பண்ற திங்க்ஸ்ல எதுக்கு உயிர் இல்லைன்னு நினைக்கற… செடி கொடிகள்ல இருந்து எல்லாத்துக்குமே உயிர் இருக்கு… மனுஷங்கதான் செல்ஃபிஷ்… எல்லா உயிர்கள் கிட்டிருந்தும் பலனை சுரண்டிடறோம்… தேனிக்களோட உழைப்பில இருந்து தேன், மரங்களோட பூ, பழம்… நாம குடிக்கற மில்க் எதுவுமே நமக்குன்னு படைக்கப்பட்டது இல்லை…”

“காய், பழம் எல்லாம் பறிக்கலைன்னாலும் அதுவா உதிர்ந்து போயிடும்… இது அப்படியில்லையே, ரத்தமும் சதையும் கொண்ட உயிர்…”



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

"எல்லாத்துக்குமே ஒவ்வொரு விதமான வாழ்க்கைப் போராட்டம்… அடுத்த உயிர்களைக் கொன்னு சாப்பிடறது புலியோட நேச்சர்… அதுக்காகப் படைக்கப்பட்ட சாப்பாட்டை அது சாப்பிடுது... இப்படியெல்லாம் பார்த்திட்டிருந்தா வாழவே முடியாது… இயற்கையோட படைப்பு யாருக்கு என்னன்னு நம்மால டிஸைட் பண்ணிட முடியாது…" என்று பதிலலித்திருக்கிறான்.

அன்று, அவன் சொல்வதை அரை மனதாக ஒத்துக் கொண்டிருக்கிறாள். தன் மனதில் சிறு உறுத்தல் இருப்பதை உணர்ந்து, தனக்காகச் செய்கிறான் என்றதும் மனம் நெகிழ்ந்தது.

மிகுந்த உற்சாகத்துடன் அவன் தேர்ந்தெடுப்பதை வேடிக்கை பார்த்தவாறு நின்றாள்.

"இப்படி வேடிக்கை பார்க்கவா ஷாப்பிங் வந்தோம் ப்ரீத்தி?"

"ஷாப்பிங் விஷயத்தில நான் தேறாத கேஸ்… இது மாதிரி வந்தெல்லாம் எனக்குப் பழக்கமே இல்லை… நீங்களே செலெக்ட் பண்ணுங்க…" என்று சொல்லி முடித்தாள்.

விரைவாகவும், நேர்த்தியாகவும் தேர்ந்தெடுப்பதை ஆச்சர்யத்துடன் கவனித்தாள். அவளுக்குத் தேவையானவற்றை வாங்கியபின், மஹதிக்குத் தேர்ந்தெடுப்பதில் உதவி செய்தனர்.

"லேடீஸ்கு மட்டும் ட்ரெஸ் விஷயத்தில, ஜ்வெல்ஸ் விஷயத்தில சேடிஸ்பை ஆகறதே இல்லை ரஞ்சன்… கடையவே புரட்டிப் போட்டுட்டா… இதில இருக்கிற இண்ட்ரெஸ்ட் வேற எதிலையும் இல்லை…" என்று பிரதாப் சொல்லவும், "இது மாதிரி எப்படிச் சொல்லலாம்?" என்று சண்டையில் இறங்கினாள் மஹதி.

இருவருக்குமான மோதலை சுவாரஸ்யத்துடன் கவனித்தான் ரஞ்சன். சரிக்குச் சரியாகப் பேசிய மஹதி, "அப்புறமா உங்களை கவனிச்சுக்கறேன்…" என்று ஒற்றை விரலை நீட்டி மிரட்டினாள்.

விரல்களைப் பற்றியவன், "இப்பக் கூட கவனிக்கலாம் மதி… தர வேண்டியது அப்படியே நிக்குது… என்ன சொல்றடா…" என்று காதருகில் கிசுகிசுத்தான்.

நிமிடத்தில் முகம் சிவந்தவள், அவன் தோள் மீது உரிமையாகச் சாய்ந்து கொண்டாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இருவருக்குமான நெருக்கத்தைப் பார்த்த ப்ரீத்தி, “இதுக்குத்தான் அவங்க ரெண்டு பேரும் தனியாப் போகட்டும்னு சொன்னேன்… நாம டிஸ்டர்ப் பண்றோம்…” என்று கிசுகிசுப்பாகச் சொல்ல, வாய்விட்டுச் சிரித்தவன், “அவங்க வேற வேர்ல்ட்ல இருக்காங்க… டிஸ்டர்ப்பா ஒண்ணும் ஃபீல் பண்ணலை… நாம கார்ல வெயிட் பண்ணலாம்…” என்றான்.

மதிய உணவின் போது, தோளோடு தோள் உரசுவதும், விரல்களை அவ்வப்போது பின்னிக் கொள்வதும், விழியால் ஒருவரையொருவர் பருகுவதுமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தனர்.

பிரதாப் எப்போதும் மஹதியை உடன் வைத்துக் கொள்ள நினைப்பதும், அவளை விட்டுப் பிரிய மனமின்றி நேரத்தைக் கடத்துவதும், அவளுக்கு ஏதாவது என்றால் கண்களில் தெரியும் பதற்றத்தையும் பார்க்க, ரஞ்சனின் மனதிற்குள் ஏதேதோ கேள்விகள் எழுந்தன.

இதே உணர்வுகள் ப்ரீத்தியிடம் அவனுக்கு ஏற்படுகின்றன. அவன் வாழ்வில் வந்த வேறு எந்தப் பெண்ணிடமும், இது போன்ற உணர்வுகள் தோன்றியதில்லை.

முதல் பார்வையிலேயே அவளை விட்டுப் பிரிய முடியவில்லை அவனால். ‘அவளைப் பார்ப்பதில் ஒரு சந்தோசம், அவளோடு பேசுவதில் ஒரு சந்தோசம் என்று தொடங்கி, எப்போதும் அவளுடன் இருக்க வேண்டும் என்று மனம் நினைப்பது எதனால்?’ என்று புரிந்தும் புரியாமலுமாய் அமைதியாக அமர்ந்திருந்தான்.

‘பிரதாப்பின் உணர்வுகள் மஹதியைக் காதலிப்பதை உணர்த்தினால், தானும் ப்ரீத்தியைக் காதலிக்கிறோமா?’ என்ற கேள்வி எழுந்தது.

அவனைப் பொறுத்தவரை காதல், காமம் இரண்டுமே ஒன்றுதான். இதுவரை வேறுபடுத்திப் பார்த்ததில்லை அவன். ‘உரிய வயது வந்ததும் ஹார்மோன்கள் செய்யும் கூத்து…’ என்றே நினைத்திருந்தான்.

எதிர்பாலின ஈர்ப்பிற்கு ஒரு சிலர் வர்ணம் பூசி கலாச்சாரம் என்று மறைப்பதாகவும், மனதிற்குள் ஓடும் எண்ணங்களை வெளிப்படுத்தாமல் போலித்தனமான வாழ்க்கை வாழ்வதாகவும் எண்ணியிருந்தான்.

காதலை லாஜிக் அண்ட் ரீசனிங் முறையிலேயே அணுகியவனுக்கு, எல்லாவற்றையும் தர்க்க ரீதியிலேயே பார்ப்பது சரியல்ல என்பது புரிந்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“ரஞ்சன்! சாப்பிடாம என்ன பண்றீங்க…” என்று ப்ரீத்தி கேட்டதும், சிந்தனை கலைந்து மௌனமாக உணவுண்டான்.

பெண்கள் இருவரும் பேசிக்கொண்டே நடக்கையில் “என்னடா அமைதியா வர்ற… என்ன யோசிக்கற?” என்று பிரதாப் கேட்க, “காதலுக்கும், காமத்துக்கும் என்னடா வித்தியாசம்… மனோதத்துவத்தில ரெண்டும் ஒண்ணுதான்னு சொல்றாங்க… உனக்கு என்ன தோணுது…” என்று கேட்டான்.

ஒரு நொடி திகைத்துக் கூர்மையாகப் பார்த்தவன், “வெஸ்டர்ன் தாட்ஸ்சுக்கும் நம்ம தாட்ஸ்சுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு… மனதோட உணர்வுகளை மனோதத்துவத்தாலையும் விளக்க முடியாது… வெறும் பிஸிகல் அட்ராக்ஷனை மட்டும் பார்க்கறது காமம்… அது யார்கிட்ட வேணும்னாலும் வரலாம்… இதையெல்லாம் தாண்டிய உணர்வுகளைப் புரிஞ்சுக்கறது காதல்… அது யாராவது ஒருத்தர் கிட்ட மட்டும்தான் வரும்… ரெண்டுமே வாழ்க்கையோட பார்ட்தான்… காதல் இல்லாம காமம் மட்டும் இருந்தா, விலங்குக்கும் மனுஷனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை… விலங்குகள் மாதிரி வாழறதுக்கு பண்பட்ட மனுஷன் தேவையில்லை… எல்லாத்தையுமே சயிண்டிஃபிக்கா அப்ரோச் பண்ணினா வாழ்க்கையோட அழகு கெட்டுப் போகும்… உன்னோட மனசைக் கேளு, அதுவே சொல்லும்…” என்றான்.

‘இன்னமும் தெளிவு வேண்டும்…’ என்று நினைத்தவன், ‘தெளிவு கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டியது…’ என்று முடிவெடுத்தான்.

## 31

**எ**வ்வளவு புரண்டு படுத்தாலும், ப்ரீத்திக்கு உறக்கம் வருவதாக இல்லை. இமைகள் நான்கும் சண்டையிட்டுக் கொண்டு பிரிந்தே கிடந்தன. கடிகார முட்கள் பதினொன்றைத் தொட்டுவிட்டதைப் பார்த்து சலிப்புடன் எழுந்து அமர்ந்தாள்.

‘என்னவாயிற்று எனக்கு? ஏன் இந்த சலிப்பு? படுத்ததுமே உறங்கிப் பழகியபின் ஏன் இந்த மாற்றம்?’ என்று எரிச்சலோடு நினைத்தாள்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இதற்கும், கை முழுமையாகக் குணமடைந்து பழைய நிலைக்குத் திரும்பியிருந்ததால், எப்போதும் போல அலுவலகம் செல்வதும், மாலையில் வீடுதிரும்புவதுமாக வாழ்க்கை வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், 'எந்த வேலையிலும் முழுகவனத்தோடு ஈடுபட முடியாத திணறல் எதனால்?' மனதின் நினைவுகள் கட்டுக்கடங்காமல் எங்கெங்கோ பறந்தன. உள்ளம் தவிக்கும் தவிப்பின் காரணம் புரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தாள்.

ரஞ்சனுக்கும், தாத்தாவிற்கும் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் பாசப்பிணைப்பு, ஆசிரமக் குழந்தைகளின் நல்வாழ்க்கைக்கான வழி என்று அவள் ஆசைப்பட்டது எல்லாமே நடந்துவிட்டது.

அதற்கும் மேலேயே ரஞ்சனின் தாயாரின் பெயரில் மருத்துவமனை கட்டுவதற்கு அப்பா முனைப்புடன் இருக்கிறார்.

'அதை நினைத்து சந்தோசப்படத்தானே வேண்டும்? ஆனால், இந்த இனம் புரியாத தவிப்பு எதனால்? தான் எதிர்பார்ப்பது என்ன?'

'இதெல்லாம் சில நாட்களாகத் தானே? தெளிந்த நீரோடை போல ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கையில் இந்தச் சலனம் எதனால்?'

இது போன்ற எந்தக் கேள்விக்கும் விடை தெரியாததால், இமைகளை உறக்கம் தழுவுவதாயில்லை.

மூடியிருந்த அறைக்கதவின் வழியாக வந்த வெளிச்சப் புள்ளிகள், ரஞ்சனும் உறங்கவில்லை என்பதை உணர்த்தின.

சில நாட்களாகவே இப்படித்தான். எப்போது உறங்குகிறான் எப்போது விழித்திருக்கிறான் என்றே தெரிவதில்லை. தந்தையும் இந்தியா திரும்பிய பிறகு அங்குள்ள வேலைகள் பாதிக்காதவாறு, இரவு முழுவதும் இங்கிருந்தே அலுவல்களைக் கவனிக்கிறான்.

அவளுடைய தூக்கம் பாதிக்கப் படுவதைக் கண்டு, முன்பிருந்த அறைக்கே திருப்பி அனுப்பிவிட்டான். ஏறக்குறைய இரண்டு மாதங்களுங்களாக ஒரே அறையில் இருந்துவிட்டு, இப்போது இருக்கும் தனிமை அவளைப் பெரிதும் பாதித்தது.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

காலையில் அவள் விழித்தெழும் நேரங்களில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான். பெருமூச்சுடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு அலுவலகத்திற்குக் கிளம்புவாள்.

மாலை நேரம் திரும்புகையில், குடும்பத்தினருடன் சேர்ந்து அரட்டை, பின்னர் பிரதாப்புடன் இணைந்து டென்னிஸ் பயிற்சி, இரவில் அலுவலக வேலைகள் என்று அவனது நேரத்தை மாற்றி அமைத்துக் கொண்டான்.

அவனுடைய விளையாட்டுப் பேச்சுக்களோ, கிண்டல், கேலிகளோ எதுவுமே இல்லை.

பெருமூச்சுடன் எழுந்தவள், பால்கனியின் கதவைத் திறந்து வெளியில் சென்று அமர்ந்தாள். அவர்கள் இருவருக்கும் மிகவும் பிடித்த இடம் அது. நேரம் போவது தெரியாமல் அமர்ந்திருந்த நினைவுகள் அலையாய்ப் புரட்டிப் போட்டன.

இப்போது, ‘இந்த அறைக்கதவைத் திறந்து அவனோடு சிறிது நேரமாவது பேச முடிந்தால் மனதின் தவிப்பு அடங்கிவிடுமா?’ என்று உள்ளம் கேட்ட கேள்வியில் விதிர்விதிர்த்துப் போனாள்.

அப்படியென்றால், ‘தான் எதிர்பார்ப்பது இது தானா? தனக்குள் இருக்கும் தவிப்பிற்குக் காரணம் இது தானா? தங்கள் இருவருக்குமான தனிமை கிடைக்காததுதான் தன்னை பாதிக்கிறதா?’ என்று நினைத்தவளுக்கு மனம் சிறகடித்துப் பறந்தது.

அத்தனை கேள்விகளுக்குமான ஒரே பதில் ‘சித்ரஞ்சன்’ என்பதை உணர்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

‘எப்போது, எப்படி நிகழ்ந்தது இந்த மாற்றம்?’ என்று புரியாத குழப்ப மேகங்கள் அவளைச் சூழ்ந்தன. என்றாலும், ‘கணவன் தன் மனதிற்குள் நுழைந்து விட்டான்’ என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டாள்.

மனதிற்குள் வந்து சிரித்தவனைப் பார்த்ததும், உடலில் ஒரு வித பரவசம் வந்தது.

‘இது போன்ற தவிப்பும், ஏக்கமும், தடுமாற்றமுமான உணர்வுகள் காதலென்றால் தானும் கணவனைக் காதலிக்கிறோமா?’ என்று நினைத்தவளுக்கு, தன் மனதின் கண்ணாமூச்சி ஆட்டம் முற்றுப் பெற்றது நிம்மதியைத் தந்தது.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

உடல்நிலை சரியில்லாத போது அவன் அக்கறையில் நெகிழ்ந்ததும், தொடுகையில் சிலிர்த்ததும், அருகாமையில் குளிர்ந்ததிலிருந்தும் காதல் தொடங்கிவிட்டதா?

தன்னைப் பொறுத்தவரை எல்லாம் சரியாகிவிட்டது. அவனை ஏற்றுக் கொள்வதில் எந்தத் தயக்கமும் இல்லை.

ஆனால், சித்ரஞ்சன்…

அவன் மனதில் இருப்பது அவளுக்கும் தெளிவாகத் தெரியுமே. பார்த்த முதல் நாளிலிருந்து தன்னுடைய அழகு அவனை பாதித்திருக்கிறது. இந்த அழகும், இளமையும் தொலைந்து போனால் என்ன செய்வான்? அவனே சொல்லியிருக்கிறானே 'பிடித்திருக்கும் வரை சேர்ந்து வாழ்வது, அலுப்புத் தட்டும் போது பிரிவது' என்று.

அவனைப் பொறுத்தவரை காதலும், காமமும் ஒன்றுதான். 'தன்னுள் பொங்கிப் பிரவகித்து மூழ்கடிக்கும் உணர்வுகள் அவனுக்குள் எழவில்லையே! அப்படித் தோன்றியிருந்தால் தன்னுடன் பேசுவதைத் தவிர்ப்பானா? மீண்டும் வேறு அறையில் சென்று உறங்கச் சொல்லியிருப்பானா?' என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள்.

மனம் தெளிவு பெற்றதால் இதுவரை இருந்த தவிப்புக் குறைந்து, எல்லையற்ற அமைதிக்கு ஆட்பட்டது.

முதல் சந்திப்பிலிருந்து நடந்தவற்றை ஒவ்வொன்றாய் நினைத்து, தன்னுடைய உலகத்தில் நேரம் போவது தெரியாமல் மூழ்கிக் கிடந்தவளை, "ப்ரீத்தி! இன்னமும் தூங்கலையா நீ…" என்ற ரஞ்சனின் குரல் தட்டியெழுப்பியது.

"தூங்கணும்… நாளைக்கு ஆ.்.பிஸ் போக வேண்டியதில்லை… அதனால லேட்டாத் தூங்கலாம்னு உட்கார்ந்துட்டேன்… உங்க வொர்க் முடிஞ்சுதா…" என்று எந்த சலனமும் இல்லாமல் இயல்பாய்க் கேட்க முடிந்தது அவளால்.

ஒரு கணம் முகத்தையே ஊன்றிக் கவனித்தவன், "ம்ஹூம்… ஒரு போன் கால்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்… கொஞ்சம் டென்ஷன்… அதான்…" என்று நிறுத்தி கையிலிருந்த சிகரெட்டைக் காட்டவும், புரிந்து கொண்டவளாய், "நீங்க கண்டினியூ பண்ணுங்க… நான் தூங்கப் போறேன்… குட் நைட்…" என்று கிளம்பினாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

கையைப் பற்றித் தடுத்தவன், நோ ப்ராப்ளம் குடிச்சுத்தான் ஆகணும்னு இல்லை… ஜஸ்ட் டென்ஸ் மினிட் உட்கார்… அப்புறம் தூங்கப் போவயாம்…” என்று அமர வைத்தான்.

“ரொம்ப நாளா இதெல்லாம் யூஸ் பண்ணாம இருந்தீங்க… இப்ப என்ன திடீர்னு மறுபடியும் ஸ்டார்ட் பண்ணிட்டீங்க… ஹெல்த்தை ஸ்பாயில் பண்றதை அவாய்ட் பண்ணலாமே… அதோட சேர்ந்து என்விரான்மெண்ட்டும் ஸ்பாயில் ஆகுது… சுவாசிக்கிற எல்லாருக்குமே பாதிப்புதானே ரஞ்சன்… விட்டடலாமே…”

“அல்மோஸ்ட் விட்டுட்டேன் ப்ரீத்தி… முழுசா விட ட்ரை பண்றேன்…” என்று சொன்னவன், அவள் கையைப் பிடித்துப் பார்த்தான்.

“ஸ்கின் கலர் மட்டும் இன்னும் நார்மலுக்குத் திரும்பலை… பிரதாப்போட தாத்தா வாங்கிக் கொடுத்த ஆயிலை அப்ளை பண்ணிட்டுதானே இருக்க…” என்று கேட்க, “ம்ம்” என்று தலையை மட்டும் அசைத்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு கிடைத்த தனிமையை மிகவும் இரசித்தாள். அவன் பார்க்காத போது, அவன் உருவத்தை உள்ளத்தில் நிறைத்தாள்.

“என்ன ப்ரீத்தி இவ்ளோ அமைதியா இருக்க… இந்த வாரம் முழுக்க பேசவே டைம் கிடைக்கலை… மஹி மேரேஜ் முடியற வரைக்கும் வேற வழியே இல்லை… கொஞ்சம் கஷ்டப்பத்துத்தான் ஆகணும்…” என்று சொன்னவள், அவள் ‘பதில் ஏதாவது சொல்வாளா?’ என்று நிறுத்தினான்.

அவளுடைய சாந்தம் தவிழும் முகத்தைப் பார்த்து, “உங்கிட்ட ஏதோ ஒரு சேஞ்ச் தெரியுது… என்னன்னுதான் புரியலை…” என்று கூறி, “அப்பாவும், நானும் அங்கே இல்லாத சமயமாப் பார்த்து மாத்தி மாத்தி ப்ராப்ளம் வந்துட்டே இருக்கு… நாலு நாளா தூங்க விடாமப் போராட்டம்தான்… சண்டே நம்ம ரிஷப்சன் இல்லைன்னா, ஒரு முறை நேர்ல போயிட்டு வந்திடுவேன்… மஹி மேரேஜ் முடியற வரைக்கும், எங்கேயும் நகரக் கூடாதுன்னு மம்மி ஸ்ட்ரிக்டா சொல்லிட்டாங்க…” என்றான்.

அதற்குள் அவனது செல்போன் ஒலியெழுப்பவே, “தூங்கு ப்ரீத்தி… ரிஷப்சனுக்கும் இன்னும் ஒன் டேதான் இருக்கு… நல்லா ரெஸ்ட் எடு… நாளைக்குப் பார்க்கலாம்…” என்று சொல்லிவிட்டு, அழைப்பை எடுத்து ஆங்கிலத்தில் உரையாடலைத் தொடர்ந்தான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சிறிது நேரம் அவன் பேசுவதைக் கேட்டவளின் இதயம், ஒரு கணம் நின்று துடித்தது.

'மஹதியின் திருமணம் முடிந்து இரண்டாவது நாளே திரும்பதும் அமெரிக்கா செல்கிறானா? அங்கேயே இருந்து அத்தனை வேலைகளையும் முடிக்கப் போகிறானா? இதைப் பற்றி யாரிடமும் சொல்லவே இல்லையே? தன்னிடம் கூடச் சொல்லவே இல்லையே? வாழ்க்கையில் நடந்த அத்தனை விஷயங்களையும் பகிர்ந்து கொண்டபின் இதை மட்டும் ஏன் சொல்லப் பிடிக்கவில்லை?' என்று மனம் அழுதது.

காதலை உணர்ந்த தருணத்தில் களித்திருக்கையில், பிரிவுச் செய்தி உடனடியாக வருகிறது. அதற்கு மேல் அங்கே இருக்கப் பிடிக்காமல், அறைக்குத் திரும்பியவளுக்குக் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

அவளைப் பொறுத்தவரை அழுகை என்பது இயலாமையின் வெளிப்பாடு. பெண்ணுக்குக் கண்ணீர் ஆயுதம். ஆணுக்கு பலவீனம். எத்தனை துன்பங்கள் வந்தாலும் விடாமுயற்சியோடு போராடவே அவளுக்குக் கற்றுத் தரப்பட்டிருந்தது.

'சிறு சிறு துன்பங்களுக்கெல்லாம் அழும் மனிதன் கோழை... அவனால் எதையுமே சாதிக்கமுடியாது...' என்று நினைப்பவளின் கண்களிலிருந்து கண்ணீர்.

"சீ... இதென்ன அழுகை..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அம்மாவிற்குத் தெரிந்தால் மீண்டும் ஒரு போராட்டம் வெடிக்கும்.

இரண்டே வாரங்களில் அவன் கிளம்பிவிடப் போகிறான்.

'இந்தப் பதினைந்து நாட்கள் அருகாமையைப் பொக்கிஷம் போல நினைவலைகளில் சேமித்து வைக்க வேண்டும்... வாழ்க்கை தனக்கு என்ன விதித்திருந்தாலும் எதிர்கொள்ள வேண்டியதுதான்...' என்று முடிவெடுத்தவள், கண்களை இறுக மூடி உறங்க முயன்றாள்.

இதே மனநிலையுடன் இருந்ததாலோ என்னவோ, திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குத் தயாராகி வந்தபோது, ரஞ்சனின் விழுங்கும் பார்வையை இயல்பாக எதிர்கொள்ள முடிந்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

“டேய்! உங்க ரெண்டு பேருக்கும் மேரேஜாகி த்ரீ மன்த்ஸ் ஆகப் போகுது… ஃபர்ஸ்ட் டைம் ப்ரீத்தியை எப்படிப் பார்த்தையோ, அதே மாதிரியே இன்னமும் பார்த்திட்டிருக்க…” என்று பிரதாப்பின் கிண்டலுக்கும் சாதாரணமாக சிரிக்க முடிந்தது.

“இந்த நிமிஷமே உன்னைத் தூக்கிட்டு எங்கயாவது போயிடலாம் போல இருக்கு… சிம்பிள் மேக் அப்லயே நான் டோட்டல் ஃப்ளாப் ஆயிட்டேன்… நாள் முழுக்க வர்ணிச்சிட்டே இருக்கலாம்… அவ்ளோ அழகா இருக்க…” என்று இரசனையோடு ஆராய்ந்து அவன் சொன்னபோது, துள்ளிய உள்ளத்தை அடக்கி, முகச்சிவப்பை மறைக்க முடிந்தது.

அவனறியாமல் அவன் கம்பிரத்தையும், முக மலர்ச்சியையும் விழிகளால் நிரப்பி இதயப் பெட்டகத்திற்குள் சேமிக்க முடிந்தது.

உறவினர்கள், நண்பர்கள், அலுவலர்கள் என்று அத்தனை பேரின் வாழ்த்துக்களுக்கும், மலர்ந்த சிரிப்புடன் நன்றி சொல்ல முடிந்தது.

யோசனையாகப் பார்த்தவன், “என்னாச்சு ப்ரீத்தி… நீ முதல்ல இருந்த மாதிரியே இல்லை… ஏதோ மிஸ்ஸிங் உங்கிட்ட… என்னன்னே புரியலை…” என்று கேட்ட போதும், “முதல்ல இருந்த மாதிரியேதான் இருக்கேன்…” என்று உறுதியாக பதில் சொல்ல முடிந்தது.

வரவேற்பு மிகச் சிறப்பாக முடிவடைந்த பின்னரும், மாயலோகத்தை விட்டு விலகாத பிரம்மையிலேயே தத்தளித்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் ரஞ்சன் பால்கனியில் காத்திருப்பதைப் பார்த்தும் பார்க்காதவளாய், தன் அறைக்குள் சென்று படுக்கையில் சரிந்தாள். காதல் என்னும் உணர்வு, தன்னுள் உண்டாக்கும் மாயங்களை எண்ணி சிரித்துக் கொண்டாள்.

காத்திருந்த சித்ரஞ்சனோ, தன்னைப் பார்க்காமல் போகிறாளா அல்லது புறக்கணிக்கிறாளா என்பது புரியாமல் நின்றிருந்தான்.

அவள் முகம் மலர்ந்திருந்தாலும், அவ்வப்போது கன்னங்களில் மலரும் மலர்களைக் காணாமல் இதயம் ஏங்கியது.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

## 32

"**இ**ப்ப நீங்க கம்யூட்டர்ல யூஸ் பண்ற பைனரி நம்பர்ஸை ரெண்டாம் நூற்றாண்டிலையே பிங்களாங்கறவர் கண்டு பிடிச்சிட்டார்... பிதாகொரஸ் தியரத்தை, சுலுவ சூத்திராவுல புத்தாயனா சொல்லிருக்கார்... ஜீரோவைக் கண்டு பிடிச்சது, நம்பர் சிஸ்டமைக் கண்டு பிடிச்சது எல்லாமே இந்தியர்கள்தான்... அஸ்ட்ராலஜில பூமியோட சுழற்சி வேகம், நட்சத்திரங்கள், அதோட டிஸ்டன்ஸ் எல்லாத்தையுமே சொல்லிருக்காங்க..."

"இப்படி அந்தக் காலத்தில சயின்ஸ்ல நாம சொல்லாத விஷயங்களே இல்லை... சரகரை ஃபாதர் ஆஃப் மெடிசன்னும், சுஸ்ருதாவை ஃபாதர் ஆஃப் ப்ளாஸ்டிக் சர்ஜரின்னும் சொல்றோம்... எல்லாப் பெருமைகளுமே நம்ம கிட்ட இருக்கு... நாளந்தா யுனிவர்சிட்டிக்கு வெளிநாட்ல இருந்து வந்து தங்கிப் படிச்சிட்டுப் போவாங்க... நிறைய விஷயங்கள் வெளிப்படுத்தப் படாமப்போச்சு... ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒரு விஷயம் வர மாதிரி தொடர் எழுது ப்ரீத்தி..." என்று சத்தியமூர்த்தி சொல்லிக் கொண்டிருந்தார்.

ப்ரீத்தியும், மஹதியும் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த சித்ரஞ்சன், அறையின் வாயிலிலேயே நின்றான்.

தாத்தா பேசுவதை நிறுத்தவும், அவனறியாமல் ப்ரீத்தியிடம் பார்வையைச் செலுத்தினான்.

அவளிடம் தோன்றியிருக்கும் மாற்றத்தை, அவனால் படிக்க முடியவில்லை. மஹதியின் அளவிற்குக் கலகலப்பான பெண் இல்லையென்றாலும், இத்தனை நாட்களில் மனதில் இருப்பதை மறைக்காமல் சொல்வாள்.

ஆனால், இப்போதெல்லாம் அதிகமாகத் தனிமையை நாடுகிறாள். அவளின் 'ஆழ்ந்த அமைதிக்குக் காரணம் என்ன?' என்பது அவனுக்குப் புரியவில்லை.

இருக்கும் வேலைகளுக்கிடையில், அவளோடு அதிக நேரம் செலவழிக்கவும் முடியவில்லை.

திருமணம் திருச்சியிலும், வரவேற்பு நிகழ்ச்சி சென்னையிலும் நடைபெற இருப்பதால், ஒரு வாரம் முன்பே திருச்சிக்கு வந்தாயிற்று.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இந்த ஒரு வாரகாலமும் தந்தையுடன் சேர்ந்து நெருங்கிய உறவினர்கள் வீட்டிற்குச் செல்வதிலும், அழைப்பிதழ் கொடுப்பதிலும் நேரம் விரைந்தோடுகிறது.

திருமண வேலைகளைச் செய்ய, ஒப்பந்தப் பணியாளர்களை நியமித்திருந்ததால், மேற்பார்வையிடும் வேலை மட்டுமே இருந்தது.

“வாப்பா ரஞ்சன்! ஏன் அங்கேயே நின்னுட்ட? எல்லா வேலையும் முடிஞ்சுதா?” என்று நிமிர்ந்து பார்த்த கேட்க, “எல்லாம் முடிஞ்சுது தாத்தா… பிரதாப் வீட்லிருந்து எல்லாரும் வந்து சேர்ந்திட்டாங்க… நாளைக்கு ஈவினிங்ல இருந்து எல்லா ஃபங்ஷன்மே ஸ்டார்ட் ஆயிடும்…” என்றான்.

“அப்பாவும், அம்மாவும் வந்துட்டாங்க தானே… நான் அவங்களோட போய்ச் பேசிட்டிருகிறேன்…” என்று பெரியவர் கிளம்பிச் சென்றார்.

செய்த தவறுகளுக்கு வருந்திய குமரன், தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உரிய மரியாதையுடன் நடந்து கொள்வதையும், தன்னிடமும் பாசம் காட்டுவதையும் நினைத்து மனம் மகிழ்ந்தாள் ப்ரீத்தி.

அவள் ‘ஏதாவது கேட்பாள்’ என்று எதிர்பார்த்தவனுக்கு, ஏமாற்றமே மிஞ்சியது.

சிறிது நேரத்திலேயே பிரதாப், மஹதியைப் பார்ப்பதற்காக, அவனுடைய வயதொத்த உறவினர்கள் புடைசூழ வந்து நின்றான்.

அதன்பின் கிண்டலும், கேலியுமாகத் திருமண வீட்டிற்கே உரிய கலகலப்புத் துவங்கியது.

இருவரையும் அமர வைத்து, “யார் ஃபர்ஸ்ட் லவ் பண்ணுணீங்க… எப்படி ஸ்டார்ட் ஆச்சு… யார் ப்ரபோஸ் பண்ணினீங்க…” என்று ஆளாளுக்குக் கிண்டல் செய்து கொண்டிருக்க, சளைக்காமல் அனைவருக்கும் ஈடுகொடுத்தாள் மஹதி.

நமுட்டுச் சிரிப்புடன், “மஹியைப் பார்த்து ஃபைவ் டேஸ் ஆச்சா பாஸ்… டே அண்ட் நைட்டா போன்ல பேசினாலும் கண்ணில பார்த்தாத்தான் நிம்மதி… அதான் எல்லாரையும் கூட்டிட்டு வந்துட்டீங்களா…” என்று கிண்டலடித்தாள் ப்ரீத்தி.

“வர வர உனக்கு வாய் ரொம்ப நீளுது ப்ரீத்தி…” என்று சொல்லிவிட்டு, தன்னுடைய உறவினர்களிடம், “எங்க லவ் ஸ்டோரியை எவ்ளோ தடவைதான்

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

கேட்பீங்க… இவங்களோடதையும் கேளுங்க… இவங்களுக்கும் மேரேஜ் ஆகி த்ரீ மன்த்ஸ் தானே ஆச்சு…” என்று கைகாட்டி விட்டான்.

“இவங்களோடது அரேஞ்ச்ட் மேரேஜ் தானே பிரதாப் அண்ணா… பரவாயில்லை, பொண்ணுப் பார்க்க வந்தப்ப கலாட்டா நடந்திருக்குமே, அதையெல்லாம் கேட்போம்… ப்ரீத்திக்கா! நீங்க முதன் முதலா இவரைப் பார்த்தப்ப என்ன நினைச்சீங்க…” என்று பிரதாப்பின் தங்கை முறையில் ஒரு பெண் ஆரம்பிக்க, சுற்றியிருந்தவர்களின் கவனம் இவர்களிடம் திரும்பியது.

முகம் சிவக்க நின்றவளைப் பார்த்ததும், ரஞ்சனின் கண்களில் மின்னல் வெட்டியது.

முகச்சிவப்பைக் கவனித்து, “அப்போ ஏதோ நடந்திருக்கு… என்னன்னு சொல்லுங்க…” என்று ஆளாளுக்கு ஆரவாரக் கூச்சல் எழுப்பினர்.

“இவங்க ரெண்டு பேருமே சொல்ல மாட்டாங்க போல… ரெண்டு பேரும் ஃபர்ஸ்ட் டைம் மீட் பண்ணின போது நானும் கூட இருந்தேன்… ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க…” என்று சொன்னவன், தாத்தாவின் அறைக்குள் சென்று, பிரிக்கப்படாமல் சட்டமிடப் பட்டிருந்த புகைப்படத்தையும், ஆல்பத்தையும் எடுத்து வந்தான்.

‘ஏன் இப்படிச் செய்கிறான்?’ என்று தவிப்புடன் பார்த்த ப்ரீத்தியைக் கண்டு கொள்ளாமல், “ரஞ்சன்! இதை ஓபன் பண்ணிப் பாருடா… உன்னோட லவ்வைப் பத்தியும் தெரிஞ்சுக்கட்டும்….” என்றான்.

அவளது தவித்த பார்வையில் ஏதோதோ தோன்ற, ஆவலுடன் அந்த பெரிய ஃபோட்டோ ஃப்ரேமை எடுத்துப் பிரித்தான்.

அவர்கள் இருவரின் முதல் சந்திப்பின் மறக்க முடியாத நினைவுகள் புகைப்படத்தில் இருப்பதைப் பார்த்தவனின் முகத்தில் சந்தோசப் பூக்கள் மலர்ந்தன.

பழைய நினைவுகளில் ஆழ்ந்தவன், தன்னுடைய உணர்வுகளையே படிக்க முயன்றான். அன்று, ப்ரீத்தியின் அழகு அவனைக் கவர்ந்தது நிஜமே. ஆனால், அவளை விட அழகிகள் எத்தனை பேர் அங்கே இருந்தார்கள்.

அவர்களையெல்லாம் தாண்டி, அவளால் மட்டும் தன்னைக் கவர முடிந்ததை நினைத்துக் கொண்டான்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

இத்தனை மாதங்களில் அவள் அழகைத்தாண்டி அவளது புத்திசாலித்தனம், தன்னம்பிக்கை, தைரியம் என்று அத்தனை குணங்களாலும் கவரப்பட்டிருப்பதை வியப்புடன் நினைத்தான்.

புகைப்படத்தைப் பார்த்தவர்கள் 'இவர்களுடையதும் காதல் திருமணம்' என்று முடிவு செய்து ஆரவாரக் கூச்சலிட்டனர்.

இந்தியத் திருமணங்கள் ஆடம்பரத்தோடு வீண் செலவையும் பறைசாற்றுவதாக நினைத்துக் கொண்டிருந்த ரஞ்சனுக்கு, கலகலத்துச் சிரிக்கும் ஒலியும், அன்பும் உற்சாகத்தைக் கொடுத்தது.

நண்பர்களும், உறவினர்களும் கூடி ஆரவாரிக்கும் பொழுதுகளில் கிடைக்கும் இன்பம் இருவருக்குமே புரிந்தது.

தன்னை நாடி வந்த ரஞ்சனின் பார்வையில், உதடுகளைக் கடித்த ப்ரீத்தி, "இப்போதைக்கு ஹீரோ ஹீரோயின் மஹியும் பிரதாப்பும்தான்… எங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு அவங்களைக் கவனிங்க…" என்று பேச்சு செல்லும் திசையைத் திருப்பிட முனைந்தாள்.

"அக்கா! டூ பேட்… சொன்னாதான் உங்களை விடுவோம்…" என்று வற்புறுத்திய குரலில் திணறியவள், யசோதா அழைப்பதைப் பார்த்ததும், அம்மா கூப்பிடறாங்க… உங்களுக்கெல்லாம் சாப்பிட ஏதாவது கொண்டு வரேன்… இன்னொரு நாள் நீங்க கேட்டதுக்கெல்லாம் பதில் சொல்றேன்…" என்று நழுவினாள்.

"பிரதாப்! இந்த போட்டோஸ் எல்லாம் உனக்கு எப்படிடா கிடைச்சுது…" என்று ரஞ்சன் கேட்க, "அன்னைக்கு பார்ட்டிக்கு நியூஸ் கலெக்ட் பண்ண வந்தவன் எடுத்திருக்கான்… கவர்ச்சிப் படங்களை மட்டும்தான் எடுத்துட்டுப் போடுவான்… என்னையும், ப்ரீத்தியையும் அங்கே எக்ஸ்பெக்ட் பண்ணலை அவன்… நம்ம நியூஸ்பேப்பர்ல வொர்க் பண்றதால, ப்ரீத்தி மேல முதல்லையே பொறாமை அவனுக்கு… அவளும் சில சமயங்கள்ல அவனுக்கு நல்லாவே பதிலடி கொடுத்திருக்கா… அந்தக் கோபத்தில எடுத்த போட்டோஸ் இதெல்லாம்…. வெளில எடுத்த உங்க ரெண்டு பேரோட போட்டோஸ் ரொம்ப க்ளியரா வந்திருக்கு… பார்ட்டி ஹால்ல போட்டோகிராபி நாட் அலவுட்ங்கறதால, மீதியைத் தெரியாம கவர் பண்ணிருக்கான்… வேற ஆள் மூலமா அவங்கிட்ட இருந்து இதெல்லாம் வாங்கினேன்… அதுவும் இந்த போட்டோல உங்க ரெண்டு பேரோட எக்ஸ்ப்ரஷன்



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

சான்ஸே இல்லை… அதான் இதை என்லார்ஜ் பண்ணி ப்ரீத்திகிட்டக் கொடுத்தேன்… நீ கோபப்படுவன்னு நினைச்சு இங்கேயே வச்சிட்டு மறந்துட்டா…” என்றான்.

ப்ரீத்திக்குத் தன்னுடைய மனதை மறைப்பதே பெரும் பாடாயிருந்தது. கிண்டல் பேச்சுக்களுக்கு ரஞ்சனிடமிருந்து எந்த பதிலும் இல்லாததால், அதுவரை இருந்த உற்சாகம் சற்றே குறைந்தது போல உணர்ந்தாள்.

அவனது கூர்மையான பார்வை எங்கிருந்தாலும் தன்னைத் தேடித் துளைப்பதை உணர்ந்தாள். அவன் மனதில் ‘என்ன இருக்கிறது’ என்பது புரியாமல், தன் மனதை வெளிப்படுத்த விரும்பவில்லை.

‘மஹதியைப் போல தைரியமாகத் தன்னால் காதலைச் சொல்ல முடியாது’ என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள். காதல் என்று சொன்னால் அவனிடம் பிரதிபலிப்பு எப்படி இருக்கும் என்று நினைத்தவளைத் தயக்க மேகங்கள் சூழ்ந்தன.

சிறிது நேரத்திலேயே மனதை சரி செய்து கொண்டவள், திருமண வேலைகளில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டாள்.

மறுநாளும் மஹதியின் தோழிகளை வரவேற்பதிலும், அவர்களுக்கான அறைகளில் தங்கவைப்பதிலும் நேரம் கழிந்தது.

“அண்ணி! அண்ணி!” என்று தொட்டதற்கெல்லாம் அழைத்த மஹதி, அருகிலேயே இருத்திக் கொண்டாள்.

இயல்பிலேயே திட்டமிட்டுச் செயல்படுத்தும் திறன் இருந்ததால், மேற்பார்வையிடும் பொறுப்புகளில் சிலவற்றை அவளிடமும் ஒப்படைத்திருந்ததால், ஓய்வாக அமர்வதற்கு வழியின்றி வேலைகள் சரியாக இருந்தன.

விருந்தினர்களை வரவேற்க அருகருகே நிற்கையில், கால்களின் வலிதெரியாமல் உள்ளம் சிறகடித்துப் பறந்தது. அவன் மட்டுமே தன்னுடைய உள்ளம் முழுக்க வியாபித்தது போன்ற உணர்வில் தத்தளித்தாள்.

மாப்பிள்ளை அழைப்பு, நலுங்கு என்று திருமண நிகழ்ச்சிகள் துவங்கவும், அவன் அருகாமையைத் தவிர்க்க முடியவில்லை.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.**

சடங்குகள் முடிந்த் பின்னர் உறங்கச் செல்லும் நேரத்தில் இருவரையும் தடுத்து நிறுத்திய பிரதாப், “எங்க மேரேஜ்கு ஸ்பெஷல் கிஃப்ட் வேணும்னு மஹி சொல்றா… என்னன்னு கேட்டுட்டுப் போங்க…” என்றான்.

“கிஃப்டா? நான் கேட்டேனா?” என்று ஆச்சர்யத்துடன் மஹதி வினவவும், “அதுக்குள்ள மறந்தாச்சா… மருமகன் வேணும்னு கேட்கப் போறேன்னு அடம் பிடிச்சையே… இப்பக் கேட்க வேண்டியதுதானே…” என்றான்.

ப்ரீத்தி பதில் சொல்ல முடியாமல் திகைத்து நிற்க, “அதுக்கென்னடா அவசரம்… இப்போதைக்கு இந்த ஐடியா இல்லை… முடிக்க வேண்டிய வொர்க் இன்னும் நிறைய இருக்கு…” என்று சொல்லிச் சென்றான்.

மனதின் வேதனையை வெளிப்படுத்தாமல், ரெண்டு பேரும் தூங்கப் போங்க… மார்னிங் ரொம்ப சீக்கிரம் எழுந்திரிக்கணும்… நீ வா மஹி… என்று அழைத்துச் சென்றாள்.

‘எப்படி அவன் மனதைத் தெரிந்து கொள்வது’ என்று புரியாமல் யோசித்தாள். ‘அதிகாலையில் விரைவாக எழ வேண்டும்… திருமணமனத்திற்கான மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது… சென்னை சென்ற பிறகு அவனுடன் பேசிக் கொள்ளலாம்’ என்று நினைத்தவள், உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

## 33

வளர் பிறைச் சந்திரனின் மெல்லிய ஒளிக்கற்றைகள் இதமாகப் பொழிந்து கொண்டிருக்க, அதனை இரசிக்க முடியாமல் வெறித்துப் பார்த்தாள் ப்ரீத்தி.

திட்டமிட்டபடியே இனிதாகத் திருமணம் நடந்து முடிந்து விட்டது. பிரதாப்பின் வீட்டிற்கு மணமக்களை அனுப்பிவிட்டு வீடு திரும்பியாயிற்று.

அவளும் அங்கேயே தங்குவதாக இருந்ததை, ‘வேண்டாம் நம்ம வீட்டுக்குப் போகலாம்’ என்று மறுத்து அழைத்து வந்த ரஞ்சனைக் கண்கள் தேடின.

திருமணக் கொண்டாட்டங்களில் எப்போதும் அவனுடனேயே இருந்த உணர்வுகள் உயிரை வதை செய்தன.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

மீண்டும் மீண்டும் அவன் அறைக்கதவு திறக்காதோ என்று தவித்த விழிகளைத் திசைதிருப்பி, வானில் விழிகளைப் பதித்தாள்.

"ப்ரீத்தி!" என்று அவன் அழைக்கும் குரலுக்காக, மனம் ஏங்கியது. பலமுறை அவன் அழைப்பது போல நினைத்துத் திரும்பிப் பார்த்தவள், சலிப்புடன் சுவரில் சாய்ந்து நின்றாள்.

"இருட்டுல என்ன செய்யற ப்ரீத்தி... வாவ் நைஸ் வெதர்... ட்ரிஸிலிங் வேற சூப்பரா இருக்கு... இயற்கையோட என் ஜாய் பண்றயா?" என்று குரல் ஒலிக்கவும் 'சே... மறுபடியும் அவனுடைய குரல்... அவன் அழைப்பது போலவே பிரம்மை..'. என்று நினைத்தவள், செடியிருந்து ஓர் இலையைப் பிய்த்து வீசி எறிந்தாள்.

"என்ன அஹிம்சாவாதி மேடம், செடியை ஏன் இப்படி இம்சை பண்ணறீங்க?" என்று தோளைப் பற்றி ஒரு கரம் உலுக்கவும் திரும்பிப் பார்த்தவள், மொழி மறந்தவள் போல் விழித்தாள்.

முதன் முதலாக இருவரும் சந்தித்தபோது அணிந்திருந்த அதே உடையில், அதே பார்வையோடு நின்றிருந்தான்.

அப்போது அவனது செல்போன் ஒலிக்கவும் எடுத்துப் பேசியவன், "டிக்கெட் கன்ஃபார்ம் ஆயிடுச்சா?" என்று கேட்டு, "ம்ம்... ஓகே..." என்று சொல்லிவிட்டு வைத்தான்.

'இப்போது கிளம்புவதைப் பற்றிச் சொல்லத்தான் வந்திருக்கிறானா?' என்று தவிப்புடன் நினைத்தவள், "நீங்க யூ.எஸ். கிளம்பறீங்களா?" என்று ஒரு வாறாகக் கேட்க, அவளை நெருங்கியவன், "நீ என்ன சொல்ற ப்ரீத்தி... போகட்டுமா வேண்டாமா..." என்று கேட்டான்.

"உங்க இஷ்டம்..." என்ற குரலில் எவ்வளவு முயன்றும் வேதனை வெளிப்பட்டது.

"நீ சொல்றதுக்கு எதுவுமே இல்லையா..." என்று குறும்பு கொப்பளிக்கும் குரலில் கேட்க, அவன் பார்வையிலிருக்கும் வித்தியாசத்தைப் பார்த்துப் பேச மறந்து நின்றாள்.

அருகில் மிக நெருங்கி நின்றவன், "போகணும்தான்... ஆனா போக முடியலையே... என்ன செய்ய..." என்று பெருமூச்சோடு கூறினான்.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

புரியாமல் பார்த்தவளின் கண்களோடு கண்களைக் கலந்தவன், இப்ப நான் போகலை... அம்மாவும், அப்பாவும் நெக்ஸ்ட் வீக் கிளம்பறாங்க... அவங்களுக்குத்தான் டிக்கெட் புக் பண்ணினேன்... அங்க இருக்கற எல்லா வொர்க்கையும் முடிச்சிட்டுத்தான் வருவாங்க... அவங்க திரும்பி வந்ததுக்கப்புறம் தேவைப்பட்டா நாம கொஞ்ச நாள் போயிட்டு வரலாம்..." என்றான்.

அவள் பதில் சொல்லாமல் நிற்பதைப் பார்த்து "இப்ப நான் ஏன் போகலைன்னு கேட்கலையா..." என்று கேட்க, அப்போதும் திகைத்து விழித்தவளிடம், "ஐ ஆம் இன் லவ்... அவளை விட்டுட்டுப் போக முடியாதுன்னு புரிஞ்சிடுச்சு... அப்படிப் போனா உயிர்ப்பில்லாத வாழ்க்கைதான் வாழணும்னு புரிஞ்சிடுச்சு... மனசு முழுக்க அவளை வச்சிட்டு அங்க போய் என்ன சாதிக்கப்போறோம்னு நினைச்சுப் போகலை..."

'தன்னையும் அழைத்துப் போகத் திட்டமிடுகிறான்' என நினைத்து சுரத்தில்லாமல் "ஓ..." என்று பதிலளித்தவள், அவன் சொன்னது புரிய, நம்ப முடியாத பார்வையை அவன் மேல் பதித்தாள்.

மென்மையாக அவள் கன்னங்களைத் தாங்கியவன், "ரொம்ப நாளாவே எனக்கு டவுட் தான்... இப்பதான் க்ளியர் ஆச்சு.... கல்யாண பிஸில இதைச் சொல்ல டைமே கிடைக்கலை... இது மாதிரி தனிமையில சொல்லணும்னு வெயிட் பண்ணினேன்..." என்று சொல்ல, அவன் சொல்ல வந்ததை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் கண்ணிமைக்காமல் பார்த்தாள்.

கண்களிலும், உதடுகளிலும் குறுப்புச் சிரிப்புடன், "ஏறக்குறைய மூணு மாசத்துக்கு முன்னாடி அவளைப் பார்த்தேன்... கார்கால மின்னல் மாதிரி வொயிட் கலர் சல்வார்ல பளிச்சுன்னு வந்தா... கண்ணுல மேக்னட் வச்சிருந்தாளோ என்னவோ ஒரு பார்வை பார்த்து, உதட்டில அழகா சிரிச்சா பாரு, அப்பவே தலை குப்புற விழுந்திட்டேன்..." என்றவனின் விரல்கள் கண்களைத் தடவி துடிக்கும் உதடுகளை வருடின.

அவன் சொல்ல வருவது புரிய, கண்ணீரும் புன்னகையும் ஒரு சேர, கொஞ்சம் நஞ்சம் ஒட்டியிருந்த சந்தேகத்தை விலக்கி ஆவலோடு பார்க்கவும், "இதே மாதிரிதான் ஆச்சர்யமா என்னைப் பார்த்தா... அவளோட வலையில அன்னைக்கு சிக்கினது... அதுக்கப்புறம் என்னால வெளில வரவே முடியலை.... ஆனா சுகமான வலை..." என்றான்.

தொலைத்திருந்த தைரியம் முற்றிலும் பெற்றவளாக "ரஞ்சன்! என்ன ரொம்ப ரொமாண்டிக் மூட்ல இருக்கீங்க போல... மேக்னட், வலைன்னு என்னன்னவோ

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 

பேசறீங்க… யாரை லவ் பண்றீங்க… சொல்ல வர்றத தெளிவா சொல்றதுதானே…” என்று அவனிடமிருந்து சிறிது விலகியவாறு சொல்ல,

“ச்சூ… டிஸ்டர்ப் பண்ணாத ப்ரீத்… பேசாம என் லவ் ஸ்டோரியக் கேளு…” என்று மிரட்டலாகச் சொன்னான்.

“பார்ட்டி ஹால்ல சுத்தி சுத்தி அவ மட்டும்தான் கண்ணுக்குத் தெரிஞ்சா…. நிமிஷத்துக்கு நிமிஷம் என் ஹார்ட்ட இம்சை பண்ண ஆரம்பிச்சா… உடனே அவ வேணும், அவ வேணும்னு மனசு சொல்லுச்சு… அப்பவே அவளோட டேன்ஸ் ஆடணும், தனியா கடத்திட்டுப் போகணும்னு வெறி வந்துச்சு… இது போலதான் அவ கையைச் சுண்டி இழுத்தேன்…” என்றவன், விலகி நின்றவளின் கையைச் சுண்டி இழுக்கவும், மலர் மாலை போல அவன் மார்பில் வந்து விழுந்தாள்.

அவனிடம் கேட்க எத்தனையோ கேள்விகள் இருந்தாலும், சேர வேண்டிய இடத்தில் வந்து சேர்ந்தது போல மனம் அவனைச் சரணடைந்தது.

வளவளப்பான இடையில் கைகளைத் தவழ விட்டு அவளை அறைக்குள் தூக்கிக் கொண்டு வந்தவன், “இது மாதிரி என் மேல வந்து விழலை அவ… விலக்கித் தள்ளப் பார்த்தா… என்னோட கைக்குள்ள அவ இருந்த நிமிஷ நேரத்தில சொர்க்கத்தில இருக்கற மாதிரி ரொம்ப சந்தோசமா ஃபீல் பண்ணினேன்… அவளை விட்டுடாதன்னு மனசு சொல்லிச்சு… செர்ரி மாதிரி இருந்த லிப்ஸ்ல இது போல தான் கிஸ் பண்ணப் போனேன்…” என்றவன் செயலில் வேகத்தைக் காட்டினான்.

மயக்கத்தோடு அவன் செய்கைக்கு இசைந்து கொடுக்கவும், விடுவிக்க மனமின்றிப் பெருமூச்சோடு நிமிர்ந்தவன், “என்னைக் குடிகாரன், குடிவெறில அப்படி நடந்துக்கறேன்னு நினைச்சுத் தள்ளி விட்டுடுட்டுப் பட்டுன்னு ஒரு அறை கொடுத்தா… அவளுக்குத் தெரியல போதைக்குக் காரணமே அவதான்னு… என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணினதுக்குக் காரணம் எனக்கு வேற மாதிரிப் புரிஞ்சுது…”

“ம்ம்… இப்ப எல்லாம் தெளிவாப் புரிஞ்சுச்சா…”

“புரியாமையா இப்படியெல்லாம் செய்வாங்க… என்னோட இந்த உணர்வுகளைத் தட்டி எழுப்ப அவளால மட்டும்தான் முடியும்னு புரிஞ்சுது… இரத்தம் வழிய ரஞ்சன்னு என் பேரைச் சொல்லி மயங்கி சாய்ஞ்சப்ப துடிச்ச துடிப்புக்கு அர்த்தம் புரிஞ்சுது… அவ இல்லாத உலகத்தில எதுவுமே இல்லைன்னு நினைச்சது ஏன்னு புரிஞ்சுது…” என்று ஒவ்வொன்றாகச் சொன்னவன், “காதல்னா என்னன்னும் புரியுது…” என்று சொல்லும் போது வார்த்தைகளில் விவரிக்க முடியாத மென்மை குடிகொண்டிருந்தது.

samyukthawriter@gmail.com

**Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.** 

“அவ அவன்னு சொல்றீங்களே யார் ரஞ்சன் அது…” என்று குறும்புடன் கேட்க,

“அது யார்னு உனக்குத் தெரியாதா…” என்று நெற்றியில் செல்லமாக முடியவன், “உனக்குப் பிடிச்சிருக்கான்னு தெரியாம குழம்பினேன்…” என்றான்.

“எனக்குப் பிடிச்சிருக்குன்னு நான் இன்னும் சொல்லவே இல்லையே….” என்று தலைசரித்துக் கேட்கவும், “நீ சொல்லணும்னு அவசியமே இல்லை ப்ரீத்… உனக்கும் இதே தவிப்பு இருக்குங்கறது க்ளியர் ஆயிடுச்சி… உங்கிட்ட இருந்த மாற்றத்துக்குக் காரணமும் புரிஞ்சிடுச்சு…. அமைதியா என்னைப் பார்த்த பார்வைகளும் ஏன்னு புரிஞ்சிடுச்சு… பிரதாப் குழந்தையைப் பத்திப் பேசினதும், இவ்விடத்திலும் சம்மதம்னு தெளிவாப் புரிஞ்சிடுச்சுடா….” என்று உதடுகளில் விரல்களால் ஊர்வலம் நடத்தினான்.

புதுவித அனுபவத்தில் திளைத்தவளுக்கு, மாயச் சுழலில் சிக்கித் தவிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

“எதுக்கும் ஒரு தடவை நல்லா யோசிச்சுக்கங்க… அப்புறம் ஃபீல் பண்ணக் கூடாது… இப்பவே சொல்லிட்டேன்… அதுவுமில்லாம நீங்களே சொல்லிருக்கீங்க, நான் நார்த் போல்னா நீங்க சௌத் போல்… ஒத்தே போகாதுன்னு” என்று கண்களை உருட்டி விளையாட்டாகச் சொல்லவும்,

“ஆப்போஸிட் போல்ஸ் அட்ராக்ட் ஈச் அதர்… ஒரே மாதிரி குணத்தில இருக்கறவங்க வாழ்க்கை பிரச்சனையாத்தான் இருக்கும்… போர் அடிக்க ஆரம்பிச்சிடும்… ஒரே விஷயத்துக்கு ஒரே மாதிரி கோபம், வெறுப்பு எல்லாமே வரும்… நீ வேணாப் பாரேன் நமக்குள்ள நல்லா ஒத்துப் போகும்… பேரன் பேத்தி எடுத்தாலும் சண்டை போடுவோம், நோ ப்ராப்ளம்… அது ஆராக்கியமான சண்டையா இருக்கும்…” என்று இதழ்களை நெருங்கினான்.

“ஒன் மினிட்… உங்களுக்குப் பார்ட்டியில டேன்ஸ் ஆடற பொண்ணு வேண்டாமா… உங்க ஊருக்கே திரும்பிப் போக வேண்டாமா… உங்க கனவெல்லாம் என்ன ஆகறது…”

“டேன்ஸ் என்ன டேன்ஸ், அது வெளில போய் ஆடினாத்தானா… நம்ம ரூமையே பால் ரூமா மாத்திட்டாப் போச்சு…” என்று கைப்பிடியில் அழைத்துச் சென்று மெல்லிய இசையைத் தவழவிட்டவன், அவளது இடையை அழுத்திப் பிடித்து கையோடு கை கோர்த்து நடனத்தை ஆரம்பிக்கவும், அவனுக்கு இசைந்து கொடுத்தவாறு “என்னால நம்ப முடியலை ரஞ்சன்… நடக்கறதெல்லாம் கனவு மாதிரி இருக்கு… இன்னும் நிறையக் கேள்விகள் கேட்கணும் உங்க கிட்ட…” என்றாள்.



Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

“கனவல்ல டார்லிங்... நிஜம் தான்... பட், கேள்வி பதிலெல்லாம் இன்னொரு நாள் வச்சுக்கலாம்... நம்ம ரெண்டு பேரும் லவ் பண்றது நிஜம்... வாழ்க்கையை எப்படி சந்தோசமா வாழ்ணும்ங்கறதும் நமக்குத் தெரியும்... எண்ணங்கள்ல வித்தியாசமா இருந்தாலும் ஒருத்தரோட தாட்ஸை இன்னொருத்தர் மேல திணிக்கறதில்லை நாம... சரின்னு புரியும் போது ரெண்டு பேருமே ஒத்துக்கறோம்... லைஃப்போட சக்ஸஸ் இதில தான் அடங்கியிருக்கு...” என்றவாறு நடன அசைவுகளைச் சொல்லிக் கொடுத்தான்.

கைகள் ஒன்றோடொன்று சேர்ந்து, கால்கள் சேர்ந்தும் விலகியும், உடல்கள் இணைந்து ஆட, காற்றில் பறப்பதோர் உணர்வு இருவரையும் ஆட்கொண்டது.

நீண்ட நேரம் மெல்லிசையில் காற்றில் கொடி அசைவது போல ஆடிக் கொண்டிருக்கையில், கால்கள் வலிப்பதை உணர்ந்து “எவ்ளோ நேரம்தான் இப்படியே ஆடறது ரஞ்சன்.... கால் வலிக்குது...” என்றாள்.

மயக்கத்திலிருந்து வெளியே வராதவன், “நான் வேணும்னா தூக்கிட்டு ஆடவா... இல்லைன்னா...” என்று குறும்பு கொப்பளிக்கும் குரலில் இழுத்தவன், “வேற என்ன செய்யலாம்... இவ்ளோ நாள் விட்டதெல்லாம் வசூல் பண்ணிக்கவா...” என்று கேட்டான்.

அவன் குரலும், உணர்வுகளும் வசியம் செய்ய, “ம்ஹூம்... வசூல் எல்லாம் ஒண்ணும் செய்ய வேண்டாம்... நான் தூங்கப் போறேன்... நீங்க உங்க ரூமுக்குப் போய் சமத்துப் பிள்ளையாத் தூங்குங்க...” என்று சொல்லி முடிக்கையில், முத்துப் பற்கள் பளீரிடச் சிரித்தாள்.

எப்போதும் போல அந்தச் சிரிப்பின் மாய வலையில் விழுந்தவன், மீள முடியாமல் இதழ்களைச் சிறைப்படுத்த முயன்று சிறைப்பட்டான்.

அத்தனை நாட்களாக இருந்த தவிப்பெல்லாம் அவன் செயலில் வெளிப்படவும், எல்லையில்லா மகிழ்ச்சியுடன் அவனுக்கு ஈடு கொடுத்தாள்.

காதல் என்பது ஓர் அற்புதமான விஷயம், கண்கள் கலந்து, மனது மலர்ந்து, இதயத்தில் சிம்மாசனமிட்டு, உணர்வுகளில் உயிர் வாழச் செய்வது என்று அவள் மனதிற்குப் புரிந்தது.

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author.

‘இந்த நிமிடம் போதும்… இனி பெறுவதற்கு ஒன்றுமில்லை… தன் கனவுகளின் பாதையில் தன்னோடு அவனும் வருவான்…’ என்ற நிறைவில் மனம் நெகிழ்ந்தது.

***************

samyukthawriter@gmail.com

Copyrights Registered document. Do not copy or distribute electronically or otherwise in whole or any part of of the story. All Rights Reserved to the Author. 